
TCSONGS

TC SONGS



# Jebathotta Jeyageethangal

FATHER SJ BERCHMANS

## SONGS BOOK

PDF

# அடிமை நான் ஆண்டவரே

அடிமை நான் ஆண்டவரே - என்னை
ஆட்கொள்ளும் என் தெய்வமே
தெய்வமே தெய்வமே
அடிமை நான் ஆட்கொள்ளும்

1. என் உடல் உமக்குச் சொந்தம் - இதில்
எந்நாளும் வாசம் செய்யும்

2. உலக இன்பமெல்லாம் - நான்
உதறித் தள்ளி விட்டேன்

3. பெருமை செல்வமெல்லாம் - இனி
வெறுமை என்றுணர்ந்தேன்

4. வாழ்வது நானல்ல - என்னில்
இயேசுவே வாழ்கின்றீர்

5. என் பாவம் மன்னித்தருளும் - உம்
இரத்தத்தால் கழுவிவிடும்

6. முள்முடி எனக்காக - ஐயா
கசையடி எனக்காக

7. என் பாவம் சுமந்து கொண்டீர் - என்
நோய்கள் ஏற்றுக் கொண்டீர்

# அக்கினி நெருப்பாய் இறங்கி வாரும்

அக்கினி நெருப்பாய் இறங்கி வாரும்
அபிஷேகம் தந்து வழிநடத்தும் (2)

1. முட்செடி நடுவே தோன்றினீரே
மோசேயை அழைத்து பேசினீரே (2)
எகிப்து தேசத்திற்குக் கூட்டிச் சென்றீரே - (2)
எங்களை நிரப்பிப் பயன்படுத்தும் .. இன்று (2)
அக்கினி நெருப்பாய் இறங்கி வாரும்

2. எலியாவின் ஜெபத்திற்கு பதில் தந்தீரே
இறங்கி வந்தீர் அக்கினியாய் (2)
இருந்த அனைத்தையும் சுட்டெரித்தீரே - (2)
எங்களின் குற்றங்களை எரித்து விடும் - (2)

3. ஏசாயா நாவை தொட்டது போல
எங்களின் நாவைத் தொட்டருளும் (2)
யாரை நான் அனுப்புவேன் என்று சொன்னீரே - (2)
எங்களை அனுப்பும் தேசத்திற்கு - (2)

4. அக்கினி மயமான நாவுகளாக
அப்போஸ்தலர் மேலே இறங்கி வந்தீரே (2)
அன்னிய மொழியை பேச வைத்தீரே - (2)
ஆவியின் வரங்களால் நிரப்பினீரே - (2)

5. இரவு நேரத்தில் நெருப்புத் தூணாய்
இஸ்ரவேல் ஜனங்களை நடத்தினீரே - (2)
இருண்ட உலகத்தில் உம் சித்தம் செய்திட - (2)
எங்களை நிரப்பும் ஆவியினால் - (2)

# அத்திமரம் துளிர்விடாமல்

அத்திமரம் துளிர்விடாமல் போனாலும்
திராட்சை செடி பலன் கொடாமல் போனாலும்
கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பேன்
என் தேவனுக்குள் களி கூருவேன்

1. ஒலிவ மரம் பலன் அற்றுப் போனாலும்
வயல்களிலே தானியமின்றிப் போனாலும்

2. மந்தையிலே ஆடுகளின்றிப்போனாலும்
தொழுவத்திலே மாடுகளின்றிப் போனாலும்

3. எல்லாமே எதிராக இருந்தாலும்
சூழ்நிலைகள் தோல்வி போல தெரிந்தாலும்

4. உயிர் நண்பன் என்னை விட்டுப் பிரிந்தாலும்
ஊரெல்லாம் என்னைத் தூற்றித்திரிந்தாலும்

# அதிகாலையில்

அதிகாலையில் (அன்பு நேசரே) உம் திருமுகம் தேடி
அர்ப்பணித்தேன் என்னையே
ஆராதனை துதி ஸ்தோத்திரங்கள்
அப்பனே உமக்குத் தந்தேன்
ஆராதனை ஆராதனை
அன்பர் இயேசு ராஜனுக்கே
ஆவியான் தேவனுக்கே

1. இந்த நாளின் ஒவ்வொரு நிமிடமும்
உந்தன் நினைவால் நிரம்ப வேண்டும்
என் வாயின் வார்த்தை எல்லாம்
பிறர் காயம் ஆற்ற வேண்டும்

2. உந்தன் ஏக்கம் விருப்பம் எல்லாம்
என் இதயத் துடிப்பாக மாற்றும்
என் ஜீவ நாட்கள் எல்லாம்
ஜெப வீரன் என்று எழுதும்

3. சுவிசேஷ பாரம் ஒன்றே
என் சுமையாக மாற வேண்டும்
என் நேச எல்லையெங்கும்
உம் நாமம் சொல்ல வேண்டும்

4. உமக்குகந்த தூய பலியாய்
இந்த உடலை ஒப்புக் கொடுத்தேன்
ஆட்கொண்டு என்னை நடத்தும்
அபிஷேகத்தாலே நிரப்பும்

# அதிகாலை நேரம்

அதிகாலை நேரம் (அரசாளும் தெய்வம்)
அப்பா உம் பாதம் ஆர்வமாய் வந்திருக்கிறேன்
உம் நாமம் சொல்லி ஓய்வின்றிப் பாடி
உள்ளம் மகிழ்ந்திருப்பேன்

1. கூக்குரல் கேட்பவரே நன்றி நன்றி ஐயா
குறைகளைத் தீர்ப்பவரே நன்றி நன்றி ஐயா

2. பெலனே கன்மலையே
பெரியவரே என் உயிரே

3. நினைவெல்லாம் அறிபவரே
நிம்மதி தருபவரே

4. நலன்தரும் நல்மருந்தே
நன்மைகளின் ஊற்றே

5. மரணத்தை ஜெயித்தவரே நன்றி நன்றி ஐயா
மன்னா பொழிந்தவரே நன்றி நன்றி ஐயா

6. விண்ணப்பம் கேட்பவரே
கண்ணீர் துடைப்பவரே

# அதிகாலை ஸ்தோத்திர பலி

அதிகாலை ஸ்தோத்திர பலி
அப்பா அப்பா உங்களுக்குத் தான்
ஆராதனை ஸ்தோத்திர பலி
அப்பா அப்பா உங்களுக்குத் தான் - 2

1. எபிநேசர் எபிநேசர்
இதுவரை உதவி செய்தீர்
இதுவரை உதவி செய்தீர்
எபிநேசர் எபிநேசர்

2. பரிசுத்தர் பரிசுத்தர்
பரலோக ராஜாவே
பரலோக ராஜாவே
பரிசுத்தர் பரிசுத்தர்

3. எல்ஷடாய் எல்ஷடாய்
எல்லாம் வல்லவரே
எல்லாம் வல்லவரே
எல்ஷடாய் எல்ஷடாய்

4. எல்ரோயி எல்ரோயி
என்னை காண்பவரே
என்னை காண்பவரே
எல்ரோயி எல்ரோயி

5. யேகோவா யீரே
எல்லாம் பார்த்துக் கொள்வீர்
எல்லாம் பார்த்துக் கொள்வீர்
யேகோவா யீரே

6. அதிசய தெய்வமே
ஆலோசனை கர்த்தரே
ஆலோசனை கர்த்தரே
அதிசய தெய்வமே

7. யேகோவா ஷம்மா
எங்களோடு இருப்பவரே
எங்களோடு இருப்பவரே
யேகோவா ஷம்மா

8. யேகோவா ஷாலோம்
சாமாதானம் தருகிறீர்
சாமாதானம் தருகிறீர்
யேகோவா ஷாலோம்

9. யேகோவா நிசியே
எந்நாளும் வெற்றி தருவீர்
எந்நாளும் வெற்றி தருவீர்
யேகோவா நிசியே

10. யேகோவா ரஃப்பா
சுகம் தரும் தெய்வம்
சுகம் தரும் தெய்வம்
யேகோவா ரஃப்பா

# அதி சீக்கிரத்தில் நீங்கிவிடும்

அதி சீக்கிரத்தில் நீங்கிவிடும்
இந்த லேசான உபத்திரவம்
சோர்ந்து போகாதே - நீ

1. உள்ளார்ந்த மனிதன் நாளுக்கு நாள்
புதிதாக்க படுகின்ற நேரமிது சோர்ந்து

2. ஈடு இணையில்லா மகிமை
இதனால் நமக்கு வந்திடுமே

3. காண்கின்ற உலகம் தேடவில்லை
காணாதப் பரலோகம் நாடுகிறோம்

4. கிறிஸ்துவின் பொருட்டு நெருக்கப்பட்டால்
பாக்கியம் நமக்கு பாக்கியமே

5. மன்னவன் இயேசு வருகையிலே
மகிழ்ந்து நாமும் களிகூருவோம்

6. மகிமையின் தேவ ஆவிதாமே
மண்ணான நமக்குள் வாழ்கின்றார்

# அப்பா உம்மை நேசிக்கிறேன்

அப்பா உம்மை நேசிக்கிறேன்
ஆர்வமுடன் நேசிக்கிறேன்

1. எப்போதும் உம் புகழ்தானே
எந்நேரமும் ஏக்கம் தானே
எல்லாம் நீர்தானே - ஐயா

2. பலியாகி என்னை மீட்டீரையா
பாவங்கள் சுமந்து தீர்த்தீரையா
ஒளியாய் வந்தீரையா - ஐயா

3. உந்தன் அன்பு போதுமையா
உறவோ பொருளோ பிரிக்காதையா
என் நேசர் நீர்தானையா - ஐயா

4. கண்ணீர் துடைக்கும் காருண்யமே
மன்னித்து மறக்கும் தாயுள்ளமே
விண்ணக பேரின்பமே - அப்பா

5. அநுதின உணவு நீர்தானையா - என்
அன்றாட வெளிச்சம் நீர்தானையா
அருட்கடல் நீர்தானையா - எனக்கு

6. ஒரு குறையின்றி நடத்துகின்றீர்
ஊழியம் தந்து மகிழ்கின்றீர்
அருகதை இல்லையையா - ஐயா

7. ஜெபமே எனது ஜீவனாகணும்
ஜெயக்கொடி எனது இலக்காகணும்
ஊழியம் உணவாகணும்

# அப்பா என்னை முழுவதும்

அப்பா என்னை முழுவதும் அர்ப்பணித்தேன் ஐயா
உயிரோடிருக்கும் நாளெல்லாம் உமக்குச் சொந்தமையா

அர்ப்பணித்தேன் (நான்) அர்ப்பணித்தேன்
ஆவி ஆத்துமா சரீரம் அர்ப்பணித்தேன் - என்

1. உள்ளம் உடல் எல்லாமே உமக்குத் தந்தேனையா
கள்ளம் கபடு இல்லாமல் காத்துக் கொள்ளுமையா - ஒரு

2. உலகப்பெருமை சிற்றின்பம் உதறிவிட்டேனையா
கசப்பு வெறுப்பு காயங்கள் கடந்து போனதையா

3. வாக்குவாதம் பொறாமைகள் தூக்கி எறிந்தேன் நான்
ஆண்டவர் இயேசுவை ஆடையாய் அணிந்து கொண்டேன் நான்

4. உமக்காய் வாழும் வைராக்கியம் உள்ளத்தில் வந்ததையா
எனக்காய் வாழும் எண்ணங்கள் என்றோ மடிந்ததையா (செத்ததையா)

# அப்பா நான் உம்மைப் பார்க்கிறேன்

அப்பா நான் உம்மைப் பார்க்கிறேன்
அன்பே நான் உம்மைத் துதிக்கிறேன்

1. நீரே என் வழி நீரே என் சத்தியம்
நீரே என் ஜீவனன்றோ

2. அப்பாவும் நீரே அம்மாவும் நீரே
நான் உந்தன் பிள்ளையன்றோ

3. நல்ல மேய்ப்பன் நீர் தானே
நான் உந்தன் ஆட்டுக்குட்டி

4. ஜீவ நீருற்று நீர் தானே
உந்தன்மேல் தாகம் கொண்டேன்

# அப்பா பிதாவே அன்பான தேவா

அப்பா பிதாவே அன்பான தேவா
அருமை இரட்சகரே ஆவியானவரே

1. எங்கோ நான் வாழ்ந்தேன் அறியாமல் அலைந்தேன்
என் நேசர் தேடி வந்தீர்
நெஞ்சார அணைத்து முத்தங்கள் கொடுத்து
நிழலாய் மாறி விட்டீர்
நன்றி உமக்கு நன்றி (அப்பா)

2. தாழ்மையில் இருந்தேன் தள்ளாடி நடந்தேன்
தயவாய் நினைவு கூர்ந்தீர்
கலங்காதே என்று கண்ணீரைத் துடைத்து
கரம் பற்றி நடத்துகிறீர்

3. உளையான சேற்றில் வாழ்ந்த என்னை
தூக்கி எடுத்தீரே
கல்வாரி இரத்தம் எனக்காக சிந்தி
கழுவி அணைத்தீரே

4. இரவும் பகலும் ஐயா கூட இருந்து
எந்நாளும் காப்பவரே
மறவாத தெய்வம் மாறாத நேசர்
மகிமைக்குப் பாத்திரரே

5. ஒன்றை நான் கேட்பேன்
அதையே நான் தேடி ஆர்வமாய் நாடுகிறேன்
உயிரோடு வாழும் நாட்களெல்லாம்
உம்பணி செய்திடுவேன் - நன்றி

# அப்பா வீட்டில் எப்போதும்

அப்பா வீட்டில் எப்போதும் சந்தோஷமே
ஆடலும் பாடலும் இங்கு தானே - நம்ம
ஆடுவோம், கொண்டாடுவோம்
பாடுவோம் நடனமாடுவோடும்
அல்லேலூயா ஆனந்தமே
எல்லையில்லா பேரின்பமே

1. காத்திருந்தார் கண்டு கொண்டார்
கண்ணீரெல்லாம் துடைத்துவிட்டார்

2. பரிசுத்த முத்தம் தந்து
பாவமெல்லாம் போக்கிவிட்டார்

3. பாவத்திலே மரித்திருந்தேன்
புதிய மனிதனாய் உயிர்த்துவிட்டேன்

4. ஆவியென்னும் ஆடை தந்தார்
ஆதிகாரம் என்னும் மோதிரம் தந்தார் - தூய

5. வசனமென்னும் சத்துணவை
வாழ்நாளெல்லாம் ஊட்டுகிறார்

6. அணிந்து கொண்டோம் மிதியடியை
அப்பாவின் சுவிசேஷம் அறிவித்திட

# அழிந்து போகின்ற

அழிந்து போகின்ற ஆத்துமாக்களை
தினமும் திமமும் நினைப்பேன்
அலைந்து திரிகின்ற ஆட்டைத் தேடியே
ஓடி ஓடி உழைப்பேன்
தெய்வமே தாருமே
ஆத்தும பாரமே

1. இருளின் ஜாதிகள்
பேரொளி காணட்டும்
மரித்த மனிதர்மேல்
வெளிச்சம் உதிக்கட்டும்

2. திறப்பின் வாசலில்
தினமும் நிற்கின்றேன்
சுவரை அடைக்க நான்
தினமும் ஜெபிக்கின்றேன்

3. எக்காள சப்தம் நான்
மௌனம் எனக்கில்லை
சாமக்காவலன்
சத்தியம் பேசுவேன்

4. கண்ணீர் சிந்தியே
விதைகள் தூவினேன்
கெம்பீர சப்தமாய்
அறுவடை செய்கிறேன்

5. ஊதாரி மைந்தர்கள்
உம்மிடம் திரும்பட்டும்
விண்ணகம் மகிழட்டும்
விருந்து நடக்கட்டும்

# அறுவடையோ மிகுதி

அறுவடையோ மிகுதி
ஆட்களோ கொஞ்சம்
அறுவடையின் தேவனை நோக்கிடுவோம்

1. வயல் நிலங்கள் எல்லாம்
விளைந்து விட்டதன்றோ
ஓடி ஓடி அறுப்போம்
களஞ்சியத்தில் சேர்ப்போம்

2. திறப்பிலே நிற்போம்
விரிசல்களை அடைப்போம்
விழித்திருந்து ஜெபிப்போம்
வெற்றி கண்டு மகிழ்வோம்

3. நதியளவு கண்ணீர்
நாள்முழுதும் வடிப்போம்
இந்தியாவை நினைப்போம்
இரவும் பகலும் ஜெபிப்போம்

4. ஆத்ம பாரம் கொள்வோம்
ஆர்வத்தோடு செல்வோம்
யுத்த களத்தில் நிற்போம்
கோலியாத்தை வெல்வோம்

5. தொடர்ந்து நன்மை செய்வோம்
சோர்வில்லாமல் செல்வோம்
குறித்த காலம் வருமே
அறுவடை நிச்சயமே

# அனைத்தையும் செய்து முடிக்கும்

அனைத்தையும் செய்து முடிக்கும் ஆற்றல் உள்ளவரே
நீர் நினைத்தது ஒரு நாளும் தடைபடாதையா

1. நீர் முடிவெடுத்தால் யார்தான் மாற்ற முடியும்
எனக்கென முன்குறித்த எதையுமே
எப்படியும் நிறைவேற்றி முடித்திடுவீர்
உமக்கே ஆராதனை உயிருள்ள நாளெல்லாம்

2. நான் எம்மாத்திரம் ஒரு பொருட்டாய் எண்ணுவதற்கு
காலைதோறும் கண்ணோக்கிப் பார்க்கிறீர்
நிமிடந்தோறும் விசாரித்து மகிழ்கிறீர்

3. என்னைப் புடமிட்டால் பொன்னாக துலங்கிடுவேன்
நான் போகும் பாதைகளை அறிந்தவரே
உந்தன் சொல்லை உணவு போலக் காத்துக்கொண்டேன்

4. நான் எண்ணிமுடியா அதிசயம் செய்பவரே
காயப்படுத்தி கட்டுப்போடும் கர்த்தரே - என்னை
அடித்தாலும் அணைக்கின்ற அன்பரே

5. என் மீட்பரே உயிரோடு இருப்பவரே
இறுதி நாளில் மண்ணில் வந்து நிற்பதை
என் கண்கள்தானே அந்நாளில் காணுமே
எப்போது வருவீரையா
என் உள்ளம் ஏங்குதையா

# அன்பு கூருவேன் இன்னும்

அன்பு கூருவேன் இன்னும் அதிகமாய்
ஆராதிப்பேன் இன்னும் ஆர்வமாய் (2)
முழு உள்ளத்தோடு ஆராதிப்பேன்
முழு பெலத்தோடு அன்பு கூருவேன்
ஆராதனை ஆராதனை - 4

1. எபிநேசரே எபிநேசரே
   இதுவரையில் உதவினீரே (2)
   இதுவரையில் உதவினீரே - உம்மை
   முழு உள்ளத்தோடு ஆராதிப்பேன்
   முழு பெலத்தோடு அன்பு கூருவேன்
   ஆராதனை ஆராதனை - 2

2. எல்ரோயீ எல்ரோயீ
   என்னைக் கண்டீரே நன்றி ஐயா
   என்னைக் கண்டீரே நன்றி ஐயா - உம்மை
   முழு உள்ளத்தோடு...

3. யெகோவா ராப்பா யெகோவா ராப்பா
   சுகம் தந்தீரே நன்றி ஐயா
   சுகம் தந்தீரே நன்றி ஐயா - உம்மை
   முழு உள்ளத்தோடு...

# அன்பின் தெய்வம்

அன்பின் தெய்வம் இயேசு
ஆறுதல் தருபவர்
மார்பில் சாய்கின்றேன்
மகிழ்ந்து பாடுவேன் - 2

1. பாதை இழந்த ஆடாய்
பாரினில் ஓடினேன்
சிலுவை அன்பினாலே
திசையும் புரிந்தது
வாழ்வது நானல்ல என்னில்
இயேசு வாழ்கின்றார்

2. இயேசு பேசும்போது - என்
உள்ளம் உருகுதே அவர்
வார்த்தை படிக்கும் போது என்
வாழ்வு மாறுதே
வேதம் ஏந்துவேன் வெல்வேன்
அலகையை - தினம்

3. கண்ணீர் சிந்தும்போது - மனக்
கண்ணில் தெரிகின்றார்
கவலை நெருங்கும்போது - அவர்
கரத்தால் அணைக்கின்றார்
ஆவி பொழிகின்றார்
ஆற்றல் தருகின்றார் - எனக்கு

# அன்பே என் இயேசுவே ஆருயிரே

அன்பே என் இயேசுவே ஆருயிரே
ஆட்கொண்ட என் தெய்வமே

1. உம்மை நான் மறவேன்
உமக்காய் வாழ்வேன்

2. வாழ்வோ சாவோ
எதுதான் பிரிக்க முடியும்

3. தாயைப்போல் தேற்றினீர்
தந்தை போல் அணைத்தீர்

4. உம் சித்தம் நான் செய்வேன்
அதுதான் என் உணவு

5. இரத்தத்தால் கழுவினீர்
இரட்சிப்பால் உடுத்தினீர்

# அன்பே கல்வாரி அன்பே

அன்பே கல்வாரி அன்பே
உம்மைப் பார்க்கையிலே
என் உள்ளம் உடையுதப்பா

1. தாகம் தாகம் என்றீர்
எனக்காய் ஏங்கி நின்றீர்
பாவங்கள் சுமந்தீர் - எங்கள்
பரிகார பலியானீர்

2. காயங்கள் பார்க்கின்றேன்
கண்ணீர் வடிக்கின்றேன்
தூய திரு இரத்தமே
துடிக்கும் தாயுள்ளமே

3. அணைக்கும் கரங்களிலே
ஆணிகளா சுவாமி?
நினைத்து பார்க்கையிலே
நெஞ்சம் உருகுதையா

4. நெஞ்சிலே ஓர் ஊற்று
நதியாய் பாயுதையா
மனிதர்கள் மூழ்கணுமே
மறுரூபம் ஆகணுமே

# அமர்ந்திருப்பேன் அருகினிலே

அமர்ந்திருப்பேன் அருகினிலே
சாய்ந்திருப்பேன் உம் தோளினிலே
இயேசைய்யா என் நேசரே
அன்பு கூர்ந்தீர் ஜீவன் தந்தீர்
நேசிக்கிறேன் உம்மைத் தானே
நினைவெல்லாம் நீர்தானய்யா
துதிபாடி மகிழ்ந்திருப்பேன்
உயிருள்ள நாளெல்லாம்

# ஆகாதது எதுவுமில்லை

வல்லவர் சர்வ வல்லவர்
நல்லவர் எப்போதும் நல்லவர்
எல்ஷடாய் அல்லேலூயா

ஆகாதது எதுவுமில்ல
உம்மால் ஆகாதது எதுவுமில்ல
அகிலம் அனைத்தையும் உண்டாக்கி ஆளுகின்றீர்

1. துதி செய்யத் தொடங்கியதும்
   எதிரிகள் தங்களுக்குள்
   வெட்டுண்டு மடியச் செய்தீர் (2)
   உம்மால் ஆகும் எல்லாம் ஆகும்

2. அலங்கார வாசலிலே
   அலங்கோல முடவன் அன்று
   நடந்தானே இயேசு நாமத்தில் (2)

3. கோலும் கையுமாக
   பிழைக்கச் சென்றார் யாக்கோபு
   பெருகச் செய்தீர் பெரும் கூட்டமாய்

4. கண்ணீரைக் கண்டதாலே
   கல்லறைக்குச் சென்றவனை
   கரம் பிடித்து தூக்கி விட்டீர்

5. ஈசாக்கு ஜெபித்ததாலே
   ரெபேக்காள் கருவுற்று
   இரட்டையர்கள் பெற்றெடுத்தாள்

6. எலியாவின் வார்த்தையாலே
   சாறிபாத் விதவை வீட்டில்
   எண்ணெய் மாவு குறையவில்லையே

7. ஜெப வீரன் தானியேலை
   சிங்கங்களின் குகையினிலே
   சேதமின்றிக் காப்பாற்றினீர்

8. கானாவூரில் வார்த்தை சொல்ல

கப்பர்நகூம் சிறுவனங்கே
சுகமானான் அந்நேரமே

9. தண்ணீரால் ஜாடிகளை கீழ்படிந்து நிரப்பினதால்
திராட்சை ரசம் வந்ததையா

# ஆட்கொண்ட தெய்வம் திருப்பாதம்

ஆட்கொண்ட தெய்வம் திருப்பாதம் அமர்ந்து
ஆறுதல் அடைகின்றேன்
ஆமைதி பெறுகின்றேன்

1. புயல் வீசும் கடலில் தடுமாறும் படகை
தூங்கிடும் நங்கூரமே (3) தினம்

2. எதிர்காற்று வீச எதிர்ப்போரும் பேச
எனைக் காக்கும் புகலிடமே - தினம்

3. நிலையற்ற வாழ்வின் நிம்மதியே
நீங்காத பேரின்பமே - என்னை விட்டு

4. இருள் நீக்கும் சுடரே என் இயேசு ராஜா
என் வாழ்வின் ஆனந்தமே

5. மனதுருகும் தேவா மன்னிக்கும் நாதா
மாபெரும் சந்தோஷமே

6. காயங்கள் ஆற்றி கண்ணீரைத் துடைக்கும்
நல்ல சமாரியனே

# ஆண்டவர் ஆளுகை

ஆண்டவர் ஆளுகை செய்கின்றார்
அனைத்து உயிர்களே பாடுங்கள்

ராஜாதி ராஜா கர்த்தாதி கர்த்தர்
எப்போதும் இருப்பவர் இனிமேலும் வருபவர்

மகிழ்வுடனே கர்த்தருக்கு ஆராதனை செய்யுங்கள்
ஆனந்த சத்தத்தோடே திருமுன் வாருங்கள்
ராஜாதி ராஜா...

எக்காள தொனி முழங்க இப்போது துதியுங்கள்
வீணையுடன் யாழ் இசைத்து வேந்தனை துதியுங்கள்
ராஜாதி ராஜா...

துதியோடும் புகழ்ச்சியோடும் வாசலில் நுழையுங்கள்
அவர் நாமம் உயர்த்திடுங்கள் ஸ்தோத்திர பலியிடுங்கள்
ராஜாதி ராஜா...

ஓசையுள்ள கைத்தாளத்தோடு நேசரை துதியுங்கள்
சுவாசமுள்ள யாவருமே இயேசுவை துதியுங்கள்
ராஜாதி ராஜா...

நம் கர்த்தரோ நல்லவரே கிருபை உள்ளவரே
நம்பத்தக்கவர் தலைமுறைக்கும் என்றென்றும் நம்பத்தக்கவர்
ராஜாதி ராஜா...

இயேசுவே நம் இரட்சகர்என்று முழங்கிடுங்கள்
அவர் நமக்காய் ஜீவன் தந்தார் அவரின் ஆடுகள் நாம்
ராஜாதி ராஜா...

நடனத்தோடும் தம்புரோடும் நாதனை துதியுங்கள்
மத்தளத்தோடும் குழல் ஊதி சப்தமாய் துதியுங்கள்
ராஜாதி ராஜா...

# ஆண்டவர் எனக்காய்

ஆண்டவர் எனக்காய் யாவையும்
செய்து முடிப்பார் அச்சமே
எனக்கில்லை அல்லேலூயா

1. என்னை நடத்தும் இயேசுவினாலே
எதையும் செய்திடுவேன்
அவரது கிருபைக்கு காத்திருந்து
ஆவியில் பெலனடைவேன்

2. வறுமையோ வருத்தமோ
வாட்டிடும் துன்பமோ
எதையும் தாங்கிடுவேன்
அநுதின சிலுவையைத் தோளில் சுமந்து
ஆண்டவர் பின் செல்வேன்

# ஆண்டவர் படைத்த வெற்றியின்

ஆண்டவர் படைத்த வெற்றியின் நாளிது
இன்று அகமகிழ்வோம் அக்களிப்போம்
அல்லேலூயா பாடுவோம்
அல்லேலூயா தோல்வி இல்லை
அல்லேலூயா வெற்றி உண்டு

1. எனக்கு உதவிடும் எனது ஆண்டவர்
என் பக்கம் இருக்கிறார்
உலக மனிதர்கள் எனக்கு எதிராக
என்ன செய்ய முடியும்
தோல்வி இல்லை எனக்கு
வெற்றி பவனி செல்வேன்
தோல்வி இல்லை நமக்கு
வெற்றி பவனி செல்வோம்

2. எனது ஆற்றலும் எனது பாடலும்
எமது மீட்புமானார்
நீதிமான்களின் (கூடாரத்தில்) சபைகளிலே
வெற்றி குரல் ஒலிக்கட்டும்

3. தள்ளப்பட்ட கல் கட்டிடம் தாங்கிடும்
மூலைக்கல் ஆயிற்று
கர்த்தர் செயல் இது அதிசயம் இது
கைத்தட்டிப் பாடுங்களேன்

4. என்றும் உள்ளது உமது பேரன்பு
என்று பறைசாற்றுவேன்
துன்ப வேளையில் நோக்கி கூப்பிட்டேன்
துணையாய் வந்தீரையா

# ஆண்டவரை எக்காலமும்

ஆண்டவரை எக்காலமும் போற்றிடுவேன்
அவர் புகழ் எப்போதும் என் நாவில் ஒலிக்கும்

1. என்னோடே ஆண்டவரை மகிமைப்படுத்துக்கள்
ஒருமித்து அவர் நாமம் உயர்த்திடுவோம்
நடனமாடி நன்றி சொல்வோம்

2. ஆண்டவரைத் தேடினேன் செவி கொடுத்தார்
எல்லாவித பயத்தினின்றும் விடுவித்தார்

3. அவரை நோக்கிப் பார்த்ததால் பிரகாசமானேன்
எனது முகம் வெட்கப்பட்டுப் போகவேயில்ல

4. ஏழை நான் கூப்பிட்டேன் பதில் தந்தாரே
நெருக்கடிகள் அனைத்தினின்றும் விடுவித்தாரே

5. கர்த்தர் நல்லவர் சுவைத்துப் பாருங்கள்
அவரை நம்பும் மனிதரெல்லாம் பாக்கியவான்கள்

6. சிங்கக் குட்டி உணவின்றி பட்டினி கிடக்கும்
ஆண்டவரை நாடுவோருக்கு குறையேயில்லை

7. கர்த்தர் கண்கள் நீதிமானை நோக்கியிருக்கும்
அவர் செவிகள் அவனுக்குத் திறந்திருக்கும்

8. நீதிமான்கள் கூப்பிட்டால் கர்த்தர் கேட்கிறார்
துன்பங்கள் அனைத்தினின்றும் விடுவிக்கிறார்

9. உடைந்த உள்ளத்தார்க்கு அருகில் இருக்கிறார்
நைந்த நெஞ்சத்தாரை காப்பாற்றுகிறார்

10. நீதிமானுக்கு வரும் துன்பம் அநேகமாயிருக்கும் - அவை
அனைத்தினின்றும் அவர்தாமே விடுதலை தருவார்

11. ஆண்டவரில் என் ஆன்மா மேன்மைபாராட்டும்
சிறுமையுற்றோர் அதைக்கேட்டு அக்களிப்பார்கள்

# ஆண்டவரே உம் பாதம்

ஆண்டவரே உம் பாதம் சரணடைந்தேன்
அடிமை நான் ஐயா
ஆயிரம் ஆயிரம் துன்பங்கள் வந்தாலும்
அகன்று போக மாட்டேன் - உம்மை விட்டு
அகன்று போக மாட்டேன்

1. ஒவ்வொரு நாளும் உம் குரல் கேட்டு
அதன்படி நடக்கின்றேன்
உலகினை மறந்து உம்மையே நோக்கி
ஓடி வருகின்றேன்

2. வேதத்திலுள்ள அதிசயம் அனைத்தும்
நன்கு புரியும்படி
தேவனே எனது கண்களையே
தினமும் தறந்தருளும்

3. வாலிபன் தனது வழிதனையே
எதனால் சுத்தம் பண்ணுவான்
தேவனே உமது வார்த்தையின்படியே
காத்துக் கொள்வதனால்

4. நான் நடப்பதற்கு பாதையைக் காட்டும்
தீபமே உம் வசனம்
செல்லும் வழிக்கு வெளிச்சமும் அதுவே
தேவனே உம் வாக்கு

5. தேவனே உமக்கு எதிராய் நான்
பாவம் செய்யாதபடி
உமது வாக்கை என் இருதயத்தில்
பதித்து வைத்துள்ளேன்

# ஆரவாரம் ஆர்ப்பாட்டம்

ஆரவாரம் ஆர்ப்பாட்டம்
அப்பா சந்நிதியில்
நாளெல்லாம் கொண்டாட்டம்
நல்லவர் முன்னிலையில்
நன்றி பாடல் தினமும் பாடுவோம்
நல்ல தேவன் உயர்த்திப் பாடுவோம்

1. கல்வாரி சிலுவையிலே கர்த்தர்
இயேசு வெற்றிச்சிறந்தார்
கண்ணீரை மாற்றி நம்மை
காலமெல்லாம் மகிழச் செய்தார்

2. கிறிஸ்துவை நம்பினதால்
பிதாவுக்குப் பிள்ளையானோம்
அப்பான்னு கூப்பிடப்பண்ணும்
ஆவியாலே நிரப்பப்பட்டோம்

3. உயிர்த்த கிறிஸ்து நம்ம
உள்ளத்திலே வந்துவிட்டார்
சாவுக்கேதுவான நம்ம
சரீரங்களை உயிர்ப்பிக்கிறார்

4. ஆவிக்கேற்ற பலி செலுத்தும்
ஆசாரிய கூட்டம் நாம்
வெளிச்சமாய் மாற்றியவர்
புகழ்ச்சிதனை பாடிடுவோம்

5. துயரம் நீக்கிவிட்டார்
கொண்டாட்டத்தின் ஆடை தந்தார்
ஒடுங்கின ஆவி நீக்கி
துதி என்னும் உடையை தந்தார்

6. நீதியின் சால்வை தந்து
இரட்சிப்பாலே போர்த்துவிட்டார்
மணமகன் மணமகள் போல்
அலங்கரித்து மகிழ்கின்றார்

7. இயேசுவின் பெயராலும்

ஆவியாலும கழுவபபடடோம
நீதிமானாய் மாற்றப்பட்டு
தூய்மையான பிள்ளைகளானோம்

8. மூலைக்கல்லாம் கிறிஸ்துவின் மேல்
கட்டப்பட்ட மாளிகை நாம்
ஆவிதாங்கும் ஆலயமாய்
வளர்கின்ற கோபுரம் நாம்

9. விண்ணகமே நம் நாடு
வருகைக்காக காத்திருப்போம்
அற்பமான நமது உடல்
அப்பா போல மாறிடுமே

# ஆராதிப்பேன் நான் ஆராதிப்பேன்

ஆராதிப்பேன் நான் ஆராதிப்பேன்
ஆண்டவர் இயேசுவை ஆராதிப்பேன்

1. வல்லவரே உம்மை ஆராதிப்பேன்
நல்லவரே உம்மை ஆராதிப்பேன்

2. பரிசுத்த உள்ளத்தோடு ஆராதிப்பேன்
பணிந்து குனிந்து ஆராதிப்பேன்

3. ஆவியிலே உம்மை ஆராதிப்பேன்
உண்மையிலே உம்மை ஆராதிப்பேன்

4. தூதர்களோடு ஆராதிப்பேன்
ஸ்தோத்திர பலியோடு ஆராதிப்பேன்

5. காண்பவரை நான் ஆராதிப்பேன்
காப்பவரை நான் ஆராதிப்பேன்

6. வெண்ணாடை அணிந்து ஆராதிப்பேன்
குருத்தோலை ஏந்தி ஆராதிப்பேன்

# ஆரோக்கியம் ஆரோக்கியம்

ஆரோக்கியம் ஆரோக்கியம்
அப்பாவின் சமூகத்தில் ஆரோக்கியம்

1. நீதியின் சூரியன் என்மேலே - அவர்
சிறகின் நிழலிலே ஆரோக்கியம்

2. கட்டுக்கள் அவிழ்க்கப்பட்ட கன்றுக்குட்டி
கொழுத்த கன்றுகளாய் வளருவோம்

3. துன்மார்க்க சாத்தானை மிதிப்போம்
காலின் கீழ் சாம்பலாய் எரிப்போம்

4. இயேசப்பா நோய்களை சுமந்ததால் .. இனி
நாம் சுமக்க தேவையில்லை தேவையில்லை

5. பொறாமை அவதூறு அகற்றுவோம்
வஞ்சகம் வெளிவேடம் நீக்குவோம்

6. புதிதாய் பிறந்த குழந்தைகள் போல்
வார்த்தையாம் பாலின் மேல் வாஞ்சையாம்

# ஆவியான எங்கள் அன்பு

ஆவியான எங்கள் அன்பு தெய்வமே
அடியோரை ஆட்கொண்டு நடத்துமே
ஆட்கொண்டு எங்களை அனலாக்கும்
அன்பினால் இன்று அலங்கரியும்...

1. ஜெபிக்க வைக்கும் எங்கள் ஜெப வீரனே
துதிக்கத் தூண்டும் துணையாளரே
சாத்தானின் சகல தந்திரங்களை
தகர்த்தெறிய வாரும் ஐயா - ஆட்கொண்டு

2. சாவுக்கேதுவான எங்கள் சரீரங்களை
உயிர் பெறச் செய்பவரே
சரீரங்களின் தீய செயல்களையே
சாகடிக்க வாருமையா

3. பெலன் இல்லாத நேசங்களில்
உதவிடும் துணையாளரே
சொல்லொண்ணா பெருமூச்சோடு
ஜெபித்திட வாருமையா

4. மனதை புதிதாக்கும் மன்னவனே
மறுரூபமாக்குமையா
ராஜாவின் இரண்டாம் வருகைக்காக
எந்நாளும் ஏங்கச் செய்யும் - இயேசு

5. தேவாதி தேவனின் ஆழங்களை
ஆராய்ந்து அறிபவரே
அப்பாவின் திருச்சித்தம் வெளிப்படுத்தி
எப்போதும் நடத்தும் ஐயா

6. பாவம், நீதி, நியாயத்தீர்ப்பை
கண்டித்து உணர்த்தும் ஐயா
பரிபூரண உம் சத்தியத்திற்குள்
பக்தர்களை நடத்தும் ஐயா

# ஆவியானவரே அன்பு நேசரே

ஆவியானவரே அன்பு நேசரே
ஆட்கொண்டு நடத்துமையா

1. உந்தன் பாதைகள் அறிந்திடச் செய்யும்
உம் வழிகள் கற்றுத் தாரும்
உந்தன் வார்த்தையின் வெளிச்சத்திலே
தினந்தினம் நடத்துதையா

2. கண்ணின் மணி போல காத்தருளும்
கழுகு போல சுமந்தருளும்
உந்தன் சிறகுகள் நிழல்தனிலே
எந்நாளும் மூடிக் கொள்ளும்

3. வெயில் நேரத்தில் குளிர் நிழலே
புயல் காற்றில் புகலிடமே
கடுமழையில் காப்பகமே
நான் தங்கும் கூடாரமே

4. நியாயத் தீர்ப்பின் ஆவியானவரே
சுட்டெரிப்பின் ஆவியானவரே
பாவம் கழுவி தூய்மையாக்கும்
பரிசுத்த ஆவியானவரே

5. வியத்தகு உம் பேரன்பை
எனக்கு விளங்கப்பண்ணும்
என் இதயம் ஆய்ந்தறியும்
புடமிட்டு பரிசோதியும்

# ஆளுகை செய்யும் ஆவியானவரே

ஆளுகை செய்யும் ஆவியானவரே
பலியாய் தந்தேன் பரிசுத்தமானவரே
ஆவியானவரே - என் ஆற்றலானவரே

1. நினைவெல்லாம் உமதாகணும்
பேச்செல்லாம் உமதாகணும்
நாள் முழுதும் வழிநடத்தும்
உம் விருப்பம் செயல்படுத்தும்

2. அதிசயம் செய்பவரே
ஆறுதல் நாயகனே
காயம் கட்டும் கர்த்தாவே
கண்ணீரெல்லாம் துடைப்பவரே - என்

3. புதிதாக்கும் பரிசுத்தரே
புதுப்படைப்பாய் மாற்றுமையா
ஊடைத்துவிடும் உருமாற்றும்
பண்படுத்தும் பயன்படுத்தும்

4. அப்பாவை அறிந்திடணும்
வெளிப்பாடு தாருமையா
மனக்கண்கள் ஒளிபெறணும்
மகிமையின் அச்சாரமே

5. உள்ளான மனிதனை
வல்லமையாய் பலப்படுத்தும்
அன்பு ஒன்றே ஆணிவேராய்
அடித்தளமாய் அமைந்திடணும்

6. கிறிஸ்துவின் அன்பின் ஆழம்
அகலம் அயரம் உணரணுமே
நினைப்பதற்கும் ஜெபிப்பதற்கும்
அதிகமாய் செய்பவரே

7. சங்கீதம் கீர்த்தனையால்
பிறரோடு பேசணுமே
எந்நேரமும் எப்போதுமே
நன்றிப் பலி செலுத்தணுமே

8. போர் செய்யும் ஆயதமாய்
உம் வசனம் தாருமையா
எல்லாவித ஜெபத்தோடு
ஆவியிலே மன்றாடணும்

9. என் இதய பலகையிலே
எழுதிடும் உம் வார்த்தை
மையாலல்ல உம் ஆவியாலே
எழுதிடுமே ஏங்குகின்றேன்

10. அரண்களை தகர்த்தெறியும் - என்
அன்பின் வல்லவரே
எதிரான எண்ணங்களை
கீழ்படுத்தும் சிறைபடுத்தும்

# ஆறுதலின் தெய்வமே

ஆறுதலின் தெய்வமே உம்முடைய திருச்சமூகம்
எவ்வளவு இன்பமானது

1. ஆத்துமா தேவனே உம்மையே நோக்கி
ஆர்வமுடன் கதறுகின்றன
உள்ளமும் உடலும் ஒவ்வொருநாளும்
கெம்பீரித்து சத்தமிடுது - ஆமென்

2. உம்முடைய சந்நிதியில் தங்கியிருப்போர்
உண்மையிலே பாக்கியவான்கள்
தூய மனதுடன் துதிப்பார்கள்
துதித்துக் கொண்டிருப்பார்கள் - ஆமென்

3. உம்மிலே பெலன் கொள்ளும் மனிதர்களெல்லாம்
உண்மையிலே பாக்கியவான்கள்
ஓடினாலும் களைப்படையார்
நடந்தாலும் சோர்வடையார் - ஆமென்

4. கண்ணீரின் பாதையில் நடக்கும் போதெல்லாம்
களிப்பான் நீரூற்றாய் மாற்றிக் கொள்வார்கள்
வல்லமைமேலே வல்லமைகொண்டு
சீயோனைக் காண்பார்கள் - ஆமென்

5. வேறிடத்தில் ஆயிரம் நாள் வாழ்வதைவிட
உம்மிடத்தில் ஒரு நாள் மேலானது
ஒவ்வொரு நாளும் உமது இல்லத்தின்
வாசலில் காத்திருப்பேன் - ஆமென்

# இப்போதும் எப்போதும்

இப்போதும் எப்போதும் எல்லாவற்றிற்காகவும்
தந்தையாம் கடவுளுக்கு துதிபலி செலுத்திடுவோம்

துதிபலி சுகந்த வாசைன
நன்றி பலி அது உகந்த காணிக்கை

1. எல்லா மனிதருக்கும் இரட்சிப்பு தருகின்ற
தேவனின் கிருபையே பிரசன்னமானீரே
துதிக்கிறேன் தூயவரே போற்றுகிறேன் புண்ணியரே

2. தீய நாட்டங்கள் உலகுசார்ந்தவைகள்
வெறுக்கச் செய்தீரே வெற்றியும் தந்தீரே

3. நெறிகேடு அனைத்தினின்றும் மீட்பு தந்தீரய்யா
நற்செயல் செய்வதற்கு ஆர்வம் தந்தீரய்யா

4. தேவ பக்தியுடன் தெளிந்த புத்தியோடு
இம்மையில் வாழ்வதற்கு பயிற்சி தருகின்றீர்

5. சொந்த மகனாக தூய்மையாக்கிடவே
உம்மையே பலியாக ஒப்படைத்தீர் சிலுவையிலே

6. மறுஜென்ம முழுக்கினாலும் புதிதாக்கும் ஆவியாலும்
இரட்சித்துக் கழுவினீரே மிகுந்த இரக்கத்தினால்

7. நீதிமான் ஆக்கினீரே உமது கிருபையினால்
நித்திய ஜீவன் தந்தீரே நிரந்தரப்பரிசாக

# இடுக்கமான் வாசல் வழியே

இடுக்கமான வாசல் வழியே
வருந்தி நுழைய முயன்றிடுவோம்
சிலுவை சுமந்து இயேசுவின் பின்
சிரித்த முகமாய் சென்றிடுவோம்

1. வாழ்வுக்கு செல்லும் வாசல் இடுக்கமானது
பரலோகம் செல்லும் பாதை குறுகலானது - சிலுவை

2. நாம் காணும் இந்த உலகம்
ஒருநாள் மறைந்திடும்
புது வானம் பூமி நோக்கி
பயணம் செய்கின்றோம்

3. இவ்வாழ்வின் துன்பம் எல்லாம்
சிலகாலம் தான் நீடிக்கும்
இணையில்லாத மகிமை
இனிமேல் நமக்குண்டு

4. அழிவுக்கு செல்லும் வாயில்
மிகவும் அகன்றது
பாதாளம் செல்லும் பாதை
மிகவும் விரிந்தது

# இதயங்கள் மகிழட்டும்

இதயங்கள் மகிழட்டும்
முகங்கள் மலரட்டும் (சிரிக்கட்டும்)
மனமகிழ்ச்சி நல்ல மருந்து

1. மன்னித்து அணைத்துக்கொண்டார்
மகனாய் சேர்த்துக்கொண்டார்
கிருபையின் முத்தங்களால் புது உயிர்தருகின்றார்
கோடி நன்றி பாடிக் கொண்டாடுவோம்

2. அவரது மக்கள் நாம் அவர் மேய்க்கும் ஆடுகள் நாம்
தலைமுறை, தலைமுறைக்கும் நம்பத்தக்கவரே

3. தாய் மறந்தாலும் மறக்கவே மாட்டார்
உள்ளங்கைகளிலே பொறித்து வைத்துள்ளார்

4. தண்டனை நீக்கிவிட்டார் சாத்தானை துரத்திவிட்டார்
நடுவில் வந்துவிட்டார் தீங்கைக் காணமாட்டோம்

5. உண்டாக்கினார் நம்மை அவரில் மகிழ்ந்திருப்போம்
ஆட்சி செய்கின்றார் அந்த ராஜாவில் களிகூருவோம்

6. தமது ஜனத்தின்மேல் பிரியம் வைக்கின்றார்
அதிசய இரட்சிப்பினால் அலங்கரிக்கின்றார்

7. நல்லவர் நல்லவரே (அவர்) கிருபை உள்ளவரே
அவரது பேரன்பு என்றென்றும் நிலைத்திருக்கும்

8. சஞ்சலமும் தவிப்பும் பறந்து ஓடியதே – அது
நித்திய நித்தியமாய் மகிழ்ச்சி நம் தலைமேல்

# இந்தியா இயேசுவுக்கு சொந்தமாகனும்

இந்தியா இயேசுவுக்கு சொந்தமாகனும்
இயேசுவே ஆண்டவர் என்று சொல்லனும்
சொந்தமாகனும் .. இயேசுவுக்கு .. சொந்தமாகனும்

1. சிறையில் உள்ளோர் விடுதலையும்
புதுவாழ்வுப் பெற வேண்டும்

2. பாவமெல்லாம் மறைய வேண்டும்
சாபங்கள் மாற வேண்டும்

3. ஜனங்களெல்லாம் தேட வேண்டும்
நேசரை தேட வேண்டும்

4. கண்களெல்லாம் திறக்கப்பட்டு
கர்த்தரை காண வேண்டும்

5. சாத்தானின் சூழ்ச்சிகளை
ஜெபத்தால் ஜெயிக்க வேண்டும்

6. அற்புதங்கள் அதிசயங்கள்
அனுதினம் நடக்க வேண்டும்

7. போட்டிகளும் பொறாமைகளும்
சபைகளில் மறைய வேண்டும்

# இம்மட்டும் கைவிடா தேவன்

இம்மட்டும் கைவிடா தேவன்
இனியும் கைவிடமாட்டார்
தாயின் வயிற்றில் தாங்கினார்
ஆயுள் முழுதும் தாங்குவார்
தாங்குவார் தப்புவிப்பார்
ஏந்துவார் என் தெய்வம்

1. ஆயன் இயேசு ஆடுநான்
ஆதலால் பயமில்லை
சாத்தான் பறிக்க முடியாது
சபிக்கின்றேன் இயேசு நாமத்தில்

2. இயேசு கிறிஸ்து வசனத்தால்
எல்லா நாளும் சந்தோஷம்
வியாதி வறுமை வேதனை
எதுநான் பிரிக்க முடியுமோ

3. கர்த்தர் எனக்காய் யுத்தம் செய்வார்
கலக்கம் எனக்கு இனியில்லை
துதித்து துதித்து நாளெல்லாம்
துரத்திடுவேன் சத்துருவை

# இயேசு கிறிஸ்து ஆண்டவர் என்று

இயேசு கிறிஸ்து ஆண்டவர் என்று
எல்லா நாவும் அறிக்கை செய்யட்டும்

1. தேவனின் ரூபமாயிருந்தும்
தம்மை தாமே வெறுமையாக்கினார்
அடிமைப் போல தன்னைத் தாழ்த்தினார்
அன்பினால் மனிதரின் சாயலானார்

2. மரணம் மட்டும் கீழ்ப்படிந்தார்
சிலுவை மட்டும் தன்னை த் தாழ்த்தினார்
ஆதலால் தேவன் அவரை உயர்த்தினார்
மேலான நாமம் அவருக்குத் தந்தார்

3. முழங்கால்கள் முடங்கட்டும்
முழக்கம் செய்யட்டுமே
விண்ணவர் மண்ணவர் கீழ் உலகோர்
இயேசுவே ஆண்டவர் என்று சொல்லட்டும்

# இயேசுகிறிஸ்து என் ஜீவன்

இயேசுகிறிஸ்து என் ஜீவன்
சாவது ஆதாயமே
வாழ்வது நானல்ல இயேசு என்னில் வாழ்கின்றார்

1. இயேசுவை நான் எற்றுக் கொண்டேன்
அவருக்குள் நான் வேர் கொண்டேன்
அவர் மேல் எழும்பும் கட்டடம் நான்
அசைவதில்லை தளர்வதும் இல்லை

2. என்ன வந்தாலும் கலங்கிடாமல்
இடுக்கண் நேரம் ஸ்தோத்தரிப்பேன்
அறிவைக் கடந்த தெய்வீக அமைதி
அடிமை வாழ்வின் கேடயமே

3. எனது ஜீவன் கிறிஸ்துவுடனே
தேவனுக்குள்ளே மறைந்தது
ஜீவன் கிறிஸ்து வெளிப்படும் நாளில்
மகிமையில் நான் வெளிப்படுவேனே

4. கிறிஸ்துவுக்குள்ளே இரத்தத்தினாலே
பாவ மன்னிப்பின் மீட்படைந்தேன்
அவரை அறியும் அறிவிலே வளர்வேன்
அவரின் விருப்பம் செய்தே மகிழ்வேன்

# இயேசு கூட வருவார்

இயேசு கூட வருவார்
எல்லாவித அற்புதம் செய்வார்
தந்தான தந்தனத்தானானா - 2

1. நோய்கள் பேய்கள் ஓட்டிடுவார்
நொந்துபோன உள்ளத்தை தேற்றிடுவார்

2. வேதனை துன்பம் நீக்கிடுவார்
சமாதானம் சந்தோஷம் எனக்குத் தருவார்

3. கடன்தொல்லை கஷ்டங்கள் நீக்கிடுவார்
கண்ணீர்கள் அனைத்தையும் துடைத்திடுவார்

4. எடுத்த காரியத்தில் வெற்றி பெறுவேன்
எதிரியான சாத்தானை முறியடிப்பேன்

# இயேசு சுமந்து கொண்டாரே

இயேசு சுமந்து கொண்டாரே
நான் சுமக்க தேவையில்லை
இயேசுவின் காயங்களால்
சுகமானேன் சுகமானேன்

1. பெலவீனம் சுமந்து கொண்டார்
பெலவானாய் மாற்றிவிட்டார் .. இயேசுவின்

2. என் நோய்கள் சுமந்து கொண்டார்
என் துக்கம் ஏற்றுக் கொண்டார்

# இயேசு என்னோடு

இயேசு என்னோடு இருப்பத நெனச்சிட்டா
என்னுள்ளம் துள்ளுதம்மா
நன்றி என்று சொல்லுதம்மா
ஆ…ஆ…ஓ…ஓ… லலல்லா - லாலா ம்ம்

1. கவலை கண்ணீரெல்லாம்
கம்ப்ளீட்டா மறையுதம்மா
பயங்கள் நீங்குதம்மா
பரலோகம் தெரியுதம்மா
அகிலம் ஆளும் தெய்வம் - என்
அன்பு இதய தீபம் இயேசு என்னோடு

2. பகைமை கசப்பு எல்லாம்
பனிபோல மறையுதம்மா
பாடுகள் சிலுவை எல்லாம்
இனிமையாய் தோன்றுதம்மா

3. உலக ஆசை எல்லாம்
கூண்டோடே மறையுதம்மா
உறுவு பாசமெல்லாம்
குப்பையாய் தோன்றுதம்மா

4. எரிகோ கோட்டை யெல்லாம்
இல்லாமல் போகுதம்மா
எதிர்க்கும் செங்கடல்கள்
இரண்டாய் பிரியுதம்மா

# இயேசு நம்மோடு

இயேசு நம்மோடு இன்று ஆனந்தம்
இயேசு நம்மோடு என்றும் ஆனந்தம்
அல்லேலூயா ஆர்ப்பரிப்போமே
அல்லேலூயா அகமகிழ்வோமே

1. காரிருள் நம்மைச் சூழ்ந்தாலும்
கர்த்தர் ஒளியாவார்
ஒளியாய் எழும்பி சுடர்விடுவோம்
உலகின் ஒளிநாமே

2. வியாதிகள் தொல்லைகள் நடுவினிலே
தேவனின் வார்த்தை உண்டு
அவரின் தூய தழும்புகளால்
குணம் அடைகின்றோம் நாம்

3. மனிதர்கள் நம்மை இகழ்ந்தாலும்
மனமோ தளர்வதில்லை
கோதுமை மணிபோல் மடிந்திடுவோம்
சிலுவையைச் சுமந்திடுவோம்

# இயேசு நம் பிணிகளை

இயேசு நம் பிணிகளை ஏற்றுக் கொண்டார்
நம் நோய்களைச் சுமந்து கொண்டார் - இயேசு

1. நம் பாவங்களுக்காய் காயப்பட்டார்
அக்கிரமங்களுக்காய் நொறுக்கப்பட்டார்
நம்மை நலமாக்கும் தண்டனை
அவர்மேல் விழுந்தது
அவருடைய காயங்களால்
குணமடைந்தோம் - நாம்

2. கொல்வதற்காய் இழுக்கப்படும்
ஆட்டுக்குட்டியைப் போல - மயிர்
கத்திரிப்போன் முன்னிலையில்
கத்தாத செம்மறி போல
வாய் கூட அவர் திறக்கவில்லை
தாழ்மையுடன் அதை தாங்கிக் கொண்டார்

3. நம் பாவம் அனைத்தும் அகற்றி விட்டார்
இறைவனின் பிள்ளையாய் மாற்றிவிட்டார்
கழுமரத்தின் மீது தம் உடலில்
நம் பாவங்கள் அவர் சுமந்தார்

# இயேசு பாதம் எனக்குப் போதும்

இயேசு பாதம் எனக்குப் போதும்
எந்த நாளும் ஆனந்தமே (2)

1. பாதம் அமர்ந்து கண்ணீர் சிந்தி
கதறி அழுதிடுவேன் - நான்

2. இரவும் பகலும் வேதவசனம்
தியானம் செய்திடுவேன் - நான்

3. காத்திருந்து பெலனடைந்து
கழுகைப் போல் பறப்பேன் - நான்

4. கசந்த மாரா மதுரமாகும்
எகிப்து அகன்றிடுமே - கொடிய

5. என்னை விட்டு எடுபடாத
நல்லபங்கு இது - எனக்கு

6. எதை நினைத்தும் கலங்கமாட்டேன்
என்றும் துதித்திடுவேன் - நான்

# இயேசு போதுமே

இயேசு போதுமே
எனக்கு போதுமே - 2

1. இயேசு கைவிடார் உன்னை கைவிடார்
இன்றும் கைவிடார் அவர் என்றும் கைவிடார்

2. இயேசு வல்லவர் எனக்கு வல்லவர்
இன்றும் வல்லவர் அவர் என்றும் வல்லவர்

3. இயேசு நல்லவர் எனக்கு நல்லவர்
இன்றும் நல்லவர் அவர் என்றும் நல்லவர்

4. இயேசு வாழ்கின்றார் என்னில் வாழ்கின்றார்
இன்றும் வாழ்கின்றார் அவர் என்றும் வாழ்கின்றார்

# இயேசு நீங்க இருக்கையிலே

இயேசு நீங்க இருக்கையிலே
நாங்க சோர்ந்து போவதில்லை
நீங்க எல்லாமே பார்த்துக் கொள்வீங்க

1. சமாதான காரணம் நீங்கதனே
சர்வ வல்லவரும் நீங்கதானே

2. அதிசய தேவன்
ஆலோசனைக் கர்த்தர்

3. தாயும் தகப்பனும்
தாங்கும் சுமைதாங்கி

4. எனக்கு அழகெல்லாம்
எனது ஆசையெல்லாம்

5. இருள் நீக்கும் வெளிச்சம்
இரட்சிப்பின் தேவன்

6. எல்லாமே எனக்கு
எனக்குள் வாழபவரும்

7. முதலும் முடிவும்
முற்றிலும் காப்பவர்

8. வழியும் சத்தியமும்
வாழ்வளிக்கும் வள்ளல்

9. பாவமன்னிப்பு
பரிசுத்த ஆவியும்

# இயேசுராஜா உம் இதயத் துடிப்பை

இயேசுராஜா உம் இதயத் துடிப்பை
அறித்து கொள்ளும் பாக்கியம் தாரும்
உம் ஏக்கம் எல்லாம் நிறைவேற்ற
கிருபையைத் தாரும்

ஒரு வாழ்வு அது உமக்காக - (2)
உணர்வெல்லாம் உமக்காக
உள்ளமெல்லாம் உமக்காக

1. உம் இதயம் மகிழ்ந்திட வாழ்ந்திட வேண்டும்
உம் சித்தம் செய்து நான் மடிந்திட வேண்டும்

2. அழிந்து போகும் ஆத்துமாக்கள் நனைத்திட வேண்டும்
ஆத்தும பாரத்தினால் அலைந்திட வேண்டும்

3. உலகத்திற்கு மரித்து நான் வாழ்ந்திட வேண்டும்
உண்மையான ஊழியனாய் உழைத்திட வேண்டும்

4. அகிலத்தையே உம் அண்டை சேர்த்திட வேண்டும்
அனைத்து மகிமை உமக்கே நான் செலுத்திட வேண்டும்

# இயேசு ராஜா ஏழை என் உள்ளம்

இயேசு ராஜா ஏழை என் உள்ளம்
தேடி வந்தீரே

1. என் நேசர் நீர்தானையா
என்னை தேற்றிடும் என தேசையா
சாரோனின் ரோஜா லீலி புஷ்பமே
சீக்கிரம் வாருமையா - ஐயா

2. உழையான சேற்றினின்று என்னை
உயிர்ப்பித்து ஜீவன் தந்தீர்
அலைபோல துன்பம் என்னை சூழ்ந்தபோது
அன்பாலே அணைத்துக் கொண்டீர் - ஐயா

3. ஆபத்து காலத்திலே நல்ல
அநுக்கிரகம் துணையும் நீரே
அன்பே என்றீர் மகளே என்றீர்
மணவாட்டி நீதான் என்றீர்

4. பரிசுத்த ஆவியினால் என்னை
அபிஷேகம் செய்தீரே
பயங்களை நீக்கி பலத்தையே தந்து
பரிசுத்த மகளாக்கினீர்

# இயேசு ராஜா வந்திருக்கிறார்

இயேசு ராஜா வந்திருக்கிறார்
எல்லோரும் கொண்டாடுவோம்
கைதட்டி நாம் பாடுவோம்
கொண்டாடுவோம் கொண்டாடுவோம்
கவலைகள் மறந்து நாம் பாடுவோம்

1. கூப்பிடு நீ பதில் கொடுப்பார்
குறைகளெல்லாம் நிறைவாக்குவார்
உண்மையாக தேடுவோரின்
உள்ளத்தில் வந்திடுவார்
கொண்டாடுவோம் கொண்டாடுவோம்

2. மனதுருக்கம் உடையவரே
மன்னிப்பதில் வள்ளலவர்
உன் நினைவாய் இருக்கின்றார்
ஓடிவா என் மகனே(ளே)

3. கண்ணீரெல்லாம் துடைத்திடுவார்
கரம் பிடித்து நடத்திடுவார்
எண்ணமெல்லாம் எக்கமெல்லாம்
இன்றெ நிறைவேற்றுவார்

4. நோய்களெல்லாம் நீக்கிடுவார்
நோடிப்பொழுதே சுகம் தருவார்
பேய்களெல்லாம் நடுநடுங்கும்
பெரியவர் திரு முன்னே - நம்ம

5. பாவமெல்லாம் போக்கிடுவார்
பயங்களெல்லாம் நீக்கிடுவார்
ஆவியினால் நிரப்பிடுவார்
அதிசயம் செய்திடுவார்

6. கசையடிகள் உனக்காக
காயமெல்லாம் உனக்காக
திருஇரத்தம் உனக்காக
திருந்திடு என் மகனே

# இயேசுவாலே பிடிக்கப்பட்டவன்

இயேசுவாலே பிடிக்கப்பட்டவன்
அவர் இரத்தத்தாலே கழுவப்பட்டவன்
எனக்கென்று எதுவுமில்ல
இப்பூமி சொந்தமில்ல
எல்லாமே இயேசு.....என் இயேசு
எல்லாம் இயேசு இயேசு இயேசு

1. பரலோகம் தாய் வீடு
அதைத் தேடி நீ ஓடு
ஒருவரும் அழிந்து போகமலே
தாயகம் வர வேண்டும் தப்பாமலே

2. அந்தகார இருளினின்று
ஆச்சரிய ஒளிக்கழைத்தார்
ஆழைத்தவர் புண்ணியங்கள் அறிவித்திட
அடிமையை தெரிந்தெடுத்தார் - இந்த

3. பாடுகள் அநுபவிப்பேன்
பரலோக தேவனுக்காய்
கிறிஸ்துவின் மகிமை வெளிப்படும் நாளில்
களி கூர்ந்து மகிழ்ந்திருப்பேன் - நான்

4. இலாபமான அனைத்தையுமே
நஷ்டமென்று கருதுகின்றேன்
இயேசுவை அறிகின்ற தாகத்தினால்
எல்லாமே இழந்து விட்டேன் - நான்

5. பின்னானவை மறந்தேன்
முன்னானவை நாடினேன்
என் நேசர் தருகின்ற பரிசுக்காக
இலக்கை நோக்கித் தொடருகின்றேன்

6. நீதியை விரும்புகிறேன்
அக்கிரமம் வெறுக்கிறேன்
ஆனந்த தைல அபிஷேகத்தால்
அனுதினம் நிரம்புகிறேன்

# இயேசுவின் கரங்களை

இயேசுவின் கரங்களைப் பற்றிக் கொண்டேன் நான்
இயேசுவின் கரங்களைப் பற்றிக் கொண்டேன்
எதற்கும் பயம் இல்லையே
இனியும் கவலை எனக்கில்லையே
அல்லேலூயா (4)

1. இயேசுவுக்காய் அவமானம் ஏற்றுக் கொண்டேன்
இனிவரும் பலன் மேல் நோக்கமானேன்
அழிந்து போகும் பாராட்டு வேண்டாமே
அரவணைக்கும் இயேசு போதும் போதுமே

2. அதிவிரைவில் நீங்கும் இந்த உபத்திரவம்
அதிகமான கனமகிமை உண்டாக்கும்
காண்கின்ற எல்லாமே அநித்தியம்
காணாதவைகளோ நித்தியம்

3. பகைவர்க்கு அன்பு காட்டிடுவேன்
வெறுப்பவர்க்கு நன்மை செய்திடுவேன்
சபிப்பவர்க்கு ஆசி கூறிடுவேன்
தூற்றுவோருக்காக ஜெபித்திடுவேன்

4. கர்த்தரையே முன்வைத்து ஓடுகிறேன்
கடும்புயல் வந்தாலும் அசைவதில்லை
எதையும் தாங்குவேன் இயேசுவுக்காய்
இனியும் சோர்ந்து போவதே இல்லை

5. ஆட்கொண்ட தேவனை நம்புகிறேன்
அவருக்குள் வேர் கொண்டு வளருகிறேன்
கோடைக்காலம் வந்தாலும் அச்சமில்லையே
வறட்சிக் காலம் வந்தாலும் கவலையில்லையே

6. வேதத்தில் இன்பம் காண்கின்றேன்
விரும்பி தியானம் செய்கின்றேன்
வாய்க்காலில் நடப்பட்ட மரம் நான்
வாழ்க்கையெல்லாம் தவறாமல் கனி கொடுப்பேன்

# இயேசுவின் நாமம்

இயேசுவின் நாமம் இன்ப நாமம்
வல்லமையுள்ள நாமம் - அந்த
நாமத்திலே துதி பாடிடுவோம் - 2
கன மகிமையை செலுத்திடுவோம்

1. இயேசுவின் நாமமின்றி
வேறு நாமத்தில் மீட்பில்லையே
அந்த நாமத்திலே மண்ணோர் அனைவருமே
நாம் மண்டியிட்டு ஜெபிப்போமே

2. மகிழ்ச்சிக் குரலெழுப்பி
மன்னன் இயேசுவில் மகிழ்ந்திடுவோம்
எக்காளத்தோடும் கைத்தாளதோடும்
நாம் ஆர்ப்பரித்துப் பாடிடுவோம்

3. தாய் என்னை மறந்தாலும்
அவர் ஒருபோதும் மறக்கமாட்டார்
என்னை நினைத்துக் கொள்ள
என் நாமத்தையே
அவர் உள்ளங்கையில் பொறித்து உள்ளார்

4. எக்காளம் முழங்கிடவே
வான மேகங்கள் நடுவினிலே - அவர்
மகிமை யோடும் வான தூதரோடும்
இயேசு இராஜாதி ராஜன் வருவார்

# இயேசுவின் பின்னால் நான்

இயேசுவின் பின்னால் நான் செல்வேன்
திரும்பி பார்க்கை மாட்டேன்
சிலுவையே முன்னால்
உலகமே பின்னால்
இயேசு சிந்திய இரத்தத்தினாலே
என்றும் விடுதலையே

1. உலகத்தின் பெருமை செல்வத்தின் பற்று
எல்லாம் உதவி விடடேன்
உடல் பொருள் ஆவி உடைமைகள் யாவும்
ஒப்புக் கொடுத்து விட்டேன்
நான் அவர் ஆலயம் எனக்குள்ளே இயேசு
என்ன நடந்தாலும் எவ்வேளையிலும்
எப்போதும் துதித்திடுவேன்

2. வேதனை நெருக்கம் இன்னல்கள் இடர்கள்
எதுவும் பிரிக்காது
வெற்றி வேந்தன் என் இயேசுவின் அன்பால்
முற்றிலும் ஜெயம் பெறுவேன்
நிகழ்கின்ற காலமோ வருகின்ற காலமோ
வாழ்வோ சாவோ வல்ல தூதரோ
பிரிக்கவே முடியாது

3. அகிலமெங்கிலும் ஆண்டவன் இயேசு
ஆட்சி செய்திடணும்
ஆவியில் நிறைந்து சத்தியம் பேசும்
சுபைகள் பெருகிடணும்
என் சொந்த தேசம் இயேசுவுக்கே
இயேசுதான் வழி என்கிற முழக்கம்
எங்கும் கேட்கணுமே

# இயேசுவின் பிள்ளைகள்

இயேசுவின் பிள்ளைகள் நாங்கள்

எப்போதும் மகிழ்ந்திருப்போம்

இயேசுவின் பிள்ளைகளே

எப்போதும் மகிழ்ந்திருங்கள்

1. எந்நேரமும் எவ்வேளையும்

இயேசுவில் களிகூறுவோம்

நம் நேசரில் களிகூறுவோம் - 2

2. எதை நினைத்தும் கலங்காமல்

இப்போதும் ஸ்தோத்தரிப்போம்

நாம் எப்போதும் ஸ்தோத்தரிப்போம்

3. இன்று காணும் எகிப்தியரை

இனிமேல் காணமாட்டோம்

நமக்காய் யுத்தாம் செய்வார் - இயேசு

4. நமக்கு எதிராய் மந்திரம் இல்லை

குறிசொல்லல் எதுவும் இல்லை

சாத்தான் நம் காலின் கீழே - இன்று

5. காற்றை நாம் காணமாட்டோம்

மழையையும் பார்க்க மாட்டோம்

வாய்க்கால்கள் நிரப்பப்படும்

6. நினைப்பதற்கும் வேண்டுவதற்கும்

அதிகமாய் செய்திடுவார்

அதிசயம் செய்திடுவார்

# இயேசுவே என் தெய்வமே

இயேசுவே என் தெய்வமே
என்மேல் மனமிரங்கும்

1. நான் பாவம் செய்தேன்
உம்மை நோகசச் செய்தேன்
உம்மைத் தேடாமல் வாழ்ந்து வந்தேன்
என்னை மன்னியும் தெய்வமே (2)

2. உம்மை மறுதலித்தேன்
பின் வாங்கிப் போனேன்
உம் வல்லமை இழந்தேனையா
என்னை மன்னியும் தெய்வமே

3. முள்முடி தாங்கி
ஐயா காயப்பட்டீர்
நீர் எனக்காக பலியானீர்
உம் இரத்தத்தால் கழுவிவிடும்

4. துன்ப வேளையிலே
மனம் துவண்டு போனேன்
உம்மை நினையாது தூரப்போனேன்
என்னை மன்னியும் தெய்வமே இந்த
ஒருவிசை மன்னியுமே

5. அநியாயம் செய்தேன்
கடும் கோபம் கொண்டேன்
பிறர் வாழ்வைப் கெடுத்தேனையா
என்னை மன்னியும் தெய்வமே

# இயேசுவை நோக்கி

இயேசுவை நோக்கி பார்த்திடுவோம்
அவரையே கண்முன் நிறுத்திடுவோம்
அவர் செயல்களுக்காய் பாடிடுவோம்
அவர் நினைவாக வாழ்ந்திடுவோம்
ஆமென் அல்லேலூயா - 4

1. நம் கால் இடற விடமாட்டார்
நம்மைக் காப்பவர் உறங்க மாட்டார்
நம் தேவன் அவரோ அயர்வதில்லை
நம் நினைவாக வாழ்கின்றார்
-ஆமென்

2. போகும் போதும் காக்கின்றார்
திரும்பும் போதும் காக்கின்றார்
இப்போதும் எப்போதும் காக்கின்றார்
இனியும் நமக்கு பயமேது
-ஆமென்

3. நம்துன்பம் கண்டு கலங்குகிறார்
நமக்காய் கண்ணீர் வடிக்கின்றார்
நம்பாவம் அனைத்தும் சுமந்து கொண்டு
நமக்காய் பரிந்து பேசுகின்றார்
- ஆமென்

# இரத்தக் கோட்டைக்குள்ளே

இரத்தக் கோட்டைக்குள்ளே
நான் நுழைந்து விட்டேன்
இனி எதுவும் அணுகாது
எந்தத் தீங்கும் தீண்டாது

1. நேசரின் இரத்தம் என்மேலே
நெருங்காது சாத்தான்
பாசமாய் சிலுவையில் பலியானார்
பாவத்தை வென்று விட்டார்

2. இம்மட்டும் உதவின எபினேசரே
இனியும் காத்திடுவார்
உலகிலே இருக்கும் அவனை விட
என் தேவன் பெரியவரே

3. தேவனே ஒளியும் மீட்புமானார்
யாருக்கு அஞ்சிடுவேன்
அவரே என் வாழ்வின் பெலனானார்
யாருக்கு பயப்படுவேன்

4. தாய் தன் பிள்ளையை மறந்தாலும்
மறவாத என் நேசரே
ஆயனைப் போல நடத்துகிறீர்
அபிஷேகம் செய்கின்றீர் - என்னை

5. மலைகள் குன்றுகள் விலகினாலும்
மாறாது உம் கிருபை
அனாதி சிநேகத்தால் இழுத்துக் கொண்டீர்
அணைத்து சேர்த்துக் கொண்டீர்

# இரத்தம் ஜெயம்

இரத்தம் ஜெயம் இரத்தம் ஜெயம்
கல்வாரி இயேசுவின் இரத்தம் ஜெயம்
காருண்ய தேவனின் இரத்தம் ஜெயம்

1. எதிரியை துரத்திடும் இரத்தம் ஜெயம்
எந்நாளும் சுகம் தரும் இரத்தம் ஜெயம்
அதிகாரம் தந்திடும் இரத்தம் ஜெயம்
அதிசயம் செய்திடும் இரத்தம் ஜெயம்

2. பாவங்கள் போக்கிடும் இரத்தம் ஜெயம்
பரிசுத்தமாக்கிடும் இரத்தம் ஜெயம்
சாபங்கள் நீக்கிடும் இரத்தம் ஜெயம்
சமாதானம் தந்திடும் இரத்தம் ஜெயம் - நமக்கு

3. விடுதலை தருகின்ற இரத்தம் ஜெயம்
வெற்றிமேல் வெற்றிதரும் இரத்தம் ஜெயம்
பெலவீனம் நீக்கிடும் இரத்தம் ஜெயம்
பெலவானாய் மாற்றிடும் இரத்தம் ஜெயம்

4. நமக்காய் பரிந்து பேசும் இரத்தம் ஜெயம்
நாள்தோறும் பாதுகாக்கும் இரத்தம் ஜெயம்
நீதிமானாக்கிடும் இரத்தம் ஜெயம்
நித்திய ஜீவன் தரும் இரத்தம் ஜெயம்

5. பிரிவினை நீக்கிடும் இரத்தம் ஜெயம்
பிளவுகள் போக்கிடும் இரத்தம் ஜெயம்
ஒப்புரவாக்கிடும் இரத்தம் ஜெயம்
ஒருமனமாக்கிடும் இரத்தம் ஜெயம்

6. குற்றமில்லா இயேசுவின் இரத்தம் ஜெயம்
குறைகளை போக்கிடும் இரத்தம் ஜெயம்
விலையேறப் பெற்ற இரத்தம் ஜெயம்
விண்ணகம் நடத்திடும் இரத்தம் ஜெயம்

# இராஜா உம் மாளிகையில்

இராஜா உம் மாளிகையில்
இராப்பகலாய் அமர்ந்திருப்பேன் - இயேசு
துதித்து மகிழ்ந்திருப்பேன்
துயரம் மறந்திருப்பேன் - உம்மை
ஆராதனை ஆராதனை
அப்பா அப்பா உங்களுக்குத்தான்

1. என் பெலனே என் கோட்டையே
ஆராதனை உமக்கே
மறைவிடமே என் உறைவிடமே
ஆராதனை உமக்கே - ஆராதனை

2. எங்கும் நிறைந்த யேகோவா ஏலொஹிம்
ஆராதனை உமக்கே
எங்கள் நீதியே யேகோவா ஸிட்கேனு
ஆராதனை உமக்கே

3. பரிசுத்தமாக்கும் யேகோவா மெக்காதீஸ்
ஆராதனை உமக்கே
உருவாக்கும் தெய்வம் யேகோவா ஓசேனு
ஆராதனை உமக்கே

4. உன்னதரே உயர்ந்தவரே
ஆராதனை உமக்கே
பரிகாரியே பலியானீரே
ஆராதனை உமக்கே

5. சீர்படுத்தும் சிருஷ்டிகரே
ஆராதனை உமக்கே
ஸ்திரப்படுத்தும் துணையாளரே
ஆராதனை உமக்கே

6. தாழ்மையிலே நினைத்தவரே
ஆராதனை உமக்கே
ஏழ்மையை மாற்றினீரே
ஆராதனை உமக்கே

# இறந்தோரை

இறந்தோரை வாழவைக்கும் வல்லவர்
எனக்குள் வந்து தங்கிவிட்டார்
இல்லாதவரை இருக்கச்செய்யும் நல்லவர்
மனக்கண் திறந்துவிட்டார்
அல்லேலூயா ஆனந்தமே

1. செடியான கிறிஸ்துவோடு இணைந்துவிட்டேன்
கொடியாக அவருக்காய் படர்ந்திடுவேன்
அல்லேலூயா ஆனந்தமே

2. பாவம் சாவு இவற்றினின்று மீட்கப்பட்டவன்
இனி எனக்கு தண்டனை தீர்ப்பே இல்லை

3. இயேசுகிறிஸ்து பெயராலும் ஆவியாலும்
நீதிமானாய் கழுவப்பட்டு தூய்மையானேன்

4. மூலைக்கல்லாம் கிறிஸ்துவின் மேல் கட்டப்பட்டவன்
ஆவி தங்கும் ஆலயமாய் வளர்கின்றவன்

5. கர்த்தரின் கைவேலைப்பாடு நான் அல்லவா
அவர் சாயல் காட்டும் கண்ணாடி நான் அல்லவா

6. புதிதாய் பிசைந்து புளிப்பில்லா மாவு நானே
துர்க்குணங்களை தீமைகள் தவிர்த்துவிட்டேன்

7. பழைய மனிதன் சிலுவையிலே அறையப்பட்டதால்
பாவத்திற்கு அடிமையாக வாழ்வதில்லை

8. தூய ஆவி துணையாலே வாழ்கின்றவன்
ஆவிகாட்டும் நெறியிலே நடக்கின்றவன்

# இன்று முதல் நான் உன்னை

இன்று முதல் நான் உன்னை ஆசீர்வதிப்பேன்
எல்லையில்லா நன்மைகளால் நிரப்பிடுவேன்

1. பெரிய இனமாக்கி ஆசீர்வதிப்பேன்
உனது பெயரை நான் உயர்த்திடுவேன்
ஆசீர்வாத வாய்க்காலாய் நீ இருப்பாய்

2. செல்லும் இடமெல்லாம் காவலாய் நான் இருப்பேன்
சொன்னதை செய்திடுவேன் கைவிடவேமாட்டேன்
நீ வாழும் இந்த தேசம் உனக்கு தந்திடுவேன்

3. பரவி பாயகின்ற ஆறுகள் நீதானே
நதியோரம் வளருகின்ற தோட்டமும் நீதானே
வாசனை தருகின்ற சந்தனமும் நீதானே

4. பத்தில் ஒரு பங்கு நீ கொடுத்தால்
வானத்தின் பலகனிகள் திறந்திடுவேன்
இடம் கொள்ளாதமட்டும் நிரப்பிடுவேன்

5. எனது சாயலாய் உருவாக்கி நடத்துகிறேன்
பலுகி பெருகிடுங்கள் பூமியெல்லாம் நிரம்பிடுங்கள்
உயிர் வாழும் அனைத்தின் மேல் ஆளுகை செய்திடுங்கள்

6. வானத்து விண்மீன் போல ஒளிக் கொடுப்பாய்
கடற்கரை மணலை போல பெருகிடுவாய்
எதிரியின் வாசல்களை உரிமை ஆக்கிடுவாய்

7. நீரண்டை வளருகின்ற செடியும் நீதானே
மதில் மேல் ஏறுகின்ற கொடியும் நீதானே
பகை நிறைந்த உலகத்தில் அன்பு கரம் நீட்டிடுவாய்

8. மாராவின் கசந்த கண்ணீர் மதுரமாகிடும்
பன்னிரெண்டு நீரற்றும் ஏலீமும் உனக்கு உண்டு
கல்வாரி நிழலதனிலே காலமெல்லாம் வாழ்ந்திடுவாய்

9. கர்த்தரின் குரலுக்கு கவனமாய் செவிகொடுத்து
பார்வைக்கு நல்லதையே செய்து நீ வாழ்ந்துவந்தால்
வியாதி வருவதில்லை குணமாக்கும் ஆண்டவர் நான்

# இடைவிடா நன்றி

இடைவிடா நன்றி உமக்குத்தானே
இணையில்லா தேவன் உமக்குத்தானே

1. என்ன நடந்தாலும் நன்றி ஐயா
யார் கை விட்டாலும் நன்றி ஐயா
நன்றி... நன்றி...

2. தேடி வந்தீரே நன்றி ஐயா
தெரிந்து கொண்டீரே நன்றி ஐயா

3. நிம்மதி தந்தீரே நன்றி ஐயா
நிரந்தரமானீரே நன்றி ஐயா

4. என்னைக் கண்டீரே நன்றி ஐயா
கண்ணீர் துடைத்தீரே நன்றி ஐயா

5. நீதி தேவனே நன்றி ஐயா
வெற்றி வேந்தனே நன்றி ஐயா

6. அநாதி தேவனே நன்றி ஐயா
அரசாளும் தெய்வமே நன்றி ஐயா

7. நித்திய ராஜாவே நன்றி ஐயா
சத்திய தீபமே நன்றி ஐயா

# இஸ்ரவேலே

இஸ்ரவேலே உன்னை எப்படிக் கைவிடுவேன்
எப்பிராயீமே உன்னை எப்படிக் கைநெகிழ்வேன்
என் மகனே உன்னை எப்படிக் கைவிடுவேன்
என் மகளே உன்னை எப்படிக் கைநெகிழ்வேன்

1. என் இதயம் உனக்காய் ஏங்குகின்றது
   என் இரக்கம் பொங்கி பொங்கி வழிகின்றது
   எப்படிக் கைவிடுவேன்
   எப்படிக் கைநெகிழ்வேன் உன்னை

2. நானே தான் உன்னை குணமாக்கினேன்
   ஏனோ நீ அறியாமல் போனாயோ

3. கையிலே ஏந்தி நடத்துகிறேன்
   கரம்பிடித்து நடக்க பழக்குகிறேன்

4. பரிவு என்னும் கயிறுகளால் பிணைத்துக்கொண்டேன்
   பக்கம் சாய்ந்து உணவு நான் ஊட்டுகிறேன்

5. முடிவில்லாத அன்பு நான் காட்டியுள்ளேன்
   பேரன்பால் உன்னை ஈர்த்துக் கொண்டேன்

# இஸ்ரவேலே பயப்படாதே

இஸ்ரவேலே பயப்படாதே
நானே உன் தேவன்
வழியும் சத்தியமும் ஜீவனும் நானே

1. உன்னை நானே தெரிந்து கொண்டேனே - மகனே மகளே
உன் பெயர் சொல்லி
நான் அழைத்தேனே
ஒரு போதும் நான் கைவிடமாட்டேன்
கைவிடமாட்டேன்
வழியும் சத்தியமும் ஜீவனும் நானே

2. தாய் மறந்தாலும் நான் மறவேனே - மகனே மகளே
உள்ளங்கையில் தாங்கி உள்ளேன்
ஒருபோதும் நான் மறப்பதில்லை
மறந்து போவதில்லை

3. துன்ப நேரம் சோர்ந்து விடாதே - மகனே மகளே
ஜீவகிரீடம் உனக்குத் தருவேன்
சீக்கிரம் வருவேன் அழைத்துச் செல்வேன்
எழுந்து ஒளி வீசு

4. தீயின் நடுவே நீ நடந்தாலும்
எரிந்து நீயும் போகமாட்டாய்
ஆறுகளை நீ கடக்கும் போதும்
மூழ்கி போக மாட்டாய்

# உகந்த காணிக்கையாய்

உகந்த காணிக்கையாய்
ஒப்புக் கொடுத்தேனையா
சுகந்த வாசனையாய்
நுகர்ந்து மகிழுமையா

1. தகப்பனே உம் பீடத்தில்
தகனபலியானேன்
அக்கினி இறக்கிவிடும்
முற்றிலும் எரித்துவிடும் - உகந்த

2. வேண்டாத பலவீனங்கள்
ஆண்டவா முன் வைக்கின்றேன்
மீண்டும் தலை தூக்காமல்
மாண்டு மடியட்டுமே

3. கண்கள் தூய்மையாக்கும்
கர்த்தா உமைப் பார்க்கணும் - என்
காதுகள் திறந்தருளும்
கர்த்தர் உம் குரல் கேட்கணும் - என்

4. அப்பா உம் சமூகத்தில்
ஆர்வமாய் வந்தேனையா
தப்பாமல் வணைந்து கொள்ளும்
உப்பாக பயன்படுத்தும்

# உங்க ஊழியம் நான் ஏன்

உங்க ஊழியம் நான் ஏன் கலங்கணும்
அழைச்சது நீங்க நடத்திச் செல்வீங்க

1. திட்டங்கள் தருபவரும் நீர்தானையா
செயல்படுத்தி மகிழ்பவரும் நீர்தானையா
எஜமானனே என் ராஜனே
எஜமானன் நீர் இருக்க
வேலைக்காரனுக்கு ஏன் கவலை

2. எலியாவை காகம் கொண்டு போஷித்தீரே
சூரைச்செடி சோர்வு நீங்க பேசினீரே
தெய்வமே பேசும் தெய்வமே
எலியாவின் தேவன் இருக்க
எதுவும் என்னை அசைப்பதில்லை

3. பவுலையும் சீலாவையும் பாடவைத்தீரே
சிறையிலே நள்ளிரவில் ஜெபிக்க வைத்தீரே
கதவு திறந்தன கட்டுகள் உடைந்தன
காக்கும் தெய்வம் நீர்இருக்க
கவலை பயம் எனக்கெதற்கு

4. ஆயன் நான் ஆடுகளை அறிந்திருக்கின்றேன்
ஒருவராலும் பறித்துக் கொள்ள முடியாதென்றீர்
நல் ஆயனே என் மேய்ப்பரே
என் ஆயன் நீர் இருக்க
ஆட்டுக்குட்டிக்கு ஏன் கவலை

5. தகப்பன் தன் பிள்ளைகளை சுமப்பதுபோல
இறுதிவரை உங்களை நான் சுமப்பேன் என்றீர்
தகப்பனே தாங்கும் தெய்வமே
தகப்பன் நீர் இருக்கையிலே
பிள்ளை எனக்கு ஏன் கவலை

# உங்கள் துக்கம் சந்தோஷமாய்

உங்கள் துக்கம் சந்தோஷமாய் மாறும்
உங்கள் கவலைகள் கண்ணீர்
எல்லாம் மறைந்து விடும்
கலங்காதே மகனே, கலங்காதே மகளே
என் இயேசு கைவிட மாட்டார்

1. கடந்ததை நினைத்து கலங்காதே
நடந்ததை மறந்துவிடு
கர்த்தர் புதியன செய்திடுவார்
இன்றே நீ காண்பாய்... கலங்கிடவே வேண்டாம்

2. நொறுங்குண்ட இதயம் தேற்றுகிறார்
உடைந்த உள்ளம் தாங்குகிறார்
காயங்கள் அனைத்தையும் கட்டுகிறார்
கண்ணீர் துடைகின்றார் - (உன்)

3. திராணிக்கு மேலாக சோதிக்கப்பட
ஒருநாளும் விட மாட்டார்
தாங்கிடும் பெலன் தருவார்
தப்பி செல்ல வழி செய்வார் - (நீ)

4. நல்லதோர் போராட்டம் போராடுவோம்
விசுவாசம் காத்துக் கொள்வோம்
நீதியின் கிரீடம் நமக்கு உண்டு
நேசர் வருகையில் தந்திடுவார் - நம்

5. மாலையில் மகனே அழுகின்றாயா
காலையில் அக மகிழ்வாய்
நித்திய பேரானந்தம்
நேசரின் சமூகத்திலே

6. அக்கினியின் மேல் நடந்தாலும்
எரிந்து போக மாட்டாய்
ஆறுகளை நீ கடந்தாலும்
மூழ்கி போக மாட்டாய்

# உதவி வரும் கன்மலை

உதவி வரும் கன்மலை நோக்கிப் பார்க்கின்றேன்
வானமும் வையமும் படைத்தவரை நான் பார்க்கின்றேன்

1. கால்கள் தள்ளாட விடமாட்டார்
காக்கும் தேவன் உறங்கமாட்டார்
இஸ்ரவேலைக் காக்கிறவர்
எந்நாளும் தூங்க மாட்டார்

2. கர்த்தர் என்னைக் காக்கின்றார்
எனது நிழலாய் இரக்கின்றார்
பகலினிலும் இரவினிலும்
பாதுகாக்கின்றார்

3. கர்த்தர் எல்லாத் தீங்கிற்கும்
விலக்கி என்னைக் காக்கின்றார்
அவர் எனது ஆத்துமாவை
அநுதினம் காத்திடுவார்

4. போகும்போதும் காக்கின்றார்
திரும்பும்போதும் காக்கின்றார்
இப்போதும் எப்போதும்
எந்நாளும் காக்கின்றார்

# உந்தன் நாமத்தில் எல்லாம்

உந்தன் நாமத்தில் எல்லாம் கூடும் எல்லாம் கூடுமே
உந்தன் சமுகத்தில் எல்லாம் கூடும் எல்லாம் கூடுமே

1. உந்தன் வார்த்தையால் புயல் காற்று ஓய்ந்தது
உந்தன் பார்வையால், திருந்தினார் பேதுரு

கூடாதது ஒன்றுமில்லையே – உம்மால்
உம்மால் கூடும் எல்லாம் கூடும்
கூடாதது ஒன்றுமில்லையே – உம்மால்

2. தாபித்தாள் மரித்தாள் ஜெபத்தால் உயிர்த்தாள்
திமிர்வாத ஐநேயா சுகமாகி நடந்தான்

3. மீனின் வாயிலே காசு வந்ததே
கழுதையின் வாயிலே பேச்சு வந்ததே

4. வாலிபன் ஐதீகு தூக்கத்தால் விழுந்தான்
இறந்தும் எழுந்தான் பவுல் அன்று ஜெபித்ததால்

5. காலூன்றி நில்லென்று கத்தினார் பவுல் அன்று
முடவன் நடந்தான் லிஸ்திரா நகரிலே

# உந்தன் வல்லமையால்

உந்தன் வல்லமையால் மகிழ்ந்திருக்கின்றேன்
உந்தன் தயவினால் அசைவுராதிருப்பேன்

நீர் போதுமே என் நேசரே
உம்மால் தானே மேன்மை வந்தது

1. கேட்டேன் வாய்விட்டு நீர் மறுக்கவில்லையே
உள்ளம் விரும்பினதை எனக்குத் தந்தீரே - என்

2. வெற்றி தந்ததால் பெரியவனானேன் - நீர்
மேன்மை வந்ததால் என் ஏழ்மை மாறியது

3. வாழ ஓடி வந்தேன் சுகம் தேடி வந்தேன்
நீண்ட வாழ்வோடு நித்திய ஜீவன் தந்தீர்

4. பூரிப்படைகின்றேன் உந்தன் பேரன்பால்
பெலன் பெறுகின்றேன் உம்மை நம்புவதால் - நான்

5. என்றும் நிலைத்திருக்கும் ஆசீர்தருகின்றீர்
உம் சமுகத்தின் மகிழ்ச்சியினால் திருப்த்தியாக்குகிறீர்

# உந்தன் ஆவி எந்தன் உள்ளம்

உந்தன் ஆவி எந்தன் உள்ளம் தங்க வேண்டும்
எந்த நாளும் உந்தன் நாமம் பாட வேண்டும்

1. உள்ளம் எல்லாம் அன்பினாலே
பொங்க வேண்டும்
கள்ளம் நீங்கி காலமெல்லாம்
வாழ வேண்டும்

2. பாவமான் சுபாவம்
எல்லாம் நீங்க வேண்டும்
தேவ ஆவி தேற்றி
என்றும் நடத்த வேண்டும்

3. ஜீவ தண்ணீர் நதியாகப்
பாய வேண்டும்
சிலுவை நிழலில் தேசமெல்லாம்
வாழ வேண்டும்

4. வரங்கள் கனிகள் எல்லா நாளும்
பெருக வேண்டும்
வாழ் நாளெல்லாம் பணிசெய்து
மடிய வேண்டும்

5. ஏதேன் தோட்ட உறவு என்றும்
தொடர வேண்டும்
இயேசுக் கிறிஸ்து குரலைக் கேட்டு
மகிழ வேண்டும்

# உந்தன் நாமம் மகிமை பெற

உந்தன் நாமம் மகிமை பெற வேண்டும் கர்த்தாவே
உந்தன் அரசு விரைவில் வர வேண்டும் கர்த்தாவே
ஜெபிக்கிறோம் நாங்கள் துதிக்கிறோம்

1. இந்தியா (அகிலம்) இரட்சகரை அறிய வேண்டுமே
இருளில் உள்ளோர் வெளிச்சத்தையே காண வேண்டுமே

2. சாத்தான் கோட்டை தகர்ந்து விழ வேண்டுமே
சாபம் நீங்க சமாதானம் வரணுமே

3. கண்ணீர் சிந்தி கதறி நாங்கள் அழுகிறோம்
கரம் விரித்து உம்மை நோக்கிப் பார்க்கிறோம்

4. சிலுவை இரத்தம் தெளிக்கப்பட வேண்டுமே
ஜீவ நதி பெருகியோட வேண்டுமே

5. ஜெபசேனை எங்கும் எழும்ப வேண்டுமே
உபவாசகூட்டம் பெருக வேண்டுமே

# உமக்காகத்தானே

உமக்காகத் தானே - ஐயா நான்
உயிர் வாழ்கிறேன் - ஐயா
இந்த உடலும் உள்ளமெல்லாம் - அன்பர்
உமக்காகத்தானே ஐயா

1. கோதுமை மணிபோல் மடிந்திடுவேன்
உமக்காய் தினமும் பலன் கொடுப்பேன்
அவமானம் நிந்தை சிலுவைதனை
அனுதினம் உமக்காய் சுமக்கின்றேன்

2. எனது ஜீவனை மதிக்கவில்லை
ஒரு பொருட்டாய் நான் கணிக்கவில்லை
எல்லைருக்கும் நான் எல்லாமானேன்
அனைவருக்கும் நான் அடிமையானேன்

3. எத்தனை இடர்கள் வந்தாலும்
எதுவும் என்னை அசைப்பதில்லை
மகிழ்வுடன் தொடர்ந்து ஓடுகிறேன்
மனநிறைவோடு பணி செய்வேன்

4. பண்படுத்தும் உம் சித்தம் போல
பயன்படுத்தும் உம் விருப்பம் போல
உம் கரத்தில் நான் புல்லாங்குழல்
ஒவ்வொரு நாளும் இசைத்திடுமே

5. எனது பேச்செல்லாம் உமக்காக
எனது செயல் எல்லாம் உமக்காக
எழுந்தாலும் நடந்தாலும் உமக்காக
அமர்ந்தாலும் படுத்தாலும் உமக்காக

# உமக்கு மகிமை தருகிறோம்

உமக்கு மகிமை தருகிறோம்
உம்மில்தான் மகிழ்ச்சி அடைகிறோம்
அல்லேலூயா

1. தாழ்மையில் அடிமையை
நோக்கிப் பார்த்தீரே
உயர்த்தி மகிழ்ந்தீரே
ஒரு கோடி ஸ்தோத்திரமே

2. வல்லவரே மகிமையாய்
அதிசயம் செய்தீர்
உந்தன் திருநாமம்
பரிசுத்தமானதே

3. வலியோரை எகற்றினீர்
தாழ்ந்தோரை உயர்த்தினீர்
பசித்தோரை நன்மைகளால்
திருப்தியாக்கினீர்

4. கன்மலையின் வெடிப்பில் வைத்து
கரத்தால் மூடுகிறீர்
என்ன சொல்லிப் பாடுவேன்
என் இதய வேந்தனே

# உமக்குப் பிரியமானதைச் செய்ய

உமக்குப் பிரியமானதைச் செய்ய
எனக்குக் கற்றுத் தாரும் தெய்வமே
நீரே என் தேவன்
உம் நல்ல பரிசுத்த ஆவியானவர்
செம்மையான வழியிலே நடத்த வேண்டுமே
மேக ஸ்தம்பமே அக்கினி ஸ்தம்பமே
தேற்றும் தெய்வமே துணையாளரே

1. உம்மை நோக்கி என் கைகளை
உயர்த்தி உயர்த்தி மகிழ்கின்றேன் ஐயா
வறண்ட நிலம் தவிப்பது போல்
என் ஆன்மா உமக்காக ஒவ்வொரு நாளும்
ஏங்கி ஏங்கி தவிக்கின்றதையா
எனது ஏக்கமே எனது பிரியமே
எனது பாசமே எனது ஆசையே

2. உமது அன்பை அதிகாலையில்
காணச் செய்யும் கருணை நேசரே
உம்மையே நம்பியுள்ளேன்
நீர் வரும்பும் உம் நல்ல பாதைகளை
தினந்தோறும் காட்ட வேண்டும் திவ்ய நாதரே
அன்பின் சிகரமே ஆரயிரே
அணைக்கும் தெய்வமே ஆறுதலே

# உம் சமூகமே என் பாக்கியமே

உம் சமூகமே என் பாக்கியமே
ஓடி வந்தேன் உம்மை நோக்கிட
உம் குரல் கேட்க...
ராஜா... இயேசு ராஜா...

1. ஒரு கோடி செல்வங்கள் எனைத் தேடி வந்தாலும்
உமக்கது ஈடாகுமோ
செல்வமே ஒப்பற்ற செல்வமே
நல் உணவே... நாளெல்லாம் உம் நினைவே

2. என் பாவம் நீங்கிட எடுத்தீரே சிலுவையை
என்னே உம் அன்பு
தென்றலே கல்வாரி தென்றலே
அசைவாடும் ஆட்கொள்ளும் என்னில்
ஆளுகை செய்யும்

3. எத்தனையோ எழில் மிகு காட்சிகள் கண்டாலும்
எல்லாமே மாயை ஐயா - 2
தண்ணீரே ஊற்றுத் தண்ணீரே
உம் நதியில் ஒவ்வொரு நாளும்
நான் மூழ்கணுமே

# உம் நாமம் உயரணுமே

உம் நாமம் உயரணுமே
உம் அரசு வரணுமே
உம் விருப்பம் நடக்கணுமே
அப்பா பிதாவே அப்பா (4)

1. அன்றாட உணவை ஒவ்வொரு நாளும்
எனக்குத் தாரும் ஐயா

2. பிறர் குற்றம் மன்னித்தோம்
அதனால் எங்கள் குறைகளை மன்னியுமே

3. சோதிக்கும் சாத்தானின் சூழ்ச்சியிலிருந்து
விடுதலை தாருமையா

4. ஆட்சியும் வல்லமை மாட்சியும் மகிமை
என்றென்றும் உமக்கே சொந்தம்

5. ஜாதிகள் ஒழியணும் சண்டைகள் ஓயணும்
சமாதானம் வரணுமே

6. ஊழியம் எழும்பணும் ஓடி உழைக்கணும்
உம் வசனம் சொல்லணுமே

7. உமக்காய் வாழணும் உம் குரல் கேட்கணும்
உம்மோடு இணையணுமே

8. அனுதின சிலுவையை ஆர்வமாய் சுமந்திட
கிருபை தாருமையா

9. ஆவியில் நிறைந்து ஜெபிக்க துதிக்க
ஆர்வம் தாருமையா

10. என் சொந்த ஜனங்கள் இயேசுவை அறியணும்
இரட்சிப்பு அடையணுமே

11. அரசியல் தலைவர்கள் M.L.A., M.P. க்கள்
உம்மை அறியணுமே உம் நாமம் சொல்லணுமே

# உம் நாமம் பாடணுமே

உம் நாமம் பாடணுமே ராஜா
உம்மையே துதிக்கணுமே
உம்மைப்போல் வாழணுமே

1. ஒவ்வொரு நாளும் உம்திரு பாதம்
ஓடி வர வேணுமே
உமது வசனம் தியானம் செய்து
உமக்காய் வாழணுமே

2. இரவும் பகலும் ஆவியிலே நான்
நிரம்பி ஜெபிக்கணுமே
ஜீவ நதியாய் பாய்ந்து பிறரை
வாழ வைக்கணுமே

3. பேய்கள் ஓட்டி நோய்களைப் போக்கி
பிரசங்கம் பண்ணணுமே
சிலுவை அன்பை எடுத்துச் சொல்லி
சீடர் ஆக்கணுமே

# உம் பீடத்தை சுற்றி

உம் பீடத்தை சுற்றி சுற்றி
நான் வருகிறேன் தெய்வமே
கறைகளெல்லாம் நீங்கிட
என் கைகளைக் கழுவுகிறேன்
என் தெய்வமே இயேசுநாதா
இதயமெல்லாம் மகிழுதையா...

1. உரத்த குரலில் நன்றிப் பாடல்
பாடி மகிழ்கிறேன்
வியத்தகு உம் செயல்களெல்லாம்
எடுத்து உரைக்கிறேன்

2. உந்தன் மாறாத பேரன்பு
என் கண்முன் இருக்கிறது
உம் திருமுன்னே உண்மையாக
வாழ்ந்து வருகிறேன்

3. கர்த்தாவே உம்மையே நம்பியுள்ளேன்
தடுமாற்றம் எனக்கில்லை
உந்தன் சமூகம் உந்தன் மகிமை
உண்மையாய் ஏங்குகிறேன்

# உம்முன்னே எனக்கு

உம்முன்னே எனக்கு நிறைவான மகிழ்ச்சி உண்டு

உம் அருகில் எப்போதும் நித்திய பேரின்பம் உண்டு
நிறைவான மகிழ்ச்சி நீரே
நித்திய பேரின்பமே

1. என்னை காக்கும் இறைவன் நீரே
உம்மிடம் நான் அடைக்கலம் புகுந்தேன்
என்னையாளும் தலைவர் நீரே
உம்மையன்றி ஆசைவேறயில்லை
என்னைக் காக்கும் இறைவன் நீரே அரசாளும் தலைவர் நீரே
ஆராதனை உமக்கே நாளெல்லாம் ஆராதனை

2. எனக்குரிய பங்கும் நீரே
பரம்பரை சொத்தும் நீரே
ஆலோசனை தரும் தகப்பனே
இரவும் பகலும் பேசும் தெய்வமே
எனக்குரிய பங்கு நீரே பரம்பரை சொத்து நீரே
ஆராதனை உமக்கே...

3. எப்போதும் என் முன்னே
உம்மைத் தான் நிறுத்தியுள்ளேன்
வலப்பக்கத்தில் இருப்பதனால்
அசைவுற விடமாட்டீர்
எப்போதும் என் முன்னே உம்மைத் தான் நிறுத்தியுள்ளேன்
ஆராதனை உமக்கே...

4. என் இதயம் மகிழ்கின்றது
என் உடலும் இளைப்பாறுது
ஜீவமார்க்கம் எனக்குப் போதித்தீர்
ஜீவனே உம்மைப் பாடுவேன்
என் இதயம் மகிழ்கின்றது என் உடலும் இளைப்பாறுது
ஆராதனை உமக்கே...

# உம்மாலே நான் ஒரு சேனைக்குள்

உம்மாலே நான் ஒரு சேனைக்குள் பாய்வேன்
மதிலைத் தாண்டிவேன் - 2
ஐயா ஸ்தோத்திரம் இயேசையா ஸ்தோத்திரம்

1 எனது விளக்கு எரியச் செய்தீர்
இருளை ஒளியாக்கினீர்

2. மான்களைப் போல ஓடச் செய்தீர்
உயர அமரச் செய்தீர்

3. பெலத்தால் இடைகட்டி
விழியை செவ்வாயாக்கி வாழவைத்தவரே

4. நீரே என் கன்மலை நீரே என் கோட்டை
எனது அடைக்கலமே

5. இரட்சிப்பின் கேடயம் எனக்கு தந்தீர்
எந்நாளும் தாங்கிக் கொண்டீர்

6. கால்கள் வழுவாமல் நடக்கும் பாதையை
அகலமாக்கிவிட்டீர்

7. இம்மட்டும் காத்தீர் இனிமேலும் காப்பீர்
எந்நாளும் துதித்திடுவேன்

8. அற்புதம் செய்தீர் அதிசயம் செய்தீர்
அன்பனே உம்மைத் துதிப்பேன்

# உம்மோடு இருக்கணுமே

உம்மோடு இருக்கணுமே ஐயா
உம்மைப் போல் மாறணுமே
உலகின் ஒளியாய் மலைமேல் அமர்ந்து
வெளிச்சம் கொடுக்கணுமே

1. ஓடும் நதியின் ஓரம் வளரும்
மரமாய் மாறணுமே
எல்லா நாளும் இலைகளோடு
கனிகள் கொடுக்கணுமே

2. உலகப் பெருமை இன்பமெல்லாம்
குப்பையாய் மாறணுமே
உம்மையே என் கண்முன் வைத்து
ஓடி ஜெயிக்கணுமே

3. ஆத்ம பார உருக்கத்தோடு
அழுது புலம்பணுமே
இரவும் பகலும் விழித்து ஜெபிக்கும்
மேய்ப்பன் ஆகணுமே - நான்

4. பேய்கள் ஓட்டும் வல்லமையோடு
பிரசங்கம் பண்ணணுமே
கடினமான பாறை இதயம்
உடைந்து நொறுக்கணுமே - நான்

5. வார்த்தை என்னும் வாளையேந்தி
யுத்தம் செய்யணுமே
விசுவாசம் என்னும் கேடயத்தால்
பிசாசை வெல்லணுமே - நான்

# உம்மோடு இருப்பது தான்

உம்மோடு இருப்பதுதான்
உள்ளத்தின் வாஞ்சையையா
உம் சித்தம் செய்வது தான்
இதயத்தின் ஏக்கமையா
இயேசையா உம்மைத்தானே
என் முன்னே நிறுத்தியுள்ளேன்

1. எனக்காக யாவையும் செய்பவரே
செய்து முடிப்பவரே
என் பாரங்கள் என் சுமைகள் - 2
உம் பாதத்தில் இறக்கி வைத்தேன் - 2

2. இரக்கமும் உருக்கமும் நீடிய சாந்தமும்
கிருபையும் உள்ளவரே
என் ஜீவனை அழிவில் நின்று
மீட்டவரே என் மேய்ப்பரே

3. எபிநேசரே எல்எலியோன்
என்றுமே உயர்ந்தவரே
எல்ஷடாய் (சர்வ) வல்லவரே
எல்ரோயீ காண்பவரே

4. மன்னிப்பதில் வள்ளல் நீரே
சுகம் தரும் தெய்வம் நீரே
உம் அன்பையும் இரக்கத்தையும்
மணி முடியாய் சூட்டுகின்றீர்

# உம்மில் நான் வாழ்கிறேன்

(கொலோ.2:6, எபே.2:22, 1:23,5:23, யோ.15:5,5:17)

உம்மில் நான் வாழ்கிறேன்
உமக்குள்ளே வளர்கிறேன்

1. ஜீவத்தண்ணீராம் உமக்குள்ளே
வேர் கொண்டு வளரும் மரம் நானே
படர்ந்திடுவேன் நிழல் தருவேன்
பறவைகள் தங்கும் வீடாவேன்

2. அடித்தளம் இரட்சகர் இயேசுவின் மேல்
அமைந்து உயரும் கட்டடம் நான்
பெருங்காற்று அசைப்பதில்லை
பெருமழையோ பிரிப்பதில்லை

3. இயேசுவே எனது தலையானீர்
நானோ உமது உடலாயேன்
உம் நினைவு என் உணவு
உம் விருப்பம் என் ஏக்கம்

4. செடியான உம்மோடு இணைந்துவிட்டேன்
கொடியாய் படர்ந்து கனி தருவேன்
இலைகளெல்லாம் மருந்தாகும்
கனிகளெல்லாம் விருந்தாகும்

5. உமது வார்த்தைகள் எனக்குள்ளே
உந்தன் ஆவி என்னோடே
மீட்பளிக்கும் நறுமணம் நான்
கேட்பதெல்லாம் பெற்றுக் கொள்வேன்

# உம்மை உயர்த்தி

உம்மை உயர்த்தி உயர்த்தி
உள்ளம் மகிழுதையா
உம்மை நோக்கிப் பார்த்து
இதயம் துள்ளுதையா

1. கரம் பிடித்து நடத்துகிறீர்
காலமெல்லாம் சுமக்கின்றீர்
நன்றி நன்றி (4) - உம்மை

2. கண்ணீரெல்லாம் துடைக்கின்றீர்
காயமெல்லாம் ஆற்றுகிறீர்

3. நல்லவரே வல்லவரே
காண்பவரே காப்பவரே

4. இருப்பவரே இருந்தவரே
இனிமேலும் வருபவரே

5. வலுவூட்டும் திரு உணவே
வாழவைக்கும் நல்மருந்தே

# உம்மை நம்பி உந்தன் பாதம்

உம்மை நம்பி உந்தன் பாதம்
உறுதியாய்ப் பற்றிக் கொண்டோம்
ஒருபோதும் கைவிடமாட்டீர் - 2

1. கண்ணீரைத் துடைத்து
கரங்களைப் பிடித்து
காலமெல்லாம் காத்துக் கொண்டீர்

2. மகனாக மகளாக
அப்பா என்றழைக்கும்
உரிமையை எனக்குத் தந்தீர்

3. அச்சாரமாய் முத்திரையாய்
அபிஷேக வல்லமையை
அடிமைக்குத் தந்தீரே

4. குருடர்கள் பார்த்தார்கள்
செவிடர்கள் கேட்டார்கள்
முடவர்கள் நடந்தார்கள்

# உம்மை நான் போற்றுகின்றேன் இறைவா

உம்மை நான் போற்றுகின்றேன் இறைவா
உம்மை நான் புகழ்கின்றேன் தேவா
போற்றி புகழ்கின்றேன்
வாழ்த்தி வணங்குகின்றேன்

1. என்னைக் கைதூக்கிவிட்டீர்
எதிரியின் மேல் வெற்றி தந்தீர்
உதவி தேடி வந்தேன்
உடல் சுகம் தந்தீரய்யா - ஆ... ஆ... ஆ... ஆ...
புகழ்ந்து பாடுவேன்
மகிழ்ந்து கொண்டாடுவேன்

2. மாலைநேரம் அழுகை என்றால்
காலைநேரம் ஆனந்தமே
நொடிப்பொழுது உந்தன் கோபம்
தயவோ வாழ்நாளெல்லாம்

3. சாக்கு துணி களைந்துவிட்டீர்
மகிழ்ச்சி உடை உடுத்திவிட்டீர்
புலம்பலை நீக்கிவிட்டீர்
புதுப்பாடல் நாவில் வைத்தீர்

4. என் உள்ளம் புகழ்ந்து பாடும்
இனி மௌனமாய் இருப்பதில்லை
கர்த்தாவே என் தெய்வமே
கரம்பிடித்த மெய் தீபமே

5. மலைபோல் நிற்கச் செய்தீர்
மாவேந்தன் உம் அன்பினால்
நிலைகலங்கி போனேன் ஐயா
நின் முகம் மறைந்தபோது

6. புழுதி உம்மை புகழ முடியுமா?
சத்தியம் சொல்ல அதனால் இயலுமா?
என் மீது இரங்கும் ஐயா
எனக்குத் துணையாய் இரும்

# உம்மை நாடி தேடும்

உம்மை நாடித் தேடும் மனிதர்
உம்மில் மகிழ்ந்து களிகூரட்டும்
உந்தன் மீட்பில் நாட்டம் கொள்வோர்
மன அமைதி இன்று பெறட்டும்

மகிமை, மாட்சிமை மாவேந்தன் உமக்கே
துதியும் கனமும், தூயோனே உமக்கே

1. ஒரு நாளும் உம்மை மறவேன்
ஒரு போதும் உம்மை பிரியேன்
மறு வாழ்வு தந்த நேசர்
மணவாளன் மடியில் சாய்ந்தேன் (மகிமை...

2. என் பார்வை சிந்தை எல்லாம்
நீர்காட்டும் பாதையில் தான்
என் சொல்லும் செயலும் எல்லாம்
உம் சித்தம் செய்வதில் தான் (மகிமை...

3. உந்தன் வேதம் எனது உணவு
நன்றி கீதம் இரவின் கனவு
உந்தன் பாதம் போதும் எனக்கு
அதுதானே அணையா விளக்கு (மகிமை...

4. உம்மை வருத்தும் வழியில் நடந்தால்
என்னைத் திருத்த வேண்டும் தேவா
கருத்தோடு உமது வசனம்
கற்றுத் தந்து நடத்த வேண்டும் (மகிமை...

# உம்மை நினைக்கும் போதெல்லாம்

உம்மை நினைக்கும் போதெல்லாம்
நெஞ்சம் மகிழுதையா
நன்றி பெருகுதையா..
நன்றி நன்றி ராஜா
நன்றி இயேசு ராஜா

1. தள்ளப்பட்ட கல் நான்
எடுத்து நிறுத்தினீரே
உண்மை உள்ளவன் என்று கருதி
ஊழியம் தந்தீரையா...

2. பாலை நிலத்தில் கிடந்தேன்
தேடி கண்டு பிடித்தீர்...
கண்ணின் மணிபோல காத்து வந்தீர்
கழுகு போல் சுமக்கின்றீர்

3. பேரன்பினாலே என்னை
இழுத்துக் கொண்டீர்
பிரிந்திடாமலே அணைத்துக் கொண்டீர் - உம்
பிள்ளையாய் தெரிந்து கொண்டீர்

4. இரவும் பகலும் கூட
இருந்து நடத்துகின்றீர்
கலங்கும் நேரமெல்லாம் கரம் நீட்டி - என்
கண்ணீர் துடைக்கின்றீர்

5. உந்தன் துதியைச் சொல்ல
என்னை தெரிந்து கொண்டீர்
உதடுகளைத் தினம் திறந்தருளும்
புது ராகம் தந்தருளும்

6. சிநேகம் பெற்றேன் ஐயா
கனம் பெற்றேன் ஐயா
உந்தன் பார்வைக்கு அருமையானேன்
உம் ஸ்தானாதிபதியானேன்

# உம்மை நோக்கிப் பார்க்கின்றேன்

உம்மை நோக்கிப் பார்க்கின்றேன்
உம்மை நினைத்து துதிக்கின்றேன்
இயேசையா ஸ்தோத்திரம் - 4

1. உலகம் வெறுக்கையில்
நீரோ அணைக்கிறீர்
உமது அணைப்பிலே அந்த
வெறுப்பை மறக்கின்றேன்

2. கண்ணின் மணிபோல
என்னைக் காக்கின்றீர்
உமது சமூகமே
தினம் எனக்குத் தீபமே

3. நீரே என் செல்வம்
ஒப்பற்ற என் செல்வம்
உம்மில் மகிழ்கின்றேன் - நான்
என்னை மறக்கின்றேன்

# உம்மைப் பிரிந்து

உம்மைப் பிரிந்து வாழ முடியாதையா
இயேசையா இயேசையா (2)

1. திராட்சை செடியின் கொடியாக
உம்மில் நிலைத்திருப்பேன்
மிகுந்த கனி கொடுப்பேன்
உம் சீடனாயிருப்பேன் - நான்

2. முன்னும் பின்னும் என்னை நெருக்கி
உம் கரம் வைக்கின்றீர்
உமக்கு மறைவாய் எங்கே போவேன்
உம்மை விட்டு எங்கே ஓடுவேன் - நான்

3. பகைவர்கள் ஆயிரம் பேசட்டுமே
பயந்து போக மாட்டேன்
துன்பங்கள் ஆயிரம் சூழ்ந்தாலும்
சோர்ந்து போகமாட்டேன் - நான்

4. நடந்தாலும் படுத்திருந்தாலும்
என்னை சூழ்ந்து உள்ளீர்
என் வழிகளெல்லாம் நீர் அறிவீர்
எல்லாம் உம் கிருபை - ஐயா

5. கர்த்தாவே என்னை ஆராய்ந்து
அறிந்து இருக்கின்றீர்
உட்காருதலையும் எழுதலையும்
அறிந்து இருக்கின்றீர்

# உம்மை புகழ்ந்து பாடுவது நல்லது

உம்மை புகழ்ந்து பாடுவது நல்லது
அது இனிமையானது ஏற்புடையது

1. பாடல் வைத்தீர் ஐயா
பாலகர் நாவில்
எதிரியை அடக்க பகைவரை ஒடுக்க
இவ்வாறு செய்தீரய்யா
உந்தன் திருநாமம் அது
எவ்வளவு உயர்ந்தது - (2)

2. நிலாவை பார்க்கும்போது
விண்மீன்கள் நோக்கும்போது
என்னை நினைந்து விசாரித்து
நடத்த நான் எம்மாத்திரமையா

3. வானதூதனை விட சற்று
சிறியவனாய் படைத்துள்ளீர்
மகிமை மாட்சிமை மிகுந்த
மேன்மையாய் முடிசூட்டி நடத்துகிறீர்

4. அனைத்துப் படைப்புகள் மேல்
அதிகாரம் தந்துள்ளீர்
காட்டு விலங்குகள் மீன்கள்
பறவைகள் கீழ்படியச் செய்துள்ளீர்

# உம்மைத் தான் பாடுவேன்

உம்மைத் தான் பாடுவேன்
உயிர் தந்த தெய்வமே
உமக்காய் ஓடுவேன்
உயிருள்ள நாளெல்லாம்
ஆராதனை ஆராதனை
தகப்பனே உமக்குத் தான்

1. உமது சித்தத்தால் உலகமே வந்தது
உமது இரத்தத்தால் விலை கொடுத்து மீட்டீர்

2. நீரே சிருஷ்டித்தீர் காண்கின்ற அனைத்தையும்
நீர் படைத்தீர் வானம் பூமி அனைத்தும்

3. கர்த்தாவே உமக்கு அஞ்சாதவன் யார்?
உம் பெயரைப் புகழ்ந்து பாடாதவன் யார்?

4. ஜனங்கள் யாவரும் வணங்குவார் உம்மையே
தேசம் அனைத்தும் இயேசு நாமம் சொல்லும்

5. வல்லவர் சர்வவல்லவர் ஆளுகை செய்கின்றீர்
மகிழ்ந்து புகழ்ந்து உம்மையே உயர்த்துவேன்

6. உலகின் நாடுகள் உமக்கே உரியன
நீரே என்றென்றும் ஆளுகை செய்கின்றீர்

7. பெலனும் ஞானமும் உமக்கே உரியன
மாட்சிமை வல்லமை உமக்குத்தானே சொந்தம்

# உம்மையே நான் நேசிப்பேன்

உம்மையே நான் நேசிப்பேன் - 3
உன்னதரே இயேசய்யா - உம்
பாதம் அமர்ந்து ஆராதிப்பேன்
வசனம் தியானித்து அகமகிழ்வேன்
எந்தப் புயல் வந்து மோதி தாக்கினாலும் - 2
அசைக்கப்படுவதில்லை

# உலர்ந்த எலும்புகள்

உலர்ந்த எலும்புகள் உயிர் பெற்று எழ வேண்டும்
ஒன்று சேர்ந்து முழு மனிதனாக வேண்டும்
அசைவாடும் . இன்று
அசைவாடும்
ஆவியான தேவா

1. நரம்புகள் உருவாகட்டும்
உம் சிந்தை உண்டாகட்டும் - அசை

2. சதைகள் உண்டாகட்டும்
உம் வசனம் உணவாகட்டும்

3. தோலினால் மூடணுமே
பரிசுத்தமாகணுமே

4. காலூன்றி நிற்கணுமே
கர்த்தரோடு நடக்கணுமே

5. சேனையாய் எழும்பணுமே
தேசமெங்கும் செல்லணுமே

6. மறுபடி பிறக்கணுமே
மறுரூபம் ஆகணுமே

7. சாத்தானை ஜெயிக்கணுமே
சாட்சியாய் நிற்கணுமே

8. பயங்கள் நீங்கணுமே
பரிசுத்தமாகணுமே

9. நோய்கள் நீங்கணுமே
பேய்கள் ஓடணுமே

# உன்னதத்தின் ஆவியை

உன்னதத்தின் ஆவியை
உந்தன் பக்தர் உள்ளத்தில்
ஊற்ற வேண்டும் இந்த நாளிலே
உலகமெங்கும் சாட்சி நாங்களே

1. பெந்தெகோஸ்தே பெருவிழாவிலே
பெருமழைபோல் ஆவி ஊற்றினீர்
துயரமான உலகிலே
சோர்ந்து போகும் எங்களை
தாங்க வேண்டும் உந்தன் ஆவியால்

2. ஆவியின் கொடைகள் வேண்டுமே
அயல் மொழியில் துதிக்க வேண்டுமே
ஆற்றலோடு பேசவும்
அன்பு கொண்டு வாழவும்
ஆவி ஊற்றும் அன்பு தெய்வமே

# உன்னதமானவர்

உன்னதமானவர் மறைவினிலே
சர்வ வல்லவர் நிழல்தனிலே
தங்கி உறவாடி மகிழ்கின்றேன்
எங்கும் வெற்றி நான் காண்கின்றேன்

லாலாலா லல்லால.......

1. ஆண்டவர் எனது அடைக்கலமானார்
நான் நம்பும் கோட்டையும் அரணுமானார்
வேடர் கண்ணிகள் கொள்ளை நோய்கள்
தப்புவித்து காப்பாற்றி தாங்குகிறார்

2. தமது சிறகால் அரவணைக்கின்றார்
இறக்கையின் கீழே அமரச் செய்கின்றார்
சத்திய வசனம் எனது கேடகம்
நிச்சயம் நிச்சயம் விடுதலை உண்டு

3. என் பக்கம் ஆயிரம்பேர் விழுந்தாலும்
பதினாயிரம் பேர் தாக்கினாலும்
பாதுகாப்பவர் என் பக்கத்திலே
பாதிப்பு இல்லையே பயமில்லையே

4. செல்லும் இடமெல்லாம் என்னைக் காக்க
தமது தூதருக்கு கட்டளையிட்டார்
பாதம் கல்லிலே மோதாமலே
கைகளில் ஏந்திடுவார் தாங்கிடுவார்

5. சிங்கத்தின் மீது நான் நடந்திடுவேன்
சீறும் சர்ப்பங்களை மிதித்திடுவேன்
சமாதானத்தின் தேவன் சீக்கிரமாய்
சாத்தானை காலடியில் நசுக்கிடுவார்

6. இருளில் நடமாடும் கொள்ளை நோய்க்கும்
பகலின் பாழாக்கும் கொடிய வாதைக்கும்
இரவில் உண்டாகும் பயங்கரத்துக்கும்
பகலின் அம்புக்கும் பயப்படமாட்டேன்

7. கர்த்தரையே புகலிடமாய் நான் கொண்டுள்ளேன்
உன்னதரை உறைவிடமாய் ஆக்கிக்கொண்டேன்
நோய்கள் அணுகாதுஇ என்றும் அணுகாது
தீமைகள் நேரிடாது நேரிடாது

8. அப்பாவை நான் நேசித்து வாழ்வதனால்
தப்பாமல் விடுவித்து காப்பாற்றுவார்
அவர் நாமம் நான் அறிந்ததினால்
அதிசயம் செய்து அரவணைப்பார்

9. மன்றாடும் போது பதில் தருகின்றார்
துன்பத்தில் கூட துணை நிற்கின்றார்
தப்புவித்து அயர்த்தி கனப்படுத்துவார்
நீடிய ஆயுளால் நிறைவளிப்பார்

# உன்னத தேவனே என் இயேசு

உன்னத தேவனே என் இயேசு ராஜனே
உம்மோடு இணைந்திட என் உள்ளம் ஏங்குதையா

1. உம் அன்பைப் பருகிட ஓடோடி வந்துள்ளேன்
உம்மாக மாறிட உலகை மறக்கின்றேன்
இரவெல்லாம் பகலெல்லாம் இதயம்
உமக்காக துடிக்குதையா
நினைவெல்லாம் பேச்செல்லாம்
நேசரே உம்மைப் பற்றித்தானே ஐயா

2. தேனிலும் இனிமையே தெவிட்டாத அமுதமே
தேடியும் கிடைக்காத ஒப்பற்ற செல்வமே

3. பேரின்பக் கடலிலே ஓய்வின்றி மூழ்கணும்
துதித்து மகிழணும் தூயோனாய் வாழணும்

4. மறுரூபமாக்கிடும் மகிமையின் மேகமே
உம் முக சாயலாய் உரு மாற்றும் தெய்வமே

5. கொடியாக படரணும் உந்தன் நேசமே
மடிமீது தவழணும் மழலைக் குழந்தை நான்

6. ஐயா உம் நிழலிலே ஆனந்த பரவசம்
ஆளவிடா பேரின்பம் ஆரோக்கியம் அதிசயம்

# உன்னதரே என் நேசரே

உன்னதரே என் நேசரே - உமது
பேரன்பினால் அசைவுறாதிருப்பேன் (2)

1. முழு மனத்தோடு நன்றி சொல்வேன்
முகமலர்ந்து நன்றி சொல்வேன் (2)
கூப்பிட்ட நாளில் பதில் தந்தீரே
ஆத்துமா வாழ பெலன் தந்தீரே (2)
உன்னதரே...

2. உன்னதத்தில் நீர் வாழ்ந்தாலும்
நலிந்தோரைக் கண்ணோக்கிப் பார்க்கின்றீர்
துன்பத்தின் நடுவே நடந்தாலும்
துரிதமாய் என்னை உயிர்ப்பிக்கின்றீர்
உன்னதரே...

3. வலது கரத்தால் காப்பாற்றினீர்
வாக்குத்தத்தங்கள் நிறைவேற்றினீர்
எனக்காய் யாவையும் செய்து முடித்தீர்
என்றும் உள்ளது உமது அன்பு
உன்னதரே...

4. உந்தன் நினைவில் அகமகிழ்வேன்
நீர் தந்த வெற்றியில் களிகூறுவேன்
மனதின் ஏக்கங்கள் மலரச் செய்தீர்
வாய் விட்டு கேட்டதை மறுக்கவில்லை
உன்னதரே...

# உன்கைக் காண்கிறார்

உன்கைக் காண்கிறார் - உன்
கண்ணீர் துடைக்கின்றார்... இயேசு

நீ அழவேண்டாம்... அழ வேண்டாம்
அதிசயம் செய்திடுவார் - உன்னை

1. நோய் நொடியில் வாடுகின்ற உன்னைக் காண்கிறார்
நொடிப்பொழுது சுகம் தந்து உன்னைத் தேற்றுவார்

2. கடன் தொல்லையால் கதறுகின்ற உன்னைக் காண்கிறார்
உடன் இருந்து நடத்திடுவார் ஒருபோதும் கைவிடார்

3. எதிர் காற்றோடு போராட்டமா உன்னைக் காண்கிறார்
உன் படகில் ஏறுகிறார் அமைதி தருகிறார்

4. உனக்கெதிரான ஆயதங்கள் வாய்க்காதே போகும்
உன்னை எதிர்த்து வழக்காடுவோர் உன் சார்பில் வருவார்கள்

5. கிறிஸ்துவோடு இணைந்து வாழும் நமக்கு வெற்றி உண்டு
நறுமணம் போல் பரவிடுவோம் நற்செய்தி முழங்குவோம்

# உன்னையே வெறுத்துவிட்டால்

உன்னையே வெறுத்துவிட்டால்
ஊழியம் செய்திடலாம்
சுயத்தை சாகடித்தால்
சுகமாய் வாழ்ந்திடலாம்

1. சிலுவை சுமப்பதனால்
சிந்தையே மாறிவிடும்
நீடிய பொறுமை வரும்
நிரந்தர அமைதி வரும்

2. பெயர் புகழ் எல்லாமே
இயேசுவின் நாமத்திறகே
கிறிஸ்து வளரட்டுமெ
நமது மறையட்டுமே

3. நாளைய தினம் குறித்து
கலங்காதே மகனே (மகளே)
இதுவரை காத்த தெய்வம்
இனியும் நடத்திடுவார்

4. சேர்த்து வைக்காதே
திருடன் புறித்திடுவான்
கொடுத்திடு கர்த்தருக்கே
குறைவின்றி காத்திடுவார்

5. தன்னலம் நோக்காமல்
பிறர் நலம் தேடிடுவோம்
இயேசுவில் இருந்த சிந்தை
என்றுமே இருக்கட்டுமே

# உடலைக்கொடு உள்ளத்தைக்கொடு

உடலைக்கொடு உள்ளத்தைக்கொடு உற்சாகமாய்
உன்னைக் கொடு ஒப்புக் கொடு சந்தோஷமாய் - (2)
இதிலே தேவன் பிரியமாய் இருக்கிறார்
இதிலே தான் மகிமை அடைகிறார் (2)
உடலைக்கொடு உள்ளத்தைக்கொடு

1. ஒருமணி நேரம் கொடுத்துப்பாரு
உன்னைத் தேவன் உயர்த்துவாரு (2)
பத்தில் ஒரு பங்கு கொடுத்துப்பாரு
கடன் இல்லாமல் நடத்துவாரு (2)
உடலைக்கொடு உள்ளத்தைக்கொடு

2. நன்றிப் பாடல் தினமும் பாடு
நல்ல தேவன் வருவார் உன்னோடு (2)
என்ன நடந்தாலும் நன்றி கூறிடு
தீமையை நன்மையால் தினமும் வென்றிடு (2)
உடலைக்கொடு உள்ளத்தைக்கொடு

3. தேசத்திற்காக தினம் மன்றாடு
பிறருக்காக பிரார்த்தனை செய்திடு (2)
ஆளும் தலைவர்களை ஜெபத்தில் நினைத்திடு
அமைதி பொங்கிடும் வன்முறை நீங்கிடும் (2)
உடலைக்கொடு உள்ளத்தைக்கொடு

4. விசுவாசம் தானே உலகத்தை ஜெயிக்கும்
விசுவாசி என்றும் பதறான் பதறான் (2)
அறிக்கை செய்திடுவோம் எரிக்கோ பிடித்திடுவோம்
செங்கடல் விலகிடும் யோர்தான் பிரிந்திடும்
உடலைக்கொடு உள்ளத்தைக்கொடு

# உறைவிடமாய் தெரிந்து

உறைவிடமாய் தெரிந்து கொண்டு
உலவுகிறீர் என் உள்ளத்திலே
பிள்ளையாக ஏற்றுக்கொண்டு
பேசுகிறீர் என் இதயத்திலே
அப்பா தகப்பனே உம்மை பாடுவேன்
ஆயுள் நாளெல்லாம் உம்மை உயர்த்துவேன்

1. நீதிக்கும் அநீதிக்கும் சம்பந்தம் ஏது?
   ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியம் ஏது?

   விட்டுவிட்டேன் பிரிந்து விட்டேன்
   தீட்டானதை தொடமாட்டேன்

2. உலக போக்கோடு உறவு எனக்கில்லை
   சாத்தான் செயல்களோடு தொடர்பு எனக்கில்லை

3. தூய்மையாக்கினேன் ஆவி ஆத்மாவை
   தெய்வ பயத்துடன் பூரனப்படுத்துவேன்

4. பயனற்ற இருளின் செயல்களை வெறுக்கிறேன் - அதை
   செய்யும் மனிதரை கடிந்து கொள்கிறேன்

5. அந்நிய நுகத்தோடு பிணைப்பு எனக்கில்லை
   அவிசுவாசிகளின் ஐக்கியம் எனக்கில்லை

# ஊற்றுத் தண்ணீரே

ஊற்றுத் தண்ணீரே எந்தன் தேவ ஆவியே
ஜீவநதியே என்னில் பொங்கி பொங்கிவா
ஆசீர்வதியும் என் நேச கர்த்தரே
ஆவியின் வரங்களினால் என்னை நிரப்பும்

1. கன்மலையைப் பிளந்து வனாந்திரத்திலே
கர்த்தாவே உம் ஜனங்களின் தாகம் தீர்த்தீரே
பள்ளத்தாக்கிலும் மலைகளிலும்
தண்ணீர் பாயும் தேசத்தை நீர் வாக்களித்தீரே

2. ஜீவத் தண்ணீராம் எந்தன் நல்ல கர்த்தரே
ஜீவ ஊற்றினால் என்னை நிறைத்திடுமே
கனிதந்திட நான் செழித்தோங்கிட
கர்த்தரின் கரத்தில் நித்தம் கனம் பெற்றிட

3. இரட்சிப்பின் ஊற்றுக்கள் எந்தன் சபைதனிலே
எழும்பிட இந்த வேளை இரங்கிடுமே
ஆத்ம பலமும் பரிசுத்தமும்
ஆவலுடன் பெற்றிடவே வரம் தாருமே

4. திறக்கப்பட்டதாம் ஊற்று சிலுவையிலே
இரட்சகரின் காயங்களில் வெளிப்படுதே
பாவக் கறைகள் முற்றும் நீங்கிட
பரிசுத்த சமூகத்தில் ஜெயம் பெற்றிட

# எக்காளம் ஊதிடுவோம்

எக்காளம் ஊதிடுவோம்
எரிக்கோவை தகர்த்திடுவோம்
கர்த்தரின் நாமம் உயர்த்திடுவோம்
கல்வாரிக் கொடி ஏற்றுவோம்

1. கிதியோன்களே புறப்படுங்கள்
எதிரிகளை துரத்திடுங்கள்
தீபங்களை ஏந்திடுங்கள்
தெருத் தெருவாய் நுழைந்திடுங்கள்

2. சிம்சோன்களே எழும்பிடுங்கள்
வல்லமையால் நிரம்பிடுங்கள்
சீறிவரும் சிங்கங்களை
சிறைபிடித்து கிழித்திடுங்கள்

3. தெபோராக்களே விழித்திடுங்கள்
உபவாசித்து ஜெபித்திடுங்கள்
எஸ்தர்களே கூடிடுங்கள்
இரவுகளை பகலாக்குங்கள்

4. அதிகாலையில் காத்திருப்போம்
அபிஷேகத்தால் நிரம்பிடுவோம்
கழுகுபோல பெலனடைந்து
கர்த்தருக்காய் பறந்திடுவோம்

# எங்கள் தேவன்

எங்கள் தேவன் வல்லவரே
இன்றும் என்றும் காப்பவரே
வல்லவர் சர்வ வல்லவர்
நல்லவர் என்றும் நல்லவர் - அல்லேலூயா

1. தீயின் நடுவே நடந்தாலும்
எரிந்து போகமாட்டோம்
கடலின் நடுவே நடந்தாலும்
மூழ்கிப் போகமாட்டோம்

2. சோதனை துன்பம் சூழ்ந்தாலும்
சோர்ந்து போவதில்லை
வேதனை வியாதி நெருக்கினாலும்
வெற்றி சிலுவையுண்டு

3. அலகை அநுதினம் தாக்கினாலும்
ஆண்டவர் வார்த்தையுண்டு
உலகம் நம்மை வெறுத்தாலும்
உன்னதர் கரங்களுண்டு

# எங்கள் ஜெபங்கள்

எங்கள் ஜெபங்கள் தூபம் போல
உம் முன் எழவேண்டுமே

1. ஜெபிக்கும் எலியாக்கள் தேசமெங்கும் எழவேண்டும்
உடைந்த பலிபீடம் (உறவுகள்) சரி செய்யப்படவேண்டும்
தகப்பனே ஜெபிக்கிறோம் - (2)

2. பரலோக அக்கினி எங்கும் பற்றி எரியவேண்டும்
பாவச் செயல்கள் சுட்டெரிக்கப்படவேண்டும்

3. தூரம்போன் ஜனங்கள் உம் அருகே வரவேண்டும்
கர்த்தரே தெய்வமென்று காலடியில் விழவேண்டும்

4. பாகால்கள் இந்தியாவில் இல்லாமல போகவேண்டும்
பிசாசின் கிரியைகள் முற்றிலும் அழியவேண்டும்

5. பாரததேசத்தை ஜெபமேகம் மூடவேண்டும்
பெரிய காற்றடித்து பெருமழை பெய்யவேண்டும்

# எங்குபோகிறீர் இயேசு

எங்குபோகிறீர் இயேசு தெய்வமே
எனக்காய் சிலுவையை சுமக்கும் தெய்வமே

1. பாரச்சிலுவையோ என் பாவச்சிலுவையோ
நீ சுமந்தது என் பாவச்சிலுவையோ
உன் உள்ளம் உடைந்ததோ
என் பாவச் சேற்றினால் - எங்கு போகிறீர்

2. தீய சிந்தனை நான் நினைத்ததால்
உன் சிரசில் முள்முடி நான் சூட்டினேன்

3. பெருமை கோபத்தால் உன் கன்னம் அறைந்தேனே
என் பொறாமை எரிச்சலால்
உன் விலாவைக் குத்தினேனே

4. கசையால் அடித்தது என் காம உணர்ச்சியால்
காரித்துப்பியது என் பகைமை உணர்ச்சியால்

5. அசுத்த பேச்சுக்கள் நான் பேசி மகிழ்ந்ததால்
கசப்புக்காடியை நான் குடிக்கக் கொடுத்தேனே

# எங்களுக்குள்ளே வாசம்

எங்களுக்குள்ளே வாசம் செய்யும் ஆவியானவரே
இந்நாளில் உம் சித்தம் போல் நடத்திச் செல்லுமையா
ஆவியானவரே... ஆவியானவரே
பரிசுத்த ஆவியானவரே (2)

1. எப்படி நான் ஜெபிக்க வேண்டும்
எதற்காக ஜெபிக்க வேண்டும்
கற்றுத்தாரும் ஆவியானவரே (2)
வேத வசனம் புரிந்து கொண்டு
விளக்கங்களை அறிந்திட
வெளிச்சம் தாரும் ஆவியானவரே - (2)

2. கவலை கண்ணீர் மறக்கணும்
கர்த்தரையே நோக்கணும்
கற்றுத்தாரும் ஆவியானவரே
செய்த நன்மை நினைக்கணும்
நன்றியோடு துதிக்கணும்
சொல்லித்தாரும் ஆவியானவரே

3. எங்கு செல்ல வேண்டும்
என்ன சொல்ல வேண்டும்
வழி நடத்தும் ஆவியானவரே
உம் விருப்பம் இல்லாத
இடங்களுக்குச் செல்லாமல்
தடுத்து நிறுத்தும் ஆவியானவரே

4. எதிரிகளின் சூழ்ச்சிகள்
சாத்தானின் தீக்கனைகள்
எதிர்த்து நிற்க பெலன் வேண்டுமே
உடல் சோர்வு அசதிகள்
பெலவீனங்களை நீங்கி
உற்சாகத்தால் நிரம்ப வேண்டுமே

# எதைக்குறித்தும் கலக்கம் இல்லப்பா

எதைக் குறித்தும் கலக்கம் இல்லப்பா
எல்லாவற்றிற்காகவும் நன்றி சொல்லுவேன்
யார் மேலும் கசப்பு இல்லப்பா
எல்லாருக்காகவும் மன்றாடுவேன்
எதைக் குறித்தும் கலக்கம் இல்லப்பா

1. இதுவரை உதவி செய்தீர்
இனிமேலும் உதவி செய்வீர்

2. கவலைகள் பெருகும்போது..
கர்த்தர் என்னைத் தேற்றுகிறீர்

3. எப்போதும் என் முன்னே
உம்மைத்தான் நிறுத்தியுள்ளேன்

4. வலப்பக்கத்தில் இருப்பதனால்
நான் அசைக்கப்படுவதில்லை (தகப்பன்)

5. என் சமூகம் முன் செல்லும்
இளைப்பாறுதல் தருவேன் என்றீர்

6. எனக்காய் யுத்தம் செய்தீர்
யாவையும் செய்து முடிப்பீர்

# எதை நினைத்தும்

எதை நினைத்தும் நீ கலங்காதே மகனே
யேகோவா தேவன் உன்னை நடத்திச் செல்வார் - 2

1. இதுவரை உதவின எபிநேசர் உண்டு
இனியும் உதவி செய்வார் - 2 (எதை)

2. சுகம் தரும் தெய்வம் யேகோவா ர.்.ப்பா உண்டு
பூரண சுகம் தருவார்

3. புதுபெலன் அடைந்து சிறகுகளை விரித்து
உயர பறந்திடுவாய் மடிந்து போவதில்லை

4. பூரண அன்பு பயத்தை புறம்பே தள்ளும்
அன்பிலே பயமில்லை

5. கர்த்தரை நினைத்து மகிழ்ந்து களிகூர்ந்தால்
உனது விருப்பம் செய்வார்

6. வழிகளிளெல்லாம் அவரையே நம்பியிரு
உன் சார்பில் செயலாற்றுவார்

7. வலுவூட்டும் இயேசுகிறிஸ்துவின் துணையால்
எதையும் செய்திடுவாய்

# எத்தனை நன்மைகள்

எத்தனை நன்மைகள் எனக்குச் செய்தீர்
எப்படி நன்றி சொல்வேன் - நான்
நன்றி ராஜா....நன்றி ராஜா

1. தாழ்மையில் இருந்தேன் தயவாய் நினைத்தீர்
தேவனே உம்மை துதிப்பேன்

2. பெலவீனன் என்று தள்ளி விடாமல்
பெலத்தால் இடை கட்டினீர்

3. பாவத்தினாலே மரித்துப்போய் இருந்தேன்
கிருபையால் இரட்சித்தீரே

4. எனக்காக மரித்தீர் எனக்காக உயிர்த்தீர்
எனக்காய் மீண்டும் வருவீர்

5. கரங்களைப் பிடித்து கண்மணி போல
காலமெல்லாம் காத்தீர்

6. பாவங்கள் போக்கி சாபங்கள் நீக்கி
பூரண சுகமாக்கினீர்

7. முள்முடி தாங்கி திரு இரத்தம் சிந்தி
சாத்தானை ஜெயித்து விட்டீர்

8. நீர் செய்த அதிசயம் ஆயிரம் உண்டு
விவரிக்க முடியாதையா

# எத்தனை நன்மை எத்தனை

எத்தனை நன்மை எத்தனை இன்பம்
சகோதரர்கள் ஒருமித்து வாசம் பண்ணும்போது

1. அது ஆரோன் தலையில் ஊற்றப்பட்ட நறுமணம்
முகத்திலிருந்து வழிந்தோடி உடையை நனைக்கும்

2. சீயோன் மலையில் இறங்குகின்ற பனிக்கு ஒப்பாகும்
இளைப்பாறுதல் சமாதானம் இங்கு உண்டாகும்

3. இங்குதான் முடிவில்லாத ஜீவன் உண்டு
இங்குதான் எந்நாளும் ஆசீர் உண்டு

4. இருவர் மூவர் இயேசு நாமத்தில் கூடும்போதெல்லாம்
அங்கு நான் இருப்பேனென்று இரட்சகர் சொன்னாரே

# எந்தன் இயேசு கைவிடமாட்டார்

எந்தன் இயேசு கைவிடமாட்டார்
என்னை மறந்திட மாட்டார்
அல்லேலூயா - 8

1. நிந்தனை போராட்டத்தில்
நேசர் எனைத் தாங்கினார்
சோதனை வந்த போதெல்லாம்
தப்பிச் செல்ல வழி காட்டினார்

2. கடந்ததை மறக்கின்றேன்
கண் முன்னால் என் இயேசுதான்
காத்திருந்து பெலன் அடைந்து
கழுகைப் போல் எழும்பிடுவேன்

3. சீக்கிரம் வரப்போகின்ற
நேசருக்காய் காத்திருப்பேன்
எரியும் விளக்கேந்தியே
இயேசுவின் பின் செல்லுவேன்

4. ஆயிரம் துன்பம் வந்தாலும்
அச்சம் எனக்கில்லையே
அரணும் கோட்டையும் அவர்
அத்தனையும் தகர்த்திடுவாரே

# எப்படி பாடுவேன்

எப்படி பாடுவேன் நான் - என்
இயேசு எனக்குச் செய்ததை
ஆயுள் முழுவதும் என் கர்த்தருக்காய்
ஆத்தும ஆதாயம் செய்வேன் - 2

1. ஒரு வழி அடையும் போது
புதவழி திறந்த தேவா
திறந்த வாசலை என் வாழ்க்கையில்
அடைக்காத ஆண்டவரல்லோ

2. எப்பக்கம் நெருக்கப்பட்டும்
ஒடுங்கி நான் போவதில்லை
அப்பனின் மார்பினில் சாய்ந்தென்றுமே
எப்போதும் பாடிடுவேன்

3. கடந்து வந்த பாதையில்
கண்மணி போல் காத்திட்டீர்
கடுகளவும் குறை வைக்காமலே
அதிகமாய் ஆசிர்வதித்தீர்

# எழுந்து ஒளி வீசு

எழுந்து ஒளி வீசு - 2
இயேசு வருகின்றார்
உன்னில் வருகின்றார்

1. கர்த்தர் மகிமை உன்னில் வந்ததே
காரிருள் நீங்கிப் போனதே

2. துன்பம் எல்லாம் மறைந்து போனதே
துயரமெல்லாம் நீங்கிப் போனதே

3. ஆவியான தேவன் தாமே
அனுதினம் நடத்துவாரே

4. கண்ணீரெல்லாம் துடைப்பாரே
கரம் பிடித்து நடத்துவாரே

# எழுப்புதல் என் தேசத்திலே

எழுப்புதல் என் தேசத்திலே
என் கண்கள் காண வேண்டும்
தேவா கதறுகிறேன்
தேசத்தின் மேல் மனமிரங்கும்

1. சபைகளெல்லாம் தூய்மையாகி
சாட்சியாக வாழணுமே

2. தெரு தெருவாய் என் இயேசுவின் நாமம்
முழங்கணுமே முழங்கணுமே

3. கோடி மக்கள் சிலுவையை தேடி
ஓடி வந்து சுகம் பெறணும்

4. ஒரு மனமாய் சபைகளெல்லாம்
ஒன்று கூடி ஜெபிக்கணுமே

5. தேசமெல்லாம் மனம் திரும்பி
நேசரையே நேசிக்கணும்

6. ஆதி சபை அதிசயங்கள்
அன்றாடம் நடக்கணுமே

7. துதிசேனை எழும்பணுமே
துரத்தணுமே எதிரிகளை

8. மோசேக்கள் கரம் விரித்து
ஜனங்களுக்காய் கதறணுமே

9. ஸ்தோவான்கள் எழும்பணுமே
தேவனுக்காய் நிற்கணுமே

10. அதிசயங்கள் அற்புதங்கள்
அனுதினமும் நடக்கணுமே

11. உம் வழியை அறியணுமே
உம் மீட்பை உணரணுமே

# எனது மணவாளனே

எனது மணவாளனே என் இதய ஏக்கமே
இனியவரே இயேசையா
உம்மைத் தான் தேடுகிறேன் - நான்
உம்மைத் தான் நேசிக்கிறேன்

1. உம் நாமம் சொல்லச் சொல்ல - என்
உள்ளமெல்லாம் துள்ளுதையா
உம் அன்பைப் பாடப் பாட
இதயமெல்லாம் இனிக்குதையா (2)

2. உம் முகம் பார்க்கணுமே
உம் அழகை ரசிக்கணுமே
உம் பாதம் அமரணுமே
உம் சித்தம் அறியணுமே

3. என் வாயின் சொற்களெல்லாம்
ஏற்றனவாய் இருப்பதாக
ஏன் இதய எண்ணமெல்லாம்
ஊகந்தனவாய் இருப்பதாக (உமக்கு)

4. அழகெல்லாம் அற்றுப் போகும் - உலக
எழிலெல்லாம் ஏமாற்றும்
உம் அன்பு மாறாதையா
ஒரு நாளும் அழியாதையா

5. நான் பார்க்கும் பார்வையெல்லாம்
ஏற்றனவாய் இருப்பதாக
நான் நடக்கும் பாதையெல்லாம்
உகந்தனவாய் இருப்பதாக

# எனது தலைவன் இயேசுராஜன்

எனது தலைவன் இயேசுராஜன்
மார்பில் சாய்ந்து சாய்ந்து
மகிழ்ந்து மகிழ்ந்திருப்பேன்

1. இதய தீபம் எனது தெய்வம்
இரக்கத்தின் சிகரம்
பார்த்து பார்த்து ரசித்து ருசித்து
பரவசம் அடைவேன்

2. நீதி தேவன் வெற்றி வேந்தன்
அமைதியின் மன்னன்
நினைத்து நினைத்து துதித்து துதித்து
நிம்மதி அடைவேன்

3. நல்ல மேய்ப்பன் குரலைக் கேட்பேன்
நாளும் பின் தொடர்வேன்
தோளில் அமர்ந்து கவலை மறந்து
தோடர்ந்து பயணம் செய்வேன்

4. பசும்புல் மேய்ச்சல் அமர்ந்த தண்ணீர்
அழைத்துச் செல்பவரே
ஆத்துமாவை தினமும் தேற்றி
ஆணைத்துக் கொள்பவரே

# என் ஆத்துமாவும் சரீரமும்

என் ஆத்துமாவும் சரீரமும்
என் ஆண்டவர்க்கே சொந்தம்
இனி வாழ்வது நானல்ல
என்னில் இயேசு வாழ்கின்றார்

1. இயேசு தேவா அர்ப்பணித்தேன்
என்னையே நான் அர்ப்பணித்தேன்
ஏற்றுக் கொள்ளும் ஏந்திக்கொள்ளும்
என் இதயம் வாசம் செய்யும்

2. அப்பா உம் திருசித்தம் - என்
அன்றாட உணவையா
நான் தப்பாமல் உம் பாதம்
தினம் எப்போதும் அமர்ந்திருப்பேன்

3. கர்த்தாவே உம் கரத்தில்
நான் களிமண் போலானேன்
உந்தன் இஷ்டம்போல் வனைந்திடும்
என்னை எந்நாளும் நடத்திடும்

# என் இயேசு உன்னைத் தேடுகிறார்

என் இயேசு உன்னைத் தேடுகிறார்
இடமுண்டோ மகனே உன் உள்ளத்தில்

1. கதறிடும் உன்னைப் பார்க்கின்றார் - உன்
கண்ணீரைத் துடைக்க வருகின்றார்
உதவிடும் கரத்தை நீட்டுகிறார் - உன்
உள்ளத்தில் வாழத் துடிக்கின்றார்

2. சிலுவை மரணம் உனக்காக
சிந்திய திரு இரத்தம் உனக்காக
உன் பாவம் சுமந்து தீர்த்தாரே - தன்
உயிர் தந்து உன்னை மீட்டாரே

3. மார்த்தாள் வீட்டில் இடம் கொடுத்தாள்
மரித்த லாசரை மீண்டும் கண்டாள்
கலங்கிடும் மனிதா வருவாயா - என்
கர்த்தரின் பாதம் விழுவாயா

4. சகேயு உடனே இறங்கி வந்தான்
சந்தோஷமாக வரவேற்றான்
பாவங்கள் அனைத்தும் அறிக்கை செய்தான்
பரலோக இன்பம் பெற்றுக் கொண்டான்

5. பேதுரு படகில் இடம் பொடுத்தான்
பெரும் தோல்வி மாறி மகிழ்வடைந்தான்
அதிசய தேவனை கண்டு கொண்டான் -என்
ஆண்டவன் பின்னே நடந்து சென்றான்

# என் இயேசு ராஜா

என் இயேசு ராஜா ஸ்தோத்திரம்
ஸ்தோத்திரமே (2)
உயிருள்ள நாளெல்லாமே

1. இரக்கம் உள்ளவரே
மனதுருக்கம் உடையவரே
நீடிய சாந்தம்இ பொறுமை அன்பு
நிறைந்து வாழ்பவரே

2. துதிகன மகிமையெல்லாம்
உமக்கே செலுத்துகிறோம்
மகிழ்வுடன் ஸ்தோத்திரபலிதனை செலுத்தி
ஆராதனை செய்கிறோம்

3. கூப்பிடும் யாவருக்கும் அருகில் இருப்பவரே
உண்மையாய் கூப்பிடும்
குரல்தனை கேட்டு
விடுதலை தருபவரே

4. உலகத்தோற்ற முதல்
எனக்காய் அடிக்கப்பட்டீர்
துரோகியாய் வாழ்ந்த என்னையும் - மீட்டு
புதுவாழ்வு தந்து விட்டீர்

# என் இயேசு ராஜாவுக்கே

என் இயேசு ராஜாவுக்கே
எந்நாளும் ஸ்தோத்திரம்
என்னோடு வாழ்பவர்க்கே
எந்நாளும் ஸ்தோத்திரம்

1. கர்த்தாவே நீர் செய்த நன்மைகளை
நித்தமும் நினைக்கிறேன்
முழு உள்ளத்தோடு உம் நாமம்
பாடிப் புகழுவேன் - நான்

2. நெருக்கப்பட்டேன் தள்ளப்பட்டேன்
நேசர் நீர் அணைத்தீரே
கைவிடப்பட்டு கதறினேன்
கர்த்தர் நீர் தேற்றினீர்…ஆ…ஆ

3. இனி நான் வாழ்வது உமக்காக
உமது மகிமைக்காக
உம் அன்பை எடுத்துச் சொல்லுவேன்
ஓயாமல் பாடுவேன் - நான்

4. பாவங்கள் அனைத்தும் மன்னித்தீரே
நோய்களை சுகமாக்கினீர்
எனது ஜீவனை அழிவில் நின்று
காத்து இரட்சித்தீரே…ஆ…ஆ

# என் உயிரே ஆண்டவரைப் போற்று

என் உயிரே ஆண்டவரைப் போற்று
முழு உள்ளமே அவர் பெயரைப் போற்று
அவர் செய்த சகல உபகாரங்களை நீ
ஒருநாளும் மறவாதே - ஒரு போதும் மறவாதே

1. குற்றங்களை எல்லாம் மன்னிக்கின்றார்
நோய்களை குணமாக்கி நடத்துகிறார்

2. படுகுழியினின்று விடுவிக்கிறார்
இரக்கத்தை முடியாக சூட்டுகிறார்

3. வாழ்நாளெல்லாம் நன்மைகளால்
நிறைவாக்கி நம்மை நடத்திச் செல்வார்
(நடத்துகிறார்)

4. கழுகுபோல் இளமையை புதுப்பிக்கிறார்
காலமெல்லாம் நம்மை சுமக்கின்றார்

5. மோசேக்கு வழிகள் வெளிப்படுத்தினார்
அதிசய செயல்கள் காணச் செய்தார்

6. இரக்கமும் உருக்கமும் நீடியசாந்தமும்
மிகுந்த கிருபையும் உள்ளவரே

7. எப்போது கடிந்து கொள்பவரல்ல
என்றென்றும் கோபம் கொள்பவரல்ல

8. பாவங்களுக்கேற்ப நம்மை நடத்துவதில்லை
குற்றங்களுக்கேற்ப நம்மை தண்டிப்பதில்லை

# என் உள்ளமே

என் உள்ளமே இளைப்பாறிடு
இயேசப்பா உனக்கு நன்மை செய்தார்

1. கால்கள் இடராமல் காப்பாற்றினார்
சாவிலிருந்து விடுவித்தார்

2. நோயின் கட்டுகள் அவிழ்த்துவிட்டார்
ஊழியன் என்னையும் உயர்த்திவிட்டார்

3. எளிய உள்ளத்தை பாதுகாத்தார்
தாழ்ந்த நெஞ்சத்தை மீட்டுக்கொண்டார்

4. மன்றாடும் போது செவிசாய்த்தார்
மறவாமல் உறவாடி மகிழச்செய்தார்

5. விண்ணப்பம் கேட்டார் அன்புகூர்வேன்
விடுதலை தந்தார் நன்றி சொல்வேன்

6. இரட்சிப்பின் பாத்திரம் கையில் ஏந்தி
இரட்சகர் நாமம் உயர்ந்திடுவேன்

# என் கிருபை உனக்குப் போதும்

என் கிருபை உனக்குப் போதும்
பலவீனத்தில் என் பெலமோ
பூரணமாய் விளங்கும்

1. பயப்படாதே உன்னை மீட்டுக் கொண்டேன்
எனக்கே நீ சொந்தம்
பெயரிட்டு நான் உன்னை அழைத்தேன்
எனக்கே நீ சொந்தம்

2. உலகத்திலே துயரம் உண்டு
திடன் கொள் என் மகனே
கல்வாரி சிலுவையினால்
உலகத்தை நான் ஜெயித்தேன்

3. உனக்கெதிரான ஆயதங்கள்
வாய்க்காதே போகும்
இருக்கின்ற பெலத்தோடு
தொடர்ந்து போராடு

4. எல்லா வகையிலும் நெருக்கப்பட்டும்
ஒடுங்கி நீ போவதில்லை
கலங்கினாலும் மனம் முறிவதில்லை
கைவிடப் படுவதில்லை

# என் தெய்வம் இயேசு

என் தெய்வம் இயேசு என்னோடு பேசுவார்
எனக்கு சந்தோஷமே
அல்லேலூயா - 4

1. கனவின் வழியாய் பேசுவார்
கலக்கம் நீங்கப் பேசுவார்
காட்சி தந்து பேசுவார்
சாட்சியாக நிறுத்துவார்

2. வேதம் வழியாய் பேசுவார்
விளக்கம் அனைத்தும் போதிப்பார்
பாதம் அமர்ந்து தியானிப்பேன்
பரலோகத்தைத் தரிசிப்பேன்

# என் தேவனே என் இயேசுவே

என் தேவனே என் இயேசுவே
உம்மையே நேசிக்கிறேன்

1. அதிகாலமே தேடுகிறேன்
ஆர்வமுடன் நாடுகிறேன்

2. என் உள்ளமும் என் உடலும்
உமக்காகத்தான் ஏங்குதையா

3. துணையாளரே உம் சிறகின்
நிழலில் தானே களி கூருவேன்

4. ஜீவனுள்ள நாட்களெல்லாம்
ஸ்தோத்தரிப்பேன் துதிபாடுவேன்

5. உலகம் எல்லாம் மாயையையா
உம் அன்புதான் மாறாதையா

6. படுக்கையிலும் நினைக்கின்றேன்
இராச் சாமத்தில் தியானிக்கின்றேன்

# என் நேசருக்கு புதுபாடல்

என் நேசருக்கு புதுபாடல் பாடுவேன்
பாசத்தோடு தினம் தினம் பாடுவேன்
எபி நேசருக்கு புதுபாடல் பாடுவேன்
பாசத்தோடு தினம் தினம் பாடுவேன்

1. கர்த்தர் என் மேய்பராய் இருக்கின்றீர்
குறைவொன்றும் எனக்கு இல்லையே (2)
ஆனந்தமே எந்நாளுமே
அப்பா உம் சமூகத்திலே - அல்லேலூயா

2. புல் உள்ள இடங்களில் மேய்க்கின்றீர்
அமர்ந்த தண்ணீரன்டை சேர்க்கின்றீர்
ஆனந்தமே...

3. புது உயிர் தினமும் தருகின்றீர்
ஆன்மாவை தேற்றி மகிழ்கின்றீர்
ஆனந்தமே...

4. இருள் சூழ்ந்த பள்ளத்தாக்கில் நடந்தாலும்
பொல்லாப்புக்கு நான் பயப்படேன்
ஆனந்தமே...

5. நன்மையும் கிருபையும் தொடருமே
உயிரோடு வாழும் நாளெல்லாம்

6. நிலைத்திருப்பேன் உம் இல்லத்தில்
நித்திய நித்திய காலமாய்

7. என்னோடு கூட இருக்கின்றீர் – உம்
கோலும் தடியும் தேற்றுமே

8. எதிரிகள் கண்முன் விருந்தொன்று
ஏற்பாடுசெய்கின்றீர் எனக்காய்

9. எண்ணெயால் அபிஷேகம் செய்கின்றீர்
பாத்திரம் நிரம்பி வழிகின்றது

# என் பாவங்கள் என் இயேசு

என் பாவங்கள் என் இயேசு மன்னித்து விட்டார்
தன் மகனாய் என் இயேசு ஏற்றுக் கொண்டார்

1. இனி நான் பாவியல்ல
பரிசுத்தமாகிவிட்டேன்
நேசரின் பின் செல்வேன் - நான்
திரும்பி பார்க்க மாட்டேன்

2. ஆழ்கடலில் எறிந்துவிட்டார்
காலாலே மிதித்து விட்டார்
நினைவுகூர மாட்டார் - என்
நேசரைத் துதிக்கின்றேன் - இனி

3. கிறிஸ்துவுக்குள் வாழ்கின்றேன்
மறுபடி பிறந்துவிட்டேன்
பழையன கழிந்தனவே - நான்
புதியன படைப்பானேன்

# என் மேய்ப்பரே இயேசையா

என் மேய்ப்பரே இயேசையா
என்னோடு இருப்பவரே
ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம் - (2)

1. பசும்புல் மேய்ச்சலிலே
இளைப்பாறச் செய்கின்றீர்

2. அமர்ந்த தண்ணீரண்டை
அநுதினம் நடத்துகிறீர்

3. ஆத்துமா தேற்றுகிறீர்
அபிஷேகம் செய்கின்றீர்

4. கோலும் கைத்தடியும்
தினமும் தேற்றிடுமே

5. நீதியின் பாதையிலே
நித்தமும் நடத்துகிறீர்

6. இருள் சூழ்ந்த பள்ளத்தாக்கில்
நடந்தாலும் பயமில்லையே

7. ஜீவனுள்ள நாட்களெல்லாம்
கிருபை என்னைத் தொடரும்

# என் வாழ்வின் முழு ஏக்கமெல்லாம்

என் வாழ்வின் முழு ஏக்கமெல்லாம்
உம்மோடு இருப்பது தான் - 2
இரவும் பகலும் உம்மோடுதான் இருப்பேன்
என்ன நேர்ந்தாலும் உம்மோடுதான் இருப்பேன்
எப்போதுமே நான் உம்மோடுதான் இருப்பேன்
அல்லேலூயா... (4)

1. என் வாழ்வின் முழு ஏக்கமெல்லாம்
உம்புகழ் பாடி மகிழ்வதுதான்
இரவும் பகலும் புகழ்பாடி மகிழ்ந்திருப்பேன்
என்ன நேர்ந்தாலும் புகழ்பாடி மகிழ்ந்திருப்பேன்
எப்போதுமே புகழ்பாடி மகிழ்ந்திருப்பேன்

2. என் வாழ்வின் முழு ஏக்கமெல்லாம்
உம்மை நேசித்து வாழ்வதுதான்
இரவும் பகலும் உம்மைத்தான் நான் நேசிப்பேன்
என்ன நேர்ந்தாலும் உம்மைத்தான் நான் நேசிப்பேன்
எப்போதுமே உம்மைத்தான் நான் நேசிப்பேன்

3. என் வாழ்வின் முழு ஏக்கமெல்லாம்
உம் சித்தம் செய்வதுதான்
இரவும் பகலும் உம் சித்தம் செய்திடுவேன்
என்ன நேர்ந்தாலும் உம் சித்தம் செய்திடுவேன்
எப்போதுமே உம் சித்தம் செய்திடுவேன்

# என் ஜனமே மனந்திரும்பு

என் ஜனமே மனந்திரும்பு
இயேசுவிடம் ஓடிவா
இறுதிகாலம் வந்தாச்சு
இன்னமும் தாமதமேன்

1. உன்னை நினைத்து சிலுவையிலே
தாகம் தாகம் என்றார்
உன்னை இரட்சிக்க பாவம் மன்னிக்க
தன்னையே பலியாக்கினார்

2. தூய இரத்தம் உனக்காக
தீய உன் வாழ்வு மாற
காயங்கள் உனக்காக
உன் நோயெல்லம் தீர

3. உனக்காக பரலோகத்தில்
உறைவிடம் கட்டுகிறார்
உன்னைத் தேடி வருகின்றார்
இன்று நீ ஆயத்தமா - மகனே

4. உன் பாவங்கள் போக்கிடவே
சிலுவையை சுமந்தாரே
உன் சாபங்கள் நீக்கிடவே
முள்முடி தாங்கினாரே

# என்றும் ஆனந்தம்

என்றும் ஆனந்தம்
என் இயேசு தருகிறார்
துதிப்பேன் துதிப்பேன்
துதித்துக் கொண்டேயிருப்பேன்
அல்லேலூயா ஆனந்தமே (2)

1. உன்னதர் மறைவில் வல்லவர் நிழலில்
என்றும் தங்குவேன்
தேவனை நோக்கி அடைக்கலப் பாறை
என்றே சொல்லுவேன்

2. தமது சிறகால் என்னை மூடி
காத்து நடத்துவார்
அவரது வசனம் ஆவியின் பட்டயம்
எனது கேடகம்

3. வழிகளிலெல்லாம் என்னைக் காக்க
தூதர்கள் எனக்குண்டு
பாதம் கல்லில் மோதாமல் காத்து
கரங்களில் ஏந்துவார்

4. சிங்கத்தின் மேலும் பாம்பின் மேலும்
நடந்தே செல்லுவேன்
சாத்தானின் சகல் வலிமையை வெல்ல
அதிகாரம் எனக்குண்டு

5. இரவின் பயங்கரம் பகலின் அம்பு
எதற்கும் பயமில்லை
உன்னத தேவன் எனது அடைக்கலம்
தங்கும் உறைவிடம்

6. தேவனைச் சார்ந்து வாழ்கின்ற எனக்கு
என்றும் விடுதலை
அவரது நாமம் அறிந்த எனக்கு
அவரே அடைக்கலம்

# என்னப்பா செய்யணும் நான்

என்னப்பா செய்யணும் நான்
சொல்லுங்கப்பா செஞ்சுடறேன்
இயேசப்பா இயேசப்பா - என்னப்பா

1. உங்க ஆசை நான் எனது ஆசை
உங்க விருப்பம்தான் எனது விருப்பமே

2. உங்க ஏக்கந்தான் எனது ஏக்கம்
உங்க எண்ணந்தான் எனது எண்ணமையா

3. இனி ஒரு வாழ்வு இல்லை நீங்க இல்லாம
உங்க பாதம் நான் எனது தஞ்சமையா

4. எத்தனை இடர் வரட்டும்
அது என்னை பிரிக்காது
உமக்காய் ஓடிடுவேன்
உற்சாகமாய் உழைத்திடுவேன்

# என்னை ஆட்கொண்ட இயேசு

என்னை ஆட்கொண்ட இயேசு
உம்மையாரென்று நானறிவேன்
உண்மை உள்ளவரே - என்றும்
நன்மைகள் செய்பவரே

1. மனிதர் தூற்றும்போது - உம்மில்
மகிழச் செய்பவரே
அதைத்தாங்கிட பெலன் கொடுத்து
தயவாய் அணைப்பவரே

2. தனிமை வாட்டும்போது - நல்
துணையாய் இருப்பவரே
உம் ஆவியினால் தேற்றி
அபிஷேகம் செய்பவரே

3. வாழ்க்கை பயணத்திலே
மேகத்தூணாய் வருபவரே
உம் வார்த்தையின் திருவுணவால்
வளமாய் காப்பவரே

# என்னைக் காக்கும் கேடகமே

என்னைக் காக்கும் கேடகமே
தலையை நிமிரச் செய்பவரே - (2)
இன்று உமக்கு ஆராதனை
என்றும் உமக்கே ஆராதனை - (2)

1. உம்மை நோக்கி நான் கூப்பிடடேன்
எனக்கு பதில் நீர் தந்தீரையா - (2)
படுத்து உறங்கி விழித்தெழுவேன்
நீரே என்னைத் தாங்குகிறீர்
ஆராதனை.... ஆராதனை....
அப்பா அப்பா உங்களுக்குத்தான் - (2)

2. சூழ்ந்து எதிர்க்கும் பகைவருக்கு
அஞ்ச மாட்டேன் அஞ்சவே மாட்டேன் - (2)
விடுதலை தரும் தெய்வம் நீரே
வெற்றிப் பாதையில் நடத்துகிறீர் - (2)
ஆராதனை.... ஆராதனை....
அப்பா அப்பா உங்களுக்குத்தான் - (2)

3. பக்தி உள்ள அடியார்களை
உமக்கென்று நீர் பிரித்தெடுத்தீர் - (2)
வேண்டும் போது செவி சாய்க்கின்றீர்
என்பதை நான் அறிந்து கொண்டேன் - (2)
ஆராதனை.... ஆராதனை....
அப்பா அப்பா உங்களுக்குத்தான் - (2)

4. உலகப் பொருள் தரும் மகிழ்வைவிட
மேலான மகிழ்ச்சி எனக்குத் தந்தீர் - (2)
நீர் ஒருவரே பாதுகாத்து
சுகமாய் வாழச் செய்கின்றீர் - (2)
ஆராதனை.... ஆராதனை....
அப்பா அப்பா உங்களுக்குத்தான் - (2)

# என்னைப் பெலப்படுத்தும்

என்னைப் பெலப்படுத்தும் இயேசுகிறிஸ்துவால்
எல்லாமே செய்து நான் முடித்திடுவேன்

1. கர்த்தர் என் வெளிச்சமும் எனது மீட்புமானார்
அவரே ஜீவனும் வாழ்வின் பெலனுமானார்

2. தீயோர் என் உடலை விழுங்க நெருங்கையில்
இடறி விழுந்தார்கள் இல்லாமல போனார்கள்

3. படையே எனக்கெதிராய் பாளையம் இறங்கினாலும்
என் நெஞ்சம் அஞ்சாது நம்பிக்கை இழக்காது

4. கேடுவரும் நாளிலே கூடார மறைவினிலே
மறைத்து வைத்திடுவார் பாதுகாத்திடுவார்

5. எனக்கு எதிரான மனிதர் முன்னிலையில்
என் தலை நிமிரச் செய்வார் வெற்றி காண செய்வார்

6. அப்பாவின் கூடாரத்தில் ஆனந்த பலியிடுவேன்
பாடல் பாடிடுவேன் நடனமாடிடுவேன்

7. நாட்கள் கூட கூட பெலனும் பெருகிவிடும்
இரும்பும் வெண்கலமும் பாதத்தின் கீழ் இருக்கும்

# என்னைத் தேடி இயேசு வந்தார்

என்னைத் தேடி இயேசு வந்தார்
எந்தன் வாழ்வை மாற்றி விட்டார்
அல்லேலூயா நான் பாடுவேன்
ஆடிப்பாடித் துதித்திடுவேன்

1. மகனானேன் நான் மகளானேன்
அப்பா பிதாவே என்றழைக்கும்
உரிமையை எனக்குத் தந்தார்

2. ஆவி தந்தார் தூய ஆவி தந்தார்
வல்லமையும் அன்பும் ஞானமும் கொண்ட
பரிசுத்த ஆவி தந்தார்

3. சுகமானேன் நான் சுகமானேன்
இயேசு கிறிஸ்துவின் காயங்களால்
சுகமானேன் சுகமானேன்

4. தெரிந்து கொண்டார் என்னை தெரிந்து கொண்டார்
பரிசுத்தனும் புனிதனுமாய்
அவர் திருமுன் வாழ

# என்னை நடத்தும் இயேசு நாதா

என்னை நடத்தும் இயேசு நாதா
உமக்கு நன்றி ஐயா
எனக்குள் வாழும் எந்தன் நேசா
உமக்கு நன்றி ஐயா

1. ஒளியாய் வந்தீர் வழியைத் தந்தீர்
உமக்கு நன்றி ஐயா
அழிவில் நின்று பாதுகாத்தீர்
உமக்கு நன்றி ஐயா

2. தேடி வந்தீர் பாட வைத்தீர்
உமக்கு நன்றி ஐயா
ஓடி ஓடி உழைக்கச் செய்தீர்
உமக்கு நன்றி ஐயா

3. பாவமில்லா தூயவாழ்வு
வாழச் செய்பவரே
பூவாய் வளர்ந்து பூத்துக் குலுங்கி
மலரச் செய்பவரே

4. துயரம் நீக்கி ஆறுதல் தந்தீர்
உமக்கு நன்றி ஐயா
புலம்பல் மாற்றி ஆனந்தம் தந்தீர்
உமக்கு நன்றி ஐயா

5. கலக்கம் நீக்கி கண்ணீர் துடைத்தீர்
உமக்கு நன்றி ஐயா
கவலை மாற்றி கரத்தால் அணைத்தீர்
உமக்கு நன்றி ஐயா

6. உலகம் மாயை எல்லாம் மாயை
உணர்ந்தேன் உணர்ந்துக் கொண்டேன்
உறவு பாசம் குப்பையென்றறிந்து
உணர்ந்தேன் உணர்ந்து கொண்டேன்

# என்னை நிரப்பும் இயேசு தெய்வமே

என்னை நிரப்பும் இயேசு தெய்வமே
இன்று நிரப்பும் உந்தன் ஆவியால்

1. பேய்களை ஓட்டி நோய்களைப் போக்கும்
பெலனே வாருமே
பெலவீனம் நீங்கி பலவானாய் மாற்றும்
வல்லமையே வாருமே

2. தேற்றரவாளன் பரிசுத்த ஆவி
தேற்றிட வாருமே
ஆற்றலைக் கொடுத்து அன்பால் நிரப்பும்
ஆவியே வாருமே

3. வரங்களைக் கொடுத்து வாழ்வை அளிக்கும்
வள்ளலே வாருமே
கனிகளால் நிரப்பி காயங்கள் ஆற்றும்
கருணையே வாருமே

4. கோபங்கள் போக்கி சுபாவங்கள் மாற்றும்
சாந்தமே வாருமே
பாவங்கள் கழுவிப் பரிசுத்தமாக்கும்
பரமனே வாருமே

# என்னைக் காக்கவும் பரலோகம்

என்னைக் காக்கவும் பரலோகம் சேர்க்கவும்
எனக்குள் இருப்பவரே ஸ்தோத்திரம்

எனக்காய் யுத்தம் செய்து
இரட்சித்து வழிநடத்தி
என்னோடு வருபவரே ஸ்தோத்திரம்

1. ஒரு வழியாய் எதிரி ஓடி வந்தால்
   ஏழு வழியாக துரத்திடுவீர்

2. வறட்சி காலங்களில் திருப்தியாக்கி
   எலும்புகளை வலிமை ஆக்குகிறீர்

3. போரிட கைகளுக்கு பயிற்சி தந்து
   விரல்களை யுத்தம் செய்ய பழக்குகிறீர்

4. நலிந்தோரை நல்வாக்கால் ஊக்குவிக்க
   கல்விமான் நாவை எனக்குத் தந்தீரே

5. காலை தோறும் என்னை எழுப்புகிறீர்
   கர்த்தர் உம் குரல் கேட்க பேசுகிறீர்

6. சத்தியமே உம்மை அறிந்து கொள்ள
   புத்தியை தந்தீரே நன்றி ஐயா

7. புலம்பலை ஆனந்தமாக மாற்றுகிறீர்
   சாக்கு ஆடைகளை நீக்குகிறீர்

8. வற்றாத நீரூற்றாய் ஓடச் செய்தீர்
   வளமான தோட்டமாக மாற்றுகிறீர்

9. என் வாயில் அருளிய உம் வார்த்தையெல்லாம்
   ஒரு நாளும் விலகாது என்றுரைத்தீர்

# எஜமானனே என் இயேசு

1. எஜமானனே என் இயேசு ராஜனே
எண்ணமெல்லாம் ஏக்கமெல்லாம்
உம் சித்தம் செய்வதுதானே - என்
எஜமானனே எஜமானனே
என் இயேசு ராஜனே

2. உமக்காகத்தான் வாழ்கிறேன்
உம்மைத்தான் நேசிக்கிறேன்
பலியாகி எனை மீட்டீரே
பரலோகம் திறந்தீரையா

3. உயிர் வாழும் நாடகளெல்லாம்
ஓடி ஓடி உழைத்திடுவேன் - நான்
ஆழைத்தீரே உம் சேவைக்கு - என்னை
ஆதை நான் மறப்பேனோ

4. அப்பா உன் சந்திதியில்தான்
அகமகிழ்ந்து களிகூருவேன்
எப்போது உம்மைக் காண்பேன் - நான்
ஏங்குதய்யா என் இதயம்

5. என்தேச எல்லையெங்கும்
அப்பா நீ ஆள வேண்டும்
வறுமை எல்லாம் மாறணும் - தேசத்தின்
வன்முறை எல்லாம் ஒழியணும்

# ஏதாவது ஏதாவது ஏதாவது

ஏதாவது ஏதாவது ஏதாவது செய்ய வேண்டும்
ஒவ்வொரு நாளும்
என் இயேசு ராஜாவுக்கு

1. துதிக்க வேண்டும் ஜெபிக்க வேண்டும்
துரத்த வேண்டும்
சாத்தானை துரத்த வேண்டும்

2. சொல்ல வேண்டும் தேசமெங்கிலும்
சொல்ல வேண்டும்
இயேசுவின் சுவிசேஷத்தை

3. தாங்க வேண்டும் ஊழியங்களை
நமது ஜெபத்தால் நமது பணத்தால்

# ஏழைகளின் பெலனே

ஏழைகளின் பெலனே
எளியவரின் திடனே
புயல் காற்றிலே என் புகலிடமே
கடும் வெயிலினிலே குளிர் நிழலே

1. கர்த்தாவே நீரே என் தேவன்
நீரே என் தெய்வம்
உம் நாமம் உயர்த்தி
உம் அன்பைப் பாடி
துதித்து துதித்திடுவேன்
அதிசயம் செய்தீர் ஆண்டவரே

2. தாயைப் போல தேற்றுகிறீர், ஆற்றுகிறீர்
தடுமாறும்போது தாங்கி அணைத்து
தயவோடு நடத்துகிறீர்
உம் மடியிலே தான் இளைப்பாறுவேன்

# ஐயா உம் திருநாமம்

ஐயா உம் திருநாமம்
அகில மெல்லாம் பரவ வேண்டும்
ஆறுதல் உம் வசனம்
அனைவரும் கேட்க வேண்டும்

1. கலங்கிடும் மாந்தர்
கல்வாரி அன்பை
கண்டு மகிழ வேண்டும்
கழுவப்பட்டு வாழ வேண்டும்

2. இருளில் வாழும் மாந்தர்
பேரொளியைக் கண்டு
இரட்சிப்பு அடைய வேண்டும்
இயேசு என்று சொல்ல வேண்டும்

3. சாத்தானை வென்று
சாபத்தினின்று
விடுதலை பெற வேண்டும்
வெற்றி பெற்று வாழ வேண்டும்

4. குருடரெல்லாம் பார்க்கணும்
முடவரெல்லாம் நடக்கணும்
செவிடரெல்லாம் கேட்கணுமே
சுவிசேஷம் சொல்லணுமே

# ஒரு தாய் தேற்றுவது போல்

ஒரு தாய் தேற்றுவது போல்
என் நேசர் தேற்றுவார் - அல்லேலூயா (4)

1. மார்போடு அணைப்பாரே
மனக்கவலை தீர்ப்பாரே

2. கரம்பிடித்து நடத்துவார்
கன்மலைமேல் நிறுத்துவார்

3. எனக்காக மரித்தாரே
என்பாவம் சுமந்தாரே

4. ஒருபோதும் கைவிடார்
ஒருநாளும் விலகிடார்

# ஒப்பற்ற என் செல்வமே

ஒப்பற்ற என் செல்வமே
ஓ எந்தன் இயேசு நாதா
உம்மை நான் அறிந்து உறவாட
உம் பாதம் ஓடி வந்தேன் - நான்
உம் பாதம் ஓடி வந்தேன்

1. உம்மை நான் ஆதாயமாக்கவும்
உம்மோடு ஒன்றாகவும்
எல்லாமே குப்பை என
எந்நாளும் கருதுகிறேன்

2. என் விருப்பம் எல்லாமே
இயேசுவே நீர் தானன்றோ
உமது மகிமை ஒன்றே
உள்ளத்தின் ஏக்கம் ஐயா

3. கடந்ததை மறந்தேன்
கண்முன்னால் என் இயேசு தான்
தொடர்ந்து ஓடுவேன்
தொல்லைகள் என்ன செய்யும்

# ஒப்புக் கொடுத்தீர் ஐயா

ஒப்புக் கொடுத்தீர் ஐயா
உம்மையே எனக்காக
உலகின் இரட்சகரே
உன்னத பலியாக

1. எங்களை வாழவைக்க
சிலுவையில் தொங்கினீர்
நோக்கிப் பார்த்ததினால்
பிழைத்துக் கொண்டோம் ஐயா

2. நித்திய ஜீவன் பெற
நீதிமானாய் மாற
ஜீவன் தரும் கனியாய்
சிலுவையில் தொங்கினீர்

3. சுத்திகரித்தீரே
சொந்த ஜனமாக
உள்ளத்தில் வந்தீர் ஐயா
உமக்காய் வாழ்ந்திட

4. பாவத்திற்கு மரித்து
நீதிக்கும் பிழைத்திட
உம் திரு உடலிலே
என் பாவம் சுமந்தீர் ஐயா

5. மீட்கும் பொருளாக
உம் இரத்தம் தந்தீர் ஐயா
சாத்தானை தோற்கடித்து
சாவையும் வென்றீர் ஐயா

6. என்னையே தருகிறேன்
ஜீவபலியாக
உகந்த காணிக்கையாய்
உடலைத் தருகிறேன்

# ஓடு ஓடு விலகி

ஓடு ஓடு விலகி ஓடு
வேண்டாத அனைத்தையும் விட்டு ஓடு
ஓடு ஓடு தொடர்ந்து ஓடு
இயேசு கிறிஸ்துவை நோக்கி ஓடு

1. வேசித்தனத்திற்கு விலகி ஓடு
இயேசுகிறிஸ்துவை நோக்கி ஓடு
நோக்கி ஓடு நீ நோக்கி ஓடு

2. சண்டை தர்க்கங்களை விட்டு ஓடு
அன்பு அமைதியைத் தினம் தேடு
தினம் தேடு நீ தினம் தேடு

3. இளமை இச்சைகளை விட்டு ஓடு
தூய்மை உள்ளத்தோடு துதிபாடு
நீ துதிபாடு தினம் பாடு

4. உலகப் பொருள் ஆசை விட்டு ஓடு
பக்தி விசுவாசம் நாடித்தேடு
நீ நாடித்தேடு நீ தினம் தேடு

5. வீணாய் ஓடவில்லை என்ற பெருமை
பெறனும் இயேசுவின் வருகையிலே
வருகையிலே இயேசு வருகையிலே

6. சரீரம் ஒடுக்கி தினம் கீழ்ப்படுத்தி
பரிசு பெறும்படி பார்த்து ஓடு
நீ பார்த்து ஓடு தம்பி பார்த்து ஓடு

7. சிலை வழிப்பாட்டை விட்டு ஓடு
சிருஷ்டி கர்த்தரை தினம் தேடு
தினம் தேடு நீ தினம் தேடு

# கடந்து வந்த பாதைகளை

கடந்து வந்த பாதைகளை திரும்பிப் பார்க்கிறேன்
கண்ணீரோடு கர்த்தாவே நன்றி சொல்கிறேன்
நன்றி சொல்கிறேன் நான் நன்றி சொலிகிறேன்
அப்பா உமக்கு நன்றி ராஜா உமக்கு நன்றி

(1) அனாதையாய் அலைந்தே நான் திரிந்தேன் ஐயா
அழாதே என்று சொல்லி அணைத்தீர் ஐயா - அப்பா

(2) எதிராய் வந்த சூழ்ச்சிகளை முறியடித்தீரே
எந்த நிலையிலும் உம்மைத் துதிக்க வைத்தீரே

(3) பாடுகளை சுமந்து செல்ல பெலன் தந்தீரே
பரிசுத்தமாய் வாழ்வு வாழ துணை செய்தீரே

(4) ஒரு நாளும் குறைவில்லாமல் உணவு தந்தீர்
உறைவிடமும் உடையும் தந்து காத்து வந்தீர்

(5) தள்ளப்பட்ட கல்லாகக் கிடந்தேன் ஐயா
எடுத்து என்னை பயன்படுத்தி மகிழ்கின்றீர் ஐயா

(6) எத்தனையோ புதுப்பாடல் நாவில் வைத்தீர்
இலட்சங்களை இரட்சிக்க பயன்படுத்துகிறீர்

(7) பாதை அறியா குருடனைப் போல் வாழந்தேன் ஐயா
பாசத்தோடு கண்களையே திறந்தீர் ஐயா

# கட்டப்பட்ட மனிதரெல்லாம்

கட்டப்பட்ட மனிதரெல்லாம்
கட்டவிழ்க்கப்பட வேண்டும்
காயப்பட்ட மனிதரெல்லாம்
கல்வாரி வர வேண்டும்
கர்த்தர் உம்மை காண வேண்டும் தேவா......தேவா

1. எழுப்புதல் தீ பரவட்டுமே
எங்கும் பற்றி எரியட்டுமே

2. அறியாமை இருள் விலகி
அதிசய தேவளை காண வேண்டும்

3. பாவங்கள் சாபங்கள்
பாரத தேசத்தில் மறைய வேண்டும் - எங்கள்

4. இமயம் முதல் குமரி வரை - என்
இயேசுவின் இரத்தம் பாய வேண்டும்

5. உண்மையான ஊழியர்கள்
உலகம் எங்கும் செல்ல வேண்டும்

6. சபைகளெல்லாம் தூய்மையாகி
சாட்சி வாழ்வு வாழ வேண்டும்

# கட்டிப் பிடித்தேன் உந்தன்

கட்டிப் பிடித்தேன் உந்தன் பாதத்தை
கண்ணீரால் நனைக்கின்றேன் கர்த்தாவே
இலங்கையிலே யுத்தங்கள் ஓய வேண்டுமே
இளைஞரெல்லாம் இயேசுவுக்காய் வாழ வேண்டுமே
இரங்கும் ஐயா மனம் இரங்குமையா

1. துப்பாக்கி ஏந்தும் கைகள்
உம் வேதம் ஏந்த வேண்டும்
தப்பாமல் உம் விருப்பம்
எப்போதும் செய்ய வேண்டும்

2. பழிக்கு பழி வாங்கும்
பகைமை ஒழிய வேண்டும்
மன்னிக்கும் மனப்பான்மை
நேசத்தில் மலர வேண்டும்

3. பிரிந்த குடும்பமெல்லாம்
மறுபடி இணைய வேண்டும்
பெற்றோரின் கண்ணீர் எல்லாம்
களிப்பாய் மாற வேண்டும்

4. வீடு இழந்தவர்கள்
இடங்கள் பெயர்ந்தவர்கள்
மறுவாழ்வு பெற வேண்டும்
மகிழ்ச்சியால் நிரம்ப வேண்டும்

# கரம் பிடித்து

கரம் பிடித்து வழி நடத்தும் கர்த்தரை
களிப்போடு துதிபாடி போற்றுவோம் - 2
ஆமென் அல்லேலூயா

1. பகமையான மேய்ச்சல் உள்ள இடத்திலே
இளைப்பாறச் செய்கின்றார் இயேசு
களைப்பாற்ற நீர் நிறைந்த அருவிக்கு
கர்த்தர் என்னை அழைத்துச் செல்கின்றார்

2. நாம் நடக்கும் பாதைகளக் காட்டுவார்
நாள்நோறும் ஞானத்தாலே நிரப்புவார்
நீதியின் பாதையிலே நடத்துவார்
நிழல்போல நம் வாழ்வை தொடருவார்

3. எந்தப்பக்கம் போனாலும் உடனிருந்து
இதுதான் வழியென்றே பேசுவார்
இறுதிவரை எப்போதும் நடத்துவார்
இயேசு நாமம் வாழ்கவென்று வாழ்த்துவோம்

# கலங்காதே கலங்காதே

கலங்காதே கலங்காதே
கர்த்தர் உன்னைக் கைவிடமாட்டர்

1. முள்முடி உனக்காக
இரத்தமெல்லாம் உனக்காக
பாவங்களை அறிக்கையிடு
பரிசுத்தமாகிவிடு - நீ

2. கல்வாரி மலைமேலே
காயப்பட்ட இயேசுவைப்பார்
கரம் விரித்து அழைக்கின்றார்
கண்ணீரோடு ஓடி வா - நீ

3. காலமெல்லாம் உடன் இருந்து
கரம்பிடித்து நடத்திச் செல்வார்
கண்ணீரெல்லாம் துடைப்பார்
கண்மணிபோல் காத்திடுவார் - உன்னை

4. உலகத்தின் வெளிச்சம் நீ
எழுந்து ஒளி வீசு
மலைமேல் உள்ள பட்டணம் - தம்பி (நீ)
மறைவாக இருக்காதே

5. உலகம் உன்னை வெறுத்திடலாம்
உற்றார் உன்னைத் துரத்திடலாம்
உன்னை அழைத்தவரோ
உள்ளங்கையில் ஏந்திடுவார்

# கலங்காதே மகனே

கலங்காதே மகனே
கலங்காதே மகளே
கன்மலையாம் கிறிஸ்து
கைவிடவே மாட்டார் - 3

1. மலைகள் பெயர்ந்து போகலாம்
குன்றுகள் அசைந்து போகலாம்
மகதுருகம் தேவன்
மாறிடவே மாட்டார் - 3

2. உலகம் வெறுத்துப் பேசலாம்
காரணமின்றி நகைக்கலாம்
உன்னை படைத்தவரோ
உள்ளங்கையில் ஏந்துவார்

3. தீமை உன்னை அணுகாது
துன்பம் உறைவிடம் நெருங்காது
செல்லும் இடமெல்லாம்
தூதர்கள் காத்திடுவார்

4. வியாதி வறுமை நெருக்கலாம்
சோதனை துன்பம் சூழலாம்
உன்னை மீட்டவரோ
உன்னைக் காத்துக் கொள்வார்

# கண் கலங்காமல் காத்தீரையா

கண் கலங்காமல் காத்தீரையா
கால் இடராமல் பிடித்தீரையா
உயிரோடு வாழும் நாட்களெல்லாம்

உம்மோடு கூட நடந்திடுவேன் - 2
உயிரோடு வாழும் நாட்களெல்லாம்

1. ஏனோக்கு நடந்தான் உம்மோடுகூட
   எடுத்துக் கொண்டீரையா
   பிரதான மேய்ப்பன் நீர் வெளிப்படும் போது
   மகிமையின் கிரீடம் என்தலைமேல்
   உம்மோடு கூட நடந்திடுவேன்
   உயிரோடு வாழும் நாட்களெல்லாம் (2)

2. நோவா நடந்ததால் உம்கண்களில்
   கிருபை கிடைத்ததையா
   குடும்பமாய் பேழைக்குள் செல்என்று சொல்லி
   வெள்ளத்தில் இருந்து காத்தீரையா
   உம்மோடு கூட...

3. ஆபிரகாம் நடந்தான் உம்மோடுகூட
   சினேகிதன் என்றழைத்தீர்
   செய்யப் போவதை மறைப்பேனோ என்று
   தெரிவித்தீர் உமது திட்டங்களை

4. உண்மையாய் நடந்த எசேக்கியா ராஜா
   விண்ணப்பம் கேட்டீரையா
   கண்ணீரைக் கண்டு மரணத்தினின்று
   விடுவித்து மீண்டும் வாழச் செய்தீர்

5. நறுமணம் வீசும் காணிக்கையாய்
   பலியாகி அன்பு கூர்ந்தீர்
   அதுபோல நானும் அர்ப்பணித்தேன்
   அன்பிலே நடந்து வளர்ந்திடுவேன்

# கண்களை பதிய வைப்போம்

கண்களை பதிய வைப்போம்
கர்த்தராம் இயேசுவின் மேல்
கடந்ததை மறந்திடுவோம்
தொடர்ந்து முன் செல்லுவோம்

1. சூழ்ந்து நிற்கும் சுமைகள்
நெருங்கி பற்றும் பாவங்கள்
உதறித் தள்ளிவிட்டு
ஓடுவோம் உறுதியுடன்

2. இழிவை எண்ணாமலே
சிலுவையை சுமந்தாரே
வல்லவர் அரியணையின்
வலப்பக்கம் விற்றிருக்கின்றார்

3. தமக்கு வந்த எதிர்ப்பை
தாங்கி கொண்ட அவரை
சிந்தையில் நிறுத்திடுவோம் - மனம்
சோர்ந்து போக மாட்டோம்

4. ஓட்டத்தை தொடங்கினவர்
தொடர்ந்து நடத்திடுவார் - நம்
நிறைவு செய்திடுவார்
நிச்சயம் பரிசு உண்டு

5. மேகம் போன்ற சாட்சிகள்
நம்மை சூழ்ந்து நிற்க
நியமித்த ஓட்டத்திலே
ஓடுவோம் பொறுமையோடு

6. பாவத்திற்கு எதிராய்
போராட்டம் நமக்கு உண்டு
இரத்தம் சிந்தும் அளவு
எதிர்த்து நிற்கவில்லையே

# கவலை கொள்ளாதிருங்கள்

கவலை கொள்ளாதிருங்கள் - 2
உயிர் வாழ எதை உண்போம்
உடல் மூட எதை உடுப்போம் - என்று
கவலை கொள்ளாதிருங்கள்

1. பறக்கும் பறவைகள் பாருங்கள்
விதைப்பதில்லை அறுப்பதில்லை
பரம பிதா ஊட்டுகிறார்
மறப்பாரோ மகனே(ளே) உன்னை (உயிர் வாழ...

2. கவலைப் படுவதினால்
நமது உயரத்திலே
ஒரு முழம் கூட்ட முடியுமா
புது பெலன் பெறவும் கூடுமா (உயிர் வாழ...

3. நாளைய தினம் குறித்து
நம்பிக்கை இழக்காதே
நாளைக்கு வழி பிறக்கும் - நீ
இன்றைக்கு நன்றி சொல்லு (உயிர் வாழ...

4. தகப்பனின் விருப்பத்தையும்
அவரது ஆட்சியையும்
தேடுவோம் முதலாவது - நம்
தேவைகளை சந்திப்பார் (உயிர் வாழ...

5. காட்டு மலர்கள் கவனியுங்கள்
உழைப்பதில்லை நூற்பதில்லை
உடுத்துகிறார் நம் தகப்பன்
உனக்கு அவர் அதிகம் செய்வார் (உயிர் வாழ...

# கவர்ச்சி நாயகனே

கவர்ச்சி நாயகனே கண்களில் நிறைந்தவரே
கரம் படித்தவரே கைவிடா கன்மலையே
உமக்கே ஸ்தோத்திரம் - 2
உயிருள்ள நாளெல்லாம்
உமக்கே ஸ்தோத்திரம்

1. என்னை இழுத்துக் கொள்ளும்
ஓடி வந்திடுவேன்
ஆறைக்குள் அழைத்துச் செல்லும்
அன்பில் களிகூறுவேன்

2. திராட்சை இரசம் பார்க்கிலும்
இனிமையானவரே
ஊற்றுண்ட பரிமளமே
ஊலகெல்லாம் உம் மணமே

3. இடக்கையால் தாங்குகிறீர்
வலக்கையால் தழுவுகிறீர்
எனக்கு உரியவரே
இதயம் ஆள்பவரே

4. உம் மீது கொண்ட நேசம்
அக்கினி ஜீவாலையன்றோ
தண்ணீரும் வெள்ளங்களும்
தணிக்க முடியாதையா

5. சாரோன் சமவெளியில்
பூத்த ரோஜாவே
பள்ளத்தாக்கின் நடுவில்
மலர்ந்த லீலி மலரே

6. என் நாவில் உள்ளதெல்லாம்
உந்தன் புகழ் தானே
நான் பேசி மகிழ்வதெல்லாம்
உந்தன் பெருமை தானே

7. காட்டு மரங்களுக்குள்
கிச்சிலி மரம் நீரே

அன்பரே உம் நிழலில்
அமர்ந்து இன்புறுவேன்

8. வாரும் என் நேசரே வயல்
வெளியில் தங்கிடுவோம்
நேசத்தின் உச்சிதங்களை
நிறைவாய் பொழிவேன் ஐயா

9. வாயின் முத்தங்களால்
முத்தங்கள் செய்திடுமே
உம்மைப்போல் மாற்றிவிடும்
உமக்குள் வைத்துக் கொள்ளும்

# கர்த்தாவே உம்மை போற்றுகிறேன்

கர்த்தாவே உம்மை போற்றுகிறேன்
கை தூக்கி எடுத்தீரே
உம்மை கூப்பிட்டேன்
என்னை குணமாக்கினீர்

1. எனது கால்கள் சறுக்கும் நேரமெல்லாம்
உமது அன்பு என்னைத் தாங்குதையா
என் கவலைகள் பெருகும் போது
உம் கரங்கள் அணைக்குதையா கர்த்தாவே

2. உந்தன் தயவால்மலைபோல் நிற்கச் செய்தீர்
உம்மைவிட்டு பிரிந்து மிகவும் கலங்கி போனேன்
சாக்கு ஆடை நீக்கி என்னை
சந்தோஷத்தால் மூடினீர்

3. உம்மாலே உரு சேனைக்குள் பாய்ந்திடுவேன்
உம்மாலே ஒரு மதிலை தாண்டிடுவேன்
பெலத்தால் இடை கட்டினீர்
மான் கால்கள் போலாக்கினீர்

4. உம் (உந்தன்) திரு பாதத்தில்
மகிழ்ந்து கொண்டாடுவேன்
உம்திரு நாமத்தில் வெற்றி கொடி ஏற்றுவேன்
கன்மலையே மீட்பரே என்னை கைவிடா தெய்வமே

5. உமது கோபம் ஒரே ஒரு நிமிடம்தான்
உமது தயவோ வாழ்நாளெல்லாம் நீடிக்கும்
மாலையில் அழுகை என்றால்
காலையில் அக்களிப்பு

# கர்த்தாவே உமது கூடாரத்தில்

கர்த்தாவே உமது கூடாரத்தில்
தங்கி வாழ்பவன் யார்
குடியிருப்பவன் யார் (2)

1. உத்தமனாய் தினம் நடந்து
நீதியிலே நிலை நிற்பவன்
மனதார சத்தியத்தையே
தினந்தோறும் பேசுபவனே

2. நாவினால் புறங்கூறாமல்
தோழனுக்குத் தீங்கு செய்யாமல்
நிந்தையான பேச்சுக்களை
பேசாமல் இருப்பவனே

3. கர்த்தருக்குப் பயந்தவரை
காலமெல்லாம் கனம் செய்பவன்
ஆணையிட்டு நஷ்டம் வந்தாலும்
தவறாமல் இருப்பவனே

4. கைகளில் தூயமை உள்ளவன்
இதய நேர்மை உள்ளவன்
இரட்சிப்பின் தேவனையே
எந்நாளும் தேடுபவனே

# கர்த்தர் கரம் என் மேலங்க

கர்த்தர் கரம் என் மேலங்க
கடுகளவும் பயமில்லங்க

1. ஏந்திடுவார் என்னைத் தாங்கிடுவார்
இறுதிவரை என்னை நடத்திடுவார்

2. ஊட்டிடுவார் தாலாட்டிடுவார்
எதிரி வந்தால் எத்திடுவார்

3. அணைப்பாரே அரவணைப்பரே
அள்ளி அள்ளி முத்தம் கொடுப்பாரே

4. இரத்தத்தாலே கழுவுகிறார்
இரட்சிப்பாலே உடுத்துகிறார்

5. தாலாட்டுவார் சீராட்டுவார்
வாலாக்காமல் தலையாக்குவார்

6. பறித்துக்கொள்ள முடியாதுங்க
ஒருவராலும் முடியாதுங்க

# கர்த்தர் மேல் பாரத்தை

கர்த்தர் மேல் பாரத்தை வைத்துவிடு
கலங்கித் தவிக்காதே
அவரே உன்னை ஆதரிப்பார்
அதிசயம் செய்வார்

1. நீதிமான் தள்ளாட விடமாட்டார்
நித்தமும் காத்து நடத்திடுவார்

2. நம்மைக் காக்கும் தேவனவர்
நமது நிழலாய் இருக்கின்றவர்

3. தகப்பனும் தாயும் கைவிட்டாலும்
அவரே நம்மை அணைத்துக் கொள்வார்

4. கர்த்தர் நம் சார்பில் இருக்கும்போது
நமக்கு எதிராய் நிற்பவன் யார்?

5. வாழ்வை கர்த்தருக்கு ஒப்புக் கொடுப்போம்
அவரே எல்லாம் வாய்க்கச் செய்வார்

6. என்றும் அவரில் மகிழ்ந்திருப்போம்
இதய விருப்பம் நிறைவேற்றுவார்

# கர்த்தரையே துதிப்பேன்

கர்த்தரையே துதிப்பேன்
காலமெல்லாம் துதிப்பேன்
வல்லவர் நல்லவர் கிருபையுள்ளவர்
என்றே பாடுவேன் - நான்

1. நெருக்கத்திலே கர்த்தரை நோக்கி
கதறி கூப்பிட்டேன்
நெருங்கி வந்து குரலைக் கேட்டு
விடுதலை கொடுத்தார்

2. எனக்குதவும் கர்த்தர் எனது
நடுவில் இருக்கிறார்
எதிரியான அலகையை நான்
எதிர்த்து வென்றிடுவேன்

3. எனது பெலனும் எனது மீட்பும்
கீதமுமானார்
நம்பியிருக்கும் கேடயமும்
கோட்டையுமானார்

4. கர்த்தர் எனது பக்கம் இருக்க
எதற்கும் பயமில்லை
கடுகளவும் பாவம் என்னை
அணுகமுடியாது

5. வல்லமை மிக்கவர் செயல்கள் பல
எனக்குச் செய்தாரே
உயிரோடிருந்து உலகத்திற்கு
எடுத்துச் சொல்லுவேன்

6. வீடு கட்டுவோர் புறக்கணித்தது
மூலைக்கல்லாயிற்று
கர்த்தரே செய்தார் கண்களுக்கெல்லாம்
ஆச்சரியம் இது

# கர்த்தரை துதியுங்கள் அவர் என்றும்

கர்த்தரை துதியுங்கள் அவர் என்றும் நல்லவர்
அவர் பேரன்பு என்றுமுள்ளது

1. ஒருவராய் மாபெரும்
அதிசயங்கள் செய்தாரே
வானங்களை ஞானமாய்
உண்டாக்கி மகிழ்ந்தாரே

இன்று போற்றி புகழுவோம்
நாம் உயர்த்தி மகிழுவோம் - (2)

2. பகலை ஆள்வதற்கு,
கதிரவனை உருவாக்கினார்
இரவை ஆள்வதற்கு
சந்திரனை உருவாக்கினார்

3. செங்கடலை இரண்டாக,
பிரித்து நடக்கச் செய்தார்
வனாந்திர பாதையிலே,
ஜனங்களை நடத்திச் சென்றார்

4. தாழ்மையில் இருந்த,
நம்மையெல்லாம் நினைவுகூர்ந்தார்
எதிரியின் கையினின்று,
விடுவித்துக் காத்திக் கொண்டார்

# கர்த்தர் நல்லவர்

கர்த்தர் நல்லவர் சுவைத்துப் பாருங்கள்
சுவைத்துப் பாருங்கள் - 2

1. கர்த்தரை நான் எக்காலமும்
ஸ்தோத்தரிப்பேனே
அவர் துதி எப்போதும் வாயிலிருக்கும்
ஆத்துமா கர்த்தருக்குள் மேன்மை பாராட்டும்
அனைவரும் அதைக்கேட்டு அக்களிப்பார்கள்

2. ஒருமனதாய் கர்த்தரையே
மகிமைப் படுத்துவோம்
உற்சாகமாய் அவர் நாமம் உயர்த்திடுவோம்
தேடினேன் எனக்குச் செவி கொடுத்தாரே
பயங்கள் நீங்கியே பாதுகாத்தாரே

3. அவரை நோக்கிப் பார்த்திடுவோம்
ஒளிமாயமாவோம்
முகங்களெல்லாம் வெட்கப்பட்டு
போவதில்லையே
ஏழை கூப்பிட்டேன் பதில் கொடுத்தாரே
எல்லாவிதத் துயர் நீக்கி இரட்சித்தாரே

# கர்த்தரை நம்பிடுங்கள்

கர்த்தரை நம்பிடுங்கள்
அவர் கைவிடவேமாட்டார்

1. உயிர்வாழ எதை உண்போம்
உடல் மூட எதை உடுப்போம்
என்றே கலலைப்படல் வேண்டாம்
உணவை விட உயிரும்
உடையைவிட உடலும்
உயர்ந்ததை அல்லவா
வானத்துப் பறவையைப் பாருங்கள்
அவை விதைப்பதுமில்லை
அறுப்பதுமில்லை சேர்த்து வைப்பதில்லை
கர்த்தர் காக்கின்றார்

2. கவலைப்படுவதினால்
எவன் தன் வளர்த்தியிலே
ஒரு முழம் கூட்ட முடியும்
எதை உடுப்போம் என்று
கவலையே வேண்டாம்
சொல்வதைக் கேளுங்கள்
வயல்வெளி மலர்களைப் பாருங்கள்
அவை உழைப்பதுமில்லை நூற்பதுமில்லை
கர்த்தர் உடுத்துகின்றார்

# கர்த்தரை நம்பினோர் பேறுபெற்றோர்

கர்த்தரை நம்பினோர் பேறுபெற்றோர்
சீயோன் மலைபோல் உறுதியுடன்
அசையாமல் இருப்பார்கள் - 2

1. எருசலேம் நகரம் மலைகளால்
எப்போதும் சூழ்ந்து இருப்பதுபோல்
இப்போதும் எப்போதும் கர்த்தர் நம்மை
சூழ்ந்து சூழ்ந்து காத்திடுவார்

2. வாய்க்கால்கள் ஓரத்தில் நடப்பட்டு
கனிதரும் மரமாய் வளர்வார்கள்
கோடை காலத்தில் பயமில்லை
வறட்சி வந்தாலும் கவலையில்லை

3. மனைவி கனிதரும் திராட்சைச் செடி
பிள்ளைகள் ஒலிவக் கன்றுகள் போல்
இல்லத்தில் மகிழ்ந்து வாழ்வார்கள்
இடைவிடாமல் ஜெபிப்பார்கள்

4. கர்த்தரை நேசித்து அவர் வழியில்
நடக்கும் மனிதர் பேறுபெற்றோர்
உழைப்பின் பயனை உண்பார்கள்
நன்மையும் நலமும் பெறுவார்கள்

# கர்த்தர் நாமம்

கர்த்தர் நாமம் என் புகலிடமே
கருத்தோடு துதித்திடுவேன்

1. யேகோவாயீரே எல்லாமே பார்த்துக் கொள்வீர்
கலங்கலப்பா நாங்க கலங்கலப்பா
-கர்த்தர்

2. யேகோவா நிசியே எந்நாளும் வெற்றி தருவீர்
ஸ்தோத்திரமே அப்பா ஸ்தோத்திரமே
-கர்த்தர்

3. யேகோவா ர.்.ப்பா சுகம் தரும் தெய்வமே
கலங்கலப்பா நாங்க கலங்கலப்பா
-கர்த்தர்

4. யேகோவா ரூவா எங்கள் நல்ல மேய்ப்பரே
ஸ்தோத்திரமே அப்பா ஸ்தோத்திரமே
-கர்த்தர்

5. யேகோவா ஷாம்மா கூடவே இருக்கிறீர்
கலங்கலப்பா நாங்க கலங்கலப்பா
-கர்த்தர்

6. யேகோவா ஷாலோம் சமாதானம் தருகின்றீர்
ஸ்தோத்திரமே அப்பா ஸ்தோத்திரமே
-கர்த்தர்

# கர்த்தருக்குள் களிகூர்ந்து

கர்த்தருக்குள் களிகூர்ந்து மகிழ்கிறேன்
கவலைகளை மறந்து துதிக்கிறேன்
ஆர்ப்பரித்து ஆரவார பலிதனையே
ஆப்பாவுக்கு ஆனந்தமாய் செலுத்துகிறேன்
ஆனந்த பலி ஆனந்த பலி
(என்) அப்பாவுக்கு அப்பாவுக்கு - 2

1. பாவ சாபம் எல்லாமே பறந்து போச்சு
பரிசுத்த வாழ்வு என்னுள் வந்தாச்சு .. இன்று

2. பயமும் படபடப்பும் ஓஞ்சுப் போச்சு
பாடுகளை தாங்கும் பெலன் வந்தாச்சு - எனவே

3. நோய்நொடி எல்லாமே நீங்கிப் போச்சு
பேய்களை விரட்டும் ஆற்றல் வந்தாச்சு

4. நேசக்கொடி என்மேலே பறக்குதையா... என்
நேசருக்காய் பணி செய்ய துடிக்குதையா

5. கடன் தொல்லை கஷ்டமெல்லாம் கடந்து போச்சு - என்
கண்ணீர்கள் எல்லாமே முடிஞ்சுப்போச்சு

# கர்த்தரை நோக்கி அமர்ந்திருப்போம்

கர்த்தரை நோக்கி அமர்ந்திருப்போம்
கவலை மறந்து காத்திருப்போம்

1. கர்த்தரை நம்பி நன்மை செய்வோம்
நல்லதோர் மேய்ச்சலை கண்டடைவோம்
அவரில் நாம் மகிழ்ந்திருப்போம்
இதய விருப்பம் நிறைவேற்றுவார்

2. நீதிமான் இரட்சிப்பு நிச்சயமே
நித்தம் அடைக்கலம் கர்த்தர் தாமே
உமதி செய்து காத்திடுவார்
உள்ளத்தில் தங்கி நடத்திடுவார்

3. வழிகள் அனைத்தும் கர்த்தருக்கே
ஒப்புவித்து நாம் மகிழ்ந்திருப்போம்
கர்த்தரையே சார்ந்திருப்போம்
அவரே அனைத்தும் வாய்க்கச் செய்வார்

4. சுயபுத்தியுல் சாய்ந்திடாமல்
முழு உள்ளத்தோடு நம்பிடுவோம்
வழிகளெல்லாம் நினைத்திடுவோம்
வாழ்வின் பாதை காட்டிடுவார்

# கற்றுத்தந்து நடத்துகிறீர்

கற்றுத் தந்து நடத்துதகிறீர்
கண்டித்து உணர்த்திப் போதிக்கிறீர்
ஆவியானவரே தூய ஆவியானவரே

1. என்றென்றைக்கும் எங்களுடன்
   எப்போதும் கூட இருக்கின்றீர் (2)
   சத்திய ஆவியானவரே
   சாட்சியாய் வாழச் செய்பவரே (2)
   ஆவியானவரே... - 2

2. போதிக்கின்றீர் சத்தியங்களை
   நினைவூட்டுகின்றீர் வசனங்களை (2)
   அனைத்தையும் சொல்லித் தருகின்ற
   ஆலோசகர் நீர்தானையா (2)
   ஆவியானவரே... - 2

3. தேவனுக்குகந்த பலியாக
   அர்ப்பண வாழ்வு நான் வாழ
   மகிமை மேல் மகிமை தருகின்றீர்
   மருரூபம் ஆக்கி மகிழ்கின்றீர்

4. ஊழியம் செய்யப் பிரித்தெடுத்து
   உலகெங்கும் தூது அனுப்புகிறீர்
   நற்செய்தி அருளும் நாயகரே
   உற்சாகப் படுத்தும் உன்னதரே

5. முழு உண்மை நோக்கி நடத்துகின்றீர்
   வரப்போகும் அனைத்தும் தெரிவிக்கிறீர்
   தினம் தினம் தேற்றும் துணையாளரே
   எனையாண்டு நடத்தும் மணவாளரே

6. உலகம் உம்மை அறிவதில்லை
   பெற்றுக் கொள்ள முடிவதில்லை
   எங்களுக்குள் நீர் ஜீவிக்கின்றீர்
   இதயத் துடிப்பாய் இயங்குகின்றீர்

# கறைகள் நீங்கிட

கறைகள் நீங்கிட
கறைகள் நீங்கிட கைகள் கழுவி
கர்த்தரைத் துதிக்கின்றேன் - என்
பலிபீடத்தை சுற்றிச் சுற்றி நான் வலம் வருகின்றேன்

1. கர்த்தாவே உம் பேரன்பு
எப்போதும் என் கண் முன்னே
வார்த்தையின் வெளிச்சத்தில்
வாழ அர்ப்பணித்தேன்

ஆராதனை ஆராதனை
ஆயுள் எல்லாம் ஆராதனை
அன்புகூர்ந்தேன் ஆர்வமுடன்
அர்ப்பணித்தேன் ஆயுள் எல்லாம்

1. அறுவடையின் எஜமானனே
அரணான அடைக்கலமே
அல்பாவும் ஓமேகாவும், தொடக்கமும் முடிவும் நீரே

2. இரக்கங்களின் தகப்பனே இளவயதின் வழிகாட்டியே
ஜீவிக்கின்ற மெய்தேவனே ஜீவனின் அதிபதியே

3. நித்தியானந்த சக்ராதிபதி நீர் ஒருவரே மாவேந்தர்
அரசர்க்கெல்லாம் அரசர் நீர் பேரின்பக் கடவுள் நீரே

4. மகா மகா நீதிபரர் மகத்துவங்கள் நிறைந்தவர்
மீட்பளிக்கும் வல்லமையே சாவாமை உள்ளவரே

5. எல்லாருக்கும் நீதிபதி சர்வத்தையும் உருவாக்கினீர்
சகல கிருபையும் நிறைந்தவர் சத்தியமானவரே

6. உண்மையுள்ள சிருஷ்டி கர்த்தர் நன்மைகளின் பிறப்பிடமே
யோனாவிலும் பெரியவரே, பிரதான மேய்ப்பர் நீரே

# காக்கும் தெய்வம் இயேசு இருக்க

காக்கும் தெய்வம் இயேசு இருக்க
கலக்கம் ஏன் மனமே
கண்ணீர் ஏன் மனமே

1. இதுவரை உன்னை நடத்தின தேவன்
   இனியும் நடத்திச் செல்வார்
   எபிநேசர் அவர்தானே - (2)

2. பாடுகள் சகித்தால் பரமனின் வருகையில்
   கூட சென்றிடலாம்
   பாடி மகிழ்ந்திடலாம்

3. காண்கின்ற உலகம் நமது இல்லை
   காணாத பரலோகம்தான்
   நமது குடியிருப்பு

4. சீக்கிரம் நீங்கிடும் உலகப்பாடுகள்
   மகிமையை கொண்டு வரும்
   மறவாதே என் மனமே

5. சிலுவை சுமந்தால் சுபாவம் மாறும்
   தெரிந்துகொள் மனமே
   சீடன் அவன் தானே

6. மலைகள் விலகும் குன்றுகள் அகலும்
   கிருபை விலகாதென்றார்
   மனது உருகும் தெய்வம்

# காண்கின்ற தேவன்

காண்கின்ற தேவன் நம் தேவன்
காலமும் அவரைத் துதித்திடுவோம்
அல்லேலூயா - அல்லேலூயா (2)

1. தம்மைத் தேடும் உணர்வுள்ளவன்
தரணியில் எவரேனும் உண்டோ
கர்த்தர் இயேசு காண்கின்றார்
கருத்தாய் அவரை தேடிடுவோம்

2. ஆவியிலே நொறுக்கப்பட்டு
ஆண்டவர் வார்த்தைக்கு நடுங்குகிற
அன்பு இதயம் காண்கின்றார்
அணுகிடுவோம் நாம் கண்ணீரோடு

3. உத்தம இதயம் கொண்டிருப்போம்
உன்னத வல்லமை பெற்றிடுவோம்
கர்த்தரின் கண்கள் பூமியெங்கும்
கருத்தாய் நோக்கிப் பார்க்கின்றன

4. ஆண்டவர் வார்த்தைக்குப் பயந்து
அவரது கிருபைக்கு காத்திருந்தால்
பஞ்ச காலத்தில் உணவளிக்க
பரிவாய் நம்மைப் பார்க்கின்றார்

# கால் மிதிக்கும் தேசமெல்லாம்

கால் மிதிக்கும் தேசமெல்லாம் - என்
கர்த்தருக்கு சொந்தமாகும்
கண்பார்க்கும் பூமியெல்லாம்
கல்வாரி கொடிபறக்கும்

1. பறக்கட்டும் பறக்கட்டும்
சிலுவையின் ஜெயக்கொடி - அல்லேலூயா
உயரட்டும் உயரட்டும்
இயேசுவின் திருநாமம் - அல்லேலூயா

2. எழும்பட்டும் அழும்பட்டும்
கிதியோனின் சேனைகள்
முழங்கட்டும் முழங்கட்டும்
இயேசுதான் வழியென்று

3. செல்லட்டும் செல்லட்டும்
ஜெபசேனை துதிசேனை
வெல்லட்டும் வெல்லட்டும்
எதிரியின் எரிகோவை

4. திறக்கட்டும் திறக்கட்டும்
சுவிசேஷ வாசல்கள்
வளரட்டும் வளரட்டும்
அபிஷேக திருச்சபைகள்

# கிதியோனே நீ

கிதியோன் நீ கிதியோன் நீ
தேவனால் அழைக்கப்பட்டு அனுப்பபட்டவன் நீ
வாலிபனே வாலிபனே
ஊழியம் செய்திட நீ ஒப்புக்கொடுப்பாயா

1. உணவுக்கு போராடும் தேசத்திலே
உண்மை தெய்வத்தை நீ சொல்லணுமே வாலிபனே
விளைச்சலை கெடுக்கின்ற எதிரிகளை
விரட்டணுமே இயேசு நாமம் சொல்லி

2. தரித்திர ஆவிகளைத் துரத்தணுமே
விக்கிரக ஆவிகளை விரட்டணுமே
கர்த்தர் மனம் இறங்க கதறணுமே
நாடு நலம் பெற ஜெபிக்கணுமே

3. சுயம் என்ற மண்பாண்டம் உடைத்துவிடு
பயம் இன்றி திருவசனம் அறிக்கையிடு
மாம்சத்தைப் பலியாக ஒப்புக்கொடு
புளியாத அப்பமாக மாறிவிடு

4. இருக்கின்ற பெலத்தோடே புறப்பட்டுப்போ
எதிரியை தோற்கடித்து ஜனங்களை மீட்பாய்
படைத்தவர் உனக்குள்ளே இருப்பதனால்
பராக்கிரமசாலியே பயமே வேண்டாம்

# கிறிஸ்துவுக்குள் வாழும் எனக்கு

கிறிஸ்துவுக்குள் வாழும் எனக்கு
எப்போதும் வெற்றி உண்டு
வெற்றி உண்டு - 3

1. என்னென்ன துன்பம் வந்தாலும்
நான் கலங்கிடவே மாட்டேன்
யார் என்ன சொன்னாலும்
நான் சோர்ந்து போகமாட்டேன்

2. என் ராஜா முன்னே செல்கிறார்
வெற்றிப் பவனி செல்கிறார்
குரத்தோலை கையில் எடுத்து
நான் ஓசான்னா பாடிடுவேன்

3. சாத்தானின் அதிகாரமெல்லாம்
என் நேசர் பறித்துக் கொண்டார்
சிலுவையில் அறைந்து விட்டார்
காலாலே மிதித்துவிட்டார்

4. பாவங்கள் போக்கிவிட்டார்
சாபங்கள் நீக்கி விட்டார்
இயேசுவின் தழும்புகளால்
சுகமானேன் சுகமானேன்

5. மேகங்கள் நடுவினிலே
ஏன் நேசர் வரப் போகிறார்
கரம் பிடித்து அழைத்துச் செல்வார்
கண்ணீரெல்லாம் துடைப்பார்

# குதூகலம் கொண்டாட்டமே

குதூகலம் கொண்டாட்டமே
என் இயேசுவின் சந்நிதானத்தில்
ஆனந்தம் ஆனந்தமே
என் அன்பரின் திருப்பாதத்தில்

1. பாவமெல்லாம் பறந்தது
நோய்களெல்லாம் தீர்ந்தது
இயேசுவின் இரத்தத்தினால்
கிறிஸ்துவுக்குள் வாழ்வு கிருபையால் மீட்பு
பரிசுத்த ஆவியினால்

2. தேவாதி தேவன் தினம்தோறும் தங்கும்
தேவாலயம் நாமே
ஆவியான் தேவன் அச்சாரமானார்
ஆதிசயம் அதிசயமே

3. வல்லவர் என் இயேசு
வாழ வைக்கும் தெய்வம்
வெற்றிமேலே வெற்றி தந்தார்
ஒருமனமாய் கூடி ஓசான்னா பாடி
ஊரெல்லாம் கொடியேற்றுவோம்

4. எக்காள சத்தம் தூதர்கள் கூட்டம்
நேசர் வருகின்றார்
ஒருநொடி பொழுதில் மறுரூபமாவோம்
மகிமையில் பிரவேசிப்போம்

# கூடுமே எல்லாம் கூடுமே

கூடுமே எல்லாம் கூடுமே
உம்மாலே எல்லாம் கூடும்
கூடாதது ஒன்றுமில்லை உம்மால்
கூடாதது ஒன்றுமில்லை

1. கடல்மீது நடந்தீரையா கடும்புயல் அடக்கினீரே
சாத்தானை ஒடுக்கினீரே சர்வ வல்லவரே

2. செங்கடல் உம்மைக் கண்டு ஓட்டம் பிடித்தது ஏன்
யோர்தான் உம்மைக் கண்டு பின்னோக்கிச் சென்றது ஏன்

3. மரித்து உயிர்த்தீரையா மரணத்தை ஜெயித்தீரையா
மறுபடி வருவீரையா உருமாற்றம் தருவீரையா

4. உம் நாமம் சொன்னால் போதும் பேய்கள் ஓடதையா
உம் பெயரால் கைகள் நீட்டினால் நோய்கள் மறையுதையா

5. மலைகள் செம்மறி போல் துள்ளியது ஏன் ஐயா
குன்றுகள் ஆடுகள் போல் குதித்ததும் ஏன் ஐயா

6. வனாந்தர பாதையிலே ஜனங்களை நடத்தினீரே
கற்பாறை கன்மலையை நீரூற்றாய் மாற்றினீரே

7. உடல் கொண்ட அனைவருக்கும் உணவு ஊட்டுகிறீர்
கறையும் காகங்களுக்கு இரை கொடுத்து மகிழ்கிறீர்

8. பகலை ஆள்வதற்கு கதிரவனை உருவாக்கினீர்
இரவை ஆள்வதற்கு விண்மீனை உருவாக்கினீர்

# கோணலும் மாறுபாடுமான

கோணலும் மாறுபாடுமான உலகத்தில்
குற்றமற்ற குழந்தைகளாய் வாழ்ந்திடுவோம்
இராஜா வருகிறார் விரைவில் வருகிறார்
ஆயத்தம் ஆயத்தமாவோம்

1. முணுமுணுக்காமால் வாதாடாமல்
அனைத்தையும் செய்து நாம் முன்னேறுவோம்

2. ஜீவ வார்த்தைகள் பிடித்துக் கொண்டு
சுடர்களாய் உலகிலே ஒளிவீசுவோம்

3. இயேசுவைப் போல் இருப்போம் வருகையிலே - அவர்
இருப்பது போல அவரைக் காண்போம்

4. அற்பமான நம் சரீரங்களை
மகிமையின் சரீரமாய் மாற்றிடுவார்

5. வெறுமனே வீணாய் ஓடவில்லை என்ற
பெருமையடைவோம் அவர் வருகையிலே

6. பரலோகத்தில் இருந்து இரட்சகர் இயேசு
வருவதை எதிர்பார்த்து காத்திருப்போம்

# கைதட்டி பாடி மகிழ்ந்திருப்போம்

கைதட்டி பாடி மகிழ்ந்திருப்போம்
கர்த்தர் சமூகத்தில் களிகூறுவோம்

களிகூறுவோம் களிகூறுவோம்
கர்த்தர் சொன்ன வாக்குத்தத்தம் சொல்லி மகிழ்வோம்
களிகூறுவோம் களிகூறுவோம்
கவலைகள் மறந்து களிகூறுவோம்

1. நினைப்பதற்கும் நான் ஜெபிப்பதற்கும்
அதிகமாய் செய்திடுவார்

2. பயப்படாதே உன்னை மீட்டுக் கொண்டேன்
எனக்கே நீ சொந்தம் என்றார்

3. நன்மையும் கிருபையும் நம்மைத் தொடரும்
ஜீவனுள்ள நாட்களெல்லாம்

4. அறிவு புகட்டுவார் பாதைகாட்டுவார்
ஆலோசனை அவர் தருவார்

5. ஆபத்துக் காலத்தில் நோக்கிக் கூப்பிட்டால்
அவர் நம்மை விடுவிப்பாரே

6. வாலாக்காமல் அவர் தலையாக்குவார்
கீழாக்காமல் மேலாக்குவார்

7. பெலப்படுத்தி நான் சகாயம் செய்வேன்
வலக்கரம் தாங்கும் என்றார்

8. உள்ளங்கையில் அவர் பொறித்து உள்ளார்
அவர் உன்னை மறப்பதில்லை - எனவே

# சப்தமாய் பாடி

சப்தமாய் பாடி சத்துருவை சங்கிலியால் கட்டுவோம்
நித்தம் நித்தம் கர்த்தர் நாமம் பாடி உயர்த்திடுவோம்

இராஜா இயேசு ஜீவிக்கின்றார்
இரத்தம் சிந்தி ஜெயம் தந்தார்

1. புதுப்பாடல் பாடி மகிழ்வோம் புனிதர்கள் சபையிலே
துதிபலி எழும்பட்டும் ஜெயக்கொடி பறக்கட்டும்
எழுப்புதல் தேசத்தில் பொழுதுபோல் உதித்தது

2. உண்டாக்கினாரே நம்மை உள்ளம் மகிழட்டும்
ஆளுநர் அவர்தானே இதயம் துள்ளட்டும் - நம்

3. தமது ஜனத்தின்மேலே பிரியம் வைக்கின்றார்
வெற்றி தருகிறார் மேன்மைப்படுத்துவார் - இன்று

4. கர்த்தரை உயர்த்தும் பாடல் வாயில் இருக்கட்டும்
வசனம் என்ற போர் வாள் கையிலே இருக்கட்டும்

# சபையோரே எல்லாரும்

சபையோரே எல்லாரும் கர்த்தரைத் துதியுங்கள்
ஜனங்களே எல்லோரும் அவரைப் போற்றுங்கள் - (2)
அவர் நம்மேல் வைத்த கிருபை பெரியது - (2)
சபையோரே எல்லாரும்

1. நம் தேவன் உயர்ந்த செல்வந்தரன்றோ
தேவையான அனைத்தையும் மிகுதியாய்த் தருவார் - (2)
அனேக ஜனங்களுக்கு கொடுக்கச் செய்திடுவார்
கடன் வாங்காமல் வாழச் செய்திடுவார்
சபையோரே எல்லாரும்

2. கர்த்தர் குரல் கேட்கும் ஆடுகள் நாம்
முடிவில்லா வாழ்வு நமக்குத் தந்திடுவார் - (2)
ஒருவனும் பறித்துக் கொள்ள முடியாது என்றார்
ஒருநாளும் அழிந்து போக விடமாட்டார்
சபையோரே எல்லாரும்

3. நமது கர்த்தரோ உறைவிடமானார்
இன்னல்கள் நடுவிலே மறைவிடமானார் - (2)
விடுதலை கீதங்கள் பாட வைக்கிறார்
வெற்றிக் கொடி அசைத்து ஆட வைக்கின்றார்
சபையோரே எல்லாரும்

4. சொந்த மகன் என்றும் பார்க்காமலே
நாம் வாழ இயேசுவை நமக்குத் தந்தாரே - (2)
அவரோடு கூட மற்ற எல்லா நன்மைகளும்
அருள்வார் என்பது நிச்சயம் தானே
சபையோரே எல்லாரும்

5. தேவனாம் கர்த்தருக்கு ஊழியம் செய்தால்
உணவையும் தண்ணீரையும் மிகுதியாய்த் தந்திடுவார் - (2)
எல்லா நோய்களையும் அகற்றிடுவார்
குழந்தைப் பாக்கியமும் கொடுத்திடுவார்

# சர்வ வல்லவர்

சர்வ வல்லவர் என் சொந்தமானார் (எஜமானன்)
சாவை வென்றவர் என் ஜீவனானார் (மணவாளன்)

ஆ... இது அதிசயம் தானே
ஓ... இது உண்மைதானே

1. கண்டு கொண்டேன் ஒரு புதையல்
பெற்றுக் கொண்டேன் ஒரு பொக்கிஷம்
இயேசுதான் என் இரட்சகர்
இயேசுதான் என் ராஜா

2. சந்தோஷமும் சமாதானமும்
என் உள்ளத்தில் பொங்குதம்மா
பாவமெல்லாம் போக்கிவிட்டார்
பயங்களெல்லாம் நீக்கிவிட்டார்

3. பரலோகத்தில் எனது பெயர்
எழுதிவிட்டார் என் இயேசு
என் வாழ்வின் நோக்கமெல்லாம்
இயேசுவுக்காய் வாழ்வது தான்

4. ஊரெல்லாம் சொல்லிடுவேன்
உலகமெங்கும் பறைசாற்றுவேன்
ஜீவிக்கின்றார் என் இயேசு
சீக்கிரமாய் வந்திடுவார்

# சாரோனின் ரோஜா

சாரோனின் ரோஜா இவர்
பரிபூரண அழகுள்ளவர்
அன்புத் தோழனென்பேன்
ஆற்றும் துணைவன் என்பேன்
இன்ப நேசரை நான் கண்டேன
காடானாலும் மேடானாலும்
கர்த்தரின் பின்னே போகத் துணிந்தேன்

1. சீயோன் வாசியே தளராதே
அழைத்தவர் என்றும் உண்மையுள்ளவர்
அன்பின் தேவன் மறக்கமாட்டார்
ஆறுதல் கரங்களால் அணைக்கின்றார்

2. மலைகள் பெயர்ந்து போகலாம்
குன்றுகள் அசைந்து போகலாம்
மாறா தேவனின் புதுகிருபை
காலை தோறும் நமக்கு உண்டு

3. நேசரை அறியா தேசமுண்டு
பாசமாய் செல்ல யார்தானுண்டு
தாகமாய் வாடிடும் கர்த்தருக்காய்
சிலுவை சுமந்து பின்செல்வோர் யார்

# சுமந்து காக்கும்

சுமந்து காக்கும் இயேசுவிடம்
சுமைகளை இறக்கி வைத்திடுவோம்

1. தாயின் வயிற்றில் தாங்கியவர்
தலை நரைக்கும்வரை தாங்கிடுவார்
விடுதலை கொடுப்பவர் இயேசுவன்றோ
வியாதிகள் தீமைகள் வென்றுவிட்டோம்

2. ஆயன் ஆட்டை சுமப்பது போல்
ஆண்டவர் நம்மைச் சுமக்கின்றார்
பசும்புல் மேய்ச்சல் நமக்குண்டு
பயப்படாதே சிறுமந்தையே

3. கண்ணின் மணிபோல் காக்கின்றார்
கருத்தாய் நம்மைப் பார்க்கின்றார்
கழுகு போல் சிறகின் மேல் வைத்து
காலமெல்லாம் நம்மைச் சுமக்கின்றார்

# சிங்கக் குட்டிகள்

சிங்கக் குட்டிகள் பட்டினி கிடக்கும்
ஆண்டவரைத் தேடுவோர்க்கு குறையில்லையே
குறையில்லையே குறையில்லையே
ஆண்டவரைத் தேடுவோர்க்கு குறையில்லையே

1. புல்லுள்ள இடங்களிலே
என்னை மேய்க்கின்றார்
தண்ணீரண்டை கூட்டிச் சென்று
தாகம் தீர்க்கின்றார்

2. எதிரிகள் முன் விருந்தொன்றை
ஆயத்தப்படுத்துகிறார்
என் தலையை எண்ணெயினால்
அபிஷேகம் செய்கின்றார்

3. ஆத்துமாவை தேற்றுகின்றார்
ஆவி பொழிகின்றார்
ஜீவனுள்ள நாட்களெல்லாம்
கிருபை என்கைத் தொடரும்

4. என் தேவன் தம்முடைய
மகிமை செல்வத்தினால்
குறைகளையே கிறிஸ்துவுக்குள்
நிறைவாக்கி நடத்திடுவார்

# சிலுவையில் தொங்கும்

சிலுவையில் தொங்கும் இயேசுவைப்பார்
திரு இரத்தம் சிந்தும் தேவனைப்பார்

1. முள்முடி தலையில் பாருங்களேன்
முகமெல்லாம் இரத்தம் அழகில்லை
கள்வர்கள் நடுவில் கதறுகிறார் - (2)
கருணை தேவன் உனக்காக

2. கைகால் ஆணிகள் காயங்களே
கதறுகிறார் தாங்க முடியாமல்
இறைவா ஏன் என்னை கைநெகிழ்ந்தீர்
என்றே அழுது புலம்புகின்றார்

# சிலுவையே நல்மரமே

சிலுவையே நல்மரமே
அதன் நிழல் அடைக்கலமே
கலங்காதே அழுதிடாதே
இயேசு உன்னை அழைக்கின்றார்

1. துன்ப நெருக்கடியில்
சோர்ந்து போனாயோ
அன்பர் இயேசு பார்
அணைக்கத் துடிக்கின்றார்

2. பாவச் சேற்றினிலே
மூழ்கி தவிக்கின்றாயோ
இயேசுவின் திருரத்தம்
இன்றே கழுவிடும்

3. வியாதி வேதனையில்
புலம்பி அழுகின்றாயோ
இயேசுவின் காயங்களால்
இன்றே குணம் பெறுவாய்

# சொன்னபடி உயிர்த்தெழுந்தார்

சொன்னபடி உயிர்த்தெழுந்தார்
சொல்தவறா நம் இயேசு
அல்லேலூயா ஆனந்தமே
அன்பர் இயேசு உயிர்த்தெழுந்தார்

1. சாவே உன் வெற்றி எங்கே
சாவே உன் கொடுக்கு எங்கே
சாவு வீழ்ந்தது வெற்றி கிடைத்தது
சகல அதிகாரம் நமக்கு உண்டு

2. விண்ணும் ஒழிந்து போகும்
மண்ணும் மறைந்து போகும்
ஆண்டவர் வாக்கோ இன்றும் என்றும்
அழியாதது மாறாதது

3. கிறிஸ்து உயிர்த்ததினால்
நாமும் உயிர்த்தெழுவோம்
ஆண்டவர் வருகை சீக்கிரம் அன்றோ
அபிஷேகம் பெற்று காத்திருப்போம்

# சேனைகளாய் எழும்பிடுவோம்

சேனைகளாய் எழும்பிடுவோம்
தேசத்தை கலக்கிடுவோம் - புறப்படு
இந்தியாவின் எல்லையெங்கும்
இயேசு நாமம் சொல்லிடுவோம் - புறப்படு
புறப்படு புறப்படு
தேசத்தை கலக்கிடுவோம் புறப்படு

1. பாதாளம் சென்றிடும்
பரிதாப மனிதர்களை தடுக்க வேண்டாமா..
பட்டணங்கள் கிராமங்களில்
கட்டப்பட்ட மனிதர்களை அவிழ்க்க வேண்டாமா..

2. உலக இன்பம் போதுமென்று
பரலோகம் மறந்தவர்கள் பார்வையடையணும்
பாவ சேற்றிலே மூழ்கி பணத்திற்காக
வாழ்பவர்கள் மனந்திரும்பணும்

3. அறுவடையோ மிகுதி ஆட்களோ குறைவு
அறியாயோ மகனே
பயிர்கள் முற்றி அறுவடைக்கு
தயாராக உள்ளது தெரியாதா மகளே

4. இயேசு நாமம் அறியாத எத்தனையோ
கோடிகள் இந்தியாவிலே
இன்னும் சும்மா இருப்பது நியாயம்
இல்லையே தம்பி இன்றே புறப்படு

5. வழிதெரியா ஆடுகள் தொய்ந்து போன
இதயங்கள் லட்சங்கள் உண்டு
உண்மை தெய்வம் அறியாது குருடர்களாய்
வாழ்பவர்கள் கோடிகள் உண்டு
புறப்பட்டோம் புறப்பட்டோம்
தேசத்தை கலக்கிடவே புறப்பட்டோம்
சேனைகளாய் எழும்பிடுவோம்
தேசத்தை கலக்கிடவே புறப்பட்டோம்
இந்தியாவின் எல்லையெங்கும்
இயேசு நாமம் சொல்லிடவே புறப்பட்டோம்

# தளர்ந்து போன கைகளை

தளர்ந்து போன கைகளை திடப்படுத்துங்கள்
தள்ளாடும் முழங்கால்களை உறுதிப்படுத்துங்கள்

1. உறுதியற்ற உள்ளங்களே திடன் கொள்ளுங்கள் அஞ்சாதிருங்கள்
அநீதிக்கு பழி வாங்கும் தெய்வம் வருகிறார்
விரைவில் வந்து உங்களையே விடுவிப்பார்
அஞ்சாதிருங்கள் திடன்கொள்ளுங்கள்
ராஜா வருகிறார் இயேசு ராஜா வருகிறார்

2. அங்கே ஒரு நெடுஞ்சாலை வழியிருக்கும் அது தூய வழி
தீட்டுப்படடோர் அதன் வழியாய் கடந்து செல்வதில்லை
மீட்கப்பட்டோர் அதன் வழியாய் நடந்து செல்வார்கள்

3. ஆண்டவரால் மீட்கப்பட்டோர் மகிழ்ந்து பாடி
சீயோன் வருவார்கள்
நித்திய மகிழ்ச்சி தலை மேலிருக்கும்
சஞ்சலமும் தவிப்பும் ஓடிப்போகும்

4. பார்வையற்றோர் கண்களெல்லாம்
பார்வை அடையும் செவிகள் கேட்கும்
ஊனமுற்றோர் மான்கள் போல துள்ளிக் குதிப்பார்கள்
ஊமையர்கள் பாடிப்பாடி மகிழ்ந்திருப்பார்கள்

5. வறண்ட நிலம் நீரூற்றால்
நிறைந்திருக்கும் நதிகள் ஓடும்
நரிகள் தங்கும் வளைகள் எங்கும்
கோரை முளைக்கும்
நாணலும் புல்லும் நிலைத்து நிற்கும்

# தடுக்கி விழுந்தோரை

தடுக்கி விழுந்தோரை தாங்குகிறீர்
தாழ்த்தப்பட்டோரை தூக்குகிறீர் (2)
தகப்பனே தந்தையே
உமக்குத் தான் ஆராதனை (2) தடுக்கி...

1. போற்றுதலுக்குரிய பெரியவரே
தூயவர் தூயவரே (2)
எல்லாருக்கும் நன்மை செய்பவரே
இரக்கம் மிகுந்தவரே (2)

உம் நாமம் உயரணுமே
அது உலகெங்கும் பரவணுமே தகப்பனே...

2. உம்மை நோக்கி மன்றாடும் யாவருக்கும்
அருகில் இருக்கின்றீர்
கூப்பிடுதல் கேட்டு குறை நீக்குவீர்
விருப்பம் நிறைவேற்றுவீர்
உம் நாமம்... தகப்பனே...

3. உயிரினங்கள் எல்லாம் உம்மைத்தானே
நோக்கிப் பார்க்கின்றன
ஏற்றவேளையில் உணவளித்து
ஏக்கமெல்லாம் நிறைவேற்றுவீர்
உம் நாமம்... தகப்பனே...

4. அன்பு கூரும் எங்களை அரவணைத்து
அதிசயம் செய்கின்றீர்
பற்றிக் கொண்ட யாவரையும் பாதுகாத்து
பரலோகம் கூட்டிச் செல்வீர்
உம் நாமம்... தகப்பனே...

# தண்ணீர்கள் கடக்கும் போது

தண்ணீர்கள் கடக்கும் போது
என்னோடு இருக்கின்றீர்
அக்கினியில் நடக்கும் போது
கூடவே வருகின்றீர்...
மூழ்கிப் போவதில்லை - நான்
எரிந்து போவதில்லை (2)

1. என் மேல் அன்பு கூர்ந்து
எனக்காய் இரத்தம் சிந்தி
என் பாவம் கழுவி விட்டீரே
எனக்கு விடுதலை தந்து விட்டீரே
நன்றி ஐயா நன்றி ஐயா

2. உமது பார்வையிலே
விலையேறப் பெற்றவன்(ள்) நான்
மதிப்பிற்கு உரியவன் நானே... இன்று
மகிழ்வுடன் நடனமாடுவேன்

3. பாலைவன வாழ்க்கையிலே
பாதைகள் காணச் செய்தீர்
ஆறுகள் ஓடச் செய்தீரே - தினம்
ஆபத்திலே பாடி மகிழச்செய்தீரே

4. பெற்ற தாய் தனது
பிள்ளையை மறந்தாலும்
நீர் என்னை மறப்பதில்லையே - உமது
உள்ளங்கையில் பொறித்து வைத்துள்ளீர்

5. என்னை படைத்தவரே
உருவாக்கி மகிழ்ந்தவரே
பெயர் சொல்லி அழைத்துக் கொண்டீரே
உமக்கு உரிமையாக்கிக் கொண்டீரே

6. என்னை மீட்கும்படி
தன்னை பலியாக்கினீர்
எனக்குள்வந்து விட்டீரே
(என்னை) ஆட்கொண்டு நடத்திச்செல்வீரே

# தாகமுள்ளவன் மேல் தண்ணீரை

தாகமுள்ளவன் மேல் தண்ணீரை ஊற்றுவேன் என்றீர்
வறண்ட நிலத்தில் ஆறுகளை ஊற்றுவேன் என்றீர்
ஊற்றும் ஐயா உம் வல்லமையை
தாகத்தோடு காத்திருக்கிறேன் - நான்

1. மாம்சமான யாவர்மேலும் ஊற்ற வேண்டுமே
மக்களெல்லாம் இறைவாக்கு உரைக்க வேண்டுமே

2. முதியோர் மேலும் இளைஞர் மேலும் ஊற்ற வேண்டுமே
கனவுகள் காட்சிகள் காணவேண்டுமே

3. நீரோடை அருகிலுள்ள மரங்களைப் போல
நித்தமும் தவறாமல் கனி தர வேண்டும்

4. புதிய கூர்மையான கருவியாகணும்
பூமியெங்கும் சுவைதரும் உப்பாகணும்

5. கல்லான இதயத்தை எடுத்திட வேண்டும்
சதையான இதயத்தைப் பொருத்திட வேண்டும்

6. வனாந்தரம் செழிப்பான தோட்டமாகணும்
வயல்வெளி அடர்ந்த காடாகணும்

7. நீதியும் நேர்மையும் தழைக்க வேண்டுமே
நல்வாழ்வும் நம்பிக்கையும் வளரவேண்டுமே

8. தூய நீரை எங்கள் மேல் தெளித்திட வேண்டும்
ஏல்லாவித அசுத்தங்கள் நீங்கிட வேண்டும்

# தாய்மடியில் தவழுகின்ற

தாய்மடியில் தவழுகின்ற குழந்தையைப் போல
தகப்பனே உம்மடியில் சாய்ந்துவிட்டேன் நான்

1. கவலையில்லையே கலக்கம் இல்லையே
கர்த்தர் கரம் பிடித்துக் கொண்டேன் - நான்
எதைக் குறித்தும் பயமில்லையே
என் நேசர் நடத்துகிறீர்

2. செய்த நன்மைகள் நினைக்கின்றேன்
நன்றியோடு துதிக்கின்றேன் - நான்
கைவிடாத என் ஆயனே
கல்வாரி நாயகனே

3. துணையாளரே துணையாளரே
இணையில்லா மணவாளரே - என்
உணவாக வந்தீரையா
உயிரோடு கலந்தீரையா - என்

4. உம்மைத்தானே பற்றிக் கொண்டேன்
உம் தோளில் அமர்ந்துவிட்டேன் - நான்
உந்தன் சிறகுகள் நிழல்தனிலே
உலகத்தையே மறந்துவிட்டேன் - இந்த

5. அதிகாலமே தேடுகிறேன்
ஆர்வமுடன் நாடுகிநேன் - நான்
உயிர்வாழும் நாட்களெல்லாம்
உம்நாமம் சொல்வேனையா - நான்

6. அதிசயமே அதிசயமே
ஆறுதல் நாயகனே - என்
ஆலோசனைக் கர்த்தரே - என்
ஆடைக்கலப் பட்டணமே

7. எபிநேசரே எபிநேசரே
இதுவரை உதவி செய்தீர்
எல்ரோயீ எல்எலியோன்
காண்பவரே உயர்ந்தவரே

# தாவீதைப் போல நடனமாடி

தாவீதைப் போல நடனமாடி
அப்பாவை ஸ்தோத்தரிப்பேன்
இயேசப்பா ஸ்தோத்திரம்

1. என்ன வந்தாலும் எது நடந்தாலும்
அப்பாவை ஸ்தோத்திரிப்பேன் - இயேசப்பா

2. கைத்தாளத்தோடும் மத்தாளத்தோடும்
அப்பாவை ஸ்தோத்திரிப்பேன்

3. பரிசுத்த இரத்தத்தால் பாவங்கள் கழுவிய
அப்பாவை ஸ்தோத்திரிப்பேன்

4. ஆவியினாலே அபிஷேகம் செய்த
அப்பாவை ஸ்தோத்திரிப்பேன்

5. கிறிஸ்துவுக்குள்ளாய் முன் குறித்தாரே
அப்பாவை ஸ்தோத்திரிப்பேன்

# துதியின் ஆடை அணிந்து

துதியின் ஆடை அணிந்து
துயரம் எல்லாம் மறந்து
துதித்து மகிழ்ந்திருப்போம் - நம்
தூயவரில் மகிழ்ந்திருப்போம்

1. இந்த நாள் கர்த்தர் தந்த நாள்
இதிலே களிகூறுவோம்
புலம்பல் இல்ல இனி அழுகையில்ல
இன்று புசித்து கொடுத்து கொண்டாடுவோம் - துதி
துதித்து துதித்து மகிழ்ந்திருப்போம்
துயரம் அனைத்தும் மறந்திருப்போம்

2. கர்த்ருக்குள் நாம் மகிழ்ந்திருந்தால்
அதுதானே தமது பெலன்
எத்தனையோ தன்மை செய்தவரை
இன்று ஏற்றி போற்றி புகழ்ந்திடுவோம்

3. நன்றியோடும் புகழ் பாடலோடும்
அவர் வாசலில் நுழைந்திடுவோம்
நல்லவரே கிருபையுள்ளவரே
என்று நாளெல்லாம் உயர்த்திடுவோம்

4. புலம்பலுக்கு பதில் ஆனந்தமே
இன்று ஆனந்தம் ஆனந்தமே
ஒடுங்கிப் போன ஆவி ஓடிப்போச்சு
இன்று உற்சாக ஆவி வந்தாச்சு

5. துயரத்துக்கு பதில் ஆறுதலே
இன்று ஆறுதல் ஆறுதலே
சாம்பலுக்கு பதில் சிங்காரமே
இன்று சிங்காரம் சிங்காரமே

6. கர்த்தர் தாமே நம்மை உண்டாக்கினார்
அவரின் ஜனங்கள் நாம்
அவர்தாமே நம்மை நடத்துகின்றார்
அவரின் ஆடுகள் நாம்

# துதி எடுத்தால்

துதி எடுத்தால் சாத்தான் ஓடுவான்
முறுமுறுத்தால் திரும்பி வருவான்
துதித்துப் பாடி மதிலை இடிப்போம்
மகிழ்ந்துபாடி எரிகோ பிடிப்போம்

1. டேவிட் பாடினான் சவுலுக்கு விடுதலை
கலக்கம் நீங்கியது ஆறுதல் வந்தது

2. துதிக்கும் தாவீதுக்கோ கொஞ்சமும் பயமில்லை
விசுவாச வார்த்தையால் கோலியாத்தை முறியடிச்சான்

3. ஆடுகள் மேய்த்தவன் அரசனாய் மாறினான்
ஆராதனை வீரனுக்கு Promotion நிச்சயம்

4. மீனின் வயிற்றிலே யோனா துதித்தான்
கட்டளை பிறந்தது போனான் நினிவே

5. வாயிலே எக்காளம் கையிலே திருவசனம்
சுயத்தை உடைத்து ஜெயத்தை எடுப்போம்

6. கர்த்தரை நம்புவோம் அவர் நம்மை தாங்குவார்
வார்த்தையை நம்புவோம் வருமே விடுதலை

7. பெராக்காவில் கூடுவோம் நன்றி செலுத்துவோம்
கர்த்தர் நல்லவர் கிருபை உள்ளவர்

# துள்ளுதைய்யா உம் நாமம் சொல்ல

துள்ளுதைய்யா உம் நாமம் சொல்ல சொல்ல
துதித்து துதித்து தினம் மகிழ்ந்து மகிழ்ந்து
மனம் துள்ளுதைய்யா

1. அன்பு பெருகுதைய்யா - என்
அப்பாவின் நிழல்தனிலே
அபிஷேகம் வளருதைய்யா
எபிநேசர் பார்வையிலே

2. உள்ளங்கள் மகிழுதைய்யா
உம்மோடு இருக்கையிலே
பள்ளங்கள் நிரம்புதைய்யா
பாடி துதிக்கையிலே

3. நம்பிக்கை வளருதைய்யா
நாதா உம் பாதத்திலே
நன்மைகள் பெருகுதைய்யா
நாள்தோறும் துதிக்கையிலே

4. நோய்கள் நீங்குதைய்யா - உம்மை
நோக்கிப் பார்க்கையிலே
பேய்கள் அலறுதைய்யா
பெரியவர் நாமத்திலே

5. கண்ணீர்கள் மறையுதைய்யா
கர்த்தர் உம் சமூகத்திலே
காயங்கள் ஆறுதைய்யா
கருத்தோடு துதிக்கையிலே

# துன்பமா துயரமா

துன்பமா துயரமா அது தண்ணீர்பட்ட உடை போன்றதம்மா
காற்றடிச்சா வெயில் வந்தா
காய்ந்து போய்விடும் கலங்காதே

1. இயேசுதான் நீதியின் கதிரவன்
உனக்காக உதயமானார் உலகத்திலே
நம்பிவா வெளிச்சம் தேடிவா
உன் துக்க நாட்கள் இன்றோடு முடிந்தது

2. இழந்து போனதை தேடி இயேசு வந்தார்
இளைப்பாறுதல் தருவேன் என்று சொன்னார்
எழுந்து வா போதும் பயந்தது... உன்
புயல்காற்று இன்றோடு ஓய்ந்தது

3. உன் துக்கங்கள் இயேசு சுமந்து கொண்டார்
உன் பிணிகள் எல்லாம் ஏற்றுக் கொண்டார்
நீ சுமக்க இனி தேவையில்லை
ஒரு சுகவாழ்வு இந்நாளில் துளிர்த்தது

4. இரத்தம் சிந்துதல் இல்லாமல் மன்னிப்பில்லை
இயேசு நாமம் சொல்லாமல் மீட்பு இல்லை
கூப்பிடு இயேசு இயேசு என்று
உன் குறைகளெல்லாம் நிறைவாக்கி நடத்திடுவார்

# தூபம் போல் என்

தூபம் போல் என் ஜெபங்கள்
ஏற்றுக் கொள்ளும் ஐயா
மாலைபலிபோல் என் கைகளை
உயர்த்தினேன் ஐயா
உம்மை நோக்கி கதறுகிறேன்
விரைவாய் உதவி செய்யும்

1. என் குற்றங்கள் நீர் மனதில் கொண்டால்
நிலைதிற்க முடியாதையா
மன்னிப்புத் தருபவரே
உம்மைத்தான் தேடுகிறேன்

2. விடியலுக்காய் காத்திருக்கும்
காவலனைப் பார்க்கிலும்
என் நெஞ்சம் ஆவலுடன்
உமக்காய் ஏங்குதையா

3. என் வாய்க்கு காவல்வையும்
காத்துக் கொள்ளுமையா
தீயன எதையுமே - நான்
நாட விடாதேயும்

4. என் கண்கள் உம்மைத்தானே
நோக்கி இருக்கின்றன
அடைக்கலம் புகந்தேன் - நான்
அழிய விடாதேயும்

5. என் கண்ணீரை உம்தோற்பையிலே
சேர்த்து வைத்திருக்கிறீர்
அலைச்சல் அனைத்தையும்
அறிந்து இருக்கிறீர்

6. இடர் (தடை)களெல்லாம் நீங்கும்வரை
புகலிடம் நீர்தானையா
எனக்காய் யாவையுமே
செய்து முடிப்பவரே

# தூங்காமல் ஜெபிக்கும் வரும்

தூங்காமல் ஜெபிக்கும் வரும் தாங்கப்பா
விழித்திருந்து ஜெபிக்கும் வரம் தாங்கப்பா - 2
நான் தூங்கினால் எதிரி களை விதைப்பான்
ஜெபம் (ஜெபிக்க) மறந்தால்
எதிரி ஜெயம் எடுப்பான்
தூங்காமல்

1. உடலை ஒடுக்கணும் உணவை குறைக்கணும்
பேச்சை நிறுத்தணும் பெலத்தில் வளரணும்

2. அன்னாளை போல கண்ணீரை வடிக்கணும்
சாமுவேலை (எழுப்புதல்) காணும் வரை
இதயத்தை ஊற்றணும்

3. தானியேல் போல துதிக்கணும் ஜெபிக்கணும்
சிங்கங்களின் வாய்களை தினம் தினம் கட்டணும்

4. பவுலை போல சிறையிலே ஜெபிக்கணும்
கதவுகள் திறக்கணும் கட்டுகள் நீங்கணும்

5. மோசேயை போல மலை மேல் ஏறணும்
கரங்களை விரிக்கணும் கதறணும் தேசத்திற்காய்

# திராட்சை செடியே

திராட்சை செடியே இயேசு ராஜா
உம்மோடு இணைந்திருக்கும் கிளை நாங்கள்
உமக்காய் படருகின்ற கொடி நாங்கள்
திராட்சை செடியே இயேசு ராஜா

1. பசும்புல் மேய்ச்சலிலே
நடத்திச் செல்பவரே
பரிசுத்தமானவரே - ஐயா
உள்ளமே மகிழுதையா
உம்மோடு இருப்பதனால்
கள்ளம் நீங்குதையா - எனக்கு

2. குயவன் கையில் உள்ள களிமண் நாங்கள்
ஏந்தி வனைந்திடுமே ஐயா
சித்தம் போல் உருவாக்கும்
சுத்தமாய் உருமாற்றும்
நித்தம் உம் கரத்தில் - நாங்கள்

3. வார்த்தையில் நிலைத்திருந்து தினமும்
கனி கொடுக்கும்
சீடர்கள் நாங்கள் ஐயா
வேத்தை ஏந்துகின்றோம்
வாசித்து மகிழுகின்றோம்
தியானம் செய்கின்றோம் - நாங்கள்

# திருப்தியாக்கி நடத்திடுவார்

திருப்தியாக்கி நடத்திடுவார்
தேவைகளை சந்திப்பார்
மீதம் எடுக்க வைப்பார்
பிறருக்கு கொடுக்க வைப்பார்

பாடி கொண்டாடுவோம்
கோடி நன்றி சொல்லுவோம்

1. ஐந்து அப்பங்களை
ஆயிரமாய் பெருகச் செய்தார்
ஐயாயிரம் ஆண்களுக்கு
வயிராற உணவளித்தார்

2. பொன்னோடும் பொருளோடும்
புறப்படச் செய்தாரே
பலவீனம் இல்லாமலே
பாதுகாத்து நடத்தினாரே - ஒரு

3. காடைகள் வரவழைத்தார்
மன்னாவால் உணவளித்தார்
கற்பாறையை பிளந்த
தண்ணீர்கள் ஓடச்செய்தார்

4. நீடிய ஆயுள் தந்து
நிறைவோடு நடத்திடுவார்
முதிர் வயதானாலும்
பசுமையாய் வாழச் செய்வார்

5. கெம்பீர சத்ததோடு
ஆரவார முழக்கத்தோடு
தெரிந்து கொண்ட தம் மக்களை
தினமும் நடத்தி சென்றார்

6. துதிக்கும்போதெல்லாம்
சுவையான உணவு அது
ஆத்மா திருப்தியாகும்
ஆனந்த ராகம் பிறக்கும்

# தெய்வமே இயேசுவே

தெய்வமே இயேசுவே உம்மைத் தேடுகிறேன்
தினம் தினம் உம்மையே நோக்கிப் பார்க்கிறேன்
ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம் - 2

1. உலப் பெருமை இன்பமெல்லாம்
உமக்காய் இழந்தேனையா
உம்மைப் பிரிக்கும் பாவங்களை
இனிமேல் வெறுத்தேனையா
உம் சித்தம் நிறைவேற்றுவேன்
உமக்காய் வாழ்ந்திடுவேன்

2. எதை நான் பேசவேண்டுமென்று
கற்றுத் தாருதையா
எவ்வழி நடக்க வேண்டுமென்று
பாதை காட்டுமையா
ஒளியான தீபமே
வழிகாட்டும் தெய்வமே

3. உலகம் வெறுத்து பேசட்டுமே
உம்மில் மகிழ்ந்திருப்பேன்
காரணமின்றி பகைக்கட்டுமே
கர்த்தரைத் துதித்திடுவேன்
சிலுவை சுமந்தவரை
சிந்தையில் நிறுத்துகிறேன்

# தெய்வீகக் கூடாரமே

தெய்வீகக் கூடாரமே - என்
தேவனின் சந்நிதியே
தேடி ஓடி வந்தோம்
தெவிட்டாத பாக்கியமே
மகிமை மகிமை மாட்சிமை
மாறா என் நேசருக்கே

1. கல்வாரி திருப்பீடமே
கறை போக்கும் திரு இரத்தமே
உயிருள்ள பரிசுத்த ஜீவப் பலியாக
ஒப்புக் கொடுத்தோம் ஐயா

2. ஈசோப்புல்லால் கழுவும்
இன்றே சுத்தமாவோம் உறைகின்ற பனி போல
வெண்மையாவோம் ஐயா
உம்திரு வார்த்தையினால்

3. அப்பா உன் சமூகத்தின்
அப்பங்கள் நாங்கள் ஐயா
எப்போதும் உம் திருப்பாதம் அமர்ந்திட
ஏங்கித் தவிக்கின்றோம்

4. உலகத்தின் வெளிச்சம் நாங்கள்
உமக்காய் சுடர் விடுவோம்
ஆனந்த தைலத்தால் அபிஷேகியும் ஐயா
அனல் மூட்டி எரியவிடும்

5. தூபமாய் நறுமணமாய்
துதிகளை செலுத்துகிறோம்
எந்நாளும் எப்போதும் எல்லா ஜெபத்தோடும்
ஆவியில் ஜெபிக்கின்றோம்

6. ஜீவனுள்ள புதிய
மார்க்கம் தந்தீர் ஐயா
மகா பரிசுத்த கூடாரத்திற்குள்ளே
மகிமையில் நுழைந்து விட்டோம்

# தேசமே பயப்படாதே

தேசமே பயப்படாதே
மகிழ்ந்து களிகூரு
சேனையின் கர்த்தர் உன் நடுவில்
பெரிய காரியம் செயதிடுவார்

1. கசந்தமாறா மதுரமாகும்
கொடிய எகிப்து அகன்றிடும்
நித்தமும் உன்னை நல்வழி நடத்தி
ஆத்துமாவை தினம் தேற்றிடுவார்

2. ஆற்றலாலும் அல்லவே
சுக்தியாலும் அல்லவே
ஆவியினாலே ஆகும் என்று
ஆண்டவர் வாக்கு அருளினாரே

# தேடி இயேசு வந்தார்

தேடி இயேசு வந்தார்
என்னைத் தேற்றி வாழவைத்தார்

1. கண்ணீர் கடலினிலே
நான் கதறி மூழ்கையிலே
கர்த்தர் தம் கரம் நீட்டினார்
என் கண்ணீரெல்லாம் துடைத்தார்

2. பாவச் சேற்றினிலே
நான் மூழ்கிப் போகையிலே
கல்வாரி இரத்தத்தாலே
கழுவி மீட்டுக் கொண்டார்

3. நோயின் பிடியினிலே
நான் வாடித் தவிக்கையிலே
இயேசுவின் தழும்புகளால்
சுகமானேன் சுகமானேன் - நான்

4. எத்தனை ஆண்டுகளோ - நான்
இஷ்டம் போல் வாழ்ந்து வந்தேன்
மகராஜன் இயேசு வந்தார்
மகனாய் ஏற்றுக் கொண்டார் - என்னை

# தேடி வந்த தெய்வம் இயேசு

தேடிவந்த தெய்வம் இயேசு - என்னை
தேடிவந்த தெய்வம் இயேசு
வாடி நின்ற என்னையே வாழவைத்திட
தேடிவந்த தெய்வம் இயேசு

1. பாவியாக இருந்த என் பாவம் போக்கிட்டார்
ஆவிபொழிந்து என்னையே
தாவி அணைத்திட்டார்
அன்பே அவரின் பெயராம்
அருளே அவரின் மொழியாம்
இருளே போக்கும் ஒளியாம்

2. இயேசு என்னில் இருக்கிறார்
என்ன ஆனந்தம்
இருளும் புயலும் வரட்டுமே
இதயம் கலங்குமோ
இறைவா இயேசு தேவா
இதயம் மகிழ்ந்து பாடும்
என்றும் உம்மை நாடும்

# தேவனுக்கே மகிமை

தேவனுக்கே மகிமை தெய்வத்திற்கே மகிமை
தேடி வந்து மீட்டவரே தினம் உமக்கே மகிமை - ஐயா
வாழ்க வாழ்க உம் நாமம் வாழ்க

1. உன்னதத்தில் தேவனுக்கே
மகிமை உண்டாகட்டும் - இந்தப்
பூமியிலே சமாதானமும்
பிரியமும் உண்டாகட்டும் - ஐயா

2. செவிகளை நீர் திறந்து விட்டீர்
செய்வோம் உம் சித்தம் - இந்தப்
புவிதனிலே உம் விருப்பம்
பூரணமாகட்டுமே - ஐயா

3. எளிமையான எங்களையே
என்றும் நினைப்பவரே - எங்கள்
ஒளிமயமே துணையாளரே
உள்ளத்தின் ஆறுதலே - ஐயா

4. தேடுகிற அனைவருமே
மகிழ்ந்து களிகூரட்டும் - இன்று
பாடுகிற யாவருமே
பரிசுத்தம் ஆகட்டுமே - ஐயா

5. குறை நீக்கும் வல்லவரே
கோடி ஸ்தோத்திரமே - பாவக்
கறை போக்கும் கர்த்தாவே
கல்வாரி நாயகனே - ஐயா

# தேவன் நமது அடைக்கலமும்

தேவன் நமது அடைக்கலமும் பெலனுமானார்
ஆபத்து காலத்தில் கூட இருக்கும் துணையுமானார்

1. பூமி நிலைமாறி மலைகள் நடுங்கினாலும்
பயப்படமாட்டோம் பயப்படமாட்டோம்

2. யுத்தங்களை தடுத்து ஓயப்பண்ணுகிறார்
ஈட்டியை முறிக்கிறார் வில்லை ஒடிக்கிறார்

3. அமர்ந்திருந்து அவரை தேவனென்று அறிவோம்
உயர்ந்தவர் பெரியவர் உலகை ஆள்பவர்

4. சேனைகளின் கர்த்தர் நம்மோடு இருக்கிறார்
யாக்கோபின் தேவன் நம் உயர்ந்த அடைக்கலம்

# தேவனே உம்மைத் தேடுகிறேன்

தேவனே உம்மைத் தேடுகிறேன்
தினமும் துதிக்கின்றேன்
துதித்துக் கொண்டே யிருப்பேன்

1. அரணும் கோட்டையும் நீர் எனக்கு
அஞ்சமாட்டேன் என் இயேசுவே
நீர் எனக்கு துணையானீர்
துதித்துக் கொண்டே பின் செல்வேன்

2. பாவங்களெல்லாம் போக்கி விட்டீர்
பரிசுத்தமாய் மாற்றி விட்டீர்
கல்வாரி சிலுவையிலே
என் நோய்கள் சுமந்து கொண்டீர்

3. தாயும் தந்தையும் நீர் எனக்கு
தளர்ந்து போக மாட்டேனய்யா
தாலாட்டி சீராட்டினீர்
தயவோடு காத்துக் கொண்டீர்

4. உலகம் என்னை வெறுத்தாலும்
உம் கரம் என்னை அணைத்துக் கொள்ளும்
உற்றார் என்னைத் தூற்றினாலும்
உம் கிருபை சூழ்ந்து கொள்ளும்

5. மீண்டும் உமது வருகையிலே
ஆயத்தமாக இருப்பேனய்யா
அறியா மக்கள் அனைவரையும்
ஆயத்தமாக்கிக் கொள்வேனய்யா

# தேவனே ஆராதிக்கின்றேன்

தேவனே ஆராதிக்கின்றேன்
தெய்வமே ஆராதிக்கின்றேன்

1. அதிகாலையில் ஆராதிக்கின்றேன்
ஆனந்த சத்தத்தோடு ஆராதிக்கின்றேன்

2. கன்மலையே ஆராதிக்கின்றேன்
காண்பவரே ஆராதிக்கின்றேன்

3. முழுமனதோடு ஆராதிக்கின்றேன்
முழந்தாள் படியிட்டு ஆராதிக்கின்றேன்

4. யேகோவாயீரே ஆராதிக்கின்றேன்
எல்லாமே பார்த்துக் கொள்வீர்

5. யேகோவாநிசி ஆராதிக்கின்றேன்
எந்நாளும் வெற்றி தருவீர்

6. யேகோவா ஷாலோம் ஆராதிக்கின்றேன்
எந்நாளும் சமாதானமே

# தேவனே என் தேவா

தேவனே என் தேவா
உம்மை நோக்கினேன்
தண்ணீரில்லா நிலம்போல
தாகமாய் (உமக்காய்) ஏங்கினேன்

1. ஒவ்வொரு நாளும் உம்பிரசன்னம்
ஓடி வருகிறேன்
உம் வல்லமை மகிமை கண்டு
உலகை மறக்கின்றேன்

2. ஜீவனைப் பார்க்கிலும் உம் கிருபை
எனக்குப் போதுமே
உதடுகளாலே துதிக்கின்றேன்
உலகை மறக்கின்றேன்

3. படுக்கையிலே உம்மை நினைக்கின்றேன்
இராச்சாமத்தில் தியானிக்கிறேன்
உம் சிறகுகளின் நிழல்தனிலே
உலகை மறக்கின்றேன்

4. வாழ் நாளெல்லாம் உம்நாமம்
வாழ்த்திப் பாடுவேன்
சுவையான உணவை உண்பதுபோல்
திருப்தி அடைகின்றேன்

5. எனது ஆன்மா தொடர்ந்து உம்மை
பற்றி கொண்டது
உம் வலக்கரமோ என்னை நாளும்
தாங்கிக் கொண்டது

# தேவாதி தேவன் இராஜாதி

தேவாதி தேவன் இராஜாதி இராஜன்
வாழ்க வாழ்கவே
கர்த்தாதி கர்த்தர் மன்னாதி மன்னன்
வாழ்க வாழ்கவே
மகிமை உமக்குத்தான்
மாட்சிமை உமக்குத்தான்
மகிமை உமக்குத்தான்
மாட்சிமை அதுவும் உமக்குத்தான்

1. திசை தெரியாமல் ஓடி
அலைந்தேன் தேடி வந்தீரே
சிலுவையில் தொங்கி இரத்தம் சிந்தி
இரட்சித்து அணைத்தீரே

2. எத்தனை நன்மை எனக்குச் செய்தீர்
எப்படி நன்றி சொல்வேன்
வாழ்நாளெல்லாம் உமக்காய் வாழ்ந்து
உம் பணி செய்திடுவேன்

3. சோதனை நேரம் வேதனை வேளை
துதிக்க வைத்தீரே
ஏதிராய் பேசும் இதயங்களை
நேசிக்க வைத்தீரே

4. வேண்டுவதற்கும் நினைப்பதற்கும்
அதிகமாய் செய்பவரே
மீண்டும் மீண்டும் ஆறுதல் தந்து
அணைத்து மகிழ்பவரே

5. உளையான சேற்றில் வாழ்ந்த
என்னை தூக்கி எடுத்தீரே
கன்மலையின் மேல்நிறுத்தி - என்னை
பாட வைத்தீரே

# நடனமாடி ஸ்தோத்தரிப்பேன்

நடனமாடி ஸ்தோத்தரிப்பேன்
நாதா நான் உம்மைத் துதிப்பேன்
கைத்தாள ஓசையுடன்
கர்த்தா நான் உம்மைத் துதிப்பேன் - அல்லேலூயா

1. காண்பவரே காப்பவரே
கருணை உள்ளவரே
காலமெல்லாம் வழி நடத்தும்
கன்மலையே ஸ்தோத்திரம் - ஐயா

2. வல்லவரே நல்லவரே
கிருபை உள்ளவரே
வரங்களெல்லாம் தருபவரே
வாழ்வது உமக்காக - ஐயா

3. ஆண்டவரே உம்மைப்
பிரிந்து யாரிடத்தில் போவோம்
வாழ்வு தரும் வசனமெல்லாம்
உம்மிடம்தான் உண்டு - ஐயா

4. அற்புதமே அதிசயமே
ஆலோசனைக் கர்த்தரே
அண்டி வந்தோம் ஆறுதலே
அடைக்கலமானவரே

# நம் இயேசு நல்லவர்

நம் இயேசு நல்லவர்
ஒரு போதும் கைவிடார்
ஒரு நாளும் விலகிடார்
ஒன்று சேர்ந்து நாம் துதிப்போம்
சாத்தானை மிதிப்போம்
தேசத்தை சுதந்திரிப்போம்

1. அதிசயமானவர்
ஆறுதல் தருகிறார்
சர்வ வல்லவர்
சமாதானம் தருகிறார் - உனக்கு

2. கண்ணீரைக் காண்கிறார்
கதறலைக் கேட்கிறார்
வேதனை அறிகிறார்
விடுதலை தருகிறார் - இன்று

3. எதிர்காலம் நமக்குண்டு
எதற்கும் பயமில்லை
அதிகாரம் கையிலே
ஆளுவோம் தேசத்தை - நாம்

4. நொறுங்குண்ட நெஞ்சமே
நோக்கிடு இயேசுவை
கூப்பிடு உண்மையாய் - இன்று
குறையெல்லாம் நீக்குவார் - உன்

5. நண்பனே கலங்காதே
நம்பிக்கை இழக்காதே
கண்ணீரைத் துடைப்பவர்
கதவண்டை நிற்கிறார்

6. எத்தனை இழப்புகள்
ஏமாற்றம் தோல்விகள்
கர்த்தரோ மாற்றுவார்
கரம் நீட்டித் தேற்றுவார்

# நம்பிக்கைக்கு உரியவரே

நம்பிக்கைக்கு உரியவரே
நம்பி வந்தேன் உம் சமூகம்
நம்புகிறேன் உம் வசனம் (2)

1. சொந்த ஆற்றலை நம்பவில்லை
   தந்தை உம்மையே சார்ந்து விட்டேன் (2)
   வாக்குத்தத்தம் செய்தவரே
   வாழ்க்கையெல்லாம் உம் வார்த்தை தானே (2)

   பாதைக்கு தீபம் பேதைக்கு வெளிச்சம் உந்தன் வசனமே
   ஆற்றல் மிக்கது ஜீவன் உள்ளது உந்தன் அருள்வாக்கு

2. உம்மை நம்புகின்ற மனிதர்களை
   உமது அன்பு என்றும் சூழ்ந்து கொள்ளும் (2)
   உள்ளமெல்லாம் மகிழுதையா
   உம் வசனம் நம்புவதால் (2)
   பாதைக்கு தீபம்...

3. தீமை அனைத்தையும் விட்டு விலகி
   உமக்கு அஞ்சி நான் நடந்து கொண்டால் (2)
   எலும்புகள் உரம் பெறும்
   என்உடலும் நலம் பெறும் (2)

4. புயலின் நடுவிலே பக்தன் பவுல்
   வார்த்தை வந்ததால் திடன் கொண்டான் (2)
   கைதியாக கப்பல் ஏறி
   கப்டனாக செயல் பட்டான் (2)

5. வார்த்தை நம்பியதால் வலைகள் வீசி
   திரளாய் பேதுரு மீன் பிடித்தார்
   உம் வலையில் பிடிபட்டார்
   தலைவனாக செயல்பட்டார்

6. உமது வார்த்தைகள் கைக் கொண்டு
   உமக்கு உகந்தவற்றை செய்து வந்தால்
   கேட்பதெல்லாம் பெற்றுக் கொள்வேன்
   ஊற்று நீராய் பொங்கிடுவேன்

# நம்பிக்கையினால் நீ வாழ்வு பெறுவாய்

நம்பிக்கையினால் நீ வாழ்வு பெறுவாய்
நண்பனே நீ பயப்படாதே
பயம் வேண்டாம் திகில் வேண்டாம்
படைத்தவர் உன்னை நடத்திச் செல்வார்

1. அதிசயக் கல்வாரி சிலுவையிலே
அனைத்தையும் செய்து முடித்துவிட்டார்
தழும்புகளால் நீ சுகமானாய்
தயவினால் மறுபடி பிறந்துவிட்டார்

2. ஆடையைத் தொட்டால் நலம் பெறுவேன் - என்று
அறிக்கை செய்து சுகமடைந்தாள்
ஒருத்துளி சந்தேகமில்லாமலே
ஓடிவா இயேசு இன்று சுகம் தருவார்

3. ஆபிரகாம் சாராள் குழந்தைப் பெற
ஆற்றல் பொற்றது நம்பிக்கையினால்
வாக்குதத்தம் செய்தவர் நம்பத்தக்கவர்
ஏக்கமெல்லாம் எப்படியும் நிறைவேற்றுவார் - உன்

4. கட்டாந்தரையிலே நடப்பதுபோல்
கடலைக் கடந்தனர் நம்பிக்கையினால்
எரிகோ மதில்கள் விழுந்தனவே
ஏழுநாள் ஊர்வலம் வந்ததினால்

5. உலகிலே இருக்கும் அவனை விட
உனக்குள் இருப்பவர் பெரியவரே
துணை நின்று உனக்காய் யுத்தம் செய்வார்
துரிதமாய் வெற்றி காணச் செய்வார்

6. மலையைப் பார்த்து கடலில் விழு
என்று சொன்னால் நடந்திடுமே
உன்னாலே கூடாதது ஒன்றுமில்லையே
நம்பினால் எல்லாம் நடந்திடுமே

# நமக்கொரு தகப்பன் உண்டு

நமக்கொரு தகப்பன் உண்டு
அவரே நம் தெய்வம்
எல்லாமே அவரிலிருந்து வந்தன
நாமோ அவருக்காக வாழ்ந்திடுவோம்

1. திக்கற்ற பிள்ளைகளுக்கு தகப்பன் இவர்
தேவைகளை அறிந்த நல்ல தந்தை இவர்
உணவு ஊட்டுகிறார் உடையும் உடுத்துகிறார்
அப்பா.. அப்பா.. தகப்பனே என்று கூப்பிடுவோம்

2. ஆட்கொண்டு நடத்துகிறார் அதிசயமாய்
ஊருவாக்கி மகிழ்கின்றார் ஒவ்வோரு நாளும்
கேட்பதை கொடுத்திடுவார் தட்டும்போது திறந்திடுவார்

3. இரக்கம் நிறைந்த தந்தை அவர்
ஆறுதல் அனைத்திற்கும் ஊற்று அவர்
கணவனை இழந்தவர்க்கு காப்பாளர் அவர்தானே

4. குழந்தையாய் இருக்கும்போதே நேசித்தவர்
எகிப்தில் இருந்து என்னை அழைத்துக்கொண்டர்
கரங்கள் பிடித்துக் கொண்டு நடக்கப்பழக்குகிறார்

5. அன்புக் கரங்களாலே அணைத்துக் கொண்டார்
பாசக் கயிறுகளால் பிணைத்துக்கொண்டார்
நுகத்தை அகற்றிவிட்டார் ஜெயத்தை தந்துவிட்டார்

எங்கள் தகப்பனே எங்கள் தந்தையே
எல்லாமே உம்மிடம் இருந்து வந்தன
எந்நாளும் உமக்குதானே ஆராதனை

1. இரக்கம் நிறைந்த தந்தை நீரே

ஆறுதல் அனைத்திற்கும் ஊற்று நீரே
கணவனை இழந்தவர்க்கு காப்பாளர் நீர்தானைய்யா
அப்பா.. அப்பா.. தகப்பனே நன்றி ஐயா

2. குழந்தையாய் இருந்த போதே நேசித்தீரே
எகிப்தில் இருந்து என்னை அழைத்துக்கொண்டீர்
கரங்கள் பிடித்துக் கொண்டு நடக்கப் பழக்குகிறீர்

3. திக்கற்ற பிள்ளைகளுக்கு தகப்பன் நீரே
தேவைகளை அறிந்த நல்ல தந்தை நீரே
உணவு ஊட்டுகிறீர் உடையும் உடுத்துகிறீர்

4. ஆட்கொண்டு நடத்துகிறீர் அதிசயமாய்
உருவாக்கி மகிழ்கின்றீர் ஒவ்வொரு நாளும்
கேட்பதை கொடுத்திடுவீர் தட்டும்போது திறந்திடுவீர்

5. அன்பு கரங்களாலே அணைத்துக் கொண்டீர்
பரிவு என்னும் கயிறுகளால் பிணைத்துக் கொண்டீர்
நுகத்தை அகற்றிவிட்டீர் ஜெயத்தை தந்துவிட்டீர்

# நல்ல சமாரியன் இயேசு

நல்ல சமாரியன் இயேசு
என்னைத் தேடி வந்தாரே

1. என்னைக் கண்டாரே
அணைத்துக் கொண்டாரே

2. அருகில் வந்தாரே
மனது உருகினாரே

3. இரசத்தை வார்த்தாரே
இரட்சிப்பைத் தந்தாரே

4. எண்ணெய் வார்த்தாரே
அபிஷேகம் செய்தாரே

5. காயம் கட்டினாரே
தோள்மேல் சுமந்தாரே

6. சபையில் சேர்த்தாரே
வசனத்தால் காப்பாரே

7. மீண்டும் வருவாரே
அழைத்துச் செல்வாரே

# நல்லதையே நான் சொல்லவும்

நல்லதையே நான் சொல்லவும் செய்யவும்
உள்ளத்தை இன்று உறுதிப்படுத்தும் ஐயா

1. ஆதி முதல் என்னைத் தெரிந்துக் கொண்டீர்
அப்பாவை நம்பி மீட்படைய
ஆவியினாலே தூய்மையாக்கி
ஆதிசயமாய் என்னை நடத்துகிறீர்
அப்பா... நன்றி... நன்றி - 2

2. பாவங்கள் செய்து மரித்துப் போயிருந்தேன்
கிறிஸ்துவோடே கூட உயிர்த்தெழச் செய்தீர்
கிருபையினாலே என்னை இரட்சித்தீர்
உன்னதங்களிலே உட்காரச் செய்தீர்

3. ஆண்டவர் கிறிஸ்துவின் மகிமையடைந்திட
ஆழைத்தீரே நன்றி ஐயா
ஆறுதல் தந்தீர் அன்பு கூர்ந்தீர்
பரலோகம் எதிர்நோக்கி வாழச் செய்தீர்

4. துதிக்கும் மகிமையக்கும் பாத்திரரே
பெருமையும் புகழ்ச்சியும் உமக்குத்தானே
ஞானமும் நன்றியும் வல்லமையும்
என்றென்றும் உமக்கே உரித்தாகட்டும்

5. ஆவியினாலே பெலப்படணும்
அன்பிலே வேரூன்றி திடம் பெறணும்
அப்பாவின் அன்பின் அகலம் ஆழம்
அறியும் ஆற்றல் நான் பெறணும்

6. எப்பொழுதும் நான் மகிழ்வுடன் இருந்து
இடைவிடாமல் ஜெபம் செய்யணும்
என்ன நேர்ந்தாலும் நன்றி சொல்லி
இயேசப்பா திருச்சித்தம் நிறைவேற்றணும்

# நன்மைகளின் நாயகனே, நன்றி

நன்மைகளின் நாயகனே, நன்றி சொல்லி மகிழ்கிறேன்
உண்மையுள்ள தெய்வமே, உயிரோடு கலந்தவரே
நன்மைகளின் நாயகனே நன்றி நன்றி ஐயா
உண்மையுள்ள தெய்வமே, உயிரோடு கலந்தவரே

1. கடந்த ஆண்டெல்லாம்
கண்மணி போல் காத்தீரே
புதிய (ஆண்டு) நாள் தந்து
புதியன (புதுமைகள்) செய்பவரே

2. உமக்காய் காத்திருந்து
புதபெலன் அடைகின்றேன்
உம்மையே பற்றிக் கொண்டு
புதிய மனுஷனானேன்

3. கர்த்தர் கரம் என்னோடு
இருப்பதை உணர வைத்தீர்
அநேகர் அறிக்கையிட
அப்பா நீர் கிருபை செய்தீர்

4. எனக்கு எதிரானோர்
என் சார்பில் வரவைத்தீர்
சமாதானம் செய்ய வைத்தீர்
சர்வ வல்லவரே

5. எப்சிபா என்றழைத்து
என்மேலே பிரியமானீர்
பியூலா என்றழைத்து
மணமகளாக்கிவிட்டீர்

6. ஏசேக்கு, சித்னா
இன்றோடு முடிந்தது
ரெகோபோத் தொடங்கியது
தடைகளும் விலகியது

# நன்றிபலி நன்றி பலி

நன்றிபலி நன்றி பலி
நல்லவரே உமக்குத்தான்
ஆனந்தம் (அதிகாலை) ஆனந்தமே
அப்பா உம் திருப்பாதமே - என்

1. நேற்றைய துயரமெல்லாம்
இன்று மறைந்ததையா
நிம்மதி பிறந்ததையா - அது
நிரந்தரமானதையா
கோடி கோடி நன்றி டாடி (3) நன்றி

2. இரவெல்லாம் காத்தீர்
இன்னும் ஓர் நாள் தந்தீர்
மறவாத என் நேசரே - இன்று
உறவாடி மகிழ்ந்திடுவேன் - கோடி

3. ஊழியப் பாதையிலே
உற்சாகம் தந்தீரையா
ஓடி ஓடி உழைப்பதற்கு
உடல் சுகம் தந்தீரையா - நான்

4. வேதனை துன்பமெல்லாம்
ஒரு நாளும் பிரிக்காதையா
நாதனே உம் நிழலில்
நாள்தோறும் வாழ்வேனையா - இயேசு

5. ஜெபத்தைக் கேட்டீரையா
ஜெயத்தைத் தந்தீரையா
பாவம் அணுகாமலே
பாதுகாத்து வந்தீரையா

6. என் நாவில் உள்ளதெல்லாம்
உந்தன் புகழ்தானே
நான் பேசி மகிழ்வதெல்லாம்
உந்தன் பெருமை தானே

# நன்றிப்பலிபீடம் கட்டுவோம்

நன்றிப்பலிபீடம் கட்டுவோம்
நல்ல தெய்வம் நன்மை செய்தார்
செய்த நன்மை ஆயிரங்கள்
சொல்லிச் சொல்லி பாடுவேன்

நன்றி தகப்பனே நன்மை செய்தீரே

1. ஜீவன் தந்து நீர் அன்புகூர்ந்தீர்
பாவம் நீங்கிட கழுவி விட்டீர்
உமக்கென்று வாழ பிரித்தெடுத்து
உமது ஊழியம் செய்ய வைத்தீர்

2. சிறந்த முறையிலே குரல் எழுப்பும்
சிலுவை இரத்தம் நீர் சிந்தினீரே
இரத்தக் கோட்டைக்குள் வைத்துக் கொண்டு
எதிரி நுழையாமல் காத்துக்கொண்டீர்

3. இருளின் அதிகாரம் அகற்றிவிட்டீர்
இயேசு அரசுக்குள் சேர்த்துவிட்டீர்
உமக்கு சொந்தமாய் வாங்கிக் கொண்டு
உரிமைச் சொத்தாக வைத்துக் கொண்டீர்

4. புதிய உடன்பாட்டின் அடையாளமாய்
புனித இரத்தம் ஊற்றினீரே
சத்திய ஜீவ வார்த்தையாலே
மரித்த வாழ்வையே மாற்றினீரே

5. எதிராய் வாழ்ந்து வந்த இவ்வுலகை
ஒப்புரவாக்கினீர் உம் இரத்தத்தால்
தூரம் வாழ்ந்து வந்த எங்களையே
அருகில் கொண்டுவந்தீர் ஆவியினால்

6. குற்றம் செய்ததால் மரித்திருந்தோம்
இயேசுவோடே கூட எழச்செய்தீர்
கிருபையினாலே இரட்சித்தீரே
உன்னதங்களிலே உட்காரச் செய்தீர்

உடலுக்குரிய ஆசீர்வாதம்

7. பார்க்கும் கண்களை தந்தீரய்யா
பாடும் உதடுகள் தந்தீரய்யா
உழைக்கும் கரங்களை தந்தீரய்யா
ஓடும் கால்களைத் தந்தீரய்யா

8. இதய பெலவீனம் நீக்கினீரே
சுகர் வியாதிகள் போக்கினீரே
ஆல்சர் இல்லாமல் காத்தீரே
ஆஸ்மா முற்றிலும் நீக்கியதே

உகத்துக்குரிய ஆசீர்வாதம்

9. நல்ல குடும்பம் நீர் தந்தீரய்யா
செல்ல பிள்ளைகள் தந்தீரய்யா
அணைக்கும் கணவனை தந்தீரய்யா
அன்பு மனைவியை தந்தீரய்யா

10. இருக்க நல்ல ஒரு வீடு தந்தீர்
வாழத் தேவையான வசதி தந்தீர்
கடுமையாக தினம் உழைக்க வைத்தீர்
கடனே இல்லாமல் வாழ வைத்தீர்

# நன்றி நன்றி நன்றி

நன்றி நன்றி நன்றி என்று
நாள்தோறும் பாடிடுவோம்

1. வல்லவரே நல்லவரே

2. காண்பவரே காப்பவரே

3. பாவங்கள் போக்கிவிட்டீர்

4. நோய்களெல்லாம் சுமந்து கொண்டீர்

5. ஆவியினால் அபிஷேகம் செய்தீர்

6. புதுவாழ்வு எனக்குத் தந்தீர்
அல்லேலூயா (2) ஆமென்

# நன்றி என்று சொல்லுகிறோம்

நன்றி என்று சொல்லுகிறோம் நாதா
நாவாலே துதிக்கிறோம் நாதா
நன்றி இயேசு ராஜா
நன்றி இயேசு ராஜா

1. கடந்த நாட்கள் காத்தீரே நன்றி ராஜா
புதிய நாளை தந்தீரே நன்றி ராஜா

2. ஆபத்திலே காத்தீரே நன்றி ராஜா
அதிசயம் செய்தீரே நன்றி ராஜா

3. வாழ்க்கையிலே ஒளி விளக்காய் வந்தீரையா
வார்த்தை என்ற மன்னாவை தந்தீரையா

4. அடைக்கலமே கேடயமே நன்றிராஜா
அன்பே என் ஆறுதலே நன்றிராஜா

5. தனிமையிலே துணை நின்றீர் நன்றிராஜா
தாயைப் போல் தேற்றினீர் நன்றிராஜா

6. சோர்ந்து போன நேரமெல்லாம் தூக்கினீரே
சுகம் தந்து இதுவரை தாங்கினீரே

7. புதுவாழ்வு தந்தீரே நன்றிராஜா
புதுபெலன் தந்தீரே நன்றிராஜா

8. ஊழியம் தந்தீரே நன்றிராஜா
உடனிருந்து நடத்தினீரே நன்றிராஜா

# நன்றி நன்றி நன்றி என்று

நன்றி நன்றி நன்றி என்று துதிக்கிறேன்
நல்லவரே உம் நன்மைகளை நினைக்கிறேன்
நன்றி ஐயா நன்றி ஐயா - இயேசையா

1. தகுதியில்லா அடிமை என்னை அணைக்கிறீர்
தாங்கி தாங்கி வழி நடத்தி மகிழ்கின்றீர்
அதிசயங்கள் ஆயிரம்
அன்பரே உம் கரங்களிலே - நன்றி

2. பெலவீனம் நீக்கி தினம் காக்கின்றீர்
பெரும் பெரும் காரியங்கள் செய்கின்றீர்
தீமையான அனைத்தையும்
நன்மையாக மாற்றுகிறீர்

3. உணவு உடை தினம் தந்து மகிழ்கின்றீர்
உண்மையான நண்பர்களை தருகின்றீர்
நன்மையான ஈவுகள்
நாள்தோறும் தருபவரே

4. கதறி அழுத நேரமெல்லாம் தூக்கினீர்
கருவியாக பயன்படுத்தி வருகின்றீர்
கண்மணிபோல் காப்பவரே
கைவிடாமல் மேய்ப்பவரே

# நன்றியால் துதிபாடு

நன்றியால் துதிபாடு - நம் இயேசுவை
நாவாலே என்றும் பாடு
வல்லவர் நல்லவர் போதுமானவர்
வார்த்தையில் உண்மையுள்ளவர் - நன்றி

1. எரிகோ மதிலும் முன்னே வந்தாலும்
இயேசு உந்தன் முன்னே செல்கிறார்
கலங்கிடாதே திகைத்திடாதே
துதியினால் இடிந்து விழும்

2. செங்கடல் நம்மைச் சூழ்ந்து கொண்டாலும்
சிலுவையின் நிழலுண்டு
பாடிடுவோம் துதித்திடுவோம்
பாதைகள் கிடைத்துவிடும்

3. கோலியாத் நம்மை எதிர்த்து வந்தாலும்
கொஞ்சமும் பயம் வேண்டாம்
இயேசு என்னும் நாமம் உண்டு
இன்றே ஜெயித்திடுவோம்

# நடந்ததெல்லாம் நன்மைக்கே

நடந்ததெல்லாம் நன்மைக்கே நன்மைக்கே
நன்றி சொல்லி மகிழ்வேன் இன்றைக்கே
நடப்பதெல்லாம் நன்மைக்கே நன்மைக்கே
நன்றி சொல்லி மகிழ்வேன் இன்றைக்கே
நன்றி (2) எல்லாம் நன்மைக்கே நன்றி

1. தீமைகளை நன்மையாக மாற்றினீர்
துன்பங்களை இன்பமாக மாற்றினீர் - நன்றி

2. சிலுவைதனை அனுமதித்தீர் நன்றி
சிந்தைதனை மாற்றினீர் நன்றி

3. உள்ளான மனிதனை புதிதாக்கி
உடைத்து உருமாற்றி நடத்துகிறீர்

4. என் கிருபை உனக்குப் போதும் என்றீர்
பெலவீனத்திலே பெலன் என்றீர்

5. தாங்கிடும் பெலன் தந்தீர் நன்றி
தப்பிச் செல்ல வழி செய்தீர் நன்றி

6. விசுவாசப்புடமிட்டீர் நன்றி
பொன்னாக விளங்கச் செய்தீர் நன்றி

7. கசப்புக்களை மாற்றி விட்டீர் நன்றி
மன்னிக்கும் மனம் தந்தீர் நன்றி

# நாதா உம் திருக்கரத்தில்

நாதா உம் திருக்கரத்தில் இசைக் கருவி நான்
நாள்தோறும் பயன்படுத்தும் உந்தன் சித்தம் போல்

1. ஐயா உம் பாதம் என் தஞ்சமே
அனுதினம் ஓடி வந்தேன்
ஆனந்தமே அதிசயமே - (2)
- நாதா

2. எங்கே நான் போக உம் சித்தமோ
அங்கே நான் சென்றிடுவேன்
உம் நாமத்தில் ஜெயம் எடுப்பேன் - நான்

3. புதுப்பாடல் தந்து ஆசீர்வதியும்
பரவசமாகிடுவேன்
எக்காளம் நான் ஊதிடுவேன்

4. நிந்தைகள் நெருக்கம் துன்பங்களில்
துதி பாடி மகிழ்ந்திருப்பேன்
கிருபை ஒன்றே போதுமைய்யா

5. ஊரெல்லாம் செல்வேன் பறை சாற்றுவேன்
உம் நாமம் உயர்த்திடுவேன்
சாத்தான் கோட்டை தகர்த்திடுவேன்

# நாளைய தினத்தைக் குறித்து

நாளைய தினத்தைக் குறித்து பயமில்லை
நாதன் இயேசு எல்லாம் பார்த்துக் கொள்வார்

1. ஆண்டவர் எனது வெளிச்சமும் மீட்புமானார்
எதற்கும் பயப்படேன்
அவரே எனது வாழ்வின் பெலனானார்
யாருக்கும் அஞ்சிடேன் - அல்லேலூயா

2. கேடுவரும் நாளில் கூடார மறைவினிலே
ஒளித்து வைத்திடுவார்
கன்மலையின் மேல் உயர்த்தி நிறுத்திடுவார்
கலக்கம் எனக்கில்லை - அல்லேலூயா

3. தகப்பனும் தாயும் என்னை கைவிட்டாலும்
கர்த்தர் சேர்த்துக் கொள்வார்
கர்த்தருக்காய் நான் தினமும் காத்திருப்பேன்
புதுபெலன் பெற்றிடுவேன் - அல்லேலூயா

4. கர்த்தரிடத்தில் ஒன்றை நான் கேட்பேன்
அதையே நாடுவேன்
வாழ்நாளெல்லாம் அவரின் பிரசன்னத்தில்
வல்லமை பெற்றிடுவேன் - அல்லேலூயா

5. சிங்கக்குட்டிகள் பட்டினி கிடந்தாலும்
எனக்கோ குறையில்லை
குறைகளையெல்லாம் நிறைவாக்கித் தந்திடுவார்
கொஞ்சமும் பயமில்லை - அல்லேலூயா

# நான் இயேசுவின் பிள்ளை

நான் இயேசுவின் பிள்ளை
பயமே இல்லை
எந்நாளும் சந்தோஷமே

1. தெரிந்து கொண்டார் தெரிந்து கொண்டார்
மகனாக மகளாக தெரிந்து கொண்டார்

2. கழுவப்பட்டேன் கழுவப்பட்டேன்
இயேசுவின் இரத்தத்தாலே கழுவப்பட்டேன்

3. வென்று விட்டேன் வென்று விட்டேன்
எதிரியின் தடைகளை வென்று விட்டேன்

4. நிரப்பப்பட்டேன் நிரப்பப்பட்டேன்
ஆவியின் வல்லமையால் நிரப்பப்பட்டேன்

5. சுகமானேன் சுகமானேன்
இயேசுவின் காயங்களால் சுகமானேன்

6. முறியடிப்பேன் முறியடிப்பேன்
எதிரான ஆயுதத்தை முறியடிப்பேன்

# நான் உன்னை விட்டு

நான் உன்னை விட்டு விலகுவதில்லை
நான் உன்னை என்றும் கைவிடுவதில்லை - (2)
நான் உன்னைக் காண்கின்ற தேவன்
கண்மணி போல் உன்னைக் காப்பேன் - (2)

1. பயப்படாதே நீ மனமே - நான்
காத்திடுவேன் உன்னை தினமே
அற்புதங்கள் நான் செய்திடுவேன்
உன்னை அதிசயமாய் நான் நடத்திடுவேன்

2. திகையாதே கலங்காதே மனமே - நான்
உன்னுடனிருக்க பயமேன்
கண்ணீர் யாவையும் துடைத்திடுவேன் - உன்
கலலைகள் யாவையும் போக்கிடுவேன்

3. அனுதினம் என்னைத் தேடிடுவாய் - நான்
அளித்திடும் பெலனைப் பெற்றிடுவாய்
அத்திமரம் போல் செழித்திடுவாய் நான்
ஆசையாய் உண்ண கனி கொடுப்பாய்

4. நீதியின் வலக்கரத்தாலே உன்னை
தாங்குவேன் நான் அன்பினாலே
ஆவியின் உண்மையாய் ஜெபித்திடுவாய்
தினம் அல்லேலூயா என்றே ஆர்ப்பரிப்பாய்

# நான் உனக்கு போதித்து நடக்கும்

நான் உனக்கு போதித்து நடக்கும் பாதையை
நாள் தோறும் காட்டுவேன் பயப்படாதே
(காத்திரு மகனே)

உன்மேல் என் கண் வைத்து
ஆலோசனை சொல்லுவேன்
அறிவுரை நான் கூறுவேன் - உனக்கு

1. ஈசாக்கு விதை விதைத்து
நூறுமடங்கு அறுவடை செய்தான்
உன்னையும் ஆசிர்வதிப்பேன் - அது போல

2. ஏசேக்கு சித்னா
இன்றோடு முடிந்தது மகனே (மகளே)
ரெகோபோத் தொடங்கி விட்டது - உனக்கு

3. தேசத்தில் பலுகும்படி
உனக்கு இடம் உண்டாக்கினேன்
ரெகோபோத் உனக்கு உண்டு .. இது முதல்

4. கர்த்தர் நிச்சயமாய்
உன்னோடு இருக்கிறார் என்று
அநேகர் அறிந்து கொள்வார்கள் .. இது முதல்
(அறிக்கை செய்வார்கள்)

5. கலங்காதே நான்
உன்னோடு இருக்கின்றேன் மகனே
பலுகிப் பெருகிடுவாய் - தேசத்தில்

6. உனக்கு எதிரானோர்
உன் சார்பில் வருவார்கள்
சமாதானம் செய்வார்கள் - உன்னோடு

# நான் பயப்படும்

நான் பயப்படும் நாளினிலே
கர்த்தரை நம்பிடுவேன்
என் கோட்டையும் அரணுமாயிருக்க
நான் அடைக்கலம் புகுந்திடுவேன்

1. உங்களில் இருப்பவர் பெரியவரே
பரிசுத்தமானவரே
அவர் காத்திடுவார் என்றும் நடத்திடுவார்
நித்திய காலமெல்லாம் நம்மையே

2. நம்மைக் காப்பவர் அயர்வதில்லை
உறங்குவதும் இல்லை
அவர் ஆலயத்தில் நான் அபயமிட்டேன்
என் கூப்பிடுதல் அவர் செவியினிலே

# நானும் என் வீட்டாரும்

As for me and my House hold
We will serve you, Oh! Lord – 3

You are wonderful
You are mighty God
You are Prince of Peace
You are my every thing

We love you
We worship you -2

நானும் என் வீட்டாரும்
உம்மையே நேசிப்போம்
உமக்காய் ஓடுவோம்
உந்தன் நாமம் சொல்லுவோம்

1. கைவிடா தெய்வமே கருணையின் சிகரமே
மெய்யான் தீபமே என் வாழ்வின் பாக்கியமே
முழந்தாழ் படியிட்டு
முழுவதும் தருகிறேன் - நான் முழந்தாழ்

2. எபிநேசர் எபிநேசர் இதுவரை உதவினீர்
யேகோவா ஈரே எல்லாம் பார்த்துக் கொள்வீர்

3. எல்ஷடாய் எல்ஷடாய் எல்லாம் வல்லவரே
எல்ரோயீ எலரோயீ என்னைக் காண்பவரே

4. யேகோவா ஷம்மா கூடவே இருக்கிறீர்
யேகோவா ஷாலோம் சமாதானம் தருகிறீர்

5. யேகோவா ரூவா என் நல்ல மேய்ப்பரே
யேகோவா ர.்.ப்பா சுகம் தரும் தெய்வமே

6. பரிசுத்தர் பரிசுத்தர் பரலோக ராஜாவே
எப்போதும் இருப்பவரே இனிமேல் வருபவரே

# நானே வழி

நானே வழி நானே சத்தியம்
நானே ஜீவன் மகனே(ளே) - உனக்கு
எல்னாலன்றி உனக்கு விடுதலை இல்லை
என்னாலன்றி உனக்க நிம்மதி இல்லை

1. நான் தருவேன் உனக்கு சமாதானம்
நான் தருவேன் உனக்கு சந்தோஷம்
கலங்காதே என் மகனே
கண்மணி போல் உன்னைக் காத்திடுவேன்

2. உனக்காக சிலுவையில் நான் மரித்தேன்
உனக்காக திரு இரத்தம் நான் சிந்தினேன்
என் மகனே வருவாயா
இதயத்திலே இடம் தருவாயா

3. உனக்காகவே நான் ஜீவிக்கின்றேன்
உன் உள்ளத்தில் வாழ துடிக்கின்றேன்
வருவாயா என் மகனே
இதயத்திலே இடம் தருவாயா

4. நீ நம்பும் மனிதர் கைவிடலாம்
ஆனால் நான் ஒருபோதும் கைவிட மாட்டேன்
கலங்காதே என்மகனே
கண்மணிபோல் உன்னைத் காத்திடுவேன்

# நாமே திருச்சபை கிறிஸ்துவின்
(1கொரி.12:27,26, எபே.4:26,25,28,29,31)

நாமே திருச்சபை கிறிஸ்துவின் திரு உடல்
ஒவ்வொருவரும் அதன் தனித்தனி உறுப்புக்கள்

1. ஒரு உறுப்பு துன்பப்பட்டால்
மற்ற அனைத்தும் துன்பப்படும் கூடவே துன்பப்படும்
உணர்ந்திடுவோம் இணைந்திடுவோம்
ஓர் உடலாய் செயல்படுவோம்

2. ஒரு உறுப்பு புகழ் அடைந்தால்
மற்ற அனைத்தும் மகிழ்ச்சியுறும் சேர்ந்து மகிழ்ச்சியுறும்

3. இயேசு கிறிஸ்து பாடுபட்டு பகையை ஒழித்தார்
கடவுளோடு ஒப்புரவாக ஒரு உடலாக்கிவிட்டார்

4. பொழுது இன்று சாய்வதற்குள் சினம் தணியட்டும்
அலகைக்கு இனி இடம் வேண்டாம்
இடம் கொடுக்க வேண்டாம்

5. ஒரு உடலாய் இருப்பதனால் பொய்யை விலக்குவோம்
உண்மைதனை பேசிடுவோம் நன்மை செய்திடுவோம்

6. தேவையிலே உழல்வோர்க்கு பகிர்ந்து கொடுத்திட
நம் கைகளால் பாடுபட்டு உழைத்து மகிழ்ந்திடுவோம்

7. கேட்போரெல்லாம் பயடைந்து பக்தியில் வளர
நல்வார்த்தை நாள்தோறும் சொல்லி உதவிடுவோம்

8. மனக்கசப்பு பழிச்சொற்கள் நீக்க வேண்டுமே
பரிவு காட்டி மனமாற மன்னிக்க வேண்டுமே

# நிர்மூலமாகாதிருப்பது

நிர்மூலமாகாதிருப்பது உந்தன் மா கிருபை
முடிவே இல்லாதது உந்தன் மனதுருக்கம் - நான்
கிருபை கிருபை மாறாத கிருபை

1. கிருபையினாலே இரட்சித்தீரே
நீதிமானாக மாற்றினீரே
உயிர்த்தெழச் செய்தீர் கிறிஸ்துவோடே கூட
உன்னதங்களிலே அமரச் செய்தீர்

2. கிருபையின் மகிமைக்கு புகழ்ச்சீயாக
சொந்த பிள்ளையாய் முன்குறித்தீரே
பரிசுத்த இரத்தத்தால் மீட்ப்பளித்தீரே
பாவம் அனைத்தையும் மன்னீத்தீரே

3. தேவனின் பலத்த சத்துவத்தாலே
நற்செய்தி அறிவிக்கும் திருத்தொண்டனானேன்
கிறிஸ்து இயேசுவின் அளவற்ற செல்வத்தை
அறிவிக்கின்றேன் நான் கிருபையினால்

4. ஜீவனைப் பார்க்கிலும் மேலானது
உன்தன் கிருபை மேலானது
அழிவில்லா அன்புடன் அன்பு கூர்ந்தேன்
ஆர்வமாய் இன்னும் அன்பு கூர்வேன்

5. காலைதோறும் புதியது
உந்தன் கிருபை புதியது
காத்திருப்பேன் உன் பாதத்தில்
களிகூர்வேன் உம் கிருபையில்

6. இயேசுவை அறிகிற அறிவினாலே
அமைதியும் கிருபையும் பெருகிடுதே
நம்பிக்கை வளர்ந்தால் கிருபை வளரும்
நாளும் பொழுதும் சூழ்ந்துகொள்ளும்

# நிரப்புங்கப்பா நிரப்புங்கப்பா

நிரப்புங்கப்பா நிரப்புங்கப்பா என்
பாத்திரத்தை தண்ணீரால் நிரப்புங்கப்பா
நிரப்புங்கப்பா நிரப்புங்கப்பா உம்
பரிசுத்த ஆவியால் நிரப்புங்கப்பா

1. இரவெல்லாம் கண்விழித்து ஜெபிக்கணும்
எதை நினைத்தும் கலங்காம் துதிக்கணும்

2. ஆறாக பெருக்கெடுத்து ஓடணும்
ஆயிரங்கள் உம்மண்டை நடத்தணும்

3. தூய வாழ்வு தினம் வாழணும்
தாய்நாடு உம்பாதம் திரும்பணும் - என்

4. அப்பா உம் ஏக்கங்கள் அறியணும்
தப்பாமல் உம் வழியில் நடக்கணும்

5. பாவங்கள் சாபங்கள் நீக்கணும்
பரிசுத்த வாழ்க்கை இன்று வாழணும்

# நினைவு கூறும் தெய்வமே நன்றி

நினைவு கூறும் தெய்வமே நன்றி
நிம்மதி தருபவரே நன்றி
நன்றி இயேசு ராஜா

1. நோவாவை நினைவு கூர்ந்ததால்
பெருங்காற்று வீசச் செய்தீரே - அன்று
தண்ணீர் வற்றியதைய்யா
விடுதலையும் வந்ததைய்யா

2. ஆபிரகாமை நினைவு கூர்ந்ததால்
லோத்துவை காப்பாற்றினீரே
எங்களையும் நினைவு கூர்ந்து
எங்கள் சொந்தங்களை இரட்சியுமைய்யா

3. அன்னாளை நிவைவு கூர்ந்ததால்
ஆண் குழந்தை பெற்றெடுத்தாளே
மலட்டு வாழ்க்கையெல்லாம்
மாற்றுகிறீர் நன்றி ஐயா - எங்கள்

4. கொர்நெலியு தான தர்மங்கள் - ஒரு
தூதனைக் கொண்டு வந்தது
குடும்பத்தையும் நண்பர்களையும்
இரட்சித்து அபிஷேகித்தீரே - அவன்

5. ராகேலை நினைவு கூர்ந்ததால்
யோசேப்பை பரிசாய் தந்தீரே
இன்னுமொரு மகனைத் தருவீர்
என்று சொல்லி துதிக்கச் செய்தீரே

6. எக்காளம் ஊதும் போதெல்லாம்
எங்களை நினைக்கின்றீர்
எதிரிகளின் கையிலிருந்து
இரட்சித்து காப்பாற்றுகிறீர்

# நீதிமான் நான்

நீதிமான் நான் நீதிமான் நான்
இரத்தத்தாலே கழுவப்பட்ட நீதிமான் - இயேசுவின்

1. பனைமரம்போல் நான் செழித்தோங்குவேன்
கேதுரு மரம்போல் வளர்ந்திடுவேன்
கர்த்தரின் இல்லத்தில் நாட்டப்பட்டு
முதிர்வயதிலும் நான் கனிதருவேன் - நீதிமான்

2. காலையிலே உம் கிருபையையும்
இரவினிலே உம் சத்தியத்தையும்
பத்துநரம்புகள் இசையோடு
பாடிப்பாடி மகிழ்ந்திருப்பேன்

3. ஆண்டவனே என் கற்பாறை
ஆவரிடம் அநீதியே இல்லை
என்றே முழக்கம் செய்திடுவேன்
செழுமையும் பசுமையுமாய் வளர்வேன்

4. ராஜாவின் ஆட்சி வருகையிலே
கதிரவனைப் போல் பிரகாசிப்பேன் - இயேசு
ஆகாயமண்டல விண்மீனாய்
முடிவில்லா காலமும் ஒளிவீசுவேன்

5. எதிரியின் வலிமையை மேற்கொள்ள
அதிகாரம் எனக்குத் தந்துள்ளார்
புதுஎண்ணை அபிஷேகம் என் தலைமேல்
பொழிந்து பொழிந்து மகிழ்கின்றீர்

6. கர்த்தரின் கண்கள் என்மேலே
என் வேண்டுதல் கேட்கின்றார்
மன்றாடும்போது செவிசாய்த்து
மாபெரும் விடுதலை தருகின்றார்

# நீதியில் நிலைத்திருந்து

நீதியில் நிலைத்திருந்து - உம்
திருமுகம் நான் காண்பேன்
உயிர்த்தெழும் போது - உம் 2
சாயலால் திருப்தியாவேன் நீதியில்...

1. தேவனே, நீர் என் தேவன்
அதிகாலமே தேடி வந்தேன் (2)
நீரின்றி வரண்ட நிலம்போல்
ஏங்குகிறேன் தினம் உமக்காய் (2)
அல்லேலூயா ஓசன்னா - 4

2. ஜீவனை விட உம் அன்பு
அது எத்தனை நல்லது
புகழ்ந்திடுமே, என் உதடு
மகிழ்ந்திடுமே, என் உள்ளம்
அல்லேலூயா ஓசன்னா

3. உயிர்வாழும் நாட்களெல்லாம்
உம் நாமம் சொல்லித் துதிப்பேன்
அறுசுவை உண்பது போல
திருப்தியாகும் என் ஆன்மா
அல்லேலூயா ஓசன்னா

4. படுக்கையில் உம்மை நினைப்பேன்
இராச்சாமத்தில் தியானம் செய்வேன்
துணையாளரே, உம் நிழலை
தொடர்ந்து, நடந்து வளர்வேன்
அல்லேலூயா ஓசன்னா

# நீங்க போதும் இயேசப்பா

நீங்க போதும் இயேசப்பா
உங்க சமூகம் எனக்கப்பா

1. எத்தனை இன்பமே உந்தன் சமூகமே
உள்ளமும் உடலுமே உமக்காய் ஏங்குதே - என்

2. புதுபெலன் தருகிறீர் புது எண்ணேய் பொழிகிறீர்
கனிதரும் மரங்களாய் செழித்தோங்கச் செய்கிறீர் - நான்

3. அப்பா உம் சந்நிதியில் எப்போ நான் வந்து நிற்பேன்
திருமுகம் கண்டு நான் திருப்தியில் மூழ்குவேன் - உம்

4. தேனிலும் இனிமையே தெவிட்டாத அமுதமே
தேடியும் கிடைக்காத ஒப்பற்ற செல்வமே - நான்

# நெருக்கடி வேளையில்

நெருக்கடி வேளையில் பதில் அளித்து
பாதுகாத்து நடத்திடுவார்
என்னோடு இருந்து ஆதரித்து
தினமும் உதவிடுவார்

1. நீ செலுத்தும் காணிக்கைகள் நினைவு கூர்ந்திடுவார் - 2
நன்றிப்பலி அனைத்தையுமே பிரியமாய் ஏற்றுக் கொள்வார் - 2
பிரியமாய் ஏற்றுக் கொள்வார்
நெருக்கடி வேளையில் பதில் அளித்து

2. உன்மனம் விரும்புவதை உனக்குத் தந்திடுவார் - 2
உனது திட்டங்களெல்லாம் நிறைவேற்றி முடித்திடுவார் - 2
நிறைவேற்றி முடித்திடுவார்
நெருக்கடி வேளையில் பதில் அளித்து

3. உனக்குவரும் வெற்றிபைக்கண்டு மகிழ்ச்சியில் ஆர்ப்பரிப்போம் -2
நம்தேவன் நாமத்திலே வெற்றிக் கொடி நாட்டிடுவோம்
வெற்றிக் கொடி நாட்டிடுவோம்
நெருக்கடி வேளையில் பதில் அளித்து

4. இரதங்களை நம்பும் மனிதர் இடறி விழுந்தார்கள் - 2
தேவனை நம்பும் நாமோ நிமிர்ந்து நின்றிடுவோம்
நிமிர்ந்து நின்றிடுவோம்
நெருக்கடி வேளையில் பதில் அளித்து

# நேசரே உம்திரு பாதம் அமர்ந்தேன்

நேசரே உம்திரு பாதம் அமர்ந்தேன்
நிம்மதி நிம்மதியே
ஆர்வமுடனே பாடித்துதிப்பேன்
ஆனந்தம் ஆனந்தமே
அடைக்கலமே அதிசயமே
ஆராதனை ஆராதனை

1. உம்வல்ல செயல்கள்
நினைத்து நினைத்து
உள்ளமே பொங்குதையா
நல்லவரே நன்மை செய்தவரே
நன்றி நன்றி ஐயா
வல்லவரே நல்லவரே
ஆராதனை ஆராதனை

2. பலியான செம்மறி
பாவங்கள் எல்லாம்
சுமந்து தீர்த்தவரே
பரிசுத்த இரத்தம் எனக்காக அல்லோ
பாக்கியம் பாக்கியமே
பரிசுத்தரே படைத்தவரே
ஆராதனை ஆராதனை

3. எத்தனை இன்னல்கள்
என் வாழ்வில் வந்தாலும்
உம்மைப் பிரியேன் ஐயா
இரத்தமே சிந்தி சாட்சியாய் வாழ்வோன்
நிச்சயம் நிச்சயம்
இரட்சகரே இயேசு நாதா
ஆராதனை ஆராதனை

# நேசிக்கிறேன் உம்மைத்தானே

நேசிக்கிறேன் உம்மைத்தானே ஐயா
நிலையில்லாத இந்த உலகத்திலே
நேசிக்கிறேன் உம்மைத்தானே ஐயா
உம்மைத்தானே இயேசையா

1. ஒவ்வொரு நாளும் எனது கண் முன்
உம்மைத்தான் நிறுத்தியுள்ளேன்
வலப்பக்கத்தில் இருப்பதனால் - என்
அசைக்கப்படுவதில்லை - நான்

2. உம்மை அல்லாமல் வேறே விருப்பம்
உள்ளத்தில் இல்லையே
நிம்மதியே நிரந்தரமே - என்
நினைவெல்லாம் ஆள்பவரே

3. ஐயா உம் தாகம் எனது ஏக்கம்
அடிமை நான் கதறுகிறேன்
என் ஜனங்கள் அறியணுமே
இரட்சகர் உம்மைத் தேடணுமே

4. உமது வேதம் எனது மகிழ்ச்சி
ஓய்வின்றி தியானிக்கின்றேன்
ஆற்றங்கரை மரமாக
அயராமல் கனி கொடுப்பேன்

# பயப்பட மாட்டேன்

பயப்பட மாட்டேன் நான் பயப்பட மாட்டேன்
இயேசு என்னோடு இருப்பதனால்
ஏலேலோ ஐலசா

1. உதவி செய்கிறார் பெலன் தருகிறார்
ஒவ்வொரு நாளும் கூட வருகிறார்

2. காற்று வீசட்டும் கடல் பொங்கட்டும்
எனது நங்கூரம் இயேசு இருக்கிறார்

3. வலைகள் வீசுவோம் மீன்களைப் பிடிப்போம்
ஆத்துமாக்களை அறுவடை செய்வோம்

4. பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே
எல்லாவற்றையும் செய்ய பெலன் உண்டு

5. பரம அழைத்தலின் பந்தய பொருளுக்காய்
இலக்கை நோக்கி நாம் படகை ஓட்டுவோம்

6. உலகில் இருக்கிற அலகையைவிட
என்னில் இருப்பவர் மிகவும் பெரியவர்

# பயமில்லையே

பயமில்லையே.. பயமில்லையே
பயமே எனக்கு இல்ல இனி

1. அநாதி தேவன் அடைக்கலமானாரே
அவரது புயங்கள் ஆதாரமாயிற்றே

2. இரட்சிக்கப்பட்ட பாக்கியவான் நானே
எனக்கு ஒப்பான மனிதன் யாருண்டு

3. சகாயம் செய்யும் கேடகமானாரே
வெற்றி தருகின்ற பட்டயம் ஆனாரே

4. பாதுகாப்புடன் சுகமாய் வாழ்ந்திடுவேன்
திராட்சை ரசமும் தானியமும் உண்டு
(இயேசுவின் இரத்தமும் வார்த்தையம் எனக்குண்டு)

5. எனது வானம் பனியைப் பெய்திடுமே
மழையைப் பொழிந்து தேசத்தை நிரப்பிடுமே

6. எதிரி என்முன் கூனிக் குறுகிடுவார்
அவன் தலை மேலே ஏறி மிதித்திடுவேன்

# பசுமையான புல் வெளியில்

பசுமையான புல் வெளியில் படுக்க வைப்பவரே
அமைதியான தண்ணீரண்டை அழைத்துச் செல்பவரே (2)

என் மேய்ப்பரே நல் ஆயனே எனக்கொன்றும் குறையில்லப்பா - (2)
நோய் இல்லாத சுக வாழ்வு எனக்குத் தந்தவரே
கரம் பிடித்து கடன் இல்லாது நடத்திச் செல்பவரே
பசுமையான புல் வெளியில்

1. புதிய உயிர் தினம் தினம் எனக்குத் தருகிறீர்
உம் பெயரிற்கேற்ப பரிசுத்தமாய் நடத்திச் செல்கிறீர் - (2)
என் மேய்ப்பரே நல் ஆயனே

2. மரண இருள் பள்ளத்தாக்கில் நடக்க நேர்ந்தாலும்
அப்பா நீங்க இருப்பதால் எனக்குப் பயமில்ல - (2)
என் மேய்ப்பரே நல் ஆயனே

3. ஜீவனுள்ள நாட்களெல்லாம் நன்மை தொடருமே
என்தேவன் வீட்டில் தினம் தினம் தங்கி மகிழ்வேனே - (2)
என் மேய்ப்பரே நல் ஆயனே

4. கரங்களாலே அணைத்துக் கொண்டு சுமந்து செல்கிறீர்
மறந்திடாமல் உணவு கொடுத்து பெலன் தருகிறீர் - (2)
என் மேய்ப்பரே நல் ஆயனே

# பரலோகந்தான் என் பேச்சு

பரலோகந்தான் என் பேச்சு
பரிசுத்தம்தான் என் மூச்சு
கொஞ்சக்காலம் இந்த பூமியிலே
இயேசுவுக்காய் சுவிசேஷத்திற்காய்
தானான தனனா தானானனா
தானான தனனா தானானனா

1. என் இயேசு வருவார் மேகங்கள் நடுவே
தன்னோடு சேர்த்துக் கொள்வார்
கூடவே வைத்துக் கொள்வார் - என்னை

2. உருமாற்றம் அடைந்து
முகமுகமாக என் நேசரைக் காண்பேன்
தொட்டு தொட்டுப் பார்ப்பேன் .. இயேசுவை

3. சங்கீதக்காரன் தாவீதை காண்பேன்
பாடச் சொல்லி கேட்பேன் - அங்கு
சேர்ந்து பாடிடுவேன் - நான்
நடனமாடிடுவேன்

4. என் சொந்த நேசம் பரலோகமே
எப்போது நான் காண்பேன்
ஏங்குகிறேன் தினமும் - நான்

5. கண்ணீர்கள் யாவும் துடைக்கப்படும்
கவலைகள் மறைந்து விடும்
எல்லாமே புதிதாகும்

6. என்னோடுகூட கோடான கோடி
ஆன்மாக்கள் சேர்த்துக் கொள்வேன்
கூட்டி சென்றிடுவேன்

# பரிசுத்த ஆவியே பக்தர்கள்

பரிசுத்த ஆவியே பக்தர்கள் துணையாளரே
கூட இருப்பவரே குறைகள் தீர்ப்பவரே

1. தேற்றிடும் தெய்வமே
திடம் தருபவரே
ஊற்றுத் தண்ணீரே
உள்ளத்தின் ஆறுதலே - எங்கள்

2. பயங்கள் நீக்கிவிட்டீர்
பாவங்கள் போக்கிவிட்டீர்
ஜெயமே உம் வரவால்
ஜெபமே உம் தயவால் - தினம்

3. அபிஷேக நாதரே
அச்சாரமானவரே
மீட்பின் நாளுக்கென்று
முத்திரையானவரே - எங்கள்

4. விடுதலை தருபவரே
விண்ணப்பம் செய்பவரே
சாட்சியாய் நிறுத்துகிறீர்
சத்தியம் போதிக்கிறீர் - தினம்

5. அயல்மொழி பேசுகிறோம்
அதிசயம் காண்கிறோம்
வரங்கள் பெறுகிறோம்
வளமாய் வாழ்கிறோம்

6. சத்துரு வரும் போது
எதிராய் கொடி பிடிப்பீர்
எக்காளம் ஊதுகிறோம்
எதிரியை வென்று விட்டோம்

# பரிசுத்தமே பரன்

பரிசுத்தமே பரன் இயேசு தங்குமிடம்
பக்தர்கள் தேடும் தேவாலயம்

1. கர்த்தர் மலைமேல் ஏறிச்சென்று
நிற்கக் கூடியவன் யார்?
மாசற்ற செயல் தூய உள்ளம்
உடைய மனிதனே

2. நாமெல்லாம் பரிசுத்தராவதே
தெய்வத்தின் திருச்சித்தம்
பரிசுத்தமின்றி தெய்வத்தை யாரும்
தரிசிக்க முடியாது

3. பரிசுத்தரென்றே ஓய்வின்றிப் பாடும்
பரலோக கூட்டத்தோடு
வெண்ணாடை அணிந்து குருத்தோலை ஏந்தி
எந்நாளும் பாடுவேன் - 2

# பள்ளங்களெல்லாம் நிரம்பிட

பள்ளங்களெல்லாம் நிரம்பிட வேண்டும்
மலைகள் குன்றுகள் தகர்ந்திட வேண்டும்
கோணலானவை நேராகணும்
கரடானவை சமமாகணும்
ராஜா வருகிறார் ஆயத்தமாவோம் (2)
இயேசு வருகிறார் எதிர் கொண்டு செல்வோம்

1. நல்ல கனிகொடா மரங்களெல்லாம்
வெட்டுண்டு அக்கினியில் போடப்படும்

2. கோதுமையைப் பிரித்து களஞ்சியத்தில் சேர்த்து
பதரையோ அக்கினியில் சுட்டெரிப்பாரே

3. அந்நாளில் வானம் வெந்து அழியும்
பூமியெல்லாம் எரிந்து உருகிப் போகும்

4. கரையில்லாமலே குற்றமில்லாமலே
கர்த்தருக்காய் வாழ்ந்து முன்னேறுவோம்

5. அநுதினமும் ஜெபத்தில் விழித்திருப்போம்
அபிஷேக எண்ணெய்யால் நிரம்பிடுவோம்

# பாவமன்னிப்பின் நிச்சயத்தை

பாவ மன்னிப்பின் நிச்சயத்தை
பெற்றுக் கொள்ள வேண்டும்
பரலோகத்தில் ஓர் இடம் நீ பெற வேண்டும்
இயேசு தருகிறார் இன்று தருகிறார்
அதற்காகத் தான் சிலுவையிலே
இரத்தம் சிந்தி விட்டார்

1. முதன் முதலாய் தேவனுக்கு உகந்ததைத் தேடு
பின்பு எல்லாமே உனக்கு சேர்த்துத் தந்திடுவார்

2. நீ தேடும் நிம்மது இயேசு தருகிறார்
நீ நாடும் விடுதலை அவரிடம் உண்டு

3. வருத்தப்பட்டு பாரங்கள் சுமக்கின்ற மகனே (ளே)
வருவாயா இயேசு இன்று வாழ்வு தந்திடுவார் - நீ

4. இரத்தம் சிந்துதல் இல்லாமல் பாவ மன்னிப்பில்லை
இயேசுராஜா நாமம் இல்லாமல் இரட்சிப்பும் இல்லை

# பாடுவோம் மகிழ்வோம்

பாடுவோம் மகிழ்வோம்
கொண்டாடுவோம்
அப்பா சமூகத்தில் பாடி
மகிழ்ந்து கொண்டாடுவோம்

1. அக்கினி மதில் நீரே
ஆறுதல் மழை நீரே
இக்கட்டில் துணை நீரே
இருளில் வெளிச்சம் நீரே - நன்றி

2. துயர் நீக்கும் மருத்துவரே
என் துதிக்குப் பாத்திரரே
பெலனெல்லாம் நீர்தானையா
என் பிரியமும் நீர்தானையா

3. கல்வாரி சிலுவையினால் - என்
சாபங்கள் உடைந்ததையா
ஆபிரகாமின் ஆசீர்வாதங்கள் - இந்த
அடிமைக்கு கிடைத்ததையா

4. இயேசுவே உம் இரத்தத்தால்
என்னை நீதிமானாய் மாற்றினீரே
பரிசுத்த ஆவி தந்து - உம்
அன்பை ஊற்றினீரே

5. உம்மையே நம்பி வாழ்வதால்
உமக்கே சொந்தமானேன் - என்
உயிரான கிறிஸ்து வந்தால் - உம்
உறவுக்குள் வந்துவிட்டேன்

6. இவ்வுலகப் போக்கின்படி
நான் வாழ்ந்தேன் பலநாட்கள்
உம்மோடு இணைத்தீரைய்யா - உம்
மிகுந்து இரக்கத்தினால்

7. வாழ்வு தரும் ஊற்று நீரே
வழிகாட்டும் தீபம் நீரே
புயலில் புகலிடமே - கடும்
வெயிலில் குளிர் நிழலே

# பிதாவே ஆராதிக்கின்றோம்

பிதாவே ஆராதிக்கின்றோம்
இயேசுவே ஆர்ப்பரிக்கின்றோம்
ஆவியானவரே அன்பு செய்கின்றோம்
ஆராதிக்கின்றோம்
ஆர்ப்பரிக்கின்றோம்
அன்பு செய்கின்றோம் - உம்மை

1. மகனாக தெரிந்து கொண்டீர்
மறுபடி பிறக்க வைத்தீர்
ராஜாக்களும் நாங்களே
ஆசாரியாகளும் நாங்களே

2. சகலமும் படைத்தவரே
சர்வ வல்லவரே
மகிமைக்கு பாத்திரரே
மங்காத பிரகாசமே

3. ஸ்தோத்திரமும் கனமும்
வல்லமையும் பெலனும்
மாட்சிமையும் துதியும்
எப்போதும் உண்டாகட்டும்

4. பரிசுத்தர் பரிசுத்தர்
பரலோக ராஜாவே
எப்போதும் இருப்பவரே
இனிமேலும் வருபவரே

5. உமது செயல்களெல்லாம்
அதிசயமானவைகள்
உமது வழிகளெல்லாம்
சத்தியமானவைகள்

# பிரியமானவனே உன் ஆத்துமா

பிரியமானவனே - உன்
ஆத்துமா வாழ்வது போல் - நீ
எல்லாவற்றிலும் வாழ்ந்து
சுகமாய் இரு மகனே (மகளே)

1. வாழ்க்கை என்பது போராட்டமே
நல்லதொரு போராட்டமே
ஆவிதரும் பட்டயத்தை
எடுத்துப் போராடி வெற்றி பெறு

2. பிரயாணத்தில் மேடு உண்டு
பள்ளங்களும் உண்டு
மிதித்திடுவாய் தாண்டிடுவாய்
மான் கால்கள் உனக்குண்டு மறவாதே

3. ஓட்டப் பந்தயம் நீ ஓடுகிறாய்
ஒழுங்கின்படி ஓடு மகனே
நெருங்கிவரும் பாவங்களை
உதறித் தள்ளிவிட்டு ஓடு மகனே

# புகழ்கின்றோம்

புகழ்கின்றோம் உம்மையே புகழ்கின்றோம்
போற்றிப் புகழ்ந்து பாடுகின்றோம்
உயர்த்துகிறோம் உன்னதரே உயர்த்தி மகிழ்கின்றோம்
புகழ்கின்றோம் புண்ணியரே புகழ்ந்து பாடுகின்றோம்
உம்மைப் புகழ்ந்து பாடுகின்றோம்
உயர்த்தி மகிழ்கின்றோம் (2)

1. நூற்றுவத் தலைவனை தேற்றினீரே
வார்த்தையை அனுப்பி வாழ வைத்தீர்
விசுவாசம் பெரிதென்று பாராட்டினீர்
விண்ணக விருந்தில் இடம் கொடுத்தீர்

2. கல்லறை லேகியோனை தேடிச் சென்றீர்
ஆறாயிரம் பேய்களை ஓடச் செய்தீர்
ஆடை அணிந்து அமரச் செய்தீர்
ஆர்வமாய் சாட்சி பகரச் செய்தீர்

3. பெதஸ்தா குளத்து முடவனையே
படுக்கை எடுத்து நடக்கச் செய்தீர்
இனியும் பாவம் செய்யாதே என்று
எச்சரித்தீரே தேடிச் சென்று

4. தோல்வியில் துவண்ட பேதுருவின்
படகில் ஏறி போதித்தீரே
படகு நிறைய மீன்கள் தந்தீர்
பாவநிலையை உணர வாத்தீர்

5. மரத்தில் அமர்ந்த சகேயுவை
மனகிரங்கி நோக்கினீரே
இறங்கி வாரும் என்று அழைத்து
இரட்சிப்பு தந்து மகிழச் செய்தீர்

6. பர்த்திமேயு குருடனை பார்த்தீரே
பரிசுத்தர் உம்மையே பார்க்க வைத்தீர்
உந்தன் பின்னே நடக்க வைத்தீர்
உம்மை போற்றி புகழச்செய்தீர்

# புதிய பாடல் பாடி பாடி இயேசு

புதிய பாடல் பாடி பாடி இயேசு
ராஜாவைக் கொண்டாடுவோம்
புகழ்ந்து பாடல் பாடி பாடி இயேசு
ராஜாவைக் கொண்டாடுவோம்

1. கழுவினார் இரத்தத்தாலே
சுகம் தந்தார் காயத்தாலே
தேற்றினார் வசனத்தாலே
திடன் தந்தார் ஆவியாலே - எனக்கு

2. உறுதியாய் பற்றிக் கொண்டோம்
உம்மையே நம்பி உள்ளோம்
பூரண சமாதானம்
புவிதனில் தருபவரே - தினமும்

3. அதிசயமானவரே
ஆலோசனைக் கர்த்தரே
வல்லமை உள்ள தேவா
வரங்களின் மன்னவனே - எல்லா

4. கூப்பிட்டேன் பதில் வந்தது
குறைவெல்லாம் நிறைவானது
மகிமையின் ராஜா அவர்
மகத்துவமானவரே - இயேசு

5. மாலையில் அழுகை என்றால்
காலையில் அக்களிப்பு
கோபமோ ஒரு நிமிடம்
கிருபையோ நித்தம் நித்தம் - அவர்

# புதிய வாழ்வு தரும்

புதிய வாழ்வு தரும் புனித ஆவியே
பரிசுத்த தெய்வமே பரலோக தீபமே

1. இருள் நிறைந்த உலகத்திலே
வெளிச்சமாய் வாருமையா
பாவ இருள் நீக்கி பரிசுத்தமாக்கும்
பரமனே வாருமையா
வரவேண்டும் வல்லவரே
வரவேண்டும் நல்லவரே
வரவேண்டும் வரவேண்டும்

2. தடைகள் நீக்கும் தயாபரரே
உடையாய் வாருமையா
ஒடுங்கிப் போன எங்கள் ஆவியை விரட்டி
உற்சாகம் தாருமையா

3. எண்ணெய் அபிஷேகம் எங்கள் மேலே
நிரம்பி வழியணுமே
மண்ணான உடலை வெறுத்து வெறுத்து என்றும்
பண்பாடி மகிழணுமே

4. உலகம் எங்கிலும் சுவைத்தரும் வெண்ணிற
உப்பாய் மாறணுமே
இலைகள் உதிராமல் கனிகள் தந்திடும்
மரமாய் வளரணுமே

5. துயரம் நீக்கி ஆறுதல் அளிக்கும்
தூயவர் வரவேணுமே
புலம்பல் மாற்றி மகிழ்ச்சியூட்டும்
புனிதரே வரவேணுமே

# பூமியின் குடிகளே வாருங்கள்

பூமியின் குடிகளே வாருங்கள்
கர்த்தரை கெம்பீரமாய் பாடுங்கள்

1. மகிழ்வுடனே கர்த்தருக்கு
ஆராதனை செய்யுங்கள்
ஆனந்த சப்தத்தோடே
திருமுன் வாருங்கள் - அவர்

2. கர்த்தரே நம் தேவனென்று
என்றும் அறிந்திடுங்கள்
அவரே நம்மை உண்டாக்கினார்
அவரின் ஆடுகள் நாம்

3. துதியோடும் புகழ்ச்சியோடும்
வாசலில் நுழையுங்கள்
அவர் நாமம் துதித்திடுங்கள்
ஸ்தோத்திர பலியிடுங்கள்

4. நம் கர்த்தரோ நல்லவரே
கிருபை உள்ளவரே
அவர் வசனம் தலைமுறைக்கும்
தலைமுறைக்கும் உள்ளது

# பெராக்காவில் கூடுவோம்

பெராக்காவில் கூடுவோம்
கர்த்தர் நல்வர் - என்று
பாடுவோம் பாடுவோம்

1. எதிரியை முறியடித்தார் பாடுவோம்
இதுவரை உதவி செய்தார் பாடுவோம்

2. நமக்காய் யுத்தம் செய்தார் பாடுவோம்
நாளெல்லாம் பாதுகாத்தார் பாடுவோம்

3. இளைப்பாறுதல் தந்தார் பாடுவோம்
இதயம் மகிழச் செய்தார் பாடுவோம்

4. சமாதானம் தந்தாரே பாடுவோம்
சந்தோஷம் தந்தாரே பாடுவோம்

5. யெகோவா மெக்காதீஸ் ஸ்தோத்திரம்
பரிசுத்தம் தருகிறீர் ஸ்தோத்திரம்

6. யெகோவா ஸிட்கேனு ஸ்தோத்திரம்
எங்கள் நீதியே ஸ்தோத்திரம்

7. யெகோவா ஒசேனு ஸ்தோத்திரம்
உருவாக்கும் தெய்வமே ஸ்தோத்திரம்

# பொருட்கள் மேல கண்ணு

பொருட்கள் மேல கண்ணு போச்சுனா
போச்சய்யா உன் அபிஷேகம்
ஆட்கள் மேல கண்ணு போச்சுன்னா
அம்போதான் உன் அபிஷேகம்
காத்துக்கொள் காத்துக்கொள்
பெற்றுக்கொண்ட அபிஷேகத்தைக் காத்துக்கொள்

1. பெருமை என்ற வலையில் விழாதே
அது வறுமையைக் கொண்டு வந்திடும்
பணத்திலே மயங்கி விடாதே - உன்னை
பாதாளம் கொண்டு பொய்விடும்

2. அழிந்து போகும் உலகப் பொருட்களால்
நண்பர்களை சம்பாதித்துக் கொள்
நீ மரித்தால் நத்திய வீட்டில் (உன்னை)
நிரந்தரமாய் ஏற்றுக் கொள்வார்கள்

3. அழைத்த அழைப்பில் நிலைத்திருந்தால் - நீ
அபிஷேகத்தைக் காத்துக் கொள்ளலாம்
அழைத்தவர் உண்மையுள்ளவர் - உன்னை
அநுதினமும் நடத்திச் செல்வாரே

# போதகர் வந்து வீட்டார்

போதகர் வந்து வீட்டார்
உன்னைத்தான் அழைக்கிறார்
எழுந்து வா (4)

1. கண்ணீர் கடலில் மூழ்கி
கலங்கி தவிக்கிறாயோ
கலங்காதே திகையாதே
கர்த்தர் உன் அடைக்கலம் - மகளே

2. பாவச்சேற்றில் மூழ்கி
பயந்து சாகிறாயோ
தேவமைந்தன் தேடுகிறார்
தேற்றிட அழைக்கிறார் மகளே

3. கல்வாரி சிலுவையைப் பார்
கதறும் இயேசுவைப் பார்
உன் பாடுகள் ஏற்றுக் கொண்டார்
உன் துக்கம் சுமந்து கொண்டார்

4. துன்பம் துயரம் உன்னை
சோர்வுக்குள் ஆக்கியதோ
அன்பர் இயேசு அழைக்கிறார்
அணைக்கத் துடிக்கிறார்

# போதுமானவரே புதுமையானவரே

போதுமானவரே புதுமையானவரே
பாதுகாப்பவரே என் பாவம் தீர்த்தவரே
ஆராதனை (2) ஆயுளெல்லாம் ஆராதனை

1. எனக்காக தண்டிக்கப்பட்டீரே
அதனால் நான் மன்னிக்கப்பட்டேன்
எனக்காக காயப்பட்டீரே
அதனால் நான் சுகம் பெற்றுக் கொண்டேன்
- ஆராதனை

2. பாவங்கள் சுமந்ததனால் - நான்
நீதிமானாய் மாற்றப்பட்டேன்
மரணத்தை ஏற்றுக் கொண்டதால் - நித்திய
ஜீவனை பெற்றுக் கொண்டேன் ஐயா

3. எனக்காக புறக்கணிக்கப்பட்டீர்
அதனால் நான் ஏற்றுக் கொள்ளப்பட்டேன்
எனக்காக அவமானமடைந்து - உம்
மகிமையிலே பங்குபெறச் செய்தீர்

4. சிலுவையிலே ஏழ்மையானதால் - என்னை
செல்வந்தனாய் மாற்றிவிட்டீரே - நீர்
சாபங்களை சுமந்து கொண்டதால் - நான்
ஆசிர்வாதம் பெற்றுக் கொண்டேன்

# போராடும் என் நெஞ்சமே

போராடும் என் நெஞ்சமே
புகலிடம் மறந்தாயோ
பாராளும் இயேசு உண்டு
பதறாதே மனமே

1. அலைகடல் நடுவினிலே
அமிழ்ந்து போகின்றாயோ
கரம் நீட்டும் இயேசுவைப் பார்
கரை சேர்க்கும் துணை அவரே..
ஆ... ஆனந்தம் பேரானந்தம்
என் அருள்நாதர் சமூகத்திலே (2) - போராடும்

2. கடந்ததை நினைத்து தினம்
கண்ணீர் வடிக்கின்றாயோ
நடந்ததெல்லாம் நன்மைக்கே
நன்றி நன்றி சொல்லு
ஆ...ஆனந்தம் பேரானந்தம்
என் அருள்நாதர் சமூகத்திலே (2) - போராடும்

3. வருங்கால பயங்களெல்லாம்
வாட்டுதோ அனுதினமும்
அருள்நாதர் இயேசுவிடம்
அனைத்தையும் கொடுத்துவிடு
ஆ... ஆனந்தம் பேரானந்தம்
என் அருள்நாதர் சமூகத்திலே (2) - போராடும்

4. நண்பன் கைவிட்டானோ
நம்பினோர் எதிர்த்தனரோ
கைவிடா நம் தேவனின்
கரம் பற்றி நடத்திடு
ஆ... ஆனந்தம் பேரானந்தம்
என் அருள்நாதர் சமூகத்திலே (2) - போராடும்

# போவாஸ் போவாஸ்

போவாஸ் போவாஸ்
போர்வையால் என்னை மூடுமையா
இயேசையா இயேசையா உம்
அன்பினால் என்னை மூடுமையா

1. உந்தன் அடிமை நான் ஐயா - என்னைக்
காப்பாற்றும் கடமை உமக்கையா

2. நிறைவான பரிசு நீர்தானையா - உம்
நிழல்தானே தங்கும் சொர்க்கமையா

3. வேதனையோ வேறு சோதனையோ
எதுவுமே என்னை பிரிக்காதையா

4. ஒய்வின்றி கதிர்கள் பொறுக்கிடுவேன்
வேறொரு வயல் நான் போவதில்லை

5. கற்றுத்தாரும் நான் கடைபிடிப்பேன்
சொல்வதை செய்து முடித்திடுவேன்

6. போர்வை விரித்தேன் போடுமையா
கோதுமையால் என்னை நிரப்புமையா

7. கருணைக்கண் கொண்டு நோக்குமையா - உந்தன்
கனிமொழியால் என்னைத் தேற்றுமையா

8. திருப்தியாக்கும் என் திருஉணவே
தாகம் தீர்க்கும் ஜீவத் தண்ணீரே

# மகிமையடையும் இயேசு

மகிமையடையும் இயேசு ராஜனே
மாறாத் நல்ல மேய்ப்பனே
உந்தன் திருநாமம் வாழ்க
உலகெங்கும் உம் அரசு வருக - வருக

1. உலகமெல்லாம் மீட்படைய
உம் ஜீவன் தந்தீரையா

2. பாவமெல்லாம் கழுவிடவே
உம் இரத்தம் சிந்தினீரே

3. சாபமெல்லாம் போக்கிடவே
முள்முடி தாங்கினீரே

4. என் பாடுகள் ஏற்றுக் கொண்டீர்
என் துக்கம் சுமந்தீரையா

5. கசையடிகள் எனக்காக
காயங்கள் எனக்காக

6. நோய்களெல்லாம் நீக்கிடவே
காயங்கள் பட்டீரையா

# மகிமை உமக்கன்றோ

மகிமை உமக்கன்றோ
மாட்சிமை உமக்கன்றோ
துதியும் புகழும் ஸ்தோத்திரமும்
தூயவர் உமக்கன்றோ
ஆராதனை - ஆராதனை - என்
ஆன்பர் இயேசுவுக்கே

1. விலையேறப் பெற்ற உம் இரத்தத்தால்
விடுதலை கொடுத்தீர்
இராஜாக்களாக லேவியராக
உமக்கென தெரிந்து கொண்டீர்

2. விழிகாட்டும் தீபம் துணையாளரே
தேற்றும் தெய்வமே
அன்பால் பெலத்தால்
அனல்மூட்டும் ஐயா அபிஷேக நாதரே

3. எப்போதும் இருக்கின்ற
இனிமேலும் வருகின்ற எங்கள் ராஜாவே
உம் நாமம் வாழ்க உம் அரசு வருக
உம் சித்தம் நிறைவேறுக

4. உம் வல்ல செயல்கள்
மிகவும் பெரிய அதிசயமன்றோ
உம் தூய வழிகள் நேர்மையான
சத்திய தீபமன்றோ

# மகிமையின் நம்பிக்கையே

மகிமையின் நம்பிக்கையே
மாறிடாத என் இயேசையா
உம்மையல்லோ பற்றிக் கொண்டேன்
உலகத்தில் வெற்றி கொண்டேன்
துதித்து துதித்து மகிழ்ந்து புகழ்ந்து
தூயவர் உம்மை நான் பாடுவேன்

1. ஆத்துமாவின் நங்கூரமே
அழிவில்லா பெட்டகமே
நேற்றும் இன்றும் ஜீவிக்கின்ற
நிம்மதியின் கன்மைலயே

2. பள்ளத்தாக்கில் நடந்தாலும்
பயமில்லை பாதிப்பில்லை
உம் குரலோ கேட்குதையா
உள்ளமெல்லாம் அன்பால் பொங்குதையா

3. நல் மேப்பவரே நம்பிக்கையே
நானும் உந்தன் ஆட்டுக்குட்டி
உம்மைத் தானே பின் தொடர்ந்தேன்
உம் தோளில்தான் நானிருப்பேன்

4. பிரகாசிப்பின் பேரொளியே
விடிவெள்ளி நட்சத்திரமே
உம் வசனம் ஏந்திக் கொண்டு
உலகெங்கும் சுடர்விடுவேன்

# மகிமையான பரலோகம் இருக்கையிலே

மகிமையான பரலோகம் இருக்கையிலே - நீ
மனம் உடைந்து போவதும் ஏனோ
ஆற்றித் தேற்றி அன்பர் இயேசு இருக்கையிலே - நீ
அஞ்சி அஞ்சி வாழ்வதும் ஏனோ
திடன் கொள் பெலன் கொள்
சோர்ந்திடாமல் தொடர்ந்து ஓடு

மகிமையான பரலோகம் இருப்பதனால்
நான் மனம் உடைந்து போகவே மாட்டேன்
ஆற்றி தேற்ற அன்பர் இயேசு இருப்பதனால்
நான் அஞ்சி அஞ்சி வாழ்ந்திட மாட்டேன்

திடம் கொண்டேன் பெலன் கொண்டேன்
சோர்ந்திடாமல் தொடர்ந்து ஓடுவேன்

# மகிழ்ந்து களிகூரு மகனே

மகிழ்ந்து களிகூரு மகனே (மகளே)
பயம் வேண்டாம்
மன்னவன் இயேசு உன் (நம்) நடுவில்
பெரியகாரியம் செய்திடுவார்.

1. தேவவையை நினைத்து திகையாதே
   தெய்வத்தைப் பார்த்து நன்றி சொல்லு
   கொஞ்சத்தைப் கண்டு குழம்பாதே
   கொடுப்பார் உண்டு கொண்டாடு

2. அப்பாவின் புகழை நீ பாடு
   அதுவே உனக்கு Safe Guard
   தப்பாமல் மகிழ்ந்து உறவாடு
   எப்போதும் வாழ்வாய் சுகத்தோடு

3. மீனின் வயிற்றில் யோனா போல்
   கூனிக் குறுகிப் போனாயோ
   பலியிடு துதியை சப்தத்தோடு
   விலகிடும் எல்லாம் வெட்கத்தோடு

4. நிலையான நகரம் நமக்கில்லை
   வரப்போகும் நகரையே நாடுகிறோம்
   இயேசுவை உயர்த்தும் ஸ்தோத்திரப்பலி
   இப்போதும் எப்போதும் செலுத்திடுவோம்

5. துதிக்கும் போது நம் நடுவில்
   உட்கார நாற்காலி போடுகிறோம்
   துதிகளை அரியணையாக்கிடுவார்
   வந்து அமர்ந்து மகிழ்ந்துடுவார்

# மலை மேல் ஏறி

மலை மேல் ஏறி வந்தேன் தகப்பனே
மறுரூபம் ஆகணுமே தகப்பனே - ஜெப
உலகை மறக்கணுமே தகப்பனே
உம்குரல் கேட்கணும் நாள்முழுதும்

1. காலையும் மாலையும் மதிய வேளையும்
கைகள் உமை நோக்கி உயரணுமே
அழியும் உலகத்திற்காய் கதறணுமே
அறுத்துக் களஞ்சியத்தில் சேர்க்கணுமே

2. உமது வார்த்தைகள் உணவாய் மாறணும்
ஒவ்வொரு நாளும் தியானிக்கணும்
வேதத்தின் வெளிச்சத்திலே நடக்கணும்
வெற்றிக் கீதங்கள் நான் பாடணும்

3. ஞானத்தைப் போதித்து அறிவை உணர்த்தி
தீர்க்கதரிசனம் சொல்லணும்
ஆவிகள் பகுத்தறியும் வரம் வேண்டும்
வியாதிகள் நீக்கும் ஆற்றல் வேண்டும்

4. ஆவியில் நிரம்பணும் அயல்மொழி பேசணும்
ஆதிசயம் காணணுமே தகப்பனே
ஊழியம் செய்யணுமே தகப்பனே
ஓடி ஓடி உழைக்கணுமே

# மலைமேல் ஏறுவோம்

மலைமேல் ஏறுவோம்
மரங்களை வெட்டுவோம்
ஆலயம் கட்டுவோம்
அவர் பணி செய்திடுவோம்
நாடெங்கும் சென்றிடுவோம்
நற்செய்தி சொல்லிடுவோம்
சபைகளை நிரப்பிடுவோம்
சாட்சியாய் வாழ்ந்திடுவோம்

1. தேவனின் வீடு பாழாய்க் கிடக்குதே
நாமோ நமக்காய் வாழ்வது நியாயமா - 2
வாழ்வது நியாயமா
நாடெங்கும் சென்றிடுவோம்

2. திரளாய் விதைத்தும் கொஞ்சமாய் அறுப்பதேன்
வருகின்ற பணமெல்லாம் வீணாய்ப் போவதேன் - 2
வீணாய்ப் போவதேன்
நாடெங்கும் சென்றிடுவோம்

3. மனம் தளராமல் பணியைத் தொடருங்கள்
படைத்தவர் நம்மோடு பயமே வேண்டாம்
பயமே வேண்டாம்
நாடெங்கும் சென்றிடுவோம்

4. தேவன் தந்த ஆரம்ப ஊழியத்தை
அற்பமாய் எண்ணாதே அசட்டை பண்ணாதே
அசட்டை பண்ணாதே
நாடெங்கும் சென்றிடுவோம்

5. ஜனங்கள் விரும்புகின்ற தலைவர் வந்திடுவார்
மகிமையால் நிரப்பிடுவார் மறுரூபமாக்கிடுவார்
மறுரூபமாக்கிடுவார்
மலைமேல் ஏறுவோம்

# மரித்த இயேசு

மரித்த இயேசு உயிர்த்து விட்டார் அல்லேலூயா
மன்னன் இயேசு ஜீவிக்கிறார் அல்லேலூயா
அல்லேலூயா ஜீவிக்கிறார் - (2)
அல்லேலூயா அல்லேலூயா ஜீவிக்கிறார்

1. மரணம் அவரைத் தடுத்து நிறுத்த முடியவில்லையே
கல்லறையோ கட்டிக்காக்க முடியவில்லையே
யூதசிங்கம் கிறிஸ்துராஜா வெற்றி பெற்றாரே
சோர்ந்து போன மகனே நீ துள்ளிப் பாடிடு

2. கண்ணீரோடு மரியாள் போல அவரைத் தேடுவோம்
கர்த்தர் இயேசு நமக்கும் இன்று காட்சி தருவார்
கனிவோடு பெயர்சொல்லி அழைத்திடுவார்
கலக்கமின்றி காலமெல்லாம் சாட்சி பகர்வோம்

3. எம்மாவூர் சீடரோடு நடந்து சென்றார்
இறைவார்த்தை போதித்து ஆறுதல் தந்தார்
அப்பம்பிட்டு கண்களையே திறந்து வைத்தார்
அந்த இயேசு நம்மோடு நடக்கின்றார்

4. அஞ்சாதே முதலும் முடிவும் இயேசுதானே
இறந்தாலும் எந்நாளும் வாழ்கின்றவர்
நாவினாலே அறிக்கை செய்து மீட்படைவோம்
நாள்தோறும் புதபெலனால் நிரம்பிடுவோம்

# மரணமே மரணமே உன் கூர் எங்கே?

மரணமே உன் கூர் எங்கே?
பாதாளமே உன் ஜெயம் எங்கே? - (2)
மரணத்தை ஜெயித்த மன்னவன் இயேசு எனக்குள் வந்துவிட்டார்
சாவை அழித்து அழியா வாழ்வை எனக்குத் தந்து விட்டார் - 2
மரணமே உன் கூர் எங்கே?

1. சாவுக்கு அதிபதி சாத்தானை - இயேசு
சாவாலே வென்று விட்டார் - 2
மரண பயத்தினால் வாடும் மனிதரை
விடுவித்து மீட்டுக் கொண்டார் - 2
பயமில்லையே மரண பயமில்லையே
ஜெயம் எடுத்தர் இயேசு ஜெயம் எடுத்தார்
மரணமே உன் கூர் எங்கே?

2. அழிவுக்கு உரிய இவ்வுடல் - ஒருநாள்
அழியாமை அணிந்து கொள்ளும் - 2
சாவுக்கு உரிய இவ்வுடம் ஒருநார்
சாகாமை அணிந்து கொள்ளும் - 2
பயமில்லையே மரண பயமில்லையே
ஜெயம் எடுத்தர் இயேசு ஜெயம் எடுத்தார்
மரணமே உன் கூர் எங்கே?

3. இறந்தோர் மேலும் வாழ்வோர் மேலும்
ஆளுகை செய்திடவே - 2
இயேசு மரித்து உயிர்த்து எழுந்தார்
இன்றைக்கும் ஜீவிக்கிறார் - 2
பயமில்லையே மரண பயமில்லையே
ஜெயம் எடுத்தர் இயேசு ஜெயம் எடுத்தார்
மரணமே உன் கூர் எங்கே?

4. கட்டளை பிறக்க சுதன் குரல் ஒலிக்க
கர்த்தர் இயேசு வந்திடுவார் - 2
கிறிஸ்துவிற்குள் வாழ்வோர் கிறிஸ்துவிற்குள் மரித்தோர்
எதிர் கொண்டு சென்றிடுவோம் - 2
பயமில்லையே மரண பயமில்லையே
ஜெயம் எடுத்தர் இயேசு ஜெயம் எடுத்தார்
மரணமே உன் கூர் எங்கே?

# மனம் இரங்கும் தெய்வம் இயேசு

மனம் இரங்கும் தெய்வம் இயேசு
சுகம் தந்து நடத்திச் செல்வார் (2)
யெகோவா ராபா இன்றும் வாழ்கிறார்
சுகம் தரும் தெய்வம் இயேசு இன்று தருகிறார்
மனம் இரங்கும் தெய்வம் இயேசு

1. பேதுரு வீட்டிற்குள் நுழைந்தார்
மாமி கரத்தை பிடித்துத் தூக்கினார் (2)
காய்ச்சல் உடனே நீங்கிற்று
அவள் கர்த்தர் தொண்டு செய்து மகிழ்ந்தாள் (2)
யெகோவா ராபா

2. குஸ்டரோகியைக் கண்டார் இயேசு
கரங்கள் நீட்டித் தொட்டார் (2)
சித்தமுண்டு சுத்தமாகு - என்று
சொல்லித் சுகத்தைத் தந்தார்
யெகோவா ராபா

3. நிமிர முடியாத கூனி - அன்று
இயேசு அவளைக் கண்டார் - (2)
கைகள் அவள் மேலே வைத்தார் - உடன்
நிமிர்ந்து குதிக்கச் செய்தார்
யெகோவா ராபா

4. பிறவிக் குருடன் பத்திமேயூ - அன்று
இயேசுவே இரங்கும் என்றான் - (2)
பார்வை அடைந்து மகிழ்ந்தான் - உடன்
இயேசு பின்னே நடந்தான்
யெகோவா ராபா

# மனதுருகும் தெய்வமே

மனதுருகும் தெய்வமே இயேசைய்யா
மனதாரத் துதிப்பேன் ஸ்தோத்தரிப்பேன்
நீர் நல்லவர் சர்வ வல்லவர்
உம் இரக்கத்திற்கு முடிவே இல்லை
உம் அன்பிற்கு அளவே இல்லை
அவை காலைதோறும் புதிதாயிருக்கும்

1. மெய்யாக எங்களது
பாடுகளை ஏற்றுக் கொண்டு
துக்கங்களை சுமந்து கொண்டீர் - ஐயா

2. எங்களுக்கு சமாதானம்
உண்டு பண்ணும் தண்டனையோ
உம்மேலே விழுந்ததையா - ஐயா

3. சாபமான முள்முடியை
தலைமேலே சுமந்து கொண்டு
சிலுவையிலே வெற்றி சிறந்தீர் - ஐயா

4. எங்களது மீறுதலால்
காயப்பட்டீர் நொறுக்கப்பட்டீர்
தழும்புகளால் சுகமானோம் - உந்தன்

5. தேடிவந்த மனிதர்களின்
தேவைகளை அறிந்தவராய்
தினம் தினம் அற்புதம் செய்தீர் - ஐயா

# மாரநாதா

மாரநாதா... இயேசு நாதா
சீக்கிரம் வாரும் ஐயா
வாரும் நாதா இயேசு நாதா (2)

1. மன்னவன் உம்மைக் கண்டு மறுரூபம் ஆகணுமே
விண்ணவர் கூட்டத்தோடு எந்நாளும் பாடணுமே

2. குடிவெறி களியாட்டம் அடியோடு அகற்றிவிட்டேன்
சண்டைகள் பொறாமைகள் என்றோ வெறுத்து விட்டேன் - நான்

3. பெருமைபாராட்டுகள் ஒருநாளும் வேண்டாம் ஐயா
சிற்றின்பம் பணமயக்கம் சிறிதளவும் வேண்டாம் ஐயா

4. நியமித்த ஓட்டத்திலே நித்தம் நான் ஓடிடுவேன்
நித்திய கிரீடம்தனை நிச்சயமாய்ப் பெற்றுக்கொள்வேன்

5. ஆவியில் நிரம்பிடுவேன் அயராது ஜெபித்திடுவேன்
அப்பாவின் சுவிசேஷம் எப்போதும் முழங்கிடுவேன்

6. உம்முகம் பார்க்கணுமே உம் அருகில் இருக்கணுமே
உம்பாதம் அமரணுமே உம்குரல் கேட்கணுமே

# முகமலர்ந்து கொடுப்பவரை கர்த்தர்

முகமலர்ந்து கொடுப்பவரை கர்த்தர் நேசிக்கிறார்
உற்சாக மனதுடனே கொடுத்திடுவோம்

1. வருத்தத்தோடல்ல, கட்டாயத்தாலல்ல
இருப்பதை விருப்பமுடன், கொடுத்திடுவோம்
விதை விதைத்திடுவோம் அறுவடை செய்வோம்

2. அதிகமாய் விதைத்தால், அதிக அறுவடை
ஏழ்மை நிலையிலிருந்து இன்றே விடுதலை
அளவின்றி கொடுத்து, செல்வர்களாவோம்
அமுக்கி குலுக்கி மடியில் அளந்து போடுவார்

3. ஏழைக்கு இரங்கி கொடுக்கும் போதெல்லாம்
கர்த்தருக்கு கடன் கொடுத்து திரும்ப பெற்றிடுவோம்
எந்த நிலையிலும் தேவையானதெல்லாம்
எப்போதும் நமக்கு தந்திடுவாரே

4. நற்செயல் செய்ய வேண்டிய அனைத்தும்
மிகுதியாகவே தந்திடுவாரே
எல்லா நன்மைகளால் நிரப்ப வல்லவர்
குறைகளை நிறைவாக்கி நடத்திடுவார்

# முடியாது முடியாது

முடியாது முடியாது
உம்மைப் பிரிந்து எதையும் செய்ய
முடியாது முடியாது - என்னால் (இயேசையா)

1. திராட்சை செடியே உம் கொடி நான்
உம்மோடு இணைந்து உமக்காய் படர்ந்து
உலகெங்கும் கனி தருவேன்

2. மண்ணோடு நான் ஒட்டி உள்ளேன்
உமது வார்த்தையால் இந்நாளில் என்னை
உயிர்ப்பியும் என் தெய்வமே

3. குயவன் நீர் களிமண் நான் - உமது
விருப்பம் போல் வனைந்துக் கொண்டு
உலகெங்கும் பயன்படுத்தும்

4. பெலப்படுத்தும் என் கிறிஸ்துவினால்
எதையும் செய்திட பெலனுண்டு
எல்லாம் நான் செய்திடுவேன்
எல்லாம் நான் செய்திடுவேன்
உம் துணையால் உம் கரத்தால்
எல்லாம் நான் செய்திடுவேன் .. இயேசையா

5. பூமியிலே பரதேசி நான் - உமது
வார்த்தையை ஒருபோதும் எனக்கு
மறைத்து விடாதேயும்

6. உம் வழிகள் கற்றுத்தாரும்
இறுதிவரை நான் பற்றிக் கொண்டு
எந்நாளும் கடைபிடிப்பேன்

# மேகமே மகிமையின் மேகமே

மேகமே மகிமையின் மேகமே
இந்த நாளிலே இறங்கி வாருமே
மேகமே மகிமையின் மேகமே
வந்தால் போதுமே எல்லாம் நடக்குமே

1. ஏகமாய் துதிக்கும்போது
இறங்கின மேகமே
ஆலயம் முழுவதும்
மகிமையால் நிரப்புமே

2. வானம் திறக்கணும்
தெய்வம் பேசணும்
நேச மகனென்று (மகளென்று)
நித்தம் சொல்லணும்

3. மறுரூபமாக்கிடும்
மகிமையின் மேகமே
முகங்கள் மாறணுமே
ஒளிமயமாகணுமே

4. வாழ்க்கைப்பயணத்திலே
முன்சென்ற மேகமே
நடக்கும் பாதைதனை
நாள்தோறும் காட்டுமே

5. கையளவு மேகம்தான்
பெருமழை பொழிந்தது
என் தேச எல்லையெங்கும்
பெருமழை (அருள்மழை) வேண்டுமே

# யாக்கோபே நீ வேரூன்றுவாய்

யாக்கோபே நீ வேரூன்றுவாய் - 2
பூத்து குலங்கிடுவாய்
காய்த்து கனி தருவாய்
பூமியெல்லாம் நிரப்பிடுவாய் இந்த
ஏன் மகனே(ளே) நீ வேரூன்றுவாய்

1. நானே காப்பாற்றுவேன்
நாள்தோறும் நீர் பாய்ச்சுவேன்
இரவும் பகலும் காத்துக் கொள்வேன் - உன்னை
எவரும் தீங்கிழைக்க விடமாட்டேன்

2. அருமையான மகன் அல்லவோ
பிரியமான பிள்ளையல்லவோ - நீ
உன்னை நான் இன்னும் நினைக்கின்றேன்
உனக்காக என் இதயம் ஏங்குகின்றது

3. நுகங்களை முறித்துவிட்டேன்
கட்டுகளை அறுத்துவிட்டேன்
இனிமேல் நீ அடிமை ஆவதில்லை
எனக்கே ஊழியம் செய்திடுவாய்

4. புதிய கூர்மையான
போரடிக்கும் கருவியாக்குவேன்
மலைகளை மிதித்து நொறுக்கிடுவாய்
குன்றுகளை தவிடு பொடியாக்குவாய்

5. மேடுகளை பிளந்து
ஆறுகள் தோன்ற செய்வேன்
பள்ளத்தாக்கின் நடுவினிலே
ஊற்றுகள் புறப்பட்டு ஓடச் செய்வேன்

6. நானே உங்கள் தேவன்
நீங்கள் என் பிள்ளைகள்
பாழான மண்மேடு கட்டப்படும்
பாடலும் ஆடலும் மீண்டும் கேட்கும்

# யார் என்னைக் கைவிட்டாலும்

யார் என்னைக் கைவிட்டாலும்
இயேசு கைவிடமாட்டார்

1. தாயும் அவரே தந்தையும் அவரே
தாலாட்டுவார் சீராட்டுவார்

2. வேதனை துன்பம் நெருக்கும் போதெல்லாம்
வேண்டிடுவேனே காத்திடுவாரே

3. எனக்காகவே மனிதனானார்
எனக்காகவே பாடுபட்டார்

4. இரத்தத்தாலே கழுவிவிட்டாரே
இரட்சிப்பின் சந்தோஷம் எனக்குத் தந்தாரே

5. ஆவியினாலே அபிஷேகம் செய்து
அன்பு வசனத்தால நடத்துகின்றாரே

6. எனக்காகவே காயப்பட்டார்
என் நோய்கள் சுமந்து கொண்டார்

# யார் பிரிக்க முடியும்

யார் பிரிக்க முடியும்
என் இயேசுவின் அன்பிலிருந்து
எதுதான் பிரிக்க முடியும்
என் நேசரின் அன்பிலிருந்து

1. வேதனையோ நெருக்கடியோ
சோதனையோ பிரித்திடுமோ

2. வியாதிகளோ வியாகுலமோ
கடன் தொல்லையோ பிரித்திடுமோ

3. கவலைகளோ கஷ்டங்களோ
நஷ்டங்களோ பிரித்திடுமோ

4. பழிச்சொல்லோ பகைமையளோ
பொறாமைகளோ பிரித்திடுமோ

5. சாத்தானோ செய்வினையோ
பில்லி சூனியமோ பிரித்திடுமோ

6. உறவுகளோ உணர்வுகளோ
எதிர்ப்புகளோ பிரித்திடுமோ

# யார் பிரிக்கமுடியும் நாதா

யார் பிரிக்கமுடியும் நாதா
உந்தன் அன்பிலிருந்து தேவா

1. என் சார்பில் நீர் இருக்க
   எனக்கெதிராய் யார் இருப்பார்
   மகனையே நீர் தந்தீரய்யா
   மற்ற அனைத்தும் தருவீர் ஐயா - உம்

2. தெரிந்துகொண்ட உம் மகன் (மகள்) நான்
   குற்றம் சாட்ட யார் இயலும்
   நீதிமானாய் ஆக்கிவிட்டீர்
   தண்டனை தீர்ப்பு எனக்கில்லையே

3. நிகழ்வனவோ வருவனவோ
   வழ்வோ சாவோ பிரித்திடுமோ
   அன்பு கூர்ந்த கிறிஸ்துவினால்
   அனைத்திலும் நான் வெற்றி பெறுவேன்

4. வேதனையோ நெருக்கடியோ
   சோதனையோ பிரித்திடுமோ
   பகைமைகளோ பழிச்சொல்லோ
   பொறாமைகளோ பிரித்திடுமோ

# யார் வேண்டும் நாதா

யார் வேண்டும் நாதா நீரல்லவோ
எது வேண்டும் நாதா உம் அன்பல்லவோ
பாழாகும் லோகம் வேண்டாமையா
வீணான வாழ்க்கை வெறுத்தேனையா

1. உலகத்தின் செல்வம் நிலையாகுமே
பேர் புகழ் கல்வி அழியாததோ
பின் ஏன் நீர் கேட்டீர் இக்கேள்வியை
பதில் என்ன சொல்வேன் நீரே போதும்

2. சிற்றின்ப மோகம் சீக்கிரம் போகும்
பேரின்ப நாதா நீர் போதாதா
யார் வேண்டும் என்று ஏன் கேட்டீரோ
எங்கே நான் போவேன் உம்மையல்லால்

3. என்னைத் தள்ளினால் நான் எங்கே போவேன்
அடைக்கலம் ஏது உம்மையல்லால்
கல்வாரி இன்றி கதியில்லையே
கர்த்தர் நின்பாதம் சரணடைந்தேன்

# யுத்தம் செய்யப் புறப்படுவோம்

யுத்தம் செய்யப் புறப்படுவோம் - நாம்
யுத்தம் செய்யப் புறப்படுவோம்

1. ஆவியிலே நிரம்பிடுவோம்
அபிஷேகம் பெற்றிடுவோம்

2. விசுவாசக் கேடயத்தை
கையிலே ஏந்திடுவோம்

3. இறை வார்த்தை வாளேந்தியே
எதிரியை வென்றிடுவோம்

4. கர்த்தர் நமக்காய் யுத்தம் செய்வார்
கலக்கம் நமக்கு வேண்டாம்

5. எக்காளம் ஊதிடுவோம்
எரிக்கோவைத் தகர்த்திடுவோம்

6. கோலியாத்தை முறியடிப்போம்
இயேசுவின் நாமத்தினால்

# யோசனையில் பெரியவரே ஆராதனை

யோசனையில் பெரியவரே ஆராதனை ஆராதனை
சேயல்களிலே வல்லவரே ஆராதனை ஆராதனை
ஓசான்னா உன்னத தேவனே
ஓசான்னா ஓசான்னா ஓசான்னா

1. கண்மணி போல் காப்பவரே
கழுகு போல சுமப்பவரே

2. சிலுவையினால் மீட்டவரே
சிறகுகளால் மூடுபவரே

3. வழி நடத்தும் விண்மீனே
ஒளி வீசும் விடிவெள்ளியே

4. தேடி என்னை காண்பவரே
தினந்தோறும் தேற்றுபவரே

5. பரிசுத்தரே படைத்தவரே
பாவங்களை மன்னித்தவரே

6. உறுதியான அடித்தளமே
விலை உயர்ந்த மூலைக் கல்லே

# ராஜா உம் பிரசன்னம்

ராஜா உம் பிரசன்னம் போதுமையா
எப்போதும் எனக்குப் போதுமையா
பிரசன்னம் பிரசன்னம்
தேவ பிரசன்னம்

1. அதிகாலமே தேடுகிறோன்
ஆர்வமுடன் நாடுகிறேன்

2. உலகமெல்லாம் மாயையையா
உம் அன்பொன்றே போதுமையா

3. இன்னும் உம்மை அறியணுமே
இன்னும் கிட்டி சேரணுமே

4. கரம் பிடித்த நாயகரே
கைவிடாத தூயவரே

5. ஆட்கொண்ட அதிசயமே
ஆறுதலே அடைக்கலமே

6. துதியினிலே வாழ்பவரே
துணையாளரே என் மணவாளரே

7. அநாதி தேவன் அடைக்கலமே
அவர் புயங்கள் ஆதாரமே

8. சகாயம் செய்யும் கேடகமே
மகிமை நிறை பட்டயமே

9. சீர்படுத்தும் சிருஷ்டிகரே
ஸ்திரப்படுத்தும் துணையாளரே

10. பெலப்படுத்தும் போதகரே
நிலைநிறுத்தும் நாயகரே

# ராஜா நீர் செய்த நன்மைகள்

ராஜா நீர் செய்த நன்மைகள்
அவை எண்ணி முடியாதையா
ஏறெடுப்பேன் நன்றிபலி
என் ஜீவ நாளெல்லாம - நான்
நன்றி ராஜா இயேசு ராஜா (4)

1. அதிகாலை நேரம் தட்டி தட்டி எழுப்பி
புது கிருபை தந்தீரையா
ஆனந்த மழையில் நனைத்து நனைத்து
தினம் நன்றி சொல்ல வைத்தீரையா - 2 நன்றி

2. வேதத்தின் இரகசியம் அறிந்திட புரிந்திட
உம் வெளிச்சம் தந்தீரையா
பாதம் அமர்ந்து நான் உம் குரல்
கேட்கும் பாக்கியம் தந்தீரையா

3. ஒவ்வோரு நாளும் உணவும் உடையும் தந்து
பாதுகாத்து வந்தீரையா
உடல் சுகம் தந்து ஒரு குறைவின்றி
வழி நடத்தி வந்தீரையா

4. துன்பத்தின் பாதையில் நடந்த அந்நாளில்
தூக்கிச் சென்றீரையா
அன்பா் உம் கரத்தால் அணைத்து அணைத்து தினம்
அதிசயம் செய்தீரையா (ஆறுதல் தந்தீரையா)

5. கூப்பிட்ட நாளில் மறுமொழி கொடுத்து
விடுதலை தந்தீரையா
குறைகளை நீக்கி கறைகளைப் போக்கி
கூடவே வந்தீரையா

6. உமக்காக வாழ உம் நாமம் சொல்ல
தெரிந்து எடுத்தீரையா
உம்மோடு வைத்து ஊழியனாக
உருவாக்கி வந்தீரையா

# ராஜாதி ராஜாவை கொண்டாடுவோம்

ராஜாதி ராஜாவைக் கொண்டாடுவோம்
நாள் தோறும் துதிபாடி கொண்டாடுவோம் - நம்

1. வந்தாரே தேடி வந்தாரே
தன் ஜீவன் எனக்காய் தந்தாரே
என்னை வாழவைக்கும் தெய்வம்தான் இயேசு
என்னை வழிநடத்தும் தீபம்தானே இயேசு - அந்த

2. கலக்கம் இல்லே எனக்கு கவலை இல்லே
கர்த்தர் என் மேய்ப்பராய் இருக்கிறார்
என்னை பசும்புல் மேய்ச்சலுக்கு நடத்துவார்
நான் பசியாற உணவு ஊட்டி மகிழுவார் - அந்த

3. வென்றாரே சாத்தானை வென்றாரே
வல்லமைகள் அனைத்தையும் உரித்தாரே
அந்த சாத்தான் மேலே அதிகாரம் தந்தாரே
என் இயேசு நாமம் சொல்லிச் சொல்லி முறியடிப்பேன் - நம்

4. கரங்களிலே என்னை பொறித்து உள்ளார்
கண்முன்னே தினம் என்னை நிறுத்தியுள்ளார்
ஏற்ற காலத்திலே உயர்த்துவார் - அவர்
கரங்களுக்குள் அடங்கி நான் காத்திருப்பேன்

5. முடிவில்லாத தம் மகிமையிலே
பங்கு பெற என்னை தெரிந்துக் கொண்டார்
என்னை சீர்படுத்தி ஸ்திரப்படுத்தி நடத்துவார்
பெலப்படுத்தி நிலைநிறுத்தி மகிழுவார்

# வல்லமையின் ஆவியானவர்

வல்லமமையின் ஆவியானவர்
என்னுள் வந்துவிட்டகாரணத்தினால்
பொல்லாத சாத்தானை - ஒரு
சொல்லாலே விரட்டி விட்டேன்

1. Power ஆவி எனக்குள்ளே
பய ஆவி அணுகுவதில்லை
அன்பின் ஆவி எனக்குள்ளே
அகற்றிவிட்டேன் கசப்புகளை

2. கட்டுப்பாட்டின் ஆவியானவர்
என்னை ஊழவெசழட பண்ணி நடத்துகிறார்
இஷ்டம் போல அலைவதில்லை
அவர் சித்தம் செய்து வாழ்பவன் நான்

3. கிறிஸ்துவுக்குள் நறுமணம் நான்
தெருத் தெருவா மணம் வீசுவேன்
மீட்புபெறும் அனைவருக்கும் - நான்
வாழ்வளிக்கும் வாசனையாவேன்

4. உலகத்திற்கு வெளிச்சம் நான்
இந்த ஊரெல்லாம் வுழசஉா அடிப்பேன்
உப்பாக பரவிடுவேன் - நான்
எப்போதும் சுவை தருவேன்

5. கர்த்தரின் முத்திரை என் மேல் - நான்
முற்றிலும் அவருக்குச் சொந்தம்
அச்சாரமாய் ஆவியானவர் - நான்
நிச்சயமாய் மீட்பு பெறுவேன்

6. தேவனாலே பிறந்தவன் நான்
எந்த பாவமும் செய்வதில்லை
கர்த்தரே பாதுகாக்கிறார்
தீயோன் என்னை தீண்டுவதில்லை

# வரவேண்டும் தேவ ஆவியே

வரவேண்டும் தேவ ஆவியே
எங்கள் மத்தியிலே
வரவேண்டும் தேவ ஆவியே
எங்கள் உள்ளத்திலே
ஆட்கொள்ளும் ஐயா
அபிஷேகியும்
அனல் மூட்டும் ஐயா
அனல் மூட்டும்

# வற்றாத நீரூற்று

வற்றாத நீரூற்று போலிருப்பாய்
வளமிக்க தோட்டத்தைப் போலிருப்பாய்
கர்த்தரை நம்பி வாழ்ந்திருப்பாய்
காலமெல்லாம் நீ செழித்திருப்பாய்

1. வாழ்க்கால்கள் ஓரம்
நடப்பட்ட மரமாய்
எப்போதும் கனி கொடுப்பாய்
தப்பாமல் கனி கொடுப்பாய்

2. ஓடும் நதி நீ
பாயும் இடத்தில்
உயிரெல்லாம் பிழைத்திடுமே
சுகமாக வாழ்ந்திடுமே

3. பலநாட்டு மக்கள்
உன் நிழல் கண்டு
ஓடி வருவார்கள்
பாடி மகிழ்வார்கள்

4. பஞ்ச காலத்தில்
உன் ஆத்துமாவை
திருப்தியாக்கிடுவார்
தினமும் நடத்திடுவார்

5. கோடைக் காலத்தில்
வறட்சிக் காலத்தில்
அச்சமின்றி இருப்பாய் - நீ
ஆறுதலாய் இருப்பாய்

# வசதியைத் தேடி ஓடாதே

வசதியைத் தேடி ஓடாதே - அது
தொடு வானம்
வசதிகள் நிறைவு தருவதில்லை
வானத்தை எவரும் தொடுவதில்லை

1. வசதி வந்தால் பயன்படுத்து
சுவிசேஷம் சொல்வதற்கு
ஆளுகை செய்ய No. No. No.
ஆடிமைப்படுத்த No. No. No. - வசதி

2. அழகெல்லாம் அற்றுப் போகும்
எழில் ஏமாற்றும்
கவர்ச்சி எல்லாம் கானல் நீர்
கடந்து போகும் சீக்கிரத்தில்

3. வெட்டுக்கிளி காட்டுத்தேன்
உண்டு வந்தார் யோவான்
உலகத்தை கலக்கிய மனிதர் அவர்
உடுத்தியதோ ஒரு ஒட்டகத்தோல்

4. பணமயக்கம் எல்லாவித
தீமைகளின் தொடக்கம்
சிற்றின்பம் எச்சரிக்கை - உன்னை
நடைபிணமாக்கிவிடும்

# வாதை உந்தன் கூடாரத்தை

வாதை உந்தன் கூடாரத்தை அணுகாது மகனே
பொல்லாப்பு நேரிடாது நேரிடாது மகளே (2)

1. உன்னதமான கர்த்தரையே
உறைவிடமாக்கிக் கொண்டாய்
அடைக்கலமாம் ஆண்டவனை
ஆதாயமாக்கிக் கொண்டாய்

2. ஆட்டுக்குட்டி இரத்தத்தினால்
சாத்தானை ஜெயித்து விட்டோம்
ஆவி உண்டு வசனம் உண்டு
அன்றாடம் வெற்றி உண்டு

3. கர்த்தருக்குள் நம்பாடுகள்
ஒரு நாளும் வீணாகாது
அசையாமல் உறுதியுடன்
அதிகமாய் செயல்படுவோம்

4. அழைத்தவரோ உண்மையுள்ளவர்
பரிசுத்தமாக்கிடுவார்
ஆவி ஆத்துமா சரீரமெல்லாம்
குற்றமின்றி காத்திடுவார்

5. நம்முடைய குடியிருப்பு
பரலோகத்தில் உண்டு
வரப்போகும் இரட்சகரை
எதிர்நோக்கி காத்திருப்போம்

6. அற்பமான் ஆரம்பத்தை
அசட்டை பண்ணாதே
தொடங்கினவர் முடித்திடுவார்
சொன்னதை செய்திடுவார்

7. ஆற்றல் அல்ல சத்தி அல்ல
ஆவியினால் ஆகும்
சோர்ந்திடாமல் நன்மை செய்வோம்
துணையாளர் முன் செல்கிறார்

# வாழ்நாளெல்லாம் களிகூர்ந்து

வாழ்நாளெல்லாம் களிகூர்ந்து மகிழும்படி
திருப்தியாக்கும் உம் கிருபையினால்

காலைதோறும் களிகூர்ந்து மகிழும்படி
திருப்தியாக்கும் உம் கிருபையினால்

1. புகலிடம் நீரே பூமியிலே
அடைக்கலம் நீரே தலைமுறை தோறும் (2)
நல்லவரே வல்லவரே
நன்றி ஐயா நாள் முழுதும்
வாழ்நாளெல்லாம்...

2. உலகமும் பூமியும் தோன்று முன்னே
என்றென்றும் இருக்கின்ற என் தெய்வமே (2)
நல்லவரே வல்லவரே...
காலைதோறும்...

3. துன்பத்தைக் கண்ட நாட்களுக்கு
ஈடாக என்னை மகிழச் செய்யும் (2)
நல்லவரே வல்லவரே...
வாழ்நாளெல்லாம்...

4. அற்புத செயல்கள் காணச் செய்யும்
மகிமை மாட்சிமை விளங்கச் செய்யும்

5. செய்யும் செயல்களை செம்மைப் படுத்தும்
செயல்கள் அனைத்திலும் வெற்றி தாரும்

6. நாட்களை எண்ணும் அறிவைத் தாரும்
ஞானம் நிறைந்த அறிவைத் தாரும்

7. ஆயுள் நாட்கள் எழுபது தான்
வலிமை மிகுந்தோர்க்கு எண்பது தான்

8. ஆயிரம் ஆண்டுகள் உம் பார்வையில்
கடந்து போன ஓர் நாள் போல

# வாழ்த்துகிறோம் வணங்குகிறோம்

வாழ்த்துகிறோம் வணங்குகிறோம்
போற்றுகிறோம் தேவா...ஆ...ஆ...ஆ...

1. இலவலசமாய் கிருபையினால்
நீதிமானாக்கி விட்டீர் - ஐயா

2. ஆவியினால் வார்த்தையினால்
மறுபடி பிறக்கச் செய்தீர் - என்னை

3. உம் இரத்தத்தால் தெளிக்கப்பட்டோம்
ஒப்புரவாக்கப்பட்டோம் - ஐயா

4. உம்மை நோக்கிப் பார்க்கின்றோம்
பிரகாசம் அடைகின்றோம் - ஐயா

5. அற்புதமே அதிசயமேத
ஆலோசனைக் கர்த்தரே - என்றும்

6. உம்மையன்றி யாரிடம் செல்வோம்
ஜீவனுள்ள வார்த்தை நீரே - ஐயா

# விசுவாசத்தினால்

விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான்
விசுவாசியே பதறாதே
கலங்காதே திகையாதே விசுவாசியே
கல்வாரி நாயகன் கைவிடாரே

1. தந்தை தாயென்னை வெறுத்திட்டாலும்
பந்த பாசங்கள் அறுந்திட்டாலும்
நிந்தை தாங்கிட்ட தேவன் நம்மை
சொந்த கரங்களால் அணைத்துக் கொள்வார்

2. பிறர் வசை கூறி துன்புறுத்தி
இல்லாதது சொல்லும்போது
நீ மகிழ்ந்து களி கூரு
விண் கைமாறுமிகுதியாகும்

3. கொடும் வறுமையின் உழன்றாலும்
கடும் பசியினில் வாடினாலும்
அன்று எலியாவை போஷித்தவர்
இன்று உன் பசி ஆற்றிடாரோ

# விடுதலை நாயகன்

விடுதலை நாயகன் வெற்றியைத் தருகிறார்
எனக்குள்ளே இருக்கிறார் என்னே ஆனந்தம்

1. நான் பாடிப்பாடி மகிழ்வேன் - தினம்
ஆடி ஆடித்துதிப்பேன் - எங்கும்
ஓடி ஓடி சொல்லுவேன்
என் இயேசு ஜீவிக்கிறார்

2. அவர் தேடி ஓடி வந்தார்
என்னைத் தேற்றி அணைத்துக் கொண்டார்
என் பாவம் அனைத்தும் மன்னித்தார்
புது மனிதனாக மாற்றினார்

3. அவர் அன்பின் அபிஷேகத்தால்
என்னை நிரப்பி நடத்துகின்றார்
சாத்தானின் வலிமை வெல்ல
அதிகாரம் எனக்குத் தந்தார்

4. செங்கலைக் கடந்து செல்வேன்
யோர்தானை மிதித்து நடப்பேன்
எரிகோவை சுற்றி வருவேன்
எக்காளம் ஊதி ஜெயிப்பேன்

# ராஜாதி ராஜாவை கொண்டாடுவோம்

ராஜாதி ராஜாவைக் கொண்டாடுவோம்
நாள் தோறும் துதிபாடி கொண்டாடுவோம் - நம்

1. வந்தாரே தேடி வந்தாரே
தன் ஜீவன் எனக்காய் தந்தாரே
என்னை வாழவைக்கும் தெய்வம்தான் இயேசு
என்னை வழிநடத்தும் தீபம்தானே இயேசு - அந்த

2. கலக்கம் இல்லே எனக்கு கவலை இல்லே
கர்த்தர் என் மேய்ப்பராய் இருக்கிறார்
என்னை பசும்புல் மேய்ச்சலுக்கு நடத்துவார்
நான் பசியாற உணவு ஊட்டி மகிழுவார் - அந்த

3. வென்றாரே சாத்தானை வென்றாரே
வல்லமைகள் அனைத்தையும் உரித்தாரே
அந்த சாத்தான் மேலே அதிகாரம் தந்தாரே
என் இயேசு நாமம் சொல்லிச் சொல்லி முறியடிப்பேன் - நம்

4. கரங்களிலே என்னை பொறித்து உள்ளார்
கண்முன்னே தினம் என்னை நிறுத்தியுள்ளார்
ஏற்ற காலத்திலே உயர்த்துவார் - அவர்
கரங்களுக்குள் அடங்கி நான் காத்திருப்பேன்

5. முடிவில்லாத தம் மகிமையிலே
பங்கு பெற என்னை தெரிந்துக் கொண்டார்
என்னை சீர்படுத்தி ஸ்திரப்படுத்தி நடத்துவார்
பெலப்படுத்தி நிலைநிறுத்தி மகிழுவார்

# வல்லமையின் ஆவியானவர்

வல்லமமையின் ஆவியானவர்
என்னுள் வந்துவிட்டகாரணத்தினால்
பொல்லாத சாத்தானை - ஒரு
சொல்லாலே விரட்டி விட்டேன்

1. Power ஆவி எனக்குள்ளே
பய ஆவி அணுகுவதில்லை
அன்பின் ஆவி எனக்குள்ளே
அகற்றிவிட்டேன் கசப்புகளை

2. கட்டுப்பாட்டின் ஆவியானவர்
என்னை ஊழவெசழட பண்ணி நடத்துகிறார்
இஷ்டம் போல அலைவதில்லை
அவர் சித்தம் செய்து வாழ்பவன் நான்

3. கிறிஸ்துவுக்குள் நறுமணம் நான்
தெருத் தெருவா மணம் வீசுவேன்
மீட்புபெறும் அனைவருக்கும் - நான்
வாழ்வளிக்கும் வாசனையாவேன்

4. உலகத்திற்கு வெளிச்சம் நான்
இந்த ஊரெல்லாம் வுழசஉா அடிப்பேன்
உப்பாக பரவிடுவேன் - நான்
எப்போதும் சுவை தருவேன்

5. கர்த்தரின் முத்திரை என் மேல் - நான்
முற்றிலும் அவருக்குச் சொந்தம்
அச்சாரமாய் ஆவியானவர் - நான்
நிச்சயமாய் மீட்பு பெறுவேன்

6. தேவனாலே பிறந்தவன் நான்
எந்த பாவமும் செய்வதில்லை
கர்த்தரே பாதுகாக்கிறார்
தீயோன் என்னை தீண்டுவதில்லை

# வரவேண்டும் தேவ ஆவியே

வரவேண்டும் தேவ ஆவியே
எங்கள் மத்தியிலே
வரவேண்டும் தேவ ஆவியே
எங்கள் உள்ளத்திலே
ஆட்கொள்ளும் ஐயா
அபிஷேகியும்
அனல் மூட்டும் ஐயா
அனல் மூட்டும்

# வற்றாத நீரூற்று

வற்றாத நீரூற்று போலிருப்பாய்
வளமிக்க தோட்டத்தைப் போலிருப்பாய்
கர்த்தரை நம்பி வாழ்ந்திருப்பாய்
காலமெல்லாம் நீ செழித்திருப்பாய்

1. வாழ்க்கால்கள் ஓரம்
நடப்பட்ட மரமாய்
எப்போதும் கனி கொடுப்பாய்
தப்பாமல் கனி கொடுப்பாய்

2. ஓடும் நதி நீ
பாயும் இடத்தில்
உயிரெல்லாம் பிழைத்திடுமே
சுகமாக வாழ்ந்திடுமே

3. பலநாட்டு மக்கள்
உன் நிழல் கண்டு
ஓடி வருவார்கள்
பாடி மகிழ்வார்கள்

4. பஞ்ச காலத்தில்
உன் ஆத்துமாவை
திருப்தியாக்கிடுவார்
தினமும் நடத்திடுவார்

5. கோடைக் காலத்தில்
வறட்சிக் காலத்தில்
அச்சமின்றி இருப்பாய் - நீ
ஆறுதலாய் இருப்பாய்

# வசதியைத் தேடி ஓடாதே

வசதியைத் தேடி ஓடாதே - அது
தொடு வானம்
வசதிகள் நிறைவு தருவதில்லை
வானத்தை எவரும் தொடுவதில்லை

1. வசதி வந்தால் பயன்படுத்து
சுவிசேஷம் சொல்வதற்கு
ஆளுகை செய்ய No. No. No.
அடிமைப்படுத்த No. No. No. - வசதி

2. அழகெல்லாம் அற்றுப் போகும்
எழில் ஏமாற்றும்
கவர்ச்சி எல்லாம் கானல் நீர்
கடந்து போகும் சீக்கிரத்தில்

3. வெட்டுக்கிளி காட்டுத்தேன்
உண்டு வந்தார் யோவான்
உலகத்தை கலக்கிய மனிதர் அவர்
உடுத்தியதோ ஒரு ஒட்டகத்தோல்

4. பணமயக்கம் எல்லாவித
தீமைகளின் தொடக்கம்
சிற்றின்பம் எச்சரிக்கை - உன்னை
நடைபிணமாக்கிவிடும்

# வாதை உந்தன் கூடாரத்தை

வாதை உந்தன் கூடாரத்தை அணுகாது மகனே
பொல்லாப்பு நேரிடாது நேரிடாது மகளே (2)

1. உன்னதமான கர்த்தரையே
உறைவிடமாக்கிக் கொண்டாய்
அடைக்கலமாம் ஆண்டவனை
ஆதாயமாக்கிக் கொண்டாய்

2. ஆட்டுக்குட்டி இரத்தத்தினால்
சாத்தானை ஜெயித்து விடடோம்
ஆவி உண்டு வசனம் உண்டு
அன்றாடம் வெற்றி உண்டு

3. கர்த்தருக்குள் நம்பாடுகள்
ஒரு நாளும் வீணாகாது
அசையாமல் உறுதியுடன்
அதிகமாய் செயல்படுவோம்

4. அழைத்தவரோ உண்மையுள்ளவர்
பரிசுத்தமாக்கிடுவார்
ஆவி ஆத்துமா சரீரமெல்லாம்
குற்றமின்றி காத்திடுவார்

5. நம்முடைய குடியிருப்பு
பரலோகத்தில் உண்டு
வரப்போகும் இரட்சகரை
எதிர்நோக்கி காத்திருப்போம்

6. அற்பமான் ஆரம்பத்தை
அசட்டை பண்ணாதே
தொடங்கினவர் முடித்திடுவார்
சொன்னதை செய்திடுவார்

7. ஆற்றல் அல்ல சத்தி அல்ல
ஆவியினால் ஆகும்
சோர்ந்திடாமல் நன்மை செய்வோம்
துணையாளர் முன் செல்கிறார்

# வாழ்நாளெல்லாம் களிகூர்ந்து

வாழ்நாளெல்லாம் களிகூர்ந்து மகிழும்படி
திருப்தியாக்கும் உம் கிருபையினால்

காலைதோறும் களிகூர்ந்து மகிழும்படி
திருப்தியாக்கும் உம் கிருபையினால்

1. புகலிடம் நீரே பூமியிலே
அடைக்கலம் நீரே தலைமுறை தோறும் (2)
நல்லவரே வல்லவரே
நன்றி ஐயா நாள் முழுதும்
வாழ்நாளெல்லாம்...

2. உலகமும் பூமியும் தோன்று முன்னே
என்றென்றும் இருக்கின்ற என் தெய்வமே (2)
நல்லவரே வல்லவரே...
காலைதோறும்...

3. துன்பத்தைக் கண்ட நாட்களுக்கு
ஈடாக என்னை மகிழச் செய்யும் (2)
நல்லவரே வல்லவரே...
வாழ்நாளெல்லாம்...

4. அற்புத செயல்கள் காணச் செய்யும்
மகிமை மாட்சிமை விளங்கச் செய்யும்

5. செய்யும் செயல்களை செம்மைப் படுத்தும்
செயல்கள் அனைத்திலும் வெற்றி தாரும்

6. நாட்களை எண்ணும் அறிவைத் தாரும்
ஞானம் நிறைந்த அறிவைத் தாரும்

7. ஆயுள் நாட்கள் எழுபது தான்
வலிமை மிகுந்தோர்க்கு எண்பது தான்

8. ஆயிரம் ஆண்டுகள் உம் பார்வையில்
கடந்து போன ஓர் நாள் போல

# வாழ்த்துகிறோம் வணங்குகிறோம்

வாழ்த்துகிறோம் வணங்குகிறோம்
போற்றுகிறோம் தேவா...ஆ...ஆ...ஆ...

1. இலவலசமாய் கிருபையினால்
நீதிமானாக்கி விட்டீர் - ஐயா

2. ஆவியினால் வார்த்தையினால்
மறுபடி பிறக்கச் செய்தீர் - என்னை

3. உம் இரத்தத்தால் தெளிக்கப்பட்டோம்
ஒப்புரவாக்கப்பட்டோம் - ஐயா

4. உம்மை நோக்கிப் பார்க்கின்றோம்
பிரகாசம் அடைகின்றோம் - ஐயா

5. அற்புதமே அதிசயமேத
ஆலோசனைக் கர்த்தரே - என்றும்

6. உம்மையன்றி யாரிடம் செல்வோம்
ஜீவனுள்ள வார்த்தை நீரே - ஐயா

# விசுவாசத்தினால்

விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான்
விசுவாசியே பதறாதே
கலங்காதே திகையாதே விசுவாசியே
கல்வாரி நாயகன் கைவிடாரே

1. தந்தை தாயென்னை வெறுத்திட்டாலும்
பந்த பாசங்கள் அறுந்திட்டாலும்
நிந்தை தாங்கிட்ட தேவன் நம்மை
சொந்த கரங்களால் அணைத்துக் கொள்வார்

2. பிறர் வசை கூறி துன்புறுத்தி
இல்லாதது சொல்லும்போது
நீ மகிழ்ந்து களி கூரு
விண் கைமாறுமிகுதியாகும்

3. கொடும் வறுமையின் உழன்றாலும்
கடும் பசியினில் வாடினாலும்
அன்று எலியாவை போஷித்தவர்
இன்று உன் பசி ஆற்றிடாரோ

# விடுதலை நாயகன்

விடுதலை நாயகன் வெற்றியைத் தருகிறார்
எனக்குள்ளே இருக்கிறார் என்னே ஆனந்தம்

1. நான் பாடிப்பாடி மகிழ்வேன் - தினம்
ஆடி ஆடித்துதிப்பேன் - எங்கும்
ஓடி ஓடி சொல்லுவேன்
என் இயேசு ஜீவிக்கிறார்

2. அவர் தேடி ஓடி வந்தார்
என்னைத் தேற்றி அணைத்துக் கொண்டார்
என் பாவம் அனைத்தும் மன்னித்தார்
புது மனிதனாக மாற்றினார்

3. அவர் அன்பின் அபிஷேகத்தால்
என்னை நிரப்பி நடத்துகின்றார்
சாத்தானின் வலிமை வெல்ல
அதிகாரம் எனக்குத் தந்தார்

4. செங்கலைக் கடந்து செல்வேன்
யோர்தானை மிதித்து நடப்பேன்
எரிகோவை சுற்றி வருவேன்
எக்காளம் ஊதி ஜெயிப்பேன்

# விடுதலை விடுதலை விடுதலை

விடுதலை விடுதலை விடுதலை எனக்கு
விடுதலை விடுதலை விடுதலை

1. நோயிலிருந்து விடுதலை
பேயிலிருந்து விடுதலை - உனக்கு

2. பாவத்திலிருந்து விடுதலை
சாபத்திலிருந்து விடுதலை - நமக்கு

3. ஆவியினால் விடுதலை
இரத்தத்தினால் விடுதலை - எப்போதும்

4. வார்த்தையினால் விடுதலை
துதியினாலே விடுதலை - எப்போதும்

5. கவலையிலிருந்து விடுதலை
கண்ணீரிலிருந்து விடுதலை - உனக்கு

# விண்ணப்பத்தைப் கேட்பவரே

விண்ணப்பத்தைப் கேட்பவரே - என்
கண்ணீரைக் காண்பவரே
சுகம் தருபவரே ஸ்தோத்திரம் இயேசையா

1. உம்மால் கூடும் எல்லாம் கூடும்
ஒரு வார்த்தை சொன்னால் போதும்

2. மனதுருகி கரம் நீட்டி
அதிசயம் செய்பவரே

3. சித்தம் உண்டு சுத்தமாகு
என்று சொல்லி சுகமாக்கினீர்

4. என் நோய்களை சிலுவையிலே
சுமந்து தீர்த்தீரைய்யா

5. குருடப்களை பார்க்கச் செய்தீர்
முடவர்கள் நடக்கச் செய்தீர்

6. உம் காயத்தால் சுகமானேன்
ஒரு கோடி ஸ்தோத்திரமே

# விண்ணிலும் மண்ணிலும்

விண்ணிலும் மண்ணிலும் உம்மைத்தவிர
எனக்கு யாருண்டு? இந்த
மண்ணுலகில் உம்மையன்றி வேற
விருப்பம் எதுவுண்டு?

நீர்தானே என் வாஞ்சையெல்லாம்
உம்மைத்தானே பற்றிக் கொண்டேன்

1. உம்மோடு தான் எப்போதும் நான் வாழ்கிறேன்
அப்பா என் வலக்கரம் பிடித்து தாங்குகிறீர்
நன்றி ஐயா, நாள் முழுதும்
நல்லவரே, வல்லவரே

2. உம் சித்தம் போல் என்னை நீர் நடத்துகிறீர்
முடிவிலே என்னை மகிமையில் ஏற்றுக்கொள்வீர்

3. என் உள்ளத்தின் பெலனே நீர்தானய்யா......
எனக்குரிய பங்கும் என்றென்றும் நீர்தானய்யா

4. உம்மைத்தானே நான் அடைக்கலமாய் கொண்டுள்ளேன்
உம்மோடுதான் வாழ்வது என் பாக்கியம்

5. எனக்குள்ளே நீர், செயலாற்றி, மகிழ்கின்றீர்
உம் சித்தம் செய்ய, ஆற்றல் தருகின்றீர்

# விழுகுது விழுகுது எரிகோ

விழுகுது விழுகுது எரிகோ கோட்டை - அல்லேலூயா
எழும்புது எழும்புது இயேசுவின் படை - Jesus (2)
துதிப்போம் சாத்தானை ஜெயிப்போம்
துதிப்போம் தேசத்தை சொந்தமாக்குவோம் (2)

1. யோசுவாவின் சந்ததி நாமே
தேசத்தை சுதந்தரிப்போமே (2)
உடன்படிக்கைப் பெட்டி நம்மோடு
ஊர் ஊராய் வலம் வருவோமே (2)

2. கால் மிதிக்கும் எவ்விடத்தையும்
கர்த்தர் தந்திடுவாரே (2)
எதிர்த்து நிற்க எவராலுமே
முடியாது என்று வாக்குரைத்தாரே

3. மோசேயோடு இருந்தது போல
சேனைகளின் கர்த்தர் நம்மோடு
தளபதியாய் முன் செல்கிறார்
தளர்ந்திடாமல் பின் தொடர்வோம்

4. அச்சமின்றி துணிந்து செல்வோமே
அறிக்கை செய்து ஆர்ப்பரிப்போமே
கர்த்தர் வார்த்தை நம் வாயிலே
நிச்சயமாய் வெற்றி பெறுவோம்

5. தேசத்து எதிரிகளெல்லாம்
திகில் பிடித்து நடுங்குகின்றனர்
கர்த்தர் செய்யும் அற்புதங்களை
கேள்விப்பட்டு கலங்குகின்றனர்

6. செங்கடலை வற்றச் செய்தவர்
சீக்கிரத்தில் வெற்றி தருவார்
யோர்தானை நிற்கச் செய்தவர் - நம்
பாரதத்தை ஆளுகை செய்வார்

# வெற்றிக்கொடி பிடித்திடுவோம்

வெற்றிக்கொடி பிடித்திடுவோம் - நாம்
வீரநடை நடந்திடுவோம்

1. வெள்ளம்போல சாத்தான் வந்தாலும்
ஆவிதாமே கொடி பிடிப்பார்
அஞ்சாதே என் மகனே
நீ அஞ்சாதே என் மகளே

2. ஆயிரம்தான் துன்பம் வந்தாலும்
அணுகாது அணுகாது
ஆவியின் பட்டயம் உண்டு - நாம்
ஆலகையை வென்று விட்டோம்

3. காடானாலும் மேடானாலும்
கர்த்தருக்கு பின் நடப்போம்
கலப்பையில் கை வைத்திட்டோம்
நாம் திரும்பி பார்க்க மாட்டோம்

4. கோலியாத்தை முறியடிப்போம்
இயேசுவின் நாமத்தினால்
விசுவாச கேடயத்தினால்
பிசாசை வென்றிடுவோம்

# வேறு ஒரு ஆசை இல்ல

வேறு ஒரு ஆசை இல்ல இயேசு ராஜா
உம்மைத் தவிர உம்மைத் தவிர

1. உம் பாதம் பணிந்து நான்
   உம்மையே தழுவினேன்

2. இருள் நீக்கும் வெளிச்சமே
   எனை காக்கும் தெய்வமே

3. மனம் இரங்கினீரே
   மறுவாழ்வு தந்தீரே

4. சுகம் தந்தீரையா
   பெலன் தந்தீரையா

5. இரக்கத்தின் சிகரமே
   இதயத்தின் தீபமே

6. செய்த நன்மை நினைத்து
   துதித்துப் பாடி மகிழ்வேன்

# வைகறையில்

வைகறையில் (காலைநேரம்) உமக்காக
வழிமேல் விழிவைத்து
காத்திருக்கின்றேன் இறைவா
என் ஜெபம் கேட்டு பதில் தாரும்
பெருமூச்சைப் பார்த்து மனம் இரங்கும்

1. உம் இல்லம் வந்தேன் உம் கிருபையினால்
பயபக்தியோடு பணிந்து கொண்டேன்
நிறைவான மகிழ்ச்சி உம் சமூகத்தில்
குறையில்லாத பேரின்பம் உம் பாதத்தில்

2. ஆட்சி செய்யும் ஆளுநர் நீர்தானய்யா
உம்மையன்றி வேறு ஒரு செல்வம் இல்லையே
நீர்தானே எனது உரிமைச் சொத்து
எனக்குரிய பங்கும் நீர்தானய்யா

3. படுகுழியில் பாதாளத்தில் விடமாட்டீர்
அழிந்துபோக அனுமதியும் தரமாட்டீர்
என் இதயம் பூரித்து துள்ளுகின்றது
என் உடலும் பாதுகாப்பில் இளைப்பாறுது

4. காலைதோறும் திருப்தியாக்கும் உம் கிருபையால்
நாளெல்லாம் களிகூர்ந்து மகிழ்ந்திருப்பேன்
எப்போதும் என்முன்னே நீர்தானய்யா
ஒருபோதும் அசைவுற விடமாட்டீர்

# வைகறையில்

வைகறையில் (காலைநேரம்) உமக்காக
வழிமேல் விழிவைத்து
காத்திருக்கின்றேன் இறைவா
என் ஜெபம் கேட்டு பதில் தாரும்
பெருமூச்சைப் பார்த்து மனம் இரங்கும்

1. உம் இல்லம் வந்தேன் உம் கிருபையினால்
பயபக்தியோடு பணிந்து கொண்டேன்
நிறைவான மகிழ்ச்சி உம் சமூகத்தில்
குறையில்லாத பேரின்பம் உம் பாதத்தில்

2. ஆட்சி செய்யும் ஆளுநர் நீர்தானய்யா
உம்மையன்றி வேறு ஒரு செல்வம் இல்லையே
நீர்தானே எனது உரிமைச் சொத்து
எனக்குரிய பங்கும் நீர்தானய்யா

3. படுகுழியில் பாதாளத்தில் விடமாட்டீர்
அழிந்துபோக அனுமதியும் தரமாட்டீர்
என் இதயம் பூரித்து துள்ளுகின்றது
என் உடலும் பாதுகாப்பில் இளைப்பாறுது

4. காலைதோறும் திருப்தியாக்கும் உம் கிருபையால்
நாளெல்லாம் களிகூர்ந்து மகிழ்ந்திருப்பேன்
எப்போதும் என்முன்னே நீர்தானய்யா
ஒருபோதும் அசைவுற விடமாட்டீர்

# ஜீவனுள்ள தேவன்

ஜீவனுள்ள தேவன் தங்கும் பரலோக எருசலேம்
சீயோன் மலைக்கு வந்து சேர்ந்துவிட்டோம்

பரலோகம் (நம்) தாயகம்
விண்ணகம் (நம்) தகப்பன் வீடு

1. கோடான கோடி தூதர் கூடி அங்கே துதிக்கின்றனர்
பரிசுத்தரே என்று பாடி (ப்பாடி) மகிழ்கின்றனர்
பரிசுத்தர் பரிசுத்தர்
பரலோக தேவன் பரிசுத்தர்

2. பெயர்கள் எழுதப்பட்ட தலைப்பேறானவர்கள்
திருவிழாக் கூட்டமாகக் கொண்டாடி மகிழ்கின்றனர்
அல்லேலூயா ஓசன்னா கொண்டாட்டம்
கொண்டாட்டம் தகப்பன் வீட்டில்

3. பூரணமாக்கப்பட்ட நீதிமான்கள் ஆவி அங்கே
ஏல்லாரையும் நியாயம் தீர்க்கும் நியாயாதிபதி
அங்கே நீதிபதி கர்த்தரே
எல்லாரையும் நியாயம் தீர்க்கும் நீதிபதி

4. புதிய உடன்பாட்டின் இணைப்பாளர் இயேசு அங்கே
நன்மை தரும் ஆசீர்வாதம் பேசும் இரத்தம் அங்கே
இரத்தம் ஜெயம் இரத்தம் ஜெயம்
இயேசு கிறிஸ்துவின் இரத்தம் ஜெயம்

# ஜீவனை விட தேவனை

ஜீவனை விட தேவனை நேசிக்கணும்
இந்த செல்வத்தை விட கர்த்தரை நேசிக்கணும் - தம்பி
அப்போ சாத்தானை ஓட ஓட தொரத்தலாம்
அவன் சேனைகளை அடியோட அகற்றலாம்...
போராடு... தைரியமாய் போராடு...
வெற்றி நிச்சயம்
விடுதலை சத்தியம்

ஜீவனைவிட தேவனை நேசிக்கிறேன்
இந்த செல்வத்தை விட கர்த்தரை நேசிக்கிறேன் நான்
அதனால்... சாத்தானை ஓட ஓட தொரத்துவேன்
அவன் சேனைகளை அடியோட அகற்றுவேன்
போராடுவேன்... தைரியமாய் போராடுவேன்
வெற்றி நிச்சயம்
விடுதலை சத்தியம்

# ஜீவத் தண்ணீரே ஆவியானவரே

ஜீவத் தண்ணீரே ஆவியானவரே
வற்றாத நதயாக வாரும் போதகரே
வாரும் ஐயா போதகரே (2)
வற்றாத ஜீவ நதியாக (2)

1. கணுக்கால் அளவு போதாதையா
முழங்கால் அளவும் போதாதையா
நீந்தி நீந்தி மூழ்கணுமே (2)
மிதந்து மிதந்து மகிழணுமே (2)

2. போகும் இடமெல்லாம் ஆரோக்கியமே
பாயும் இடமெல்லாம் பரிசுத்தமே
சேருமிடமெல்லாம் ஆறுதலே
செல்லுமிடமெல்லாம் செழிப்புத்தானே

3. கோடி கோடி மீனவர் கூட்டம்
ஓடி ஓடி வலை வீசணும்
பாடி பாடி மீன் பிடிக்கணும்
பரலோக தேவனுக்கு ஆள் சேர்க்கணும்

4. கரையோர மரங்கள் ஏராளமாய்
கனி தர வேண்டும் தாராளமாய்
இலைகள் எல்லாம் மருந்தாகணும்
கனிகள் எல்லாம் உணவாகணும்

# ஜெப ஆவி ஊற்றுமையா

ஜெப ஆவி ஊற்றுமையா...
ஜெபிக்கணும்... ஜெபிக்கணுமே

1. ஸ்தோத்திர பலி விண்ணப்ப ஜெபம்
எந்நேரமும் நான் ஏறெடுக்கணும்

2. உபவாசித்து உடலை ஒறுத்து
ஒவ்வொரு நாளும் ஜெபிக்கணுமே

3. திறப்பின் வாசலில் நிற்கணுமே
தேசத்திற்காய் கதறணுமே

4. முழங்கால்கள் முடங்கணுமே
கண்கள் எல்லாம் குளமாகணும் - என்

5. தானியேல் போல மூன்று வேளையும்
தவறாமல் நான் ஜெபிக்கணுமே

6. உலகை மறந்து சுயம் வெறுத்து
உம் பாதத்தில் கிடக்கணுமே

# ஜெபம் கேளும் பதில்தாரும்

ஜெபம் கேளும் பதில்தாரும்
அதிசயம் செய்யும் ஐயா

1. நூறுகோடி என் ஜனங்கள்
ஏழுலட்சம் கிராமங்கள்
இயேசுவை காண் வேண்டும்

2. உமக்கெதிராய் செயல்படுவோர்
உம்பாதம் வர வேண்டும்
உமக்காய் வாழ வேண்டும்

3. இந்தியாவை பாழாக்கும்
அந்தகார வல்லமைகள்
அகன்று போக வேண்டும்

4. நாடாளும் தலைவர்களை
நாள்தோறும் பாதுகாத்து
ஞானத்தால் நிரப்ப வேண்டும்

5. மரித்துப்போன மனிதரெல்லாம்
உம் குரலைக் கேட்க இன்று
மறுவாழ்வு பெற வேண்டும்

6. மிஷினரி ஊழியர்கள்
மென்மேலும் பெருக வேண்டும்
உண்மையாய் உழைக்க வேண்டும்

7. சிலைகள் வழிபாடு
செயலற்றுப் போக வேண்டும்
நற்செய்தி பரவ வேண்டும்

8. ஆளும் தலைவர் கூட்டம்
உம்நாமம் சொல்ல வேண்டும்
உமக்கே அஞ்ச வேண்டும்

# ஸ்தோத்திர பலி ஸ்தோத்திர பலி

ஸ்தோத்திர பலி ஸ்தோத்திர பலி அப்பாவுக்கு
துதியும் கனமும் மகிமையும் என் அப்பாவுக்கு

1. சுகம் தந்தீரே நன்றி ஐயா
பெலன் தந்தீரே நன்றி ஐயா

2. உணவு தந்தீர் நன்றி ஐயா
உடையும் தந்தீர் நன்றி ஐயா

3. அன்பு கூர்ந்தீர் நன்றி ஐயா
அரவணைத்தீர் நன்றி ஐயா

4. கூட வைத்தீர் நன்றி ஐயா
பாட வைத்தீர் நன்றி ஐயா

5. அபிஷேகித்தீர் நன்றி ஐயா
அனலாக்கினீர் நன்றி ஐயா

6. இரத்தம் சிந்தினீர் நன்றி ஐயா
இரட்சிப்பு தந்தீர் நன்றி ஐயா